நாவாந்துறை கிளை நூலகம்

விலை: 30
பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 63 தை 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 28 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049






## பிணைமுறி மோசடி: பெப்.8 இல் விவாதம்

ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

அரச தலைவர் ஆணைக்குழுவின் பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கை மற்றும் நிதி மோசடி தொடர்பான அறிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெனியாய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பில் முடிந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றில் விவாதத்தை நடத்திக் காட்ட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகச் சவால் விடுத்திருந்தார். அரச தலைவரின் சவாலை ஏற்பதாகத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றில் விவாதத்தை நடத்துவதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை உடன் கூட்ட வேண்டும் என்று சபாநாயகரிடம் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே தலைமை அமைச்சர் ரணில் மேற்கண்டவாறு >> 53

# மகிந்த அணியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்குத் தயார்

## அரச தலைவர் மைத்திரி திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 28

கூட்டு எதிரணியில் உள்ள உறுப்பினர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்தால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான தனி அரசு அமைக்க தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு நேற்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறினால் அந்தக் கட்சியுடன் இணையலாம் என்று மகிந்த அணி நிபந்தனை விதித்திருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இரத்தினபுரியில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

"2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 96 பேரும் என்னுடன் ஒரே அணியில் இருப்பார்களேயானால் நாளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசை அமைப்பதற்குத் தயாராக உள்ளேன்" என்று அவர் கூறியுள்ளார்.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசை அமைப்பதாயின் ஒன்றிணையத் தயார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் வேறு கட்சி அமைத்துக் கூறிவருகின்றனர். அவர்கள் அந்தக் கட்சியை கைவிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்றிணைய முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றேன்.

எனது உடலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குருதியும் ஊழல் மோசடி மற்றும் குடும்ப ஆதிக்கத்துக்கு எதிரான குருதியுமே இருக்கின்றது. இன்று நான் நடவடிக்கை எடுத்து வருவது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக அல்ல. ஊழல் மோசடிக்கும் குடும்ப >> 53



## 5 மாணவர்கள் கொலைக்கு நீதி கோரிப் புதிய பரப்புரை

பன்னாட்டு மன்னிப்புச் சபை திட்டம்

கொழும்பு, ஜன. 28

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் 5 பேர் படுகொலை செய்யப்பட்டமைக்கு நீதிகோரிப் புதிய பரப்புரை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது பன்னாட்டு மன்னிப்புச் சபை.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி 5 மாணவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைக்கு நீதி கோரி "ட்ரிங்கோ பைவ்' என்ற பரப்புரையை இன்று வரை பன்னாட்டு மன்னிப்புச் சபை முன்னெடுத்து வருகிறது. தற்போது புதிய மனு ஒன்றில் கைச்சாத்திடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் படுகொலை தொடர்பில், இரண்டு பொலிஸ் விசாரணைக் குழுக்களும், அரச தலைவர் ஆணைக் குழுவொன்றும் >> 53

முச்சந்தி முரளி



எலக்சன் நேரத்தில கருத்து வேட்டுகளுக்கு குறைச்சலில்ல...

## மைத்திரி விடுத்த சவாலை ஏற்றுக்கொண்டது ஜே.வி.பி.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் முடிந்தால் விவாதிக்கலாம் என்று அரச தலைவர் விடுத்த சவாலை ஏற்றுக்கொள்கிறோம். இந்த விவாதத்துக்காக நாடாளுமன்றில் தினமொன்றை அறிவிக்க கட்சித் தலைவர்கள் கூட் >> 53

## புலிப் பாடலை ஒலிபரப்பின் புலித் தடையை நீக்கலாமே?

இப்படிக் கேட்கிறார் சிவஞானம்

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பாடல்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒலிபரப்புவதன் ஊடாக அவர்களை ஏற்றுக்கொண்டுள்ளதாக அதே கட்சியின் அங்கஜன் கூறுவாராயின், புலிகள் மீது தொடர்ந்தும் தடை தேவையில்லை. அந்தத் தடையை நீக்கவும், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி ஆகிய 3 விடயங்களை >> 53

# தீர்வு கிடைக்கும்வரை அரசுடன் ஒட்டு இல்லை

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜன. 28

ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வு ஏற்படும் வரையில் நாங்கள் அரசின் பங்காளிகளாக இருக்கமாட்டோம், தொடர்ந்தும் எதிர்க் கட்சியில்தான் இருப்போம்.

இவ்வாறு தெரிவித்தார், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

பரந்தனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் நேற்றுமாலை இடம்பெற்றது. உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்தப் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு சம்பந்தன் உரையாற்றியபோதே மேற் >> 53



## மகிந்தவைக் கலாய்த்த மகிந்த!

கொழும்பு, ஜன. 28

அரசு கம்பியூட்டர் ஜில்மால் செய்யாமல் இருந்தால் தேர்தலில் நாங்கள்தான் வெல்வோம்.

இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் தெரிவித்திருக்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

தம்புள்ளையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டமொன்றில் ஒலிபெருக்கிப் பாவனைக்குத் தேர்தல் ஆணைக்குழு தடை விதித்திருந்தது. தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றதால் அன்று மாலை 4 மணிக்குப் பின்னரே ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த முடியுமென்று தேர்தல் ஆணையகம் தெரிவித்திருந்தது.

அதனால் அதிருப்தியடைந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடியுள்ளார். அதன்போதே இவ்வாறு கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. >> 53



சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகளுக்காகவே போட்டி

## அ.இ.த.கா வேட்பாளர் உதயச்சந்திரா தெரிவிப்பு

**மன்னார்,ஜன.28**
**தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நன்மை பெற வேண்டும் என்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றேன். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் பெண் வேட்பாளர் மனுவல் உதயச் சந்திரா தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் க்கட்சியின் சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மன்னாரில் காணாமற் போனவர்களுடைய உறவினர்கள் நன்மையடைய வேண்டிய நிலை உள்ளது. சுமார் 302 உறவுகள் உள்ளனர். ஏனைய மாவட்டங்களுடன் சேர்ந்து 5 ஆயிரம் உறவுகள் உள்ளனர்.
அனைவரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். காணாமற் போனவர்கள் தொடர்பில் இடம் பெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டிருந்தேன்.
காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு எந்த வகையிலாவது உதவிகளை வழங்க வேண்டும். நன்மை கிடைக்கும் என்று நம்புகின்றேன். காணாமல் போனவர்களை மீட்டெடுத்துத் தர எங்களுக்காக போராட வேண்டும் என அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன்.
நான் பதவிக்காகவோ, அல்லது அரசியலில் ஈடுபடுவதற்காகவே ஆசைப்பட்டு வரவில்லை.
எனது மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். எனது எதிர்பார்ப்பு நிச்சயம் நிறைவேறும் - என்றார். (ந.ரி4.56)

# தேர்தல் காரியாலயம் தீக்கிரை

மட்டக்களப்பு.ஜன.28
காத்தான்குடி நகரசபைத் தேர்தலுக்காகப் போட்டியிடும் ஊடகவியலாளர் ஒருவரின் தேர்தல் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக, காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் காரியாலயமே நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டது. குறித்த அலுவலகம், இனந்தெரியாதோரால் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி2)

# இனப்பிரச்சினையை இழுத்தடிக்கவே ஐ.தே.கவும் சு.கவும் போட்டியிடுகின்றன

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு. ஜன.28
தமிழ்த்தேசியம் பற்றிய பொய்யான முகத்தைக் காட்டுவதற்காகவே ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை தமிழர் பிரதேசங்களில் களமிறங்கியிருக்கின் [illegible] வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் [illegible] த்தார்.
மட்டக்களப்பு எருவில் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
இனப்பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடிக்கும் நோக்கத்திலேதான் இன்று இந்த ஐக்கியதேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களை தேடி வருகின்றார்கள் அவர்களுக்கு நாங்கள் வாக்களிப்போமானால் எமது தமிழ்த்தேசியவாதம் பலவீனப்படுத்தப்படும் அதே வேளை நாங்கள் பலமிழந்து பெருந்தேசியவாதத்துக்குப் பின்னால் சென்றுவிட்டோம் என்ற செய்தியையும் கூறுவார்கள்.
தமிழ் மக்களிடத்தே போலியான, ஒட்டுண்ணி அரசியல், அடிவருடித்தனமான அரசியல் செய்கின்றவர்கள், பேரினவாதிகளின் நிகழ்ச்சிநிரலின்கீழ் செயற்படுகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள் இவர்களின் முகத்திரை தமிழ்மக்களாகிய உங்களுக்குத்தெரியும் அதனை கருத்திற் கொண்டு உங்களுடைய வாக்குகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அளியுங்கள் - என்றார். (ந.ரி4)



# கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துங்கள்

யாழ்ப்பாணம்.ஜன.28
கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி எமது அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் இதற்கு வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான கணேசபிள்ளை பாலச்சந்திரன் தெரிவித்தார்.
தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவும் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் அண்மையில் காரைநகரில் இடம்பெற்றது.
அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் அகிம்சைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைவரிடம் இருந்த போர் வாள் இப்போது சம்பந்தன் ஐயாவின் கைகளில் உள்ளது.
அவருடைய கரங்களை அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து பலப்படுத்துவதன் மூலம் இந்தப் போரில் வெற்றி பெற முடியும். இதற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தலை தக்க ஆயுதமாகப் பயன்படுத்துவோம்.
உரிமைப் போராட்டத்துடன் எமது அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்க்க முயலவேண்டும் பல தசாப்தங்களாக உரிமைக்காகப் போராடி வருகின்றோம். இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தள்ளது அத்துடன் பன்னாடுகளின் அழுத்தமும் பிரயோகிக்கப்படுகின்றது. எனவே கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் தமிழ் மக்களின் ஒற்றுமையே எமது உரிமைகளை வென்றெடுப்பதைத் துரிதப்படுத்தும் எனவே தமிழரசுக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்தி எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்போம்.
காரைநகரில் உள்ள ஐந்து மயானங்களும் புனரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்படும். மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகி மக்களின் அடிப்படை, அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன்.
இவற்றைச் சாத்தியமாக்க பிரதேச வேறுபாடு, கருத்து வேறுபாடு, சாதி மத வேறுபாடு, என்பவற்றைக் கடந்து தன்மானத் தமிழன் என்ற உணர்வுடன் வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு ஆறு வட்டாரங்களிலும் மாபெரும் வெற்றியை பெற்றுத் தாருங்கள் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமையே பலம் - என்றார். (ந.ரி2.60)

# அபிவிருத்திக்கு த.மு.கூ வெற்றி பெற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



நுவரெலியா.ஜன.28
தமிழ் முற்போக்கு கூட்டணியின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதற்கு காரணம் எங்களுடைய ஒற்றுமையே என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
கொட்டகலையில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மலையகத்தில் தற்பொழுது அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் மலையகத்தில் இருக்கின்ற தொழிற்சங்கங்களான மலையக மக்கள் முன்னணி தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய இரண்டும் இணைந்து செயற்படுகின்றன. இதனால் கடந்த பல வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த பல திட்டங்கள் தற்பொழுது நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. நாங்கள் இணைந்து செயற்படுவதையே மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். எதிர்காலத்தில் பல அபிவிருத்திகள் வந்து சேர வேண்டுமாக இருந்தால் இந்த தேர்தலில் எங்களுடைய தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக போட்டியிடுகின்ற உறுப்பினர்கள் வெற்றி பெற வேண்டும் - என்றார். (ந.ரி4)

# தேர்தல் அலுவலக திறப்பு விழா



வவுனியா,ஜன.28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அலுவலக திறப்பு விழாவும் பரப்புரைக் கூட்டமும் அண்மையில் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது
இந்த நிகழ்வில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி லிங்கநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் உட்பட வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந.ரி2)

# தீர்வைத்தான் நாங்கள் வேண்டி நிற்கின்றோம்

## மாகாணசபை உறுப்பினர் நடராசா தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.28
சில தமிழ் தலைவர்கள் மகிந்த ராஜபக்சவுடன் சேர்ந்துதான் கடந்த காலங்களில் பிரதேச சபைகளின் ஆட்சி அதிகாரங்களைச் செய்தார்கள். அன்று இருந்த நிலமைதான் தற்போதும் இங்கு காணப்படுகின்றது என்ற நப்பாசையில் தற்பொழுதும் களமிறங்கியுள்ளார்கள். இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேசசபைக்காக தமிழ்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தவராசா தயாழினியின் வீட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மக்களை வழி நடத்தும் தலைவர்களாக இருந்தவர்கள் தற்போது தடுமாறித்திரிகின்றார்கள். இன்னும் சில பெரும்பான்மைக் கட்சிகளில் பணத்தை பெற்றுத்தான் இங்கு அவர்கள் களமிறக்கப் பட்டுள்ளார்கள்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தினாலும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்ற தேர்தலாகும். தற்போது இங்கையில் 2 பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆளும் கட்சியாகவும், தமிழ் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க் கட்சியாகவும் இருந்து செயற்பட்டு வருகின்றன. அவர்கள் அனைவரும் சமஷ்டி முறையிலான தீர்வுக்காக இணங்கியிருக்கின்றார்கள். இவைகளனைத்தும் இவ்வாறு சென்று கொண்டிருக்கின்ற நிலையில் இத்தேர்தல் காலத்தில் எமது மக்களை மனம் மாற்றும் செயற்பாட்டிலும் பலர் இறங்கியுள்ளார்கள். எமக்கு அபிவிருத்தி தேவைதான் அதனிலும் விட எமக்குரிய தீர்வைத்தான் நாம் வேண்டி நிற்கின்றோம் - என்றார். (ந.ரி4.46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தைக் கட்டி எழுப்ப மக்கள் அங்கீகாரம் வேண்டும்

## ஈ.பி.டி.பி வேட்பாளர் கண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

காரைநகர் மக்களின் அடிப்படை. அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தற்போது இங்கு இடம் பெறும் கலாசாரச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தி நல்லதோர் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கும் உங்கள் அங்கீகாரமே எமக்குத் தேவை. இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொது வேட்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான வீரமுத்து கண்ணன் தெரிவித்தார்.

காரைநகர் மருதபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து எமது பணி மக்களுக்குத் தொடர்ந்திடவும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அபிவிருத்தி காணவும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் அணிதிரண்டு வீணைக்கு வாக்களித்து எம்மை வெற்றி பெறச் செய்யுங்கள்.

இங்கு தற்போது இடம்பெற்று வரும் கலாசாரச் சீரழிவுகள்.போதைப்பொருள் பாவனை என்பவற்றைத் தடுத்து நிறுத்தி இளம் சந்ததியினரை சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக உள்ளூராட்சி மன்றங்களை எங்களிடம் கையளிப்பதற்கு மக்கள் முன்வந்து ஆணை வழங்கவேண்டும் என்றார். (ற.ரி4,250)



# மக்களுக்கான மாற்றத்தை வழங்கத் தயாராக உள்ளோம்

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவிப்பு

வவுனியா.ஜன.27

நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு ஊடாகத்தான் எமது மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணமுடியும் என்ற நம்பிக்கையில்தான் இற்றைவரை எமது அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றோம். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியா தரணிக்குளம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆயுத வழிமுறை மூலம்தான் தீர்வுகாணலாம் என்று கூறியவர்களின் நிலை குறித்து மக்கள் நன்கறிவார்கள். இன்று எமது வழிமுறையே சரி என்பதை எமது மக்களும் சக அரசியல் தலைமைகளும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் மட்டுமன்றி பன்னாடும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்றும் சக தமிழ் கட்சிகள் கருதுகின்றன.

நாம் அதிலிருந்து மாறுபட்டவர்களாக இருப்பதுடன் எமது மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவும் உள்ளது. மக்கள் விரும்பும் மாற்றத்தை நாம் மக்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம். என்றார். (ற.ரி4)

# சேவைசெய்யும் உள்ளங்களை இனங்கண்டு வாக்களியுங்கள்

## த.தே.கூ வேட்பாளர் லக்சிகா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

**சமூகத்துக்குச் சேவைசெய்யும் உள்ளங்களை தெரிவுசெய்து வாக்களிப்பதன் ஊடாக அடுத்துவரும் நான்கு ஆண்டுகளில் மெய்யான அபிவிருத்தியை வலி.தென்மேற்கு பிரதேச சபையூடாக காணலாம். அனைத்து மக்களும் ஒருங்கிணைந்து தமிழ்தேசிய கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து அபிவிருத்தியைக் காணும் நீடித்த நிலையை சிந்தித்து ஏற்படுத்துங்கள்.**

இவ்வாறு தமிழ்தேசிய கூட்டமைப்பின் தமிழரசு கட்சியின் நவாலி வடக்கு வேட்பாளர் திருமதி லக்சிகா ஜெயசுதன் தெரிவித்தார்.

நவாலி வடக்கு பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைக்கு அங்கத்தவர்களாக சென்றவர்கள் உண்மையான அபிவிருத்தி தெரிந்தும் பொதுப் பயன்பாட்டு சேவை குறித்துப் பேசவில்லை. அங்கு உறுப்பினர்களிடையே ஒருங்கிசைவு ஒத்துணர்வு ஏற்படவில்லை.

அடுத்துவரும் நான்கு வருடத்தில் பிரதேச சபைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி. வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு உட்பட்ட வீதி அபிவிருத்தி குழாய் மூலமான குடிதண்ணீர் வழங்கல் விஸ்தரிப்பு. பொதுப்பயன்பாட்டு சேவை என பலமுக சேவை முன்னெடுத்து கிராம அபிவிருத்தியையும் பிரதேச அபிவிருத்தி ஊடாக மாவட்ட அபிவிருத்தியை உள்ளூராட்சி சபை அலுவலர்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்க வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல அனைவரும் ஒன்றுபடுங்கள் என்றார். (ற.ரி4,50)



## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

மொனராகலை.ஜன.28

வெல்லவாய தனமல்வில வீதி பில்ல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு உரித்தான பேருந்தும் சிற்றூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதிலேயே விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.இந்த நிலையில் சடலங்கள் தனமல்வில மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

காயமடைந்த நபர் அம்பாந்தோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற.ரி2)

# தமிழரின் அடையாளம் அழிந்து வருகின்றது

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன.28

தமிழ் மக்களின் அடையாளங்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இவற்றை காப்பாற்றுவதற்கு இது போன்ற நிகழ்வுகள் உதவியாக உள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்திய கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழா நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வு உலக வாழ் தமிழ் மக்களையும் மற்றும் இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைக்கும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் அடையாளங்கள் காணமற் போய்க் கொண்டிருக்கின்றன. இவற்றை காப்பாற்றுவதற்கு இது போன்ற நிகழ்வுகள் உதவியாக உள்ளன. எல்லா மதங்களுக்கும் கௌரவம் அளிக்க நினைப்பவன் நான். இவ்வாறான நிகழ்வுகள் வளர்ந்து வரும் சந்ததியினருக்கு மொழி மத கலாச்சாரங்களை போதிப்பதற்கு மிக முக்கியமானவை ஆகும். என்றார். (ற)

# விபத்தில் காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜன.28

திருகோணமலை - புத்தளம் பிரதான வீதி மஹதிவுல்வெவ பகுதியில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதியால் வந்த லொறி முச்சக்கர வண்டியை மோதியதில் வீதியோரத்தில் நின்று கொண்டிருந்தவரை முச்சக்கர வண்டி மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். 51வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய இரண்டு வாகன சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் திருகோணமலை பொது வைத்தியதாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# துணிச்சலானவர்களையே தெரிவு செய்ய வேண்டும்

## த.தே.கூ. வேட்பாளர் கிஷோர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

மக்களோடு மக்களாக களத்தில் நிற்கின்ற துணிச்சல் மிக்க இளைஞர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் ஞா.கிஷோர் தெரிவித்தார். வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் சாவகச்சேரி நகர இளைஞர் கழக செயலாளர் மு.கோகுல்றாஜ் அமைப்பாளர் ச.துவாரகன் மற்றும் இளைஞர்கள் சகிதம் நகர வட்டாரத்தில் பரப்புரையில் ஈடுபடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று தேர்தல் என்றதும் நாம்தான் மக்களோடு நிற்பவர்கள் பணி செய்யப் பிறந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பொதுநல சிந்தனைகூட இல்லாமல் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று இருந்தவர்கள் பலரும் உங்கள் வீட்டுப் படலைகளை தட்டக்கூடும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுபவர்கள் மட்டுமே மக்களோடு மக்களாகவும் மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர்களாகவும் உள்ளனர். மக்கள் அனைவரும் எமது ஒற்றுமையை வெளிப்படுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வரலாற்று வெற்றியை பெற்றுக் கொள்ள பங்களிக்க வேண்டும் - என்றார். (ற)

கொத்மலை பிரதேச சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் சந்திப்பு குயின்ஸ்பெரி தோட்டத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜா உட்பட வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துக் கொண்டனர். (ற,ரி4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**நிர்வாகக் குழுத் தெரிவு 2018-2019**

**நியமனப் பத்திரம் கோரல்**

யாழ். இந்து பழைய மாணவர் சங்கத்தினது நிர்வாகக் குழுத் தெரிவானது நடைமுறை யாப்பின் படி நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் மூலம் இடம்பெறும். இதன் பிரகாரம் 2018-2019ஆம் ஆண்டிற்கான நிர்வாகக் குழுவிற்காக உரிய தகைமையுடைய பழையமாணவர் சங்க அங்கத்தவர்களிடமிருந்து நியமனப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை எமது சங்க இணையத்தளத்திலும் (www.jhcobajaffna.com) சங்க விள்ம்பரப் பலகையிலும் பார்வையிடலாம்.

**07-02-2018 மாலை 01.30 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறல் வேண்டும்**

செயலாளர் தேர்தல்குழு — தலைவர் தேர்தல்குழு

---

வெள்ளிக்கிழமை நியத ஜய — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் : 638 வர்ணம் : நீலம் திகதி : 2018.01.26

வெற்றி இலக்கங்கள்: 63 53 19 54 ஆங்கில எழுத்து: X

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,323,920/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் **மணமகனை / மணமகளை** மிகப் பொருத்தமாக உடன் தெரிவுசெய்து தரப்படும்.

**642, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** (நல்லூர் கோயிலுக்கு முன்பாக)

077 1387 596 / 077 770 4457 (cs.13355) 13.17)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் **திரு.பு.பிரசாந்** (யுனிவேசன்கொம் உரிமையாளர்-சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தையும், மன்ற ஆரம்பகால உறுப்பினருமான

**கணபதிப்பிள்ளை புலேந்திரன்**

(உரிமையாளர் - நியூ V.M.K ஜுவல்லர்ஸ் நவீன சந்தை சாவகச்சேரி)

அவர்கள் 26.01.2018 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி
**கைத்தொழில் வணிகர் மன்றம்**

(IN 5677)(10)

---

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

## றோயல் குளுக்கோஸ்




உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் ! என்று கேட்டு வாங்குங்கள் !

Packed By: **ROYAL INDUSTRY ®** Colombo 13 077 727 7670


சிவா நறுமணப்பூங்கா 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2567

---

## மரண அறிவித்தல்

**இரத்தினஐயர் சுந்தரேஸ்வரசர்மா**

(அழகொல்லை பிள்ளையார் கோயில் ஆதீனகுரு)



அளவெட்டி அழகொல்லையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினஐயர் சுந்தரேஸ்வர சர்மா நேற்று (27.01.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினஐயர் மனோன்மணிஅம்மா (அழகொல்லை ஆதீனகர்த்தா) தம்பதியரின் அன்பு மகனும் சிதம்பரேஸ்வரசர்மா ஜெய லட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும்புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் மாணிக்கவாசகுருக்கள் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் கௌரி (புனிதம்), தெய்வநாயகி (சக்தி), மகாலிங்கக்குருக்கள் காலஞ்சென்ற உஷாதேவி மற்றும் கல்யாணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அழகொல்லை பிள்ளையார் கோயில், அளவெட்டி. (C 13383/17.8)

தகவல்: குடும்பத்தினர். 077 4644 400

---

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

**காலம் - 18.02.2018**
**நேரம் - காலை 9.30 மணி**
**இடம் - கல்லூரி தம்பர் மண்டபம்**

**பழைய மாணவ அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்**

**செயலாளர்.**

(cs00931)(17.8)

---

## வேலை வாய்ப்பு



யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது KINGS ELECTRONICS(PVT) LTD நிறுவனத்திற்கு

- Showroom Sales Representative (ஆண், பெண்)
- Graphic Designer (ஆண், பெண்)
- Account Assistant (ஆண், பெண்)

பணியாளர்கள் உடன் தேவை 10.02.2018ம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகமளிக்கவும். தொடர்புகளுக்கு

**KINGS ELECTRONICS(PVT) LTD**

021-4546699 — 12, Point Petro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

---

## கண்காட்சியும், மலிவு விற்பனையும்

எதிர்வரும் 29.01.2018 திங்கட்கிழமையில் இருந்து இரண்டு வாரங்களுக்கு பாடசாலை, பல்கலைக்கழக **(Chemicals, Laboratary)** ஆய்வு கூட பொருள்கள் கண்காட்சியுடன் கூடிய மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**All Ceylon Distributors**
**212 & 214, K.K.S. Road, Jaffna**

(c13380)(17.8)

---

சனிக்கிழமை அதிர்ஷ்டம் — சனிதா வாசனாவ — பச்சை

வெற்றி வாரம்:2987 திகதி:27.01.2018 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 09 31 54 74 N — போனஸ் இலக்கம்: 53

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 42,369,010/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 150 வர்ணம் : இளஞ்சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 2018.01.27

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,431,620/-

வெற்றி இலக்கங்கள்: 05 08 35 53 ஆங்கில எழுத்து: R

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

சம்வர்தன வாசனாவ — Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 113 சீட்டிழுப்பு திகதி 27.01.2018 இளஞ்சிவப்பு

வெற்றி இலக்கங்கள்: 22 44 52 58 சுப்பர் இலக்கம்: 05 அதிர்ஷ்ட மாதம்: நவம்பர்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 88, 35, 500 /= | அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 36, 33, 083/= | அடுத்த ஜக்பொட் ரூ. 13, 62, 014/=

2018.02.01ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

---

## திடீர் பலிக்கும் மந்திரம்

தீராத நோயா? தீரா கடனா? பசு மாடுகள் விருத்தி வேண்டுமா? ஒருவரை ஒருவர் வசியம் செய்யவேண்டுமா? வீட்டுக் காவல் செய்யவேண்டுமா? தேவைகளுக்கு,

**காலசித்தர் Rev. P.K. சாமி J. P. ஐயா**
மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்
இல. 23, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
T.P. 0112342463/64, Whatsapp 0777588405

---

## ES Printers



அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

021 492 7471, 021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## அறை வாடகைக்கு

சொய்சாபுர C Block, 3 ஆம் மாடியில் அமைதியான சூழலில் ஆண் ஆசிரியர் ஒருவர் இருக்கும் வீட்டில் தனியறை With Pantry (FullyTiled) மாணவன் ஒருவருக்கு / வேலை பார்க்கும் ஆண் ஒருவருக்கு வாடகைக்கு உண்டு. Rent 10,000/= 2 மாத முற்பணம்

(CS 13097)(02-17) தொடர்புகளிற்கு 075 8091 598

---

## காணி விற்பனைக்கு

யாழ் சோமசுந்தரம் வீதியில் (கண்டி வீதிக்கு மிக அருகில்) 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு. விலை 65இலட்சம்.

**Tel- 0772359535**

---

## விற்பனைக்குண்டு

மானிப்பாய் தெற்கு, புளியடிச்சந்தை ஒழுங்கையில் 3¼ பரப்புக்காணி பிரயோசனங்கள், சுற்றுமதிலுடன் உடனடி விற்பனைக்குண்டு.

**077 790 1039** (IN/8417)(11.17)

---

## மணமகள் தேவை

கொழும்பு தந்தை, தாய் - யாழ். கத்தோலிக்க குடும்பம். வயது 37. கணினித் துறையில் பணியாற்றும் மணமகனுக்குப் படித்த தொழில்புரியும் கத்தோலிக்க / மணமகள் உள்நாடு/ வெளிநாடு தேவை. படம், விவரத்துடன் ஈமெயில் செய்யவும்.

rajcc@asia.com

**077 449 0678** (IN/8413)(11.17)

---

## வேலையாள்கள் தேவை

புத்தளத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு அனுபவமுள்ள தங்கியிருந்து வேலை செய்ய கணவன், மனைவி அல்லது தனியாள் தேவை. (அநாதைகள், போரால் பாதிக்கப்பட்டவர்கள் முன்னுரிமை) வசதியான தங்குமிடம் தரப்படும்.

**077 731 9426** (CS/8416)(11.17)

---

## உணவகத்திற்கு கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை

- CAPTAIN / STEWARD
- STORE KEEPER
- DELIVERY BOY
- BILLING CLERK (MALE / FEMALE)
- KITCHEN HELPER

நேர்முகபரீட்சைக்கு சான்றிதழ்களுடன்

**29-01-2018 / 30-01-2018**

ஆகிய தினங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரில் வரவும்.

**ShanmugaS**
"The Vegetarian Restaurant"
No. 53/3, Ramakrishna Road, Wellawatte, Colombo - 06.
Tel: 0112 361 384

GOODWIN

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ். நகர பகுதிக்குள் களஞ்சியம் ஒன்றிற்கு வீடு அல்லது கட்டடம் தேவை

தொடர்பு :
**076 8219 414**
**076 6780 289**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

**British Way® English Academy**

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

SLIM — British Way English Academy

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

06, February, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

11, February, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way English Academy — **Contact (Jaffna Branch) : 021 300 55 55**
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## நிர்வாக உதவியாளர் தேவை

அரசாங்க மற்றும் தனிப்பட்ட ஒப்பந்த நிர்மான வேலைகளைச் செயல்படுத்தும் எமது நிறுவனத்துக்கு மேற்படி பதவி வெற்றிடத்துக்குத் தகுந்த உத்தியோகத்தர் தேவை.

**கல்வி அறிவு :-** ஆகக் குறைந்தது G.C.E. O/L இல் ஏற்கக் கூடிய பெறுபேறு.
**முன் அனுபவம் :-** அவசியமில்லை (3 மாதகாலம் பயிற்சிக் காலமாக கருதப்படும்)

**ஏனையவை:-**
1. வலுவான தொடர்பாடல் அறிவு
2. தமிழ் மொழியில் வழங்கப்படும் அறிவுறுத்தலுக்கு அமைவாக கடிதங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயார்படுத்தக் கூடிய அறிவு.
3. வேலைத் தளங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில கிடைக்கும் தகவல்களை மறதித்தன்மை இல்லாமல் நாளாந்தம் ஏடுகளில் பராமரித்தலுடன் தலைமைக்கு அறிவிக்கக் கூடிய அறிவு.
4. பிரயாண வசதி கருதி எமது அலுவலகத்துக்கு அண்மையான பிரதேசத்திலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. பெண்களுக்கு முன்னுரிமை
6. வேலையிலிருந்து விலக வேண்டுமாயின் ஒருமாத காலத்துக்கு முன் எழுத்து மூலமான முன்னறிவித்தல் தரப்பட வேண்டும். அல்லது ஒருமாத சம்பளத்தினை மீள் செலுத்த வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

தங்கள் சுயவிவரக் கோவையை **076 466 7420 Viber** இலக்கத்துக்கு அல்லது அலுவலகத்தில் நேரடியாக கையளிக்கவும்.

(C/15671)(11,17)

Manager
Tharanhi Engineering (pvt)Ltd,
Shanth pharmacy block, 1st Floor, A-9 Road, Kodikamam

## School of Nursing
## புளோரன்ஸ் நைற்றிங்கேள் தாதியர் பயிற்சிப் பாடசாலை

**நீங்களும் தனியார் வைத்தியசாலையில் தாதியாக தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?**

- ஒருவருட பயிற்சிப் பாடநெறி
- 3 மாதம் தனியார் வைத்தியசாலை பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்
- வெளிநாடு செல்பவர்களுக்கான சிறப்புச் சான்றிதழ்கள்

**தகைமை**
**O/L 6** பாடம் சித்தி
வயது 18 - 35 வரை

**அலுவலக கடமை நேரம்**
8.30 - 4.00 வரை



தொடர்புகளுக்கு:- **077 718 6438**

(CS/13342)(11,17)

## தேவை

பழுது அடைந்த கம்பியூட்டர்கள், LCD TVகள், LCD மொனிட்டர்கள் மற்றும் வாகன பட்டரிகள் உங்கள் இடத்திற்கு வந்து கொள்முதல் செய்யப்படும். தொடர்பு - **077 397 3166**

## தேங்காய் மட்டை தேவை

தேங்காய் மட்டை (பொச்சுமட்டை) தேவை. உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்வோம். தொடர்பு - **077 654 4428**

(cs 13357)(17,8)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானை தாமோதரம் வீதியில் **Junior Hindu College** க்கு முன்னாலுள்ள ஒழுங்கையில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு - **076 604 8546**

(aco 147)(17,8)

## தேவை

கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களில் பிஸ்கட், ஆடை தொழிற்சாலைக்கு ஆண் / பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு.
**வயது 18 –30 வரை.**
**மாத சம்பளம் 30,000/– வரை.**
தங்குமிடம் இலவசம். வரும் நாளிலேயே வேலைவாய்ப்பு. போலி சம்பளங்களுக்கு ஏமாற வேண்டாம்.
மேலே குறிப்பிட்ட சம்பளம் நிச்சயம் கிடைக்கும்.

**076 426 1252** (IN/8413)(11,17)

## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய், இராசவீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1,2 பரப்புகளாகப் பிரித்தும் வழங்கப்படும்.

**076 640 0334** (IN/8415)(11,17)

## வீடு வாடகைக்கு விடப்படும்

இல.384., நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இருக்கும் வீடு வாடகைக்கு விடப்படும். 5 அறையும். 2 குளியலறை வசதியும் உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**இ.தேவநேசன் - 077 658 9694**

(CS/13353)(11,17)

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

## இந்திய சுற்றுலா

திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார், சமயபுரம், ஸ்ரீரங்கம், திருவாணைக்காவல், மகாபலிபுரம் கற்கோயில்கள், பாண்டிச்சேரி, சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோவில், திருவாரூர், கும்பகோணம், காஞ்சி காமாட்சி, ஏகாம்பரேஸ்வரர் கோவில், திருக்கடையூர், திருப்பதி வெங்கடாசலபதி, தஞ்சை பெரியகோவில், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், இராமேஸ்வரம் (அக்கினி தீர்த்தம் மற்றும் 22 புனித கிணறுகளில் நீராடல்) மதுரைமீனாட்சி அம்மன், ஆயிரம் கால் மண்டபம், அழகர் கோவில், திருச்செந்தூர், பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், பழனி, திருத்தணி, சுவாமிமலை, கொடைக்கானல், திருநல்லாறு சனீஸ்வரன், திருநாகேஸ்வரம், திருவண்ணாமலை, திருமணஞ்சேரி, வடபழனி முருகன், சென்னை மெரினா கடற்கரை, அண்ணா, எம்.ஜீ.ஆர் நினைவு சதுக்கங்கள், மற்றும் பல கோயில்கள் சுற்றுலா தலங்கள் உள்ளடக்கம். சென்னையில் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒரு நாள் ஒதுக்கப்படும்.

இருவழி விமாணக்கட்டணம், மூன்று நேர சைவ உணவு, காலை - மாலை தேநீர், குளியலறை இணைந்த தங்குமிட வசதி, முழு சுற்றுலாவிற்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேரூந்து, திருப்பதியில் V.I.P வரிசையில் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும், சுத்தமான குடிநீர் வழங்கப்படும்.

**மொத்தம் 12 நாட்கள்** | **புறப்படும் திகதி : 28-02-2018**

தொடர்புகளுக்கு.
**கண்டி. எஸ். சண்முகம்.**
**SHRISUN TRAVELS**
**No. 13, Galawatte Road, Katugastota, Kandy**
**071-7061379, 077-4687928**

## SharmilaTravels

TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

**எமது யாழ் கிளை அலுவலகத்திற்கு**

- **Marketing**
- **Cashier**
- **Ticketing**

போன்ற வெற்றிடங்களுக்கு ஆங்கில புலமை பெற்றவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

**pettah@sharmilatravels.com**

**எமது நிறுவனத்தினால்**
**இந்தியா, மலேசியா, தாய்லாந்து, டுபாய், சைனா, வியட் நாம், சிங்கப்பூர், பாலி** போன்ற நாடுகளுக்கான சுற்றுலா வீசா ஏற்பாடுகளும் சுற்றுலா ஒழுங்கும் செய்து தரப்படுவதுடன் சகல நாடுகளுக்குமான விமான சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **Sharmila Travels**
**289, Stanly Road, Jaffna.**
**021 222 0266**

## DELVON ASSISTANCE FOR SOCIAL HARMONY (DASH)

### Advertisement for the post of Junior Logistic Officer

Applications are invited for qualified Sri Lankans on contract basic for the post of Junior Logistic Officer based in Kilinochchi

The ideal candidate should be a male with relevant qualifications and experience in a similar capacity, conversant in English and Tamil (Sinhala preferred)

- Assisting the Logistic Officer.
- Documentation related to stores and record keeping.
- Handling goods and materials in all sites.
- Experience in computerized costing and stock management.
- Willing to work extra hours.

Please forward your CV to - **dashfmkln@gmail.com** or by post on or before 10th February 2018 (Only short listed candidates will be called for an interview)

**An Attractive remuneration package awaits the right candidate**

**Field Manager**
**DASH-37, Selva lane, Anandapuram,**
**Kilinochchi.**
**Contact No-0727272139**

(CS 13303)(10)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 09 . 04 . 1930



மறைவு 27 . 12 . 2017

அமரர்
**ஆறுமுகம் சிவநாயகி (பவானி அம்மா)**
**28.01.2018**

ஈர் ஐந்து மாதங்கள்
கருவோடு எனை சுமந்து
உன் பூவிழி விழித்திருந்து
உன் உதிரத்தை பாலாக தந்து
என் பசி தீர்த்தாயே
அம்மாவே என்பசி தீர்த்தாயே

அரக்கரின்
சில இடையூறு செயல்
தாங்க முடியாமல்
ஆலய வாசலில்
அமர்ந்திடுவாயே!

**44/15, மணல்தரை வீதி, கந்தர்மடம்.**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவிப்புலன் கருவி விற்பனைக்கு

**செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?**
கவலையை விடுங்கள் மிகக் குறைந்த தொகையாக ரூபா.4999/= மட்டும் செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை கைவசமாக்கிக் கொள்ளுங்கள். விரையுங்கள் குறைந்த கையிருப்புக்கள் மாத்திரமே.



தொலைபேசி மூலம் ஓடர் செய்பவர்களுக்கு வீட்டிற்கே வந்து கையளிக்கப்படும். (CS 13358)(10)


**உடன் அழையுங்கள் 077 434 6245**


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தங்கராசா) (ஆசாரி)

### (உரிமையாளர், கவியொளி மரத்தொழிலகம், பந்தல் சேவை)



வேலணை மேற்கு, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தங்கராசா) 26.01.2018 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் ஜெயரூபன், ஜெயரஜிதா (ஜேர்மனி), உதயரூபன், சத்தியறூபன் (ஆசிரியர், யா/ இராமநாதன்கல்லூரி) காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஞானகரன் (ஜேர்மனி), லக்மலி, சிவச்செல்வி, நந்தினி (ஆசிரியர், யா/ தாவடி இ.த.த.பா, யா/ அராலி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புமாமனாரும் விஸ்னுகா, விபுசன், கிறிஸ்ரினா, பிரவீனா, விதுர்சனன், தரணிகா, சிவாம்சன், சக்தீசன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற நமசிவாயம் அன்னலட்சுமி தம்பதியரின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா, ராசா மற்றும் ராசாத்தி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ராசா, வவா, இராசகோபால் ஆகியோரின் உடன்பிறவாசகோதரரும் பத்மநாதன், தேவராசா, ராணி, குகன், பொன்னா, செல்வி, கிளி, நகுலன் ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2018) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணிக்கு தாளையங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வங்களாவடி,**
**வேலணை.** (CS 13345) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 3693139, 077 9697141**

## திருமதி செல்லம்மா சரவணமுத்து



யாழ். சாவகச்சேரி, மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சரவணமுத்து நேற்று (27.01.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டியர் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றசரவணமுத்துஅவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி, கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), கெங்காதரம், காலஞ்சென்ற கமலாதேவி, பரமநாதன் (ஜேர்மனி), யோகராசா(பிரான்ஸ்), தங்கராசா, வைகுந்தராசா (சுவிஸ்), லோகேஸ்வரன்(லண்டன்), தயாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடேசபிள்ளை, புஸ்பராணி (பிரான்ஸ்), கலாராணி, சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சொர்ணறஞ்சி (ஜேர்மனி), ஆனந்தி (பிரான்ஸ்), மதிவதனி, சங்கநிதி (சுவிஸ்), அனேஜா (லண்டன்), விமலறஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியா, பிரிகதேவன் (பிரான்ஸ்), குகபிரியா (லண்டன்), குகநந்தி, நர்மதன், மேதா (லண்டன்), கிருஷந்தன் (பிரான்ஸ்), மதுரா (லண்டன்), ஜெயராஜ் (பிரான்ஸ்), சுஜேந்தினி (பிரான்ஸ்), கஜேந்தினி (பிரான்ஸ்), நிந்துஜா (ஜேர்மனி), நிதுலா (ஜேர்மனி), ஜவாகர் (ஜேர்மனி), சசிகலா (சுவிஸ்), சசிரேகா (பிரான்ஸ்), சசிப்பிரியா (லண்டன்), கஜேந்திரன் (பிரான்ஸ்), சசிக்கா (பிரான்ஸ்), வைஷ்ணன் (சுவிஸ்), நிதுஷ் (சுவிஸ்), மதுரன் (பிரான்ஸ்), பிரவின், சஞ்சயன், ஷயான் (லண்டன்), டிலக்சி (லண்டன்), விஞுக்ஷி (லண்டன்), தனுஷன், லதுசன், கனுசன், கஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிசாந், நதிசா, நமிசா (லண்டன்), திவ்வியன் (சுவிஸ்), திவ்வியா (சுவிஸ்), தாகித்தியன் (சுவிஸ்), பிரதீப் (பிரான்ஸ்), அக்ஷயன் (லண்டன்), கனுஷ்கா (பிரான்ஸ்), கஸ்மிரா (லண்டன்), சவ்வியா (பிரான்ஸ்), ஜெய்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இந்திராணி - இலங்கை +94766181302**
**கிருஷ்ணமூர்த்தி - பிரான்ஸ் +33646319490**
**கெங்காதரம் - இலங்கை +94778446386**
**பரமநாதன் - ஜேர்மனி +492043939035**
**யோகராசா - பிரான்ஸ் +33695115035**
**சயந்தன் — பிரான்ஸ் +33626378064, இலங்கை 077 4542530**

**தகவல்: குடும்பத்தினர்.** (C 5681/ 15/17)


Become a
**LIFE SKILLS TRAINER** for Children

CCH Centre for Children's Happiness — LIFE SKILLS

உளவியல், சமூகப்பணி, கற்பித்தல், கலைகள், ஆக்கத்திறன் முயற்சிகள், சிறுவர்களுக்கான பங்களிப்பு, பயிற்றுவித்தல் என்பன உங்கள் இயல்பான வாழ்க்கை தேடல்களில் ஒன்றாக உள்ளதா?

சிறுவர்களின் ஆளுமை, வாழ்க்கை திறன்களை விருத்தி செய்யும் சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்களாக உங்களை உருவாக்கிக்கொள்வதற்கான வாய்ப்பு. பயிற்சியின் பின்னர், தகுதியாகவும், ஆயத்தமாகவும் உள்ளவர்கள் பகுதிநேர பயிற்சியாளர்களாக இணைத்துகொள்வதற்கான வாய்ப்பு.

யாருக்குரியது?

- மேற்படி துறைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இளையோர் மற்றும் கற்றுக்கொண்டிருப்போர், துறைசார் பல்கலைக்கழக மாணவர்கள்
- ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள்.

சுய விபரத்துடன் விண்ணப்பியுங்கள்

The Manager
Center for Children's Happiness (CCH)
No 15, Kachcheri Nallur Road, Jaffna or No 8 Ratnakara Place, Dehiwala.
அல்லது மின்னஞ்சல் : cchforchildren@gmail.com Viber : 0771113747

இறுதி திகதி : 5th February 2018. பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளப்படுவர்



JOB VACANCY

CCH

Center for Children's Happiness (CCH) is a non-profit organization committed for a child friendly world and dedicated to working with children, families and their communities to reach their full potential. CCH is creating a sense of worth in every child we are working with, and making positive changes in their lives and environment
**CCH Sri Lanka is looking for self-motivated, experienced persons to fill the positions below.**

**1. PROGRAMME COORDINATOR**
Duty station: Jaffna (with frequent field visits (50%) to project locations and Head office).
Experience & Qualifications
*Project Management skills and experience. Effective Team Management skills. Network with relevant stakeholders. Ability to develop Project Proposals and Budgets.
*Better knowledge and skills in child development, child & women rights advocacy, community development with proven track records in project management.
*Excellent oral and written communication skills in English. Better Reports Writing Skills

**Salary: 40000 - 44000**

**2. SENIOR PROGRAMME OFFICER , PROJECT OFFICER**
Duty station - Jaffna and Colombo (frequent field visits to other districts )
**Experience & Qualifications**
*Educational qualifications in relevant field area. Knowledge about Child Rights and Child Development. Skills in Performing and Fine Arts.
*Network with other service providers who work for children & expand opportunities to bring resources to the children. Ability to travel fields with Motorbike license
*Excellent reporting and Research skills in English and Tamil.

**Salary: SLR 31,000 – 35,000**

**3. Accountant**
Duty station - Head Office, Colombo
Experience & Qualifications
- Required academic qualifications and Previous Experience in accounting related positions.
- Prepare and present Quarterly and annual finance reports in Quick Book accounting program,
- English Language Skills.

Salary: SLR 32,000 – 36,000

**Closing Date for Applications: 3rd February 2018 Mention the job title in the subject**
APPLICATIONS
Those interested in applying should send their detailed Curriculum Vitae, a cover letter together with the names & contact details of two non-related referees to:
**Director HR**
**Center for Children's Happiness (CCH) # 8, Ratnakara Place, Dehiwala.**
**Or By Email: cchforchildren@gmail.com**
**Only shortlisted candidates will be contacted.**


# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா வேலுப்பிள்ளை



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா வேலுப்பிள்ளை நேற்று (27.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரேசர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் இரத்தினசிங்கம் (ஓய்வுநிலைஅஞ்சலர்), கலாநிதி (ஓய்வுநிலை ஆசிரியை), உமாநிதி (வலயக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு வலயம்) மற்றும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் (ஓய்வுநிலை கணக்காளர் - சிமெந்து கூட்டுத் தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற றோசம்மா சிவநாயகம் (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் சகோதரியும் புவனேஸ்வரி, இந்துமதி (ஓய்வுநிலை கணக்காளர் - இ.போ.ச), புவனராசா (நிர்வாக கிராம உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி), காலஞ்சென்ற ஸ்ரீ முருகதாஸ் ஆகியோரின் மாமியும் சர்மௌா (ஆசிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), விஜிதா (முகாமைத்துவ உதவியாளர்), கோபிகிருஷ்ணா (இணையத்தள முகாமையாளர் - யாழ். பல்கலைக் கழகம்), விசாகன், துளசிகரன், மகிந்தன் (புகையிரத நிலைய அதிபர் சாவகச்சேரி), முருகபரன் (பொறியியலாளர்), அபிராமி (திட்டமிடல் அலுவலர்) ஆகியோரின் பேர்த்தியும் திரிலோஜன், ஜெகத்கிஷோர் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மந்துவில் இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C 5682/ 15/17)

**தகவல்:**
**மந்துவில் மேற்கு, கொடிகாமம்.** **வே.இரத்தினசிங்கம் (மகன்)**


உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் கோழியுடன் சென்றவருக்கு தர்மஅடி

## உரிமையாளரிடம் கொடுக்கவே சென்றதாகக் கதை கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 28

இரவில் ஒரு கையில் கோழியுடன் சாலையில் சென்று கொண்டிருந்தவரை வழிமறித்த இளைஞர்கள் சரமாரியாகத் தாக்கினர். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் மட்டுவிலில் சில நாள்களுக்குமுன்னர் இடம்பெற்றது.

சாலையில் மேட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது சைக்கிளுக்குள் கோழி சிக்கியதாகவும் அந்தக் கோழியைக் கையில் எடுத்துக்கொண்டு அதன் உரிமையாளரிடம் கொடுப்பதற்குச் சென்றதாகவும் அதன்போதே தன்னைக் கோழிக் கள்ளன் என்றுகூறித் தாக்கினர் என்று சந்தேகநபர் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நபரை இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் பொலிஸாரால் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் அவரைச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (4-9)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு



யாழ்ப்பாணம். ஜன.28

வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பளை ரயில் நிலைய அதிகாரிஎன்.புஸ்பகுமார், சிறப்புவிருந்தினராக மோகன்ரைல்ஸ் பாதுகாப்புசேவைப்பணிப்பாளர்திருமதி நிறோஜினிபுஸ்பகுமார், உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) எஸ்.திருக்குமரன் மதிப்புறு விருந்தினராக நலன்விரும்பி ஆசிரியர் ஆகியோர் ர்கலந்துகொண்டனர். (ய)

# மானிப்பாய் சந்தை வளாகத்தில் புதிய கடைத்தொகுதி அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

மானிப்பாய் பொதுச் சந்தை வளாகத்தில் சுமார் 30மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படுள்ள கடைத் தொகுதி மற்றும் மரக்கறி விற்பனை நிலையம், குளியலறையுடன் இணைந்த மலசல கூடங்கள் ஆகியவற்றின் கட்டட வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

தற்போது உள்ள சந்தை வளாகத்தில் போதிய இடவசதி இன்மையால் பாவனையாளர்கள் மட்டுமல்ல வியாபாரிகளும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். சிறிய நிலப்பரப்பைக்கொண்ட இச்சந்தை வளாகத்தில் மீன் விற்பனை நிலையம், மரக்கறி விற்பனை நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் மேற்படி சந்தையின் அபிவிருத்தியை கருத்தில்கொண்டு மானிப்பாய் வர்த்தக சங்கம் நான்கு பரப்புக்காணியை வாங்கி பிரதேசசபைக்கு வழங்கியிருந்தது.

இந்தக் காணியில் இருமாதங்களுக்கு முன் நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் ரூபா 80 இலட்சம் செலவில் சகல வசதிகளுடனும் கூடிய மீன்விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு தற்பொழுது இயங்கி வருகின்றது.

சந்தையின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் எடுத்துக் கொண்ட முயற்சியைத் தொடர்ந்து மீள்குடியேற்ற அமைச்சு 52 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது. இந்த நிலையில் முதல்கட்டமாக ரூபா 30 மில்லியன் பிரதேசசபைக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் தற்பொழுது மீன் சந்தைக் கட்டடத்துக்கு அருகில் மரக்கறி விற்பனை நிலையமும் 20 கடைகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றன. (ய-115)

## மன்னார் மளிகைப்பிட்டியில்

# 69 குடும்பங்களை வெளியேறுமாறு தொல்பொருள் திணைக்களம் உத்தரவு

மன்னார், ஜன.28

மன்னார் நானாட்டான் பிரதேசத்தின் மாளிகைப்பிட்டி கிராமத்தில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் 69 குடும்பங்களை அங்கிருந்து வெளியேறிச் செல்லுமாறு தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருள் கட்டடம் ஒன்று காணப்படுவதாகக் குறிப்பிட்டே மக்களை வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பழமைவாய்ந்த இடிபாடுகளுடன் காணப்படுகின்ற கட்டடத்தில் இருந்து சுமார் 500 மீற்றருக்குள் வசித்து வரும் மக்களை அங்கிருந்து வெளியேறிச்செல்லுமாறு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் பலவந்தப்படுத்தி வருகின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர்காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது கிராமத்தில் வந்து மீள்குடியேறியுள்ளனர். போரின்போது வீடுகள் சேதமடைந்து விட்டன. தற்போது மக்கள் புதிய வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இந்தநிலையில் தம்மை அங்கிருந்து வெளியேறிச் செல்லுமாறு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நாளாந்தம் பலவந்தப்படுத்தி வருகின்றனர் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை. தற்போது எமது வீட்டு வளாகத்தினுள் பயன்தரும் மரங்களை நடவும் அனுமதி இல்லை. வீட்டுத்தோட்டம் மற்றும்



மரங்களை நட அனுமதிக்காமையினால் நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். எமக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் உள்ளபோதும், அதிகாரிகள் எம்மை வெளியேற்ற முயற்சிக்கின்றனர் - என்றனர்.

எனவே, உரிய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய தீர்வை பெற்றுத்தரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ய-56)

# வலி. தென்மேற்குபிரதேசத்துக்கு தனி தேர்தல் கொள்கைவிளக்க அறிக்கை

## வெளியிடுவதற்கு ஆலோசனை


யாழ்ப்பாணம், ஜன.28

வலி. தென்மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு தனியான தேர்தல் கொள்ளை விளக்க அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை பிரதேச சபைமேற்கொண்டுள்ளது.

பிரதேசசபை தேர்தலையடுத்து எதிர்வரும் காலங்களில் மக்களுக்குத் தேவையான வேலைத்திட்டங்களை ஆராயும் ஆலோசனைக் கூட்டம் கட்டுடையில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றுள்ளது. முன்னாள் தவிசாளரும் தற்போதைய வேட்பாளருமான அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் சம்பந்தமான கருத்துக்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் த.தே. கூ.சார்பில் போட்டியிடும் 17 வேட்பாளர்களும், விகிதாசார முறையின்கீழ் தெரிவு செய்யப்படவிருக்கும்14வேட்பாளர்களும்கலந்துகொண்டு தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளனர். உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கமைய தேர்தல் கொள்ளை விளக்க அறிக்கை தயாரிப்பதுக்கான ஒழுங்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது. (யு1-15)

# ரயில் விளக்கை கவனிக்காமல் சென்ற சாரதி பொலிஸ் பிடியில்



வவுனியா, ஜன.28

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகே காணப்படும் பாதுகாப்புக் கடவையில் சமிக்ஞை விளக்குகளை கவனிக்காமல் சென்ற வாகனச்சாரதி ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளார்.


நேற்றுமுன்தினம் 10.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ரயில்நிலைய சாலைக்கு அருகே காணப்படும் பாதுகாப்புக் கடவை மூடப்படும் சமயத்தில், வவுனியா நகரிலிருந்து வைரவப்புளியங்குளம் நோக்கி அதிவேகமாகப் பயணித்த பட்டா ரக வாகனம் சமிஞ்சை விளக்குகளை கவனிக்காது சென்று கடவையினுள் மாட்டிக் கொண்டது.

அதனையடுத்து பொலிஸ் அதிகாரிகள் குறித்த வாகனத்தின் சாரதியை விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

அதேநேரம் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரின் துரித செயற்பாட்டினால் இடம்பெறவிருந்த விபத்துச் சம்பவம் தவிர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ய-4)

# முட்கொம்பன் சந்தையை இயக்குமாறு கோரிக்கை



கிளிநொச்சி, ஜன.28

கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தையானது சுமார் ஒருவருடத்துக்கு மேலாக இயங்காத நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மேற்படி சந்தைக் கட்டடம் பூநகரி பிரதேசசபைக்கு சொந்தமானது. இந்தக்கட்டடம் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இயங்கவில்லை. கிராம மக்கள் இந்தச் சந்தையிலேயே தமக்குத் தேவையான மரக்கறி மற்றும் மீன்வகைகளைக் கொள்வனவு செய்து வந்தனர். பின்னர் அது படிப்படியாகக் குறைந்து தற்போது மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. மக்கள் கடைகளிலேயே மரக்கறிகளை வாங்குகின்றனர். நடமாடும் வியாரிகளிடம் மீனை வாங்கவேண்டும். அவர்கள் வருகின்ற நேரத்தில் வாங்கத் தவறும் பட்சத்தில் பின்னர் வாங்கமுடியாது. எனவே, இது தொடர்பாக உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க .வேண்டும் - என்றனர்.

இதுதொடர்பாக பூநகரி பிரதேசசபை செயலாளரை தொடர்பு கொண்டபோதும் அது பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ய-6)

# இராஜகோபுர மகாகும்பாபிசேகம்

காரைநகர், ஜன.28

காரைநகர் வலந்தலை சிறிமடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும்.

ஆரம்பக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும். நயினை நாகபூசணி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவசிறி ப.முத்துக் குமாரசுவாமிக் குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து கும்பாபிசேகத்தை நடத்திவைப்பார்.

இராஜகோபுரத்தை சுவிஸ் நாட்டில் வதியும் புலம்பெயர் பரோபகாரி சுப்பிரமணியம் கதிர்காமநாதனும், மணிமண்டபத்தை கலைமாடக்கோன் சண்முகம்சிவஞானமும் உபயமாக அமைத்து வழங்கியுள்ளனர். (ய-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் விடுவிப்புத் தொடர்பிலான மைத்திரியின் கூற்றை ஏற்கமுடியாது

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஜன.28

எமது மக்களுடைய விவசாய பண்ணைகளை இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறிருக்கையில், காணிகளை விடுவிப்பது தொடர்பான அரசதலைவரின் கூற்றை எப்படி ஏற்றுக்கொள்வது? அவரது கூற்றை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் 80 வீதமான காணிகள் இராணுவத்திடம் இருந்து மீட்டு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அரசதலைவர் அண்மையில் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது கூறினார். அதை அறிந்ததும் நான் அவருக்கு அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தேன்.

அதில், உங்களுடைய கூற்றில் உண்மை இல்லை. 2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்பு கிட்டத்தட்ட 65 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தின் வசம் இருந்தது. தற்போது 54 ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவவசம் உள்ளது.

அப்படியாக இருக்கின்ற காரணத்தினால் எப்படி நீங்கள் 80 வீதமான காணிகளை மக்களிடம் ஒப்படைத்து விட்டீர்கள் எனக் கூறமுடியும்? உங்களுடைய கூற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருந்தேன். அதில் நான் சில விடையங்களை குறிப்பிட்டிருந்தேன்.

குறிப்பாக எங்களுடைய மக்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்குகின்ற விவசாயப்பண்ணைகள் நீண்டகாலமாக இராணுவத்தினருடைய வசம் இருப்பதினால் மக்கள் வாழ்வாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயப் பண்ணைகளுடைய ஒரு சில விபரங்களையும் அதில் நான் குறிப்பிட்டிருந்தேன். குறிப்பாக முழங்காவில், கஜ}பாம், வெள்ளங்குளம் விவசாயப் பண்ணை, கிளிநொச்சியில் இருக்கின்ற தென்னம் பண்ணை, விசுவமடுவில் இருக்கின்ற விவசாயப்பண்ணை உள்ளிட்ட பல்வேறு பண்ணைகள் இராணுவத்தினர் வசம் இருக்கின்றது.

இன்றைக்கு எங்களுடைய மக்களுடைய விவசாயப் பண்ணைகளை இராணுவத்தினர் தமது குடும்பங்களினுடைய வாழ்வாதாரமாகப் பயன்படுத்தி வருகின்றபோது எப்படி உங்களுடைய கூற்றை நான் ஏற்றுக்கொள்வது? எனவே உங்களுடைய கூற்றை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று அவருக்கு நான் எழுத்து மூலம் தெரிவித்திருந்தேன்.

இன்று அரசதலைவருடைய கட்சியைச் சார்ந்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகின்றார், பன்னாட்டு நீதிபதிகளை இலங்கையினுடைய போர்க்குற்ற விசாரனைக்கு அனுமதிக்க மாட்டோம் என்று. 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிறைவேற்றிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை இந்த அரசு 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முதல் செய்யாது விட்டால் அரசு மிகப்பெரியதொரு பாதகமான நிலைக்கு செல்லும். இந்த அரசுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்றைக்கும் பின் நிற்காது - என்றார். (ய-56)

# காரைநகர் நெற்காணிகள் கால்நடைகளால் அழிவு

காரைநகர், ஜன 28

காரைநகர்ப் பிரதேசத்தில் நெற்காணிகளை கட்டாக்காலி மாடுகள் அழித்து வருகின்றன என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

காரைநகரில் இம்முறை சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. போதிய மழை பெய்யாத காரணத்தால் பெரும்பாலான வயல்கள் அழிவடைந்து விட்டன. சுமார் பத்துவீதமான நெற்காணிகளே ஒருவாறு தப்பித்து விளைந்துள்ளன. எனினும் அவற்றையும் கட்டாக்காலிக் கால்நடைகள் அழித்து வருகின்றன. எனவே, கால்நடைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ய-250)

# இந்து சமயப் பேரவையால் அருங்கலைகள் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜன.28


யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் தமிழர் அரும் கலைகள் கற்கைநெறி வகுப்புகள் நேரடியாகவும், உலகளாவிய ரீதியில் ஸ்கைப் வகுப்புக்களுடாகவும் தைப்பூச நாளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பல்லின மக்களும் வயது எல்லை இன்றி எம் தமிழர் கலைகளாகிய பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், கஞ்சிரா, மோர்சிங், கடம், தப்லா போன்றவற்றை முன்னணி ஆசான்களிடம் பயிலமுடியும்.

பலாலிவீதி, கந்தர்மடத்திலுள்ள இந்துசமயப் பேரவையில் இவை எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

தைப்பூச திருநாள் அன்று பிற்பகல் 5 மணிக்கு வயலின் வித்துவான் சர்வானந்தசிவத்தின் வயலின் சோலா கச்சேரி இடம்பெறும் என்று இந்து சமயப் பேரவையின் சி.சக்திகிரீவன் தெரிவித்தார். (ய- 4)

# நொச்சிமோட்டை பாலத்தில் செல்லும் வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்து



வவுனியா, ஜன.28

வவுனியா - நொச்சிமோட்டை பாலம் முழுமையாக சீரமைக்கப்படும்வரை பயணிகளும், வாகனச் சாரதிகளும் அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி பாலம் உரியவகையில் சீராக்கப்படாமையினால் எந்நேரமும் விபத்து நேரிடும் அபாயமுள்ளது. இப்பாலம் அடிக்கடி சேதடைகிறது. இதுகுறித்து பொதுமக்கள் முறையிடும் போது குறித்த பாலத்தின் சேதமடையும் துண்டம் பாலத்தின் இன்னொரு பகுதிக்கு மாற்றிப் பொருத்தபடுகிறது. இதனால் பாதிக்கப்படுவதும் அச்சப்படுவதும் பயணிகளும் சாரதிகளுமே. பாலத்தை முழுமையாக சீராமைக்காமல் அவசரத்துக்கு துண்டத்தை மாற்றுவதையே அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் எந்நேரமும் பயணிகளும் சாரதிகளும் ஆபத்தை சந்திக்க நேரிடலாம். குறித்த துண்டத்துக்கு அருகினாலேயே வாகனங்கள் செல்லவேண்டும். அவதானமாக பயணிக்குமாறு காவல் கடமையில் உள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர் இதேவேளை முழுமையாக பாலத்தை சீரமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய-402)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.28

அளவெட்டி சைவவாலிப சங்கம் நடத்தும் 100ஆவது பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் ஆகியோர்ர் கலந்துகொள்வர் என சங்கத்தின் தலைவர் இ.நாகேந்திரம் தெரிவித்துள்ளார். (ய-36)

# அதிபரை முழந்தாளிட செய்தமைக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.28

ஊவா மாகாணத்தில் பெண் அதிபர் ஒருவரை முழந்தாளிடச் செய்த சம்பவத்துக்கு வடக்கு மாகாண புதிய அதிபர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பதவின் செயற்பாடு இலங்கை மக்கள் வெட்கப்பட வேண்டியதாகும். முதலமைச்சரின் இச்செயற்பாட்டுக்கு ஒத்துழைத்து அரச அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்திய ஊவா மாகாண கல்விச் செயலாளர், கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் விசாரிக்கப்படவேண்டும். அச்செயற்பாட்டின் இழிநிலைக்கு அவர்களும் வகைசொல்ல வேண்டியவர்களாவர்.

இதுதொடர்பாக நீதியான விசாரணைக்கு அனைத்து அரசியல் தலைவர்களும் ஒத்துழைத்து ஆதரவு தெரிவிக்கவேண்டும். அதிபரை இவ்வாறு செய்தால் நற்பிரஜைகள் உருவாக்கும் கல்வி அமைச்சின் இலக்கு கேள்வியாக்குறியாகின்றது. அரசமைப்பில் பெண்கள் சமத்துவம் பேசப்படும்போதும் நடைமுறையில் அவை எவ்வாறு உள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பெண், பிள்ளைகளின் தாய், ஆசிரியர்களின் தலைமையாளர், சமூக வழிகாட்டி இவ்வாறு நடத்தப்பட்டது மனவேதனைக்குரிய செயற்பாடாகும். இதற்காக நீதி விசாரணைகள் உண்மையுடன் நடத்தப்பட்டு மானநட்டக்கொடுப்பனவு பெற்றுக் 'கொடுப்பதுடன், எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாதவாறு உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ய-4)

# காரைநகரில் பால்குடபவனி

காரைநகர், ஜன.28

காரைநகர் மணல்காடு கும்பநாயகி சிறிமத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பால்குடபவனியும் சங்காபிசேகமும் இடம்பெறும்.

காலை 7.30 மணி தொடக்கம் அம்பாளுக்கு 1008 சங்காபிசேகம் இடம்பெறும். முன்னதாக காலை 6.00 மணிக்கு வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து அம்பாள் ஆலயத்தை நோக்கிப் பால்குடபவனி ஆரம்பமாகும்.

பகல் 12.00 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். (ய-250)

# 'எனக்கும் சமைக்கத் தெரியும்'

## முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

எனக்கு நன்றாகவே சமைக்க தெரியும். சமைக்க விருப்பம் இருந்தும் தற்போது சமைக்க வேண்டிய தேவை எனக்கில்லை - இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச வர்த்த கண்காட்சி கூடத்தினை 'திறந்துவைத்தார் முதலமைச்சர். பின்னர் அங்கு ஒரு கூடத்தில் சமையல் தொடர்பில் முதலமைச்சரிடம் கேட்கப்பட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது எனது அம்மாவும், மனைவியும் உயிருடன் இல்லை. அவர்கள் இருக்கும்போதே எனக்கு நன்றாக சமைக்க தெரியும்.

ஆனாலும் தற்போது சமைப்பதுக்கான வாய்ப்புகள் எனக்கில்லை அதனால் சமைப்பதில்லை எனக்கு சமைப்பதுக்கு சரியான விருப்பம் - என்று முதல்வர் மேலும் தெரிவித்தார். (ய-37)

# நிகழ்வுகள்

அளவெட்டி சைவவாலிப சங்கம் நடத்தும் 100ஆவது பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் ஆகியோர் கலந்துகொள்வர் என சங்கத்தின் தலைவர் இ.நாகேந்திரம் தெரிவித்துள்ளார். (ய-36)

************

புலோலி மந்திகை திருவருள் கண்ணகை அம்மன் கோவில் மணவாளக்கோல உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணிமுதல் 1008 சங்காபிசேகம் இடம்பெற்று மாலை பூசைகள் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகி வசந்த மண்டப பூசையுடன் அம்பாள் வீதியுலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார். (ய-115)

************

கரவெட்டி கிழக்கு தில்லையம்புலம் வீரபத்திர பத்திரகாளி திருக்கோவில் மகாகும்பாபிசேகம் நாளை திங்கட்கிழமை காலை 5.36 மணி தொடக்கம் 6.30 வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிசேக கிரியைகள் கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதில் பக்தர்கள் எண்ணெய் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும். (ய-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய நல்லிணக்க பொங்கல் விழா



வவுனியா, ஜன.28
தேசிய நல்லிணக்க பொங்கல் விழா வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையில் அதிபர் தி. யுவராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது.
தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் கெப்பட்டிக்கொல்லாவ கல்வி வலயம் மற்றும் வவுனியா தெற்கு வலயம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.
இதன் போது சிங்கள தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய உயர் அதிகாரிகள், கெப்பிட்டிகொல்லாவ கல்வி வலய உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள். மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)

# வெளிநாட்டுப் பெண்கள் இருவர் கைது

கொழும்பு, ஜன.28
நுழைவிசைவு இன்றி உள்நாட்டில் தங்கியிருந்த இரு வெளிநாட்டுப் பெண்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
இவர்கள் நேற்று அதிகாலையே கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
அவர்கள் இருவரும் பகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் எனவும் 26 வயதுடைய இருவரும் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.28
மலேசியாவின் கோலாலம்பூரில் அமைந்துள்ள பௌத்த இளைஞர் அமைப்பின் அனுசரணையுடன் வடமராட்சி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.
இந்த நிகழ்வுக்கு மலேசிய பௌத்த இளைஞர் அமைப்பின் அமைப்பாளரான முருகுவெல அனுருத்த மற்றும் மதகுருமார்கள், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜயந்த குணரத்ன, 551ஆவது பிரிவுப் படைத்தளபதி கேணல் மகேந்திர பெர்னான்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். (ற,ரி5,67)



## சுதந்திரத் தின நிகழ்வு ஒத்திகை: காலி வீதிக்குப் பூட்டு

கொழும்பு, ஜன.28
சுதந்திர தின நிகழ்வுப் பணிகளுக்காக காலி முகத்திடல் வீதி நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டது.
செரமிக் சந்தியிலிருந்து காலிமுகத்திடல் சுற்றுவட்டம் வரையிலான போக்குவரத்தே காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மூடப்பட்டு இருக்கும் என பொலிஸார் தெரிவித்தனர். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை குடியரசின் 70 ஆவது சுதந்திர தினம் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் தலைமையில் காலி முகத்திடலில் கொண்டாடப்படவுள்ளது. (ற)

## இந்திய கலாசார நடன நிகழ்வுகள்

கிளிநொச்சி.ஜன.28
இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இந்திய கலாசார நடன நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி இரணைமடு நெலும்பியசவில் இடம் பெற்றன.
இந்த நிகழ்வில் இந்திய துணை தூதுவர் ஏ. நடராஜன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. அருமைநாயகம், கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி, செஞ்சோலை மற்றும் மகாதேவா ஆச்சிரம சிறார்கள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்திய கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ற-ரி5)



# கச்சதீவு செல்ல இலங்கை அகதிகளுக்கு தடை

இராமேஸ்வரம், ஜன 28
**இலங்கை கச்சதீவு தூய அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு இலங்கை அகதிகள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.**

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் இலங்கை இந்திய பக்தர்களின் மதநல்லிணக்கவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
இது தொடர்பான முதல் கட்ட ஆலோசனைக்கூட்டம் நேற்று இராமேஸ்வரத்தில் இடம் பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
பொலிஸாரின் தடையில்லா சான்று பெற்றவர்கள் விழாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் அரசு வழங்கிய ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அவசியமாக இருக்க வேண்டும். இலங்கை அகதிகளுக்கு அனுமதி இல்லை, தடை செய்யப்பட்ட பொலித்தீன் பொருள்கள், போதைப் பொருள்கள் மற்றும் கடத்தல் பொருள்களை எடுத்துச் செல்லக்கூடாது போன்ற முக்கிய தீர்வுகள் எடுக்கப்பட்டன.
கச்சதீவு செல்லும் பயணிகள் குறித்த முழுவிசாரணை நடத்தப்பட்டு அதன் விவரம் கிடைத்த பின் அவர்கள் பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
பாதுகாப்பு நலன் கருதி பெப்ரவரி மாதம் 21திகதி வரை மட்டுமே மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் பேபி கடலோரகாவல்படை, கடற்படை மத்திய உளவுத்துறை, கியூபிரிவு உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ற,ரி2)

# மனோகரனின் ஆத்மாவுக்கு திருப்பலி ஒப்புக்கொடுப்பு



நுவரெலியா,ஜன.28
புகழ் பெற்ற இலங்கையின் முன்னணிப் பாடகர் சிலோன் மனோகரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி அவரது குடும்பத்தினரால் நேற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.
பொகவந்தலாவ, சிரிபுர பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலேயே திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
மலையகத்தில் பொகவந்தலாவ டின்சின் பகுதியை பிறப்பிடமாக கொண்ட இவர் பொப்பிசைச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டார். சிலோன் மனோகர் என்ற பெயரில் தென்னிந்தியத் திரைப்படங்களில் தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.
இலங்கையில் பொப்பிசைச் சக்கரவத்தி என பலராலும் அழைக்கப்பட்ட மனோகரன், தமிழ், சிங்களம், மலையாளம், ஹிந்தி, உள்ளிட்ட பல மொழிகளில் பாடி ஈழத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தவர். (ற-ரி5)

## கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.28
உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஏற்பாட்டில் கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழா வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வு தனி நாயகம் அடிகளார் அரங்கம், இரா. கனகரத்தினம் அரங்கம் என இரு அரங்கங்களாக இடம் பெற்றது.
இதன் போது ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், மலர் வெளியீடு, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றதுடன் சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இந்திய துணைத் தூதர் திரு.ஏ.நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

## வாகன விபத்தில் இராணுவ வீரர் படுகாயம்

மட்டக்களப்பு,ஜன.28
மட்டக்களப்பு - திருகோணமலை நெடுஞ்சாலை, கிண்ணியா பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் படுகாயமடைந்தார்.
திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவ வீரர் பேருந்தை முந்திச் செல்ல முற்படுகையிலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தினால் கீழே வீசி எறியப்பட்ட இராணுவ வீரர் படுகாயங்களுக்குள்ளாகி மயங்கிய நிலையிலேயே கிண்ணியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Haier
Inspired Living

உங்கள் வியாபாரத்தை மேலும் முன்னேற்றும்
சிறந்த முதலீடு
ஹயர் போத்தல் கூலர்கள் மற்றும் பிரீஸர்கள்

உங்கள் வியாபார நடவடிக்கைகளை மென்மேலும் வெற்றியை நோக்கி கொண்டுசெல்லுங்கள். உங்களுக்கு விருப்பமான அளவுகளில் காட்சிப்படுத்தக்கூடிய ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட கொள்ளளவுகளிலான போத்தல் கூலர்கள் மற்றும் பிரீஸர் அணிவகுப்பை அபான்ஸ் வழங்குகிறது.

எந்தவொரு வகை மற்றும் எந்தவொரு நிலையிலுமுள்ள பழைய போத்தல் கூலர்கள் அல்லது பிரீஸர்களுக்கு பதிலாக

ஹயர் மாற்றீட்டு சலுகை

உத்தரவாதம் 5 உத்தரவாதம்

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
சாதாரண விலைகளுக்கு மாத்திரம்

குறைந்த மின் நுகர்வு | ஆரோக்கியமான மற்றும் புத்துணர்வான உணவுகளுக்கு ஒரே மாதிரி வேகத்துடன் அதியுயர் குளிர்ச்சியைப் பெற்றுத்தரும். | பல வருடங்களாக நீடித்த உழைப்பைக் கொண்டது | சூழல் நட்புறவுடையது




011 5999000 BuyAbans.com நாடளாவிய அபான்ஸ் /அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும். Abans



20/-
இந்த வாரம்

தலையெடுப்பாரா கலைஅமுதன்?

இரண்டு கோடியும் சப்பைக்கட்டுகளும்

என்ன செய்யப் போகிறார் மைத்திரி

கைபேசி எமக்கு தந்தது என்ன?

தொற்றா நோய்கள் தொலைக்கும் உயிர்கள்

எழுத்துக் கிராமங்கள் – கோண்டாவில்

காலத்தோடு கையசைத்த எம் துள்ளிசை

ஆரிட்டைச் சொல்லி அழ (புதிய தொடர்)

மற்றும் பல்சுவை அம்சங்களுடன்

சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.

தொடர்புகளுக்கு :- 021 493 2222





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடு விற்பனைக்கு
கொக்குவில் முதலிகோவில் வீதியில் நிலப்பரப்பு2 குளி 16 கொண்ட காணியுடன் சகல வசதியுடன் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-077 614 6434

### வாடகைக்குத் தேவை
ஆண் உத்தியோகத்தர் ஒருவருக்கு நெல்லியடி நகருக்கு அண்மையாக சிறிய வீடு / அனெக்ஸ் வாடகைக்குத் தேவை.
077 047 2460

### வேலையாள் தேவை
கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை.
021 221 7600 (CS/13333)(11.17)

### வேலைக்கு ஆள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள புடைவைக் கடைக்கு அனுபவம் உள்ள, அனுபவமற்ற ஆண்கள் வேலைக்குத் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
077 539 6262 (cs/13320)(11.17)

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள இல.402 அல்லது 401 வீட்டு கட்டட தொகுதி விற்பனைக்கு உண்டு.
0049 228 298750, 078 684 2862

### விற்பனைக்கு
நோயாளிகளைப் பராமரிக்கும் கட்டில் ஒன்றும் படுக்கைப் புண் வராமல் பாதுகாக்கும் மெத்தை (Air Bed) ஒன்றும் விற்பனைக்கு உண்டு. 3 மாதம் பாவித்தது. (CS/13191)(11.17)
077 446 8154

### காணி விற்பனை
திருநெல்வேலி சந்திக்கும் கல்வியங்காட்டு சந்திக்கும் இடைப்பட்ட இராமசாமி பரியாரி சந்தியில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (CS01261)(15/17)
தொடர்பு - 076 569 7586, 077 029 2546

### காணி விற்பனைக்குண்டு
பளை, தம்பகாமத்தில் உள்ள தென்னம் காணி 25½ பரப்பும் வயல்காணி 20 பரப்பும் விற்பனைக்குண்டு.
077 127 5319 (ACH/3071)(11.17)

### தங்குமிடம் வாடகைக்கு
யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறைந்த வாடகையில் இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் (UNICARE DENTAL CLINIC NEXT DOOR) உள்ளது.
நேரில் வரவும்.
27.01.2018 - 30.01.2018 வரையும்.
தொடர்புக்கு :- 077 7769 260

### பணிப்பெண் தேவை
சிறிய குடும்பத்திற்கு வீட்டுடன் தங்கிநின்று வீட்டுவேலை மற்றும் குழந்தையை பராமரிக்கக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 232 0354 (CS13312)(13/17)

### காணி விற்பனைக்கு
புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 14பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
076 857 3798, 077 871 5430

### காணி விற்பனைக்கு
கிளிநொச்சி பரந்தனில் 10½ ஏக்கர் வயல்காணி விற்பனைக்குண்டு. இரணைமடு குளநீர்ப்பாசன வசதி உண்டு. இரண்டுபோகம் நெற்செய்யக் கூடியது.
076 857 3798, 077 871 5430

### JCB வாடகைக்கு
1 hour 3000/=



077 986 5457, (CS/13266)(11.17)
076 857 3798
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்குண்டு
பலாலி வீதி, திருநெல்வேலி Farm School அருகில் இரண்டு (14 அடி x 12 அடி) பெரிய அறைகள் தனி சமையலறை, சிறு முன்னறையுடன் வாடகைக்குண்டு. மாணவர், உத்தியோகத்தர், சிறிய குடும்பத்துக்கு தகுந்தது. கார் தரிப்பிட வசதி உண்டு.
076 391 6374, 077 271 2775

### நல்லூர் - சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு பணியாளர் தேவை
சைவ ஆசாரமுடைய பணியாளர் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆலய அபிவிருத்திச் செயலகம் சட்டநாதர் சிவன் ஆலயம் - நல்லூர். தொடர்பு :- 077 598 9210

### கார் விற்பனைக்குண்டு
NISSAN Sunny, Supper Saloon N16 Hl - XXXX விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 076 835 4634


### பணிப்பெண் தேவை
நல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் சமையல் செய்வதற்கு இரு பெண்கள் தேவை. காலை வந்து மாலை செல்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் 15000 - 20000 வரை கொடுக்கப்படும்.
தொடர்பிற்கு :- 076 851 4296

### மணமகள் தேவை
1974 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த அனுசம் 2 ஆம் பாதம் 3 சுற்று கிரகபாவம் $37\frac{1}{2}$, செவ்வாய் தோசமற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் சைவபோசனம், மணமகள் அசைவபோசனம் என்றாலும் பரவாயில்லை.
தொடர்பு :- 076 554 3724

### தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி வாய்ந்த வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த பழக ஆர்வமுள்ள விற்பனையாளர்கள் தேவை. TATA, Leyland உதிரிப்பாகங்கள் தொடர்பான அறிவுடையோர் விரும்பத்தக்கது.
Ananth Motors Stores, 183, STANLEY ROAD, JAFFNA.
021 222 2336
076 717 3234

### காணி விற்பனைக்கு
குரும்பசிட்டிக்கும் குப்பிளானுக்கும் இடைப்பட்ட பகுதியில் அம்பாள் வீதியில் கம்பி வேலியுடனான கிணற்றுடன் 30 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. (CS13192)(11.17)
070 310 5895, 077 502 6428

MAJESTIC CINEPLEX A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021-2227712

### வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு நல்ல லக்சரி வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு - 077 684 4016

### தேவை
பிரபல ஹொட்டலுக்கு ரொட்டி மேன், Waiter உணவு பரிமாறுபவர், சமையல்காரர், ரைஸ்மேன் ஆகியோர் தேவை. (CS 13351/15/17)
தொடர்பு - 077 684 4016

### குழந்தையின்மை சிகிச்சைக்கான இலவச ஆலோசனை முகாம்



வம்சம் டெஸ்டியூப் பேபி மையம்
இந்திய Dr.D. சிலம்பு செல்வி M.D.,DGO.,DNB
வருகை தருகிறார்
குழந்தை இல்லா தம்பதிகள் இந்த முகாமுக்கு வருவதன் மூலமாக உங்கள் வம்சம் தழைக்கும்

| கொழும்பு | யாழ்ப்பாணம் |
|---|---|
| Jan 28.01.2018 | Feb 04.02.2018 |
| காலை 8 மணி முதல் | தொடர்புக்கு : |

வெள்ளவத்தை, மெனிங் பிளேஸ் 075 0 252 141, 075 291 2700

## பணி நிலை வெற்றிடம்
கட்டட நிர்மாணத்துறையிலும், பொறியியல் ஆலோசனைகள் வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்துக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **Project Engineer** - Civil Engineering Degree approved by IESL with 2 years experience.
2. **Technical Officer (Civil)** - NDT/HNDE/NCT with 5 years experience or equivalent)
3. **Technical Officer (Electrical)** - HNDE/NCT with 3 years experience or equivalent)
4. **Quantity Surveyor** - HND(QS), NCT(QS) with 3 years experience
5. **Office Assistant** - A/L any subject, Age below 25 yrs with driving licence & Computer knowledge.

தகுதியானவர்கள் 7 நாள்களுக்குள் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கவும்.

**No-09, Nanthavil Lane, Thavdy,**
**Email: vacancynsc@gmail.com**
**Fax:021 221 3663**
(CS 13347)(10)

## நஞ்சற்ற உணவு உற்பத்திகள் விற்பனை நிலையம்
விவசாய இரசாயனம் மற்றும் உரப்பாவனையற்ற இயற்கை உரப்பாவனை மூலமான உணவு உற்பத்திகளைக் கொள்வனவு செய்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

### உணவு உற்பத்திப் பொருள்கள்
- பாரம்பரிய அரிசி வகைகள்
  பச்சைப்பெருமாள், கறுப்பு சீனட்டி, சுகந்த, மொட்டைக்கறுப்பன் (புழுங்கல், பச்சை, சேரல்)
- மரக்கறிகள்
- பழங்கள்
- ஹெல சுவய உற்பத்திப் பொருள்கள்
  இலைக்கஞ்சி வகை, அப்பம் மா, இடியப்ப மா
- ஏனைய நஞ்சற்ற உணவுகள்

கோவில்குளம் கமநல சேவைகள் நிலையம், இலுப்பையடி, வவுனியா.
024 222 1053 (C/31858)(11.17)

### அறைகள் வாடகைக்கு உண்டு
எங்களிடம் மிகவும் குறைந்த விலையில் குளிரூட்டப்பட்ட அறைகள் நாள் ஒன்றுக்கு 2500/-
மற்றும்
சாதாரண அறை சகல வசதிகளுடனும் 400/-
(நபரொருவருக்கு)
கமநல அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட கமக்காரர் பயிற்சி நிலையம், புகையிரத நிலைய முன்பாக, வவுனியா.
076 525 0557,
076 627 4745

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



20.01.2018 அன்று விவசாய வீதி, வடக்கு புன்னாலைக் கட்டுவனில் நிகழ்ந்த ராஜா பிளாசா மாதிரிக் கிராம முப்பது வீட்டுத்திட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வின் பொழுது வீட்டுத்திட்ட பயனாளிகளினால்
பொன்மனப்பேராளன், கல்விக்கொடையாளன், செங்கைப்புரவோன்
### திரு.இ.குவேந்திரநாதன்
அவர்களின் தன்னலங்கருதாச் சமூக சேவையினைப் பாராட்டி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.நா.வேதநாயகன் அவர்கள் முன்னிலையில்
" ஈகைச் செம்மல் "
என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி, அவரின் சேவை மென்மேலும் சிறக்க நாமும் வாழ்த்துகின்றோம்.
இயக்குனரும், உத்தியோகத்தர்களும்
நவீன்யா நிர்மாணம் (பிறைவேட்) லிமிட்டெட்
No.09, நந்தாவில் லேன், தாவடி.
(CS 13348)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16 . 08 . 1991



மறைவு
29 . 12 . 2017

கடந்த 29.12.2017 பரந்தாமன் பாதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி கீர்த்திகா லக்ஷன்
**(விவசாய போதனாசிரியர் - கிளிநொச்சி)**

அவர்களின் மறைவு செய்தி அறிந்ததும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தனது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் அன்னார் நோயுற்று இருந்த வேளை வைத்திய உதவிகள் புரிந்த அனைவருக்கும் அன்னார் கடமையாற்றிய விவசாய திணைக்களத்தினைச் சேர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும், கல்வி கற்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் கள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது குடும்பத்தவர்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 26.01.2018 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.01.2018) எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**கந்தசாமி வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**குடும்பத்தினர்.**

(CS 13307)(10)

## மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 04 . 1940



இறப்பு
27 . 01 . 2018

### சின்னப்பு சங்கரப்பிள்ளை (A.S)

வித்தகபுரம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கற்குளி, சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னப்பு சங்கரப்பிள்ளை (A.S) நேற்று (27.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஜா, கவிசுதன் (பிரான்ஸ்), குணாளசுதன் (இந்தியா), அனுசா ஆகியோரின் தந்தையும், சுவேந்திரன் (டிசானா குளிர்பானம்), சதானந்தன் (மாலன் களஞ்சியம்), மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், திருமாலன் (கொழும்பு - பல்கலைக்கழகம்), கிருஷாந் (யாழ்ப்பாணம் இந்து கல்லூரி), சாருஷன் (சாவகச்சேரி - இந்துக் கல்லூரி), டிசானா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆதித்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், அம்பலவாணர், இராசம்மா, கனகரத்தினம், நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராசா, செல்வரத்தினம், இராமநாதன், சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**கற்குளி வடக்கு, சாவகச்சேரி.** (cs.13340) (13.17) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு
17.02.1933

இறப்பு
23.01.2018

### திருமதி
### கண்மணி தனபாலசிங்கம்

*(கண்மணி Teacher - இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை Stanley College, இந்து மகளிர் கல்லூரி)*

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Toulouse ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி தனபாலசிங்கம் 23.01.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னப்பா - மாணிக்கம் தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குரு சாமி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், சூரியபாலன் (பிரான்ஸ்), சிவபாலன் (பிரான்ஸ்), சுமதி (ஜேர்மனி), நந்தினி (லண்டன்), சிறிபாலன் (பிரான்ஸ்), பூபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும், தனபாலசிங்கம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற செந்திவேல் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நவமணி, சோமாவதி, சந்திராமணி மற்றும் கனகாம்பிகை, மன்னவராஜன் (கனடா) ஆகி யோரின் அன்புமைத்துனியும், தனராணி, மரி, தனபால சிங்கம், சிறிதரன், காயத்திரி ஆகியோரின் ஆசைமாமியும், சுகந்தன், கஜன், விசாலன், சாம், அஜந்தன், அனோஜா, இலக்கியா. தினேஷ், சயந்தியா, மைத்திரி, பிரியங்கா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2018) திங்கட் கிழமை பிரான்ஸில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

சூரியபாலன் - பிரான்ஸ் +3356 - 1117 574
சிறிபாலன் - பிரான்ஸ் +3356 - 1498 106

(CS.1398)(13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கறைப்பிடித்தலைத் தடுக்கும் தன்மையும் சுற்றாடலுக்கு ஏற்புடையதும் உங்களுக்கு தேர்ந்தெடுக்கக் கூடிய வர்ணங்களில் நீண்டகாலம் நீடிக்கக் கூடியதுமான சிங் அலுமினியம். கூரைத் தகடுகள் மற்றும் Turbo,Roof, Ventilator, பாதுகாப்புத் தகடுகள். இணைப்புகள் ஒரே கூரையின் கீழ் மிக்க விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் (ACO/146)(11.17)

**Aybowan, No.419, Oldmoor Street, Colombo -12**
**011 2458 171 / 011 432 0020**

## வர்த்தக இடம் வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி A9 மத்திய இடத்தில் 1750 சதுர அடி கொண்ட வாகனதரிப்பிடம் உட்பட எல்லா வசதிகளுடனும் கூடிய புதிய வர்த்தக / அலுவலகங்களுக்கான கட்டடம் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு - 076 7440 456**
(Aco148)(17.8)

## VACANCIES @ICBT CAMPUS



ICBT Campus is the leading private sector education service provider in Sri Lanka offering a range of International qualifications in association with some of the best universities and education service providers in UK.

### Marketing Executive
JAFFNA CAMPUS

**Requirements:**
- Minimum 1 Year experience
- Good presentation / communication skills
- Fluency in English language

An attractive remuneration package above industrial rates and host of other benefits await for the right candidate. Please apply with a comprehensive resume with a photo and details of two non-related referees within 7 days of this advertisement. Please mention the position and branch applied for, on the subject line of the e-mail or on the top left corner of the envelope.

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

hr@icbtcampus.edu.lk

## British BUSINESS COLLEGE
*Where Students Come First*

தைப்பூசம் (31.01.2018 புதன்கிழமை) அன்று எமது அனைத்து வளாகங்களிலும் ஏடு தொடக்கப்படும்.

BBC Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய பயுற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

CELEBRATING 1998 20 2018 YEARS IN EDUCATION

**NO ADMISSION FEES**
**NO MONTHLY FEES**

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள் ❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.



வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951




★ காலை 4 மணிக்கு பூஜை ஆரம்பம் 5 .00 மணிக்கு பால்குடப் பவனி இணுவில் மருதனார் மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும் (பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் 30.01.2018 இற்குமுன் ஆலயத்தில் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்)

★ மாபெரும் பொங்கல் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவடையும்

★ பொங்கலுக்குரிய பொருள்கள் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

அன்றைய தினம் இரவு 6.00 மணிக்கு சந்திரகிரகணம் என்பதால் மதியம் 12.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று 1.30 மணிக்கு உலகப் பெருமஞ்சம் வீதியுலா இடம்பெறும் அத்துடன் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

### ........................ விளம்பர அனுசரணையாளர்கள் ........................

## குமரன் கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்கள்

கல், மணல், சிமெந்து, கம்பி, பெயின்ற் வகைகளைப் பெற்றிட

**கந்தசுவாமி கோயிலடி, இணுவில்.**
**077 400 2263, 077 175 4667**

## லது டிஜிற்றல் வீடியோ & போட்டோ
## LATHU DIGITAL VIDEO & PHOTO

**கே.கே.எஸ்.வீதி, இணுவில்.**
**K.K.S.ROAD, INUVIL**

Professional Video Filming & Video Coverage,
Digital Photo Graphing, DVD Conversion,
Diary Album Making.

**077 711 1009, 021 224 1510**
E.Mail:lathushan@gmail.com,Web:www.lathudigital.com

(c.31857) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆவது பன்னாட்டு வர்த்தக சந்தை

NOVENA TEC

நிறுவனத்தின்
விற்பனை
முகாமையாளர்
வாடிக்கையாளர்களுக்கு
பரிசில்களை
வழங்கி வைக்கிறார்.






## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவஞானம் தர்மலிங்கம்



மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் தர்மலிங்கம் 27.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தருமலிங்கத்தின் அன்பு துணைவியாரும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், செல்லம்மா, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, பாக்கியவதி, புஸ்பராணி, ஞானசேகரம், காலஞ்சென்ற சிவநேசம் மற்றும் பஞ்சாட்சரதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம், செல்வரட்ணம்(S.S), சிவலிங்கம், பவானி, பாலசுப்பிரமணியம், முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோகரன் - காந்திமதி, சிறிதரன் - பத்மரஞ்சினி, தர்மகரன், சிவதர்சினி - குகன், சிவகௌரி, செந்தூரன்- சுகன்யா, சுதர்ஷனா, சந்ரு, மதுஷனா, சுகிர்தன், சஜீவர்ணன், உமாவதனி, ரூபதாரணி, அஜந்தினி, நிதர்ஷன், டிலக் ஷன், டான்சன், துவாரகன், துஷாயினி, சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசமணி, வள்ளியம்மை, பூரணம், வள்ளியம்மை, வினாசித்தம்பி மற்றும் அன்னபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மதுஷன், மதுஷா, மயூரன், கபிலா, மதுரா, குகப்பிரியன், ஆதித்தன், ரக் ஷனா, கலைபிரியன், கவின் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்லைப்பிட்டி,**
**3 ஆம் வட்டாரம்.**

(CS 13345) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### துரைசிங்கம் தயாபரன்



யாழ்ப்பாணம், தாவடியைப் பிறப்பிடமாகவும், லண்டனில் வசித்தவருமானதுரைசிங்கம்தயாபரன்16.01.2018 லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் விஜயராணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ரவீந்திரன் (நோர்வே), காலஞ்சென்ற லவன் மற்றும் குசன் (இங்கிலாந்து), லிஷாந்தி (நோர்வே), லஜிதா (கனடா), கீதா (இத்தாலி) ஆகியோரின் சகோதரரும், கலைமதி, ஞானப்பிரியா, தர்சாந், பரமகுமார், மனோதீபன் ஆகியோரின் மைத்துனரும், சர்மிகா, சரனுகா, சாருகா ஆகியோரின்சிறியதந்தையும், சஞ்சயன், லதேஷ் ஆகியோரின் பெரிய தகப்பனும், ஆருஸ்றொபின், றொச்சின் ஆகியோரின் அன்பு மாமாவும், காலஞ்சென்ற மகேந்திரராசா மற்றும் புஸ்பராணி ஆகியோரின் பெறாமகனும், தவபாலசந்திரன், இரத்தினேஸ்வரன், புவனராணி ஆகியோரின் அன்புமருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2018 செவ்வாய்க்கிழமை லண்டனில் 10 மணிக்கும் - 11.30 மணிக்கும் இடையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.16,**
**நந்தாவில் ஒழுங்கை,**
**தாவடி, கொக்குவில்.**

(CS/13336)(11,17)

**தகவல்**
**தாய் - T.விஜயராணி**
**077 044 8180**

**நோர்வே - 0047 40044683**
**குசன் - பிரித்தானியா - 0044 7425730561**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் நவரத்தினம் சுதாகர் (ஜேர்மன்)

(வலதுகரை முத்தையன்கட்டு)

தோற்றம்
17.07.1969

மறைவு
08.02.2017

திதி: 28.01.2018

அன்பின் சிகரமாக அறிவின் ஊற்றாய்
குடும்பத்தின் குல விளக்காய் திகழ்ந்து
என்னை வழிகாட்டி வாழ வைத்த தெய்வமே!
வாழ்க்கையில் பாதி வழியில்
உன் பாசத்திற்காக பரிதவிக்கவிட்டுச்
சென்று ஒரு வருடமாகும் இந்நாளில்
உன்னை நினைவு கூருகின்றோம் என்றும்
நெஞ்சினில் நிறுத்தி

என்றும் உன் பசுமையான நினைவுகளுடன்
ஆருயிர் மனைவி - வசந்தி சுதாகர்
(ஜேர்மனி)

(CS 13309-13)

## கண்ணீர் அஞ்சலி



### கண்மணி தனபாலசிங்கம்


ஆண்டுகள் பல கடந்தாலும் எங்களிற்கு ஆதரவு
தந்த கண்மணி அம்மாவே எங்களை தவிக்க விட்டு
திடீரென மறைந்த எங்கள் பாசமிகு அன்னைக்கு
எங்கள் கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய யாழ். திருநெல்வேலி
வீரகத்தி விநாயகரை வேண்டிநிற்கின்றோம்.

**திரு.திருமதி.T.வைத்திலிங்கம்**
**கண்ணன் லொஜ்**
**பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.**
**யாழ்ப்பாணம்.**

(CS13297)(12-17)

## மரண அறிவித்தல்

### வைத்தியலிங்கம் பாலசுந்தரம்



அன்னை மடியில் 08.07.1954 இறைவன் அடியில் 20.01.2018

யாழ். காரைநகர் களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் பாலசுந்தரம் 20.01.2018 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வைத்தியலிங்கம் - அன்னம்மா(லண்டன்) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், வரலக்ஷ்மியின் அன்புக் கணவரும், கலிங்கன், தரண்யா ஆகியோரின் பாசமிகு அப்பாவும், சுபத்திரா(லண்டன்), சூரியகுமார் (ஆஸ்திரேலியா), ஸ்கந்தராஜா (லண்டன்), இன்பராணி(சுவிஸ்), ரேவதி (நோர்வே) ஆகியோரின் பிரியமிகு சகோதரரும், செந்தில்நாதன் (லண்டன்), செல்வராணி (ஆஸ்திரேலியா), மஞ்சுளாவதி(லண்டன்), சற்குணராஜா (சுவிஸ்), கண்ணபிரான் (நோர்வே)ஆகியோரின் அருமை மைத்துனரும், அபிராமி - ஒளி, நந்தன் - விது, குமரன், வித்யா, அபிமன்யு, மதுரா, மித்ரா, மாதுரன் ஆகியோரின் பாசம் நிறைந்த மாமாவும், சரண், சாய், விதுரன், அஜந்தினி ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 ந.ப 12.00 மணிக்கு St Marylebone Crematorium, E End Rd, East Finchley, London N2 ORZ, UK இல் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: A.S.சங்கரப்பிள்ளை**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னரும் கூட்டு அரசு தொடரும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு. ஜன.28
தேர்தலில் தனித்துக் களமிறங்க நேர்ந்துள்ள போதிலும் தேர்தலின் பின்னர் மீண்டும் கூட்டு அரசாகவே ஆட்சியை முன்னெ டுப்போம். அரச தலைவர் தலைமை அமைச்சர் இணைந்து ஊழலை ஒழிக்கும் அடுத்தகட்ட வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பெரு நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூட்டு அரசின் நகர்வுகள் குறித்துக் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பொது எதிரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அனைவரும் இணைந்து ஆட்சியை முன்னெடுக்கும் பயணத்தில் ஒத்துழைப்பு வழங்கினாலும் ஆதரிக்கத் தயாராகவே உள்ளோம்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்து தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன. இது தேர்தல் பரைப்புரைகளேயாகும். இதில் கட்சியின் கொள்கைகள், செயற்பாடுகள் மற்றும் வாத விவாதங்கள் காணப்பட்ட போதிலும் இது கூட்டு அரசின் செயற்பாடுகளில் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படப்போவதில்லை. நாம் தேர்தலின் பின்னர் மீண்டும் கூட்டு அரசாக எமது அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இதன்போது அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் இருவரும் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார்கள். நாட்டின் அபிவிருத்தி. நல்லிணக்க செயற்பாடுகள் எனப் பல திட்டங்கள் உள்ளன. அவற்றை நாம் சரியாக முன்னெடுக்க வேண்டும்.

ஊழல் இல்லாத அரசை அமைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கான போராட்டத்தையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். இதில் ஊழல் வாதிகள் அனைவருக்கும் தண்டனைகள் பெற்றுகொடுக்கப்படும். இப்போது மத்திய வங்கிப் பிணைமுறி ஊழல் மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் வாதிகள் குறித்தும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள் குறித்து குற்றவியல், சிவில் வழக்குகள் பதியப்படவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட பிரதர்ன குற்றவாளிகளைத் தண்டிக்கும் விசேட சட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. அடுத்ததாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்ற தீர்மானங்களை பொறுத்தே நகரும்.

கூட்டு அரசு உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்பது அனைவருக்குமே தெரியும். இதில் பிரதான இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டினை முன்னேற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதில் அனைவருக்கும் பங்களிப்பு உள்ளது. பொது எதிரணியாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம். அனைவரும் ஒன்றிணைந்து நாட்டினைச் சரியாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அதில் எந்தத் தடைகளும் இல்லை- என்றார்.

(ඉ-31)

# மைத்திரி பெயரைக் கெடுக்க சதித் திட்டம் தீட்டுகின்றனர்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



அரச தலைவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப் பெரும் சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலரும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மைக்காலமாக ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றார். அதனால் மக்கள் மத்தியில் அவர் பிரபல்யமடைந்து வருவதுடன் மக்களின் ஆதரவும் அவருக்குப் பெருகி வருகின்றது.

அரச தலைவரின் பிரபல்யம் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் எதிரணியினருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் ஜனாதிபதிக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ளப் பெரும் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச தலைவருக்கு எதிரான பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ள எமது எதிரணியினர் பரப்புரை நிறுவனம் ஒன்றுக்குப் பெருமளவில் பணம் கொடுத்துள்ளனர் என்று தகவல் கிடைத்திருக்கின்றது. அதனால் அரச தலைவருக்கு எதிரான பரப்புரைகள் தொடர்பாக மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டவர்களே இவ்வாறான சதித்திட்டங்களை மேற்கொள்கின்றனர். என்றாலும் மோசடிக்காரர்களுக்கு எதிராக அரசதலைவர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாரையும் இலக்குவைத்தோ அல்லது அரசியல் நோக்கத்துக்காகவோ நடவடிக்கை எடுக்கவில்லை. மக்களுக்கு அளித்த வாக்குறுதியையே நிறைவேற்றி வருகின்றார். அரச தலைவரின் இந்த நடவடிக்கையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது மக்களின் ஆதரவு பெருகிவருகின்றது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களே அரச தலைவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் எதிராகப் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ளச் சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்-என்றார். (ற-31)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓமந்தை ஏ-9 வீதியில் நேற்று மாலை நடந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். இருவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# சுரேஸ்க்கு மட்டும் நிதி வழங்கியது ஏன்?

## சிறிதரன் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், ஜன. 28

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசிடமிருந்து 5 கோடி ரூபாவை பெற்றிருந்தார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும்போது அவருக்கு மட்டும் அந்த நிதி வழங்கப்பட்டது ஏன் ? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் பயணத்திலே எங்கள் முயற்சிகள் தோற்றுப் போகாமல் அல்லது நாங்கள் குழப்பி விட்டோம் என்ற சொல் வராமல் இருப்பதற்காக நாங்கள் இந்த முறை வாக்களிக்க வேண்டுமென்று சம்பந்தன் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு உள்ளக ரீதியான மன எண்ணங்களைக் கூட புறந்தள்ளி வைத்து தலைமைக்கு கட்டுப்பட்டு அதனைச் செயற்படுத்தியிருந்தோம்.

இவ்வாறு நாங்கள் நடந்து கொண்ட முறையை வைத்து, எங்களுக்கு இரண்டு கோடி ரூபா லஞ்சம் தரப்பட்டதாக சிவசக்தி ஆனந்தன் குறிப்பிடுகின்றார். சிவசக்தி ஆனந்தனுக்கு 'தில்' இருந்தால் அந்தக் காசு எங்கள் பொக்கற்றுக்குள் அல்லது எங்கள் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்தால் அதனை ஆவண ரீதியாக உறுதிப்படுத்தட்டும்.

### கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறியவேண்டாம்

கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியக் கூடாது. ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் கடந்த காலங்களை அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். தமிழ் மக்களுடைய தனி ஈழத்துக்காகப் போராடப் புறப்பட்டவர்கள். புலிகளுடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து இந்தியாவுடன் இணைந்து இங்கு எத்தனை கொலைகளுக்கு காரணமாக இருந்தீர்கள் என்று உங்களுக்கே தெரியும்.

நாங்கள் அவற்றையெல்லாம் கூற முற்பட்டால் நீங்கள் அசிங்கப்படுவீர்கள். நீங்கள் கட்சியில் இணைந்து இருந்ததால் நாங்கள் மௌனமாக இருந்தோம். இப்பொழுது சொல்ல வேண்டிய காலமும் சொல்ல வேண்டிய தேவையும் வந்திருக்கிறது.

இந்திய இராணுவம் இங்கிருந்த போது நடந்த கொலைகளை மீட்டிப் பார்க்கின்ற காலம் வந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள். அவர்கள் மன்னித்து இருந்தார்களே தவிர எந்த வரலாற்றையும் மறக்கவில்லை. அதனால் தான் கடந்த தேர்தலிலும் கூட சுரேஷ்பிரேமச்சந்திரனுக்குரிய விடையை அவர்கள் வழங்கியிருந்தார்கள். இந்தத் தேர்தலிலும் கூட அவர்கள் எந்தவொரு சபையையும் கைப்பற்ற மாட்டார்கள்.

புலிகள் உங்களுக்கு பாவ மன்னிப்பு வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப்புக்குள் கொண்டு வந்து வீட்டுச் சின்னத்துக்கு முன்னால் வந்து தான் உங்களால் வெற்றிகளைப் பெற முடிந்தது. திராணியிருந்தால் உங்களுடைய சின்னத்தில் நின்று மக்களிடம் வாக்குகளைக் கேட்டு ஒரு கட்சியாக உங்களை அடையாளப்படுத்த முனையுங்கள் பார்க்கலாம்.

ஒரு விடுதலை வீரர்களாக இருந்து இந்திய இராணுவத்துடன் இணைந்தும் இலங்கை அரசுடன் இணைந்தும் எவ்வாறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டீர்கள். அதனைகளில விட மகிந்த ராஜபக்ச அமைச்சராக இருந்த போது சுரேஷ் பிரேமச்சந்திரன் பெற்றதை அவரும் கூற வேண்டும். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பும் கூட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தது. அதனால் தான் தன்னுடைய குடும்பத்தைப் பார்க்க கனடாவுக்குச் செல்ல முடியாது இருக்கின்றனர். இவர்களால் தனிப்பட்ட ரீதியாக கனடாவிற்குச் செல்ல முடியுமா? நீங்கள் உங்கள் பிழைகளை மறைத்து வைத்துக்கொண்டு வெளியில் முலாம் பூச முயலக் கூடாது. அடக்கி வாசியுங்கள். அமைதியாக இருங்கள்.

தமிழ் மக்களின் தேசிய பயணம் இன விடுதலை என்பதால் தான் பொறுமை காத்திருந்தோம். அந்தப் பொறுமைகளைச் சிதறடிக்காதீர்கள். நேர்மையான, நேர்த்தியான தீர்வைக் காண்பதற்காக இதற்காக எல்லோருடனும் இணைந்து யார் என்ற வேறுபாடு இல்லாம் பயணித்திருக்கிறோம். கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியாதீர்கள். இதனை விட இன்னும் பல ஆவணங்களை வைத்திருக்கின்றோம் - என்றார். (5)

# பண மோசடி செய்தவர் பொலிஸாரால் கைது

இத்தாலியில் தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்து பணம் மோசடி செய்த நபர் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப்பிரிவு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இத்தாலியில் தொழில் பெற்றுக்கொள்வதற்காக சந்தேகநபருக்கு பணம் வழங்கிய நபர் ஒருவர் தொழில் கிடைக்காமை காரணமாக பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்படி செயற்பட்ட பணியக அதிகாரிகள் மேற்கொண்ட இரகசிய விசாரணை ஒன்றின் பின்னர் கல்கிஸை பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இரத்மலானை பிரதேசத்தைச்சேர்ந்த சந்தேக நபர், தனது காரிலே நடமாடும் தொழில் நிறுவனம் ஒன்றை நடத்திச் சென்றுள்ளார். அத்துடன் குறித்த காரில் இருந்து வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் 23 மற்றும் இத்தாலிக்கான தொழில் ஒப்பந்த பத்திரங்கள் 9 கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வேறு சந்தேகநபர்கள் இருக்கின்றனரா என பணியக விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றுள்ளது. (ற)

# தலைமறைவாக இருந்தவர் கைது

நாட்டின் பல நீதிமன்றங்களால் 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்படாத நிலையில் தலைமறைவாகியிருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த நபரே மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

மட்டக்களப்பு புளியடிகுடா பகுதியில் சந்தேகப்படும் வகையில் நடமாடிய சந்தேகநபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் 17 குற்றச் செயலுடன் தொடர்புடையதாக 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வரும் நபர் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளனர். சந்தேகநபர் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L நிறைவடைந்தது
உங்கள் பட்டப்படிப்பிற்கு
தயாராகுங்கள்.

NSBM
GREEN
UNIVERSITY
TOWN

# விதைகளை விருட்சங்களாக்கும் பொற்காலம் இது! நீங்கள் தயாரா?



NSBM
GLOBAL
GRADUATE
நாடளாவிய உயர் கல்வித் திட்டம்

இலங்கை மாணவ மாணவிகளை அறிவிலும் ஆற்றலிலும் விருட்சங்களாக உருவாக்கும் பட்டப்படிப்புகள் ஒருங்கே அமைந்த NSBM கல்வி கலாசாலை உங்கள் நகரிற்கு

- உங்கள் கல்வித் தகுதிக்கு அமைவான எதிர்கால வழிகாட்டி
- தேர்ந்த விரிவுரையாளர்கள் வழங்கும் உயர் கல்வி அறிவுரைகள்
- தெற்காசியாவின் முதல் கல்விகலாசாலை தொடர்பான விபரங்கள்
- பட்டப்படிப்பு பாடத்திட்டங்கள் மற்றும் தேர்வு பரீட்சை மற்றும் நேரடி நுழைவு வசதி
- வங்கிக் கடன் வசதி ஏற்பாடு செய்தல்

| யாழ்ப்பாணம் | கண்டி | மட்டக்களப்பு | காலி |
|---|---|---|---|
| பெப்ரவரி 2-3 | பெப்ரவரி 3 | பெப்ரவரி 7 | பெப்ரவரி 17-18 |
| கார்கில்ஸ் சதுக்கம் | கண்டி சிட்டி சென்டர் | காந்தி மண்டபம் | பொது விளையாட்டு வளாகம் |

## SCHOOL OF BUSINESS

**UGC APPROVED DEGREE PROGRAMMES - OFFERED BY NSBM**

BSc in Business Management (Human Resource Management) (Special)
BSc in Business Management (Logistics Management) (Special)
BSc in Business Management (Project Management) (Special)
BSc in Business Management (Industrial Management) (Special)
BM (Honours) in Accounting and Finance
BA in Business Communication

**UNIVERSITY OF PLYMOUTH – UNITED KINGDOM**

BSc (Honours) International Management and Business
BSc (Honours) Accounting and Finance
BSc (Honours) Marketing Management
BSc (Honours) Operations and Logistics Management
BSc (Honours) Events, Tourism and Hospitality Management
BSc (Honours) Business Communication

**UNIVERSITY COLLEGE DUBLIN – IRELAND**

BSc (Honours) Management
BSc (Honours) Human Resource Management

**VICTORIA UNIVERSITY – AUSTRALIA**

Bachelor of Business: Banking and Finance & Financial Risk Management

## SCHOOL OF COMPUTING

**UGC APPROVED DEGREE PROGRAMMES OFFERED BY NSBM**

BSc in Management Information Systems (Special)
BSc (Honours) in Software Engineering
BSc in Multimedia
BSc (Honours) in Computer Science

**UNIVERSITY OF PLYMOUTH – UNITED KINGDOM**

BSc (Honours) Software Engineering
BSc (Honours) Computer Networks
BSc (Honours) Computer Security

**UNIVERSITY COLLEGE DUBLIN – IRELAND**

BSc (Honours) Management Information Systems

**VICTORIA UNIVERSITY – AUSTRALIA**

Bachelor of Information Technology

## SCHOOL OF ENGINEERING & SCIENCE

BSc (Honours) Engineering in Computer Systems Engineering

Bachelor of Engineering (Honours) Electrical & Electronic Engineering

**க.பொ.த. சாதாரண தரத்தின் பின்?**
Foundation Programme for Bachelor's Degree
NSBM ஒரு வருடத்திற்கான அடிப்படை பாடத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் நேரடியாக பட்டப்படிப்பிற்கு நுழைவதற்கான வாய்ப்புகள் தரப்படும்.

மார்ச் மாத குழுவுக்கான மாணவர்கள் இணைத்துக் கொள்ளும் படலம் தற்போது ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**011-544 5000**

AACSB INTERNATIONAL
உயர் கல்வி நிறுவனத்தின் அங்கத்துவம்

WITH PLYMOUTH UNIVERSITY
VICTORIA UNIVERSITY MELBOURNE AUSTRALIA
அங்கீகரிக்கப்பட்ட உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள்

THE UNIVERSITY OF WESTERN AUSTRALIA
அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு

NSBM GREEN UNIVERSITY TOWN

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

NSBM கல்விகலாசாலை நகரம் ... bm.lk
nsbm.lk
www.nsbm.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடமாகாணத்துக்கு அபிவிருத்தி தேவை

இலங்கை மத்திய வருவாயுடைய நாடாக இருந்தாலும், அந்தக் குறியீட்டின்கீழ் வடக்கு மாகாணம் மற்றும்கிழக்கு மாகாணங்களை அடையாளப்படுத்த முடியாதுள்ளது. போரால் முற்றாக அழிவடைந்த பிரதேசங்கள் அடிப்படை மட்டத்துக்கும் கீழேயே உள்ளன. இவ்வாறு தெரிவித்தார் வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம்வர்த்தகம்மற்றும்உற்பத்தியாளர்சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் வர்த்தகக் கண்காட்சியின்ஆரம்பநிகழ்வு யாழ்ப்பாணப்பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில்உரையாற்றுகையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார். புள்ளி விவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

போர் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த ஒன்பது ஆண்டுகளுக்குள் வடக்கில் எவ்விதமான அபிவிருத்தித் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை என்று கூறுவதற்கில்லை. திட்டங்கள் சில முன்னெடுக்கப்பட்டனதான். ஆனால்அந்தத்திட்டங்கள் மூலமாக தமிழ் மக்கள் என்னென்ன நன்மையடைந்தார்கள்? அவர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது? கையேந்து நிலையில் இருந்து அவர்கள் விடுபட்டுள்ளார்களா? என்பனவே தற்போதுள்ள கேள்விகள்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர், ''போரின்பின்னர்மக்களின்பொருளாதாரம்பாதாளத்துக்குத்தள்ளப்படுவதற்கு இங்கு வேரூன்றியவர்த்தக நிறுவனங்களும், நிதி நிறுவனங்களும் அவற்றால் அறவிடப்பட்டமிகைவட்டிகளும்காரணம்'' என்றும் காட்டமாகத்தெரிவித்திருந்தார். அவரின்இந்தக்கருத்தையும் மறுப்பதற்கில்லை. போரால் பாதிக்கப்பட்ட சமூகமொன்றுதன்னைமீளக்கட்டமைத்துக்கொள்ள கடனுதவியை நாடுவது இயல்பானதே. எமது மக்களின் பொருளாதாரம் அத்தகைய நிறுவனங்களால் தவறாகக் கையாளப்பட்டுள்ளமையும், எமது மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டமையும் கண்கூடு.

பிளாஸ்டிக் மற்றும் அது சார்ந்த பொலித்தீன் ஆகியவற்றுக்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை ஓரளவு இறுக்கமாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் பொலித்தீனுக்கு மாற்றாக சந்தையில் அறிமுகமாகிய பொருள் என்ன? பனை, வாழை என்று ஏகப்பட்ட வளங்கள்வடக்கில் உள்ளன. இவற்றைப்பயன்படுத்தி பெண்தலைமைத்துவக்குடும்பங்களுக்குமிகப்பெரும்சந்தைவாய்ப்புக்களைகொழும்பு அரசோ அல்லது வடமாகாண சபையோ ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். ஆனால் அது சார்ந்த திட்டங்கள் எதுவும் பின்பற்றப்படாமல் எமக்கு முன்னால் பரந்து விரிந்து கிடக்கும் மிகப்பெரும் சந்தை வாய்ப்பு வீணடிக்கப்படு கிறது. எனவே இனியாவது இந்த விடயத்தில் காத்திரமான நகர்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதேநேரம் முதலமைச்சரின் கருத்தில் இருந்து இன்னொரு விடயமும் மனதில் புலப்படுகிறது. நடப்பு வருடத்தில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சி ஒன்பதாவது வர்த்தகக் கண்காட்சியாக அமைந்துள்ளது. அதாவது இதற்கு முன்னர் எட்டுக் கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன. இந்த எட்டுக் கண்காட்சிகளின் பின்னரும் வடமாகாண மக்களின் பொருளாதாரம் 'அடிப்படை மட்டத்துக்கும் கீழேயே' உள்ளது என்று முதலமைச்சர் குறிப்பிடுகிறார். எனின் இந்தக் கண்காட்சிகளால் ஆனபயன்என்ன? பன்னாட்டுவர்த்தகக் கண்காட்சி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மாற்றுவதில் எந்த அளவுக்குச் செல்வாக்குச் செலுத்தியுள்ளது, செலுத்துகிறது, செலுத்தப்போகிறது?



சேரலாதன்

# தனி நாடுதான் தமிழர்களுக்கான தீர்வு என்ற சந்திரிகாவின் கருத்து சரியானதே

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றுப்படாது விடின் அவர்கள் தமக்கென ஒரு தனி நாட்டைக் கோருவதில் தவறொன்றுமில்லை. அவ்வாறாயின் பிரபாகரன் தமிழ் ஈழம் கேட்டதும் நியாயமானதென்றே கொள்ள வேண்டும். இவ்வாறு சாதாரண அரசியல்வாதி ஒருவர் கூறவில்லை. இந்த நாட்டின் அரச தலைவராக இருந்தவரும், புகழ் பெற்ற அரசியல் குடும்பம் ஒன்றில் தோன்றியவரும், சிறந்த அரசியல் பின்னணியைகொண்டவருமான சந்திரிகா அம்மையாரே இவ்வாறு தெரிவித்துள்ளார். புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்த பெருமை தனக்கே உரியது என சில தினங்களுக்கு முன்னார் மார் தட்டிக் கூறியவர் இந்த அம்மையார்தான். இவர் அரச தலைவராக இருந்த போது தான் ரணில் விக்கிரமசிங்கதலைமையிலானஅரசுக்கும்புலிகளுக்குமிடையே இடம்பெறவிருந்தசமாதானஒப்பந்தம் நிறைவேறாமல்தடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது ஒரு சமாதானத் தேவதையாகத் தம்மைக் காட்டிக்கொண்ட இவர், பதவிக்கு வந்ததும் போர் வெறி கொண்டு பலதமிழர்கள் உயிர் இழப்பதற்குக் காரணமாக இருந்தவர்.

### சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா

அரசியல்வாதிகள் பதவிக்கு வருவதற்கு முன்னர் ஒன்றைக் கூறுவதும், பதவியில் இருக்கும்போது வேறொன்றைக் கூறுவதும், பதவி இழந்த பின்னர் புதிதாக இன்னுமொன்றைக் கூறுவதும் இந்த நாட்டில்வழக்கமாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில்அமைதியாகப் பணிபுரியும் பொலிஸார் கதிர்காமத்தில் மட்டும் பொது மக்களைக் கொல்வது ஏன்? என வினா எழுப்பியுள்ளார் முன்னால் அரச தலைவரான மகிந்தராஜபக்ச. யாழ்ப்பாணத்திலும்பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர்கள் சிலர் கொல்லப்பட்டதை இவர் அறியவில்லையா? அல்லது ஏராளமானகொலைகள்இங்குஇடம்பெறவேண்டும்என அவர்விரும்புகின்றாரா? தென் பகுதிஅரசியல்வாதிகள் தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேற வேண்டும் என்பதற்காக எதையும் கூறுவார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் கௌரவமாகவும், சுதந்திரமாகவும்வாழ முடியாது என்பதை உணர்ந்ததன் காரணமாகவே பிரபாகரன் தனித் தமிழீழம் கேட்டுப் போராடினார். முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென அவர் ஒருபோதுமே நினைத்ததில்லை. சில வேளை விடுதலைப் புலிகள் தாம் எண்ணியதன் பிரகாரம் தனி நாடொன்றை அமைத்திருந்தால்தமிழர்களின்பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கிடைத்திருக்கும். தமிழ் மக்களுக்குநிம்மதியானதொருவாழ்வுகிடைத்திருக்கும். ஆனால் எல்லாமே கனவாகப்போய்விட்டது.

### தமிழர்கள் என்றால் கிள்ளுக்கீரையா என்ன?

தமிழர்களைக் கிள்ளுக்கீரையாக நினைத்துச் செயற்படுவதும்இந்தநாட்டின்வழக்கமாகிவிட்டது. பதுளையைச்சேர்ந்ததமிழ்ப்பாடசாலைஅதிபரொருவர்பெரும்பான்மைஇனத்தைச்சேர்ந்தஅரசியல்வாதி ஒருவரால் மனிதாபிமானமற்ற வகையில் அவமானப்படுத்தப்பட்டமை முழுத் தமிழ் இனத்தையுமே அவமானப்படுத்தும் செயலுக்குச்சமமானது. இந்த அநாகரிகமான செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களைத்தெரிவித்துவருகின்றனர். இந்தவிவகாரத்தில் தொடர்புடைய ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராகஅரசதலைவரும், தலைமைஅமைச்சரும் நடவடிக்கை எடுக்கத்தவறினால்மலையகத்தைச் சேர்ந்ததமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள்அனைவரும்தமதுபதவிகளைத்துறந்து விடுவார்களென அமைச்சர் திகாம்பரம் கடுமையாக தொனியில் தெரிவித்துள்ளார். பெண்தமிழ்அதிபர் அவமானப்படுத்தப்பட்டமைமலையகத்துக்குமட்டுமேநேர்ந்த ஒரு அநீதியல்ல. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் இந்த அருவருக்கத்தக்க செயலால் தலை குனிந்து நிற்கின்றது. ஆகவே கட்சி பேதமின்றி சகல தமிழ் அரசியல் வாதிகளும் இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

### மூடி மறைக்கப்பட்டநிலையில் தமிழர்களுக்கு எதிரான முன்னைய அநீதிகள்

கடந்தகாலங்களில்தமிழர்களுக்குஇழைக்கப்பட்ட அநீதிகள்மூடிமறைக்கப்பட்ட நிலையிலேயே இன்னமும்காணப்படுகின்றன. தமிழர்களுக்குஎதிரான கொடுமைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போன்று இடம் பெற்ற இறுதிப் போரின் போதான போர்க்குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் விசாரணைகள் எதுவுமின்றி மூடி மறைக்கப்பட்ட நிலையில்காணப்படுகின்றன. இவைதொடர்பான விசாரணைகள் இடம் பெறும்போது தான் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள், தமிழர்களுக்கும் நிம்மதி கிடைக்கும்.

தற்போதுபுதிய அரசமைப்பின்உருவாக்கமும்இழுபறி நிலையில் காணப்படுகின்றது. இனவாதிகள் ஒற்றையாட்சிக்கோட்பாட்டைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு ஆட்டம் போடுகின்றனர். இந்த ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்கப்போவதில்லைஎன்பது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில்தமிழர்களின்பிரச்சினைக்குதீர்வுதான் என்ன? தற்போதையநாட்டின்அரசியல்சூழ்நிலையைப் பார்க்கும்போது தமிழர்களுக்கு இலேசில் நியாயம்கிடைக்குமெனஎதிர்பார்க்கமுடியவில்லை. தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு, திட்டமிட்ட குடியேங் கங்கள், தமிழர் பிரதேசங்களில் படையினரது பெரும் பிரசன்னம் ஆகிய காரணங்களால் தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகின்றது. இடம்பெயர்ந்தமக்களில்கணிசமான அளவினர் கூடத் தமது சொந்த நிலங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் வாழ நேர்ந்துள்ளது. இந்தநிலையில் உரிமைகளை இழந்தஓர் இனமாகவே தமிழர்கள் கருதப்படுகின்றனர். சந்திரிகா அம்மையார் கூறியது போன்று தனிநாடு ஒன்றுதான் அவர்களுக்கான சிறந்த தீர்வாக அமையும் எனக்கருத முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதி

# அமெரிக்காவின் புதிய நிலைப்பாடு தெற்காசியாவில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

அமெரிக்காவிற்கும் பாகிஸ்தான் நாட்டுக்கும் இடையேமுறுகல்நிலைஒன்றுதோன்றியுள்ளது. பயங்கரவாதத்தைஎதிர்கொள்வதற்காக அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆண்டுதோறும் வழங்கி வந்த நிதியை மட்டுப்படுத்தியதால் பாகிஸ்தான் அதிர்ச்சி அடைந்துள்ளது. பாகிஸ்தான் நாட்டின் பிரதமர் அமெரிக்க அரசை கடுமையாகத் தாக்கிப்பேசும் அளவுக்கு நிலைமை முற்றிப்போய்க் காணப்படுகின்றது.

**பாகிஸ்தான் நாடு பயங்கரவாதத்தின் ஓர் ஊற்றுக்கண்**

பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் பாகிஸ்தான் என்பது அனைவருக்கும்தெரிந்தவிடயம். ஜனநாயகமுறையில் மக்களால்தெரிவுசெய்யப்படுகின்றஅரசுகள் அங்கு ஆட்சியில் அதிக காலம் நிலைத்து இருப்பதில்லை. அரசியலில்இராணுவத்தினரின்பங்குமிகஅதிகமாகக்காணப்படுவதால்அந்தஅரசுகள்இடைநடுவில்கவிழ்க்கப்பட்டு விடுவதுஅங்குவழமையாகிவிட்டது. அத்துடன்பயங்கரவாதஅமைப்புக்களும்அந்தநாட்டில்பல்கிப்பெருகிவிட்டன. இந்த அமைப்புக்கள் மூலமாக அண்டை நாடான இந்தியாவுக்கு தொல்லைகள் கொடுப்பதற்காக பாகிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உளவுத்துறையினர், இந்த அமைப்புக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் இந்தியாவிடம்அணுஆயுதங்கள்உள்ளதென்றகாரணத்துக்காக பாகிஸ்தானும்அணுஆயுதங்களைத்தயாரித்துகுவித்து வைத்திருக்கின்றது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் ஒன்று மூளுமேயானால் அதுவொரு அணு ஆயுதப் போராகவே மாறி விடும் என்பதில் ஐயமில்லை. இதனால் அண்டை நாடுகளும் அபாயத்தை எதிர் கொள்ள நேரிடும்.

முன்னர்இந்தியாவில்ஆட்சிஅதிகாரத்தில்இருந்தஅரசுகள் ரஷ்யாவிடம் நெருங்கிய உறவைக கொண்டிருந்தன. இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பாதுகாப்பு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதுஅமொரிக்காவுக்குஉவப்பானதாகஇருக்கவில்லை. இத்னால் பாகிஸ்தானுடன் அந்த நாடு நெருங்கிய உறவைப் பேண ஆரம்பித்தது. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசுகள் இராணுவத்தால் கவிழ்க்கப்பட்ட போதிலும், அமெரிக்காஅதைக்கண்டுகொள்ளவில்லை. இந்தியாவுக்கு பாடம் கற்பிப்பதே அமெரிக்காவின் ஒரே நோக்கமாகக் காணப்பட்டது. இந்த நிலையில் அமெரிக்காவின் பரம எதிரியான கியூபா நாட்டின் அதிபராகஇருந்தபிடல்காஸ்ட்ரோஒருசமயம் இந்தியாவுக்கு வந்தார். அப்போது இந்திய தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் காஸ்ட்ரோவுக்கு மகத்தான வரவேற்பு வழங்கிக் கௌரவித்தார். இதுவும் அமெரிக்காவுக்குஆத்திரத்தைஏற்படுத்தியிருந்தது.

**அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகள் கைகளுக்குக் கிட்டினால் உலகுக்கே ஆபத்து**

பாகிஸ்தானின் முக்கியமானஅணுசக்தி விஞ்ஞானியொருவர் அணுசக்தித் தொழில்நுட்பத்தைவேறுநாடுகளுக்கு இரகசியமாக விற்றுவிட்டதால் அந்த நாடுகளும் அணுசக்தி ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டன. இது உலக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறி விட்டது. இதை விட பாகிஸ்தான் வசம் உள்ள அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளுக்குச் சென்றுவிட்டால் அதன் விளைவுகள் மிக மோசமானதாகவே அமைந்து விடும். இந்தியாவில் இடம் பெறுகின்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தானில் நிலை கொண்டிருக்கும் பயங்கரவாத அமைப்புக்களே காரணமென இந்தியா குற்றம் சாட்டி வருகின்றது ஆனால் பாகிஸ்தான் இதை முற்றாகவே மறுத்து வருகின்றது. ஆனாலும் இந்தியாவின் குற்றச் சாட்டுகளில் நியாயம் இருப்பதாகவே தெரிகின்றது.

பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தான் இன்னமும்கூட பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர் கொண்டு வருகின்றது. அமெரிக்காவினால் பதவியில் இருந்து அகற்றப்பட்ட தலிபான்கள், அரசுக்கு எதிரான தாக்குதல்களில் அடிக்கடி ஈடுபட்டு வருகின்றனர். அந்த நாட்டில் நிலை கொண்டிருந்த அமெரிக்கப்படையினர் அங்கிருந்து அகன்றதன் பின்னர் தலிபான்களின் அட்டகாசம்அதிகரித்துக்காணப்படுகின்றது. தலிபான்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கி வருவதாகக் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.






**பின்லாடன் தொடர்பான தகவல்களை அமெரிக்காவுக்கு வழங்க பாகிஸ்தான் தவறியதாகக் குற்றச்சாட்டு**

அமெரிக்காவில்பேரழிவைஏற்படுத்திய அல்-கொய்தா அமைப்பின்தலைவரானஒசாமாபின்லாடன்பாகிஸ்தானில் பதுங்கியிருந்தபோது அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டான். ஆனால்பின்பின்லாடன்தொடர்பான தகவல்களைபாகிஸ்தான்அமெரிக்காவிற்குத்தெரிவிக்கவில்லை. பின்லாடன் தொடர்பாக தனக்கு எதுவுமே தெரியாதென கூறி மழுப்பி விட்டது. இதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் பாகிஸ்தானுடனான உறவை அமெரிக்கா முறித்தும் கொள்ளவும் இல்லை.

தற்போதுடொனால்ட்ட்ரம்ப்பதவிக்குவந்ததன்பின்னர் பாகிஸ்தானுடனானஅந்தநாட்டின்உறவில்விரிசல்கள் ஏற்படத்தொடங்கிவிட்டன. இந்தியாவின் பா.ஜ.க.அரசு அமெரிக்காவுடன்உறவுகளைப்பேணுவதில்அக்கறையுடன்செயற்பட்டுவருகின்றது. தலைமைஅமைச்சரான நரேந்திர மோடி அமெரிக்காவுக்குச் சென்று உறவைப் புதுப்பித்து வருகின்றார். இந்தியா பயங்கரவாதத்துக்கு எதிராகப்போராடுகின்றஒருநாடுஎன்றவகையில்அமெரிக்கா, இந்தியா மீது கரிசனை கொள்ள ஆரம்பித்துவிட்டது. மேலும் பொருளாதார ரீதியில் இந்தியா அடைந்து வருகின்ற முன்னேற்றமும், சீனாவை ஓர் எதிரி நாடாக அது கொண்டிருப்பதும் அமெரிக்காவை இந்தியாவின் பக்கம் ஈர்த்துவிட்டது.

இந்த நிலையில் சீனாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கும்பாகிஸ்தானுடன்அமெரிக்காமுரண்படுமேயானால், அது தெற்காசியாவின் அரசியல் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்திவிடும். அமெரிக்காவின் புதிய நிலைப்பாடு இந்தியாவைப் பலப்படுத்தும் அதே வேளை பாகிஸ்தானைப் பலவீனப்படுத்திவிடும் என நம்பலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# எம் இளையோர் கலாசார மரபு பேணுதல் அவசியம்

எமது பிரதேசத்தில்வாழ்கின்ற இளைய தலைமுறையினர் நெறிபிறழ்ந்து, பாதைமாறி பயணிக்கும்போக்கு தற்போது அதிகரித்து விட்டதால் நாம் எல்லோரும் மனவேதனை அடைகிறோம்.

இந்த நிலைக்கு பல்வேறு காரணங்களை நாம் அடையாளப்படுத்த முடியும். கிளர்ச்சியூட்டும்திரைப்படங்கள், இணைத்தளங்கள், நாகரீகமாற்றங்கள், கல்விக்கட்டமைப்பில் பலவீனங்கள், சமய நிறுவனங்களின் தோல்விகள் என்றெல்லாம் பல காரணங்களை அடுக்கலாம். மூன்று தசாப்தங்களுக்கு முன் எமது கிராமத்து வீதிகளில் பாடசாலை செல்லும் வயதை உடைய ஒரு சிறுவனோ, சிறுமியோ பாடசாலை நேரத்தில் பாடசாலை செல்லாமல் தெருவில் வீண் பொழுது போக்க முடியாது ஏனெனில் பெரியவர்கள், மூத்தோருக்கு காரணம் கூறியாக வேண்டும். அத்தகைய கட்டுப்பாடும் அவதானிப்பும் முன்னர் எவர் மத்தியில் வழக்கில் இருந்தமை வரலாறு. கடந்த மூன்றாந்தவணை விடுமுறை ஆரம்பத்தில் எங்கள் கிராமத்துச்சிறுவனொருவன் தலைமுடியை முறையற்ற விதத்தில் கோடுகள் கொண்டதாக அலங்கரித்த நிலையில் சைக்கிள்கள் திருத்தம் செய்யும் கடை ஒன்றுக்குத் தனது சைக்கிளைத் திருத்த வந்தான். அந்தச் சைக்கிள் கடை உரிமையாளர் உடனடியாகவே கலாசாரச்சீர்கேட்டுடன் வந்தால் சைக்கிள் திருத்த இயலாது என மிரட்டலாகவும், கண்டிப்பாகவும் கூறியதை அவதானித்தேன். அந்தச்சிறுவன் வீடு சென்று தொப்பி அணிந்து வந்து இனிமேல் அவ்வித தலையலங்காரம் செய்யப் போவதில்லை எனத்தெரிவித்து தனது சைக்கிள்களைத் திருத்துவித்துச் சென்றான். இந்த இடத்தில் சிறுவன் சிந்திக்க வைக்கப்படுகின்றான். அதேபோன்று வைத்தியசாலையில் பாடசாலைச் சீருடையுடன் வந்திருந்த மாணவன் ஒருவனது தலைமுடி அலங்காரம் ஒழுங்கற்ற விதத்தில் இருந்தமையை அவதானித்த ஓய்வு பெற்ற பெண் வைத்தியர் ஒருவர் அவனுக்கு மருந்து வழங்க மறுத்து பின்னர், இனி இந்தக் கோலத்தில் இங்கு வரக்கூடாது எனவும் கூறி சிகிச்சை வழங்குவதை அவதானித்தேன்.

இரு சம்பவங்களிலும் சிறுவர்கள் கூனிக்குறுகியதோடு தமது செயலுக்கு சமூக அங்கீகாரம் இல்லை என்பதை உணர வாய்ப்பேற்பட்டிருக்கும் அல்லவா? எமது பெரியோர்கள் அவ்வப்போது இளையோருக்கு மென்மையாகவும், கண்டிப்பாகவும் எமது இனத்தின் பண்பாட்டுச் சிறப்புக்களை எடுத்துக்கூறி வழி நடத்துவது பயன்தரு மொன்றாக அமையும்.

முல்லையோகா, காரைநகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நித்திய சுகம் 352

உடலே கோயில்





## நோய்களை வெல்வதற்கான முதற்படி

# அது பற்றிய விழிப்புணர்வு!

கே.எஸ்.சிவஞானராஜா


உங்கள் உடலுக்கும், உள்ளத்துக்கும் முதல் வைத்தியன் நீங்களாகத்தான் இருக்க முடியும். உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும்போது இதயம் இருப்பதுகூட பலருக்குத் தெரிவதில்லை. ஆனால் உடல் நலம் பாதிக்கப்படும் போது, இதயம் எங்களோடு பேசுகிறது. எனவே உடலும் உள்ளமும் நோகாதபடி மிகவும் அவதானமாகப் பார்த்துக் கொள்வது நம் சார்ந்த விழிப்பு ணர்வாகும்.

டெங்குக் காய்ச்சல் வராதபடி நாடானது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவது போல, ஒவ்வொரு நபரும் அவர் சார்ந்த குடும்பமும் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஊடகங்கள் வாயிலாகப் பெற்றுக் கொள்வார்களாயின் அந்தந்தநோய்களை வெல்வது கடினமானதொன்றல்ல. அதிலிருந்து மீளமுடியும்.

இந்த நிலையில், பெண்களை அதிகம் தாக்கும் நோயான 'தைரொய்ட்டு' (Thyroid) பற்றி இங்கு நோக்குவோம். இந்த நோய்பற்றி எவரும் அச்சமடையத் தேவையில்லை. ஆனால், அதிலிருந்து விடுபட நிச்சயமாய் முடியும் என்பது வெளிப்படையாகும்.

### தைரோயிட் என்றால் என்ன?

இந்தச் சுரப்பிகள் கழுத்துப் பகுதியில் பட்டாம் பூச்சி வடிவத்தில் இருக்கும். இது சுரக்கும் ஹார்மோன்கள் இயல்புக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சுரந்தால் அதுவே தைரோய்ட் பிரச்சினையாக பேசப்படுகிறது. இதன் அறிகுறியாக கழுத்துப் பகுதியில் வீக்கம் தென்படும்.



### வகைகள்

Hypothyroid ஹைப்போதைரோய்ட்
Hyperthyroid ஹைப்பர் தைரோய்ட்
Swelling Thyroid ஸ்வெல்லிங் தைரோய்ட்

முதலாவது வகை, தைரோய்ட் சுரப்பானது குறைவாகச் சுரப்பதாகும். இரண்டாவது வகை, தைரோய்ட் சுரப்பானது அதிகமாகச் சுரப்பதாகும். மூன்றாவது வகை தைரோய்ட் சுரப்பானது மிக மிக அதிகமாகச் சுரப்பதாகும். இதனால் கழுத்துப் பகுதி வீங்கியதாகத் தென்படும்.

இவற்றில் எது வந்தாலும் உரியவாறு ஒழுங்காக சிகிச்சை பெறுவதன் மூலம் நோயைக் குணமாக்க முடியும். கருவிலுள்ள குழந்தைகள் தொடக்கம் முதியவர் கள் வரைக்கும் யாருக்கு வேண்டுமானாலும் இந்த நோய் வரலாம். ஆனால் பயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இருந்த போதும் பெண்களையே வாட்டி வதைக்க வல்லதாகும்.

### பாதிப்பு

ஆண்களுக்கு உடல் வளர்ச்சியிலும், மூளை வளர்ச்சியிலும் இந்த நோய் தாக்கத்தை ஏற்படுத்தும். பெண்களுக்கு பூப்படைதல், மாதவிடாய் கர்ப்ப காலம், உடல் எடை, குருதி அழுத்தம், கொழுப்பு அதிகரிப்பு, கரு உற்பத்தி ஆகிய வற்றில் பல நெருக்கடிகளை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டு அறிவுறுத்தல் செய்யப்படுகிறது.

மேலும் முடி உதிர்வு, சரும வறட்சி, உடற் பலவீனம், உடற் சோர்வு, உடல் மாற்றம், இதயத் துடிப்பில் ஒழுங்கீனம், குருதிப் போக்கு, மலச்சிக்கல், வாழ்க்கையில் பிடிப்பின்மை, இன்னும் பல சமமற்ற மாற்றங்கள் வந்து உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஏற்பட்டு வாழ்வைப் பாதிப்படையச் செய்வதே தீரும். கர்ப்பிணிப் பெண்கள் இதற்கான பரிசோதனையைச் செய்துகொள்வது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். Thyroid Stimulating Hormone (TSH) பரிசோதனை, T3,T4 சோதனைகள் மூலம் இதனை வெற்றி கொள்ளலாம். தைரோய்ட் புற்றுநோய் (Papillary Thyroid Cancer) உலகெங்கணும் பரவிவருவது கவலையளிக்கிறது.

### மீள்வது

1. விசேட மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்தல்
2. அயடீன் உப்பினை உணவில் சேர்த்துக்கொள்ளுதல்
3. பச்சிலை வகைகளை நாளாந்தம் உணவில் சேர்த்துக் கொள்ளுதல்
4. மீன் உணவு வகைகளில் இருந்து அயடீன் ஊட்டத்தைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளுதல்

இவற்றை நீங்கள் பெறுவீர்களாயின் நீங்கள் ஒரு பூரணமான அதி சிறந்த பிரஜை ஆவீர்கள்.


“ முடி உதிர்வு, சரும வறட்சி, உடற் பலவீனம், உடற் சோர்வு, உடல் மாற்றம், இதயத் துடிப்பில் ஒழுங்கீனம், குருதிப் போக்கு, மலச்சிக்கல், வாழ்க்கையில் பிடிப்பின்மை, இன்னும் பல சமமற்ற மாற்றங்கள் வந்து உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஏற்பட்டு வாழ்வைப் பாதிப்படையச் செய்வதே தீரும். கர்ப்பிணிப் பெண்கள் இதற்கான பரிசோதனையைச் செய்து கொள்வது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
இதயன்
ஞாயிறு சிறப்பமசம்
28.01.2018





# எமன் வலம் வரும் 'பவள்'

தர்சன் சங்கரப்பிள்ளை

கட்டுரை

*மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட வீதிகள் வெறிச்சோடிப்போய்க் கிடந்த காலம் அது.*
*கறுப்பு அரக்கர்களாக ஆயுததாரிகள் மாத்திரம் சமாந்தர இடைவெளிகளில் வீதியில் நடமாடிக்கொண்டிருப்பர்.*
*கழுத்தைப் பிடித்து நெரித்தாற்போல் யாழ்ப்பாணம்.*
*மூச்சு முட்டிக் கிடந்தது.*
*முகமாலைக்கு அப்பாற்பட்ட பகுதிகளுடனான யாழ்ப்பாணத்தின் தொடர்பு அறுபட்டுப்போனது.*
*இரண்டு பகுதிகளாகப் பிரித்துத் தமிழ் மக்கள் வதைக்கப்பட்டனர்.*

அப்பாலுள்ள மக்கள் மெல்ல மெல்ல ஒரு திசைநோக்கி நகர்த்தப்பட்டு, நசிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இங்கு நாம் வெகுண்டெழும் உணர்வுகள் உருவாகாதபடி பக்குவமாகப் பயப்படுத்தப்பட்டோம். முதல்படியாகத் தரைவழி மூடப்பட்டது. உணவைத் தட்டுப்பாடாக்கினர். உடலைச் சோர்விழக்கச் செய்தனர். மறுபுறம் மனது திடமாகாமலிருக்கச் சுட்டுக் கொல்லுதலும், கடத்திச் செல்லு தலும் ஆங்காங்கே அரங்கேறின. கண்டும் காணாமல் வீடுகளுக்குள் ஒதுங்கிக் கொண்ட அந்தக் காலத்தில்தான் 'பவள்' என்ற இந்தக் கவச வாகனத்தை நான் முதன் முதலில் அறிந்தேன். அது வந்துபோனால் வீதி மயான அமைதி கொண்டுவிடும். எங்கோ தூரத்தில் அதன் சத்தத்தைக் கேட்டாலே துல்லியமாக அதை உய்த்துணர்ந்து அனைவரும் தத்தம் வீடுகளுக்குள் பதுங்கிக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக். 22



இரவுகள் அனைத்தும் எம்மை அச்சுறுத்திக் கொண்டிருந்தன. இங்கிருந்து செலுத்தப்படும் எறிகணைகளின் சத்தம் காதுகளைக் கிழித்தது. அது அப்பாலுள்ள எமது நிலத்தில் போய் விழும்போது ஏற்படும் அதிர்வு, அந்த அமைதியான இருளில் வீட்டு யன்னல்களையும் கதவுகளையும் அதிர வைத்தது. கூடவே மனமும் பதை பதைத்துத் திரும்பும். பிரிந்து தவிக்கும் எனது உறவுகள் என்ன ஆகிக்கொண்டிருக்கிறார்களோ? எனும் கேள்வி விடை அறியவராமல் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

+++

வீதிகளில் ரோந்தில் ஈடுபடும் இராணுவத்தினரை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்படுவது அதிகரித்ததும், அதுவரைக்கும் போர்க்களங்களில் அதிகம் ஈடுபடுத்தப்பட்ட இந்தப் 'பவள்'கள் பாதுகாப்புக்கருதி உள்ளூருக்குள்ளும் இறக்கிவிடப்பட்டன. 'பவள்' பல வழிகளில் மனதுக்குள் பயமூட்டிக் கொண்டிருந்தது. அதில் வந்து 'தட தட' வென இறங்கும் அரக்கர்கள், அகப்பட்டவர்களை அடித்து வதைப்பர். சிலரை அப்படியே அழைத்தும் சென்றுவிடுவர். அவர்களில் சிலர் திரும்பியதும், பலர் இன்றுவரை திரும்பாமல் இருப்பதுவும் வரலாறு விட்டது.

+++

மறு புறம் 'பீல்ட் பைக்' என்பதாக மோட்டார் சைக்கிளில் வேவுக்காக வந்து போகும் காட்டுமிராண்டி இராணுவத்தினர் பீதியைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். இவை இரண்டிலும் வந்துபோகும் இராணுவத்தினர் வெறிபிடித்த மிருகங்களாகவே இருப்பர். யாரும் கண்களில் அகப்பட்டால் துவம்சம் செய்து விடுவர். எங்காவது ஒரு குண்டு வெடிப்பு, கிளைமோர் தாக்குதல் நடந்தால், கொதிக்கும் வெயிலில், தார் வீதியில், முட்டுக்காலில் இருத்திவைத்துச் சராமாரியான அடி, உதைகள் நடக்கும். அப்படி எதுவும் நடக்காத பட்சத்திலும்கூட வீதியில் அவர்களிடம் அகப்பட்டு அடிவாங்கியவர்கள் அநேகம்பேர்.

+++

வீட்டை விட்டு வெளியே வந்தால் வீதியில் நிற்கும் இராணுவத்தினரின் அனுமதியுடனேயே எப்புறமும் நகர முடியும். அவர்களின் அரைகுறைத் தமிழைச் சரியாகப் புரிந்துகொண்டு அவர்களுக்கு விளங்கக் கூடியவாறு சைகையிலும் மொழியிலும் எமது தேவையைச் சொல்லி அனுமதி பெற்று நகர்வதோ பெரும்பாடு. ஒருவாறாக வீதியில் இறங்கிவிட்டால் காதுகளை உன்னிப்பாக வைத்திருக்க வேண்டும். எங்காவது வெடிச்சத்தம் கேட்கின்றதா? நிறுத்தப் பட்டிருக்கும் அரக்கர்களில் எவராவது கொச்சைத் தமிழில் எங்களைக் கூப்பிடுகின்றனரா? தூரத்தே 'பீல்ட் பைக்' அசுரர்கள் வருகிறார்களா? எல்லாவற்றையும் தாண்டிப் 'பவள்' இரையும் சத்தம் கேட்கின்றதா? என்று பலவகை அவதானிப்புகள் தேவை. அவ்வேளை உடல் உசார் நிலையில் இருந்தாலும் நடுக்கமே ஆட்கொண்டிருக்கும்.

**தலையாட்டியும் பவளும்**

எனது வீடு வீதியை ஒட்டியிருந்தமையால், சோதனைக்காகத் தினமும் அதிகாலையில் ரோந்து வரும் ஆயததாரிகள் வீட்டைச் சுற்றியிருந்த வேலிகளைப் பிய்த்து, பிரித்து வேலியே இல்லாமல் செய்திருந்தனர். எந்தப் பகுதியாலும் வந்து எந்தப் பகுதியாலும் போவார்கள். நாம் வீட்டுக்குள் பதுங்கியிருந்து பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். மறுநாள் 'ரவுண்ட் அப்' ஏதேனுமாக இருந்தால், அதிகாலையிலேயே ரோந்துக்கு வந்துவிடுவார்கள். வழமையில் மாற்றம் தெரியும். வீதியின் இருபுறமும் இருக்கின்ற மக்களை மறுபுறங்களுக்கு மாறாமல் பார்த்துக் கொள்வார்கள். முதலில் வீதியின் ஒரு புறத்து மக்களைச் சுற்றி வளைத்து ஓரிடத்தில் ஒன்று திரட்டுவர். காத்திருப்புக்கள் தொடரும். சில மணிநேரங்களில் அவ்விடத்துக்குப் 'பவள்' எனும் இந்தக் கவச வாகனம் வந்துவிடும். பயம் உச்சங்கொள்ளும். நாம் அனைவரும் வரிசைப்படுத்தப் படுவோம். சோகம் ஆட்கொண்டுவிடும். "யாரைக் கொண்டுபோகப்போகிறார்களோ" என்று உறவுகள் தமது முகங்களைத் தொங்கப் போட்டுக் கொள்வர். நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அந்தப் பவளுக்குப் பக்கமாக வரிசையாக நகருமாறு பயமுறுத்திக் கொண்டே ஆயுததாரிகள் பணிப்பர். பவளின் பக்கவாட்டில் இருக்கின்ற ஜன்னல் என்று எண்ணக்கூடிய கண்ணாடித் துளை ஒன்றால் வரிசையில் நிற்கும் எங்களைக் கண்காணித்தபடி ஒருவர் இருப்பார். அவர்தான் தலையாட்டி. கண்கள் இரண்டு மட்டும் தெரியுமறு அவருடைய முகம் கறுப்புத் துணியால் சுற்றப்பட்டிருக்கும். அவர் யாரைச் சுட்டித் தனது தலையை ஆட்டுகின்றாரோ, அவர்கள், அருகிலிருக்கும் இன்னொரு இராணுவ வாகனத்துக்குள் ஏற்றி விசாரணைக்காக் கொண்டு செல்லப்படுவர். இவர்களில் சிலர்தான் முன்னே கூறியவாறு திரும்புவர், பலர்...?

**பாதுகாப்புக்காகப் பதறியடித்தார்கள் உணவுப்பொதியைச் சுமந்து...?**

அப்போதெல்லாம் வீதிகளில் வலம் வந்த இந்தப் பவள் வாகனம், அப்பாவிகள் மீது வெறிகொண்ட இராணுவத்தினரைச் சுமந்து வந்து இறக்கிக் கண்ணுக்குத் தென்படுகின்ற மக்கள் அனைவருக்கும் அடி, உதைகளை வாரி வழங்கியது. இதனால் பவளின் சத்தம் எங்காவது கேட்குமாப்போல் இருக்கின்றதா? என்ற அவதானத்துடனேயே மக்கள் நகரவேண்டியிருந்தது. கிளைமோர், குண்டுத் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியிருந்ததால் கடும்இரும்பு கொண்டு வார்க்கப்பட்ட 'பவள்' எனப்படும் இந்தக் கவச வாகனத்தை அன்று அவர்கள் வீதியில் வெறித்தனமாகவே ஓட்டிச் சென்றார்கள். மிகுந்த கடினமும் கனதியுமான அது வேகமாக வீதியில் வந்துபோகும். வேளைகளில் யாராவது குறுக்கிட்டால், அவர்களின் நிலை அதோகதிதான். அந்த இக்கட்டான காலத்தில் அதை வீதியில் மிகவேகமாக ஓட்டிச் சென்ற இராணுவத்தினர், இன்றைக்கு அந்தப் பவளுக்கான எவ்வித தேவையும் இல்லாமலேயே அதைத் தமது அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்திவருகின்றனர். உணவுப் பொதியைப் பரிமாற்றுவதற்கும் பயன்படும் ஒன்றாகிவிட்டுள்ளது பவள். ஆனால், அதற்கும்கூட அதிவேகமாகவே அதை ஓட்டிச் செல்கிறார்கள். சுடுதண்ணீர் குடித்தவர்களாக. அதை வேகமாக ஓட்டுவதன் தேவைதான் என்ன?

> **இராணுவமே தேவையில்லை என்று குரல் எழுப்பிக்கொண்டிருக்கும் வேளையில், இந்தக் கவச வாகனம் மீண்டும் கவனம் ஈர்த்திருக்கின்றது. இப்போது புங்குடுதீவில் பாடசாலைச் சிறுமி ஒருத்தியின் உயிரை, பயன்பாட்டுக்கு உதவாத நிலையிலுள்ள கவசவாகனம் ஒன்றின் மூலம் காவுகொண்டிருக்கிறார்கள் கடற்படையினர்.**

**இராணுவமே தேவையில்லை எனும்போது பவள் எதற்கு?**

மக்கள் நடமாடும் பகுதிகளில் அதிவேகமாகச் செலுத்தப்படும் இந்த வாகனத்தால் பல விபத்துக்களை மக்கள் சந்தித்துள்ளனர். 2014இல்கூட வவுனியாவில் ஒரு விபத்து ஏற்பட்டு அப்பாவிப் பெண் ஒருத்தி பெரும்காயங்களுக்கு உள்ளாகி இருந்தார். பல முற்றுகைகளுக்குக்கூட இந்தப் 'பவள்'கள் பிற்காலங்களில் பயன்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில இடங்களுக்கு இதன் வருகை அடிக்கடி நிகழ்ந்திருக் கின்றது. மாவீரர் தினம் அண்மிக்கும் காலத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக இவை கடந்த ஆண்டுகளில் முகாமிட்டிருந்த சம்பவங்கள்கூடப் பதிவாகாமல் இல்லை. போர் முடிந்ததும் வடக்கிலிருந்து இரா்ணுவம் குறைக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. அவை இன்னமும் ஓயவில்லை. இராணுவமே தேவையில்லை என்று குரல் எழுப்பிக்கொண்டிருக்கும் வேளையில், இந்தக் கவச வாகனம் மீண்டும் கவனம் ஈர்த்திருக்கின்றது. இப்போது புங்குடுதீவில் பாடசாலைச் சிறுமி ஒருத்தியின் உயிரை, பயன்பாட்டுக்கு உதவாத நிலையிலுள்ள கவசவாகனம் ஒன்றின் மூலம் காவுகொண்டிருக்கிறார்கள் கடற்படையினர்.

**ஏராளம் எமன்கள் ஓடித் திரிகின்றன!**

சாதாரண ஒரு குடிமகனால் சமிக்ஞை விளக்குகள், பிறேக் மற்றும் ஒலி எழுப்பான் ஆகியவை நல்ல நிலையிலில்லாத வாகனம் ஒன்றை வீதியில் செலுத்திச் செல்ல முடியாது. அதற்குத் தண்டம் அறவிடுகிறது சட்டம். ஆனால், பாவனைக்கு உதவாத நிலையிலுள்ள இப்படியான பல கவச வாகனங்களை மாத்திரமன்றி அதிலும் பார்க்கத் தரங்குறைந்த பற்பல வாகனங்களை இலங்கைப் பொலிசார், மற்றும் இராணுவத்தினர் இன்றைக்கும் பயன்படுத்தி வருகிறார்கள்.

மக்கள் புழக்கமுள்ள இடங்களில் ஓடித்திரிந்து கொண்டிருக்கும் இத்தகைய எமன்களிடமிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய அவதான நிலை மக்களுக்குரியதாகி நீடிக்கிறது. வடக்கில் நிலைகொண்டிருக்கும் தேவையற்ற இந்த இராணுவக் குவிப்புக்குப் பின்னானலிருக்கும் பல பாதகங்களில் ஒன்று இப்போது புங்குடுதீவு மாணவியின் சாவுடன் சட்டெனப் புலப்பட்டிருக்கிறது. இதுபோன்ற உயிர்ப்பலிகள் இனிமேலும் இடம்பெறாதிருக்க உரிய தீர்வு உடனடியாகக் கிட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூனையின் ஒளிப்படத்துக்கு 12 கோடி ரூபா இழப்பீடா?

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் தன் வளர்ப்பு பூனையின் புகைப் படத்தை பயன்படுத்திய நிறுவனத்திடமிருந்து 4 கோடி ரூபாய் பெற்ற சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த டபாத்தா பண்ட்சி என்ற பெண்ணின் வளர்ப்பு பூனையின் ஒளிப்படத்தை ஒரு கோப்பி நிறுவனம் விளம்பரத்திற்காகப் பயன்படுத்தியது. இந்தப் பூனை கடந்த 2012ஆம் ஆண்டு இணையதளங்களில் வெளியிடப்பட்ட ஒளிப்படம் மூலம் மிகவும் பிரபலமானது.

கோபத்துடன் இருக்கும் பூனையின் முகத்தை அனைவரும் பார்த்து ரசித்தனர். இந்த நிலையில், கிரனேட் பிவரேஜ் என்ற நிறுவனம் பூனையின் புகைப்படத்தை குளிர்பானம் விளம்பரத்திற்கு பயன்படுத்தப் போவதாக உரிமையாளர் பண்ட்சியிடம் அனுமதி பெற்றது. ஆனால் அனுமதி இல்லாமல் பல பொருள்களின் விளம்பரத்துக்கு பயன்படுத்தியதால் அந்த நிறுவனம் மீது மூன்று ஆண்டுகளுக்கு முன் காப்புரிமை வழக்கு பதிவுசெய்யப்பட்டது. இந்த வழக்கில் பூனையின் உரிமையாளருக்கு இலங்கை மதிப்பில் சுமார் 12 கோடி ரூபா வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வந்துள்ளது.



# ரவுண்ட் த வேள்ட்

## பலஸ்தீனத்துக்கே உடையது ஜெருசலேம்

ஜெருசலேம், இஸ்ரேலுக்கா? பலஸ்தீனத்துக்கா? என்ற வாதத்தில் அது பலஸ்தீனத்துக்கு உரித்தானது என்று தீர்ப்பிட்டுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.

பலஸ்தீனத்தில் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தன்னுடன் இணைத்திருந்தது இஸ்ரேல். அந்த நாடு கிழக்கு ஜெருசலேமையும் ஆக்கிரமித்து வைத்திருந்தது. ஜெருசலேமைத் தனது தலைநகராகவும் இஸ்ரேல் அறிவித்திருந்தது. எனினும் இந்த அறிவிப்பை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. இந்த நிலையில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இந்த அறிவிப்பை பலஸ்தீன அதிபர் அப்பாஸ் கடுமையாகக் கண்டித்தார். பலஸ்தீனத்தின் தலைநகராக ஜெருசலேம் தொடரும். இதற்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தரவேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார். இந்தக் கோரிக்கைக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம். பலஸ்தீனத்தின் தலைநகர் ஜெருசலேமே அதில் எந்த மாற்றமும் இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

*'அமெரிக்காவுக்குப் பலமான அடிதான்...'*

○ பிரகாஸ்

## பொய்!

பாகிஸ்தானின் எல்லைக்குள் புகுந்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியது என்று பாகிஸ்தான் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு பொய் என்று தெரிவித்தது அமெரிக்கா.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் இயங்கி வரும் ஹக்கானி அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரிகள் ஆப்கானிஸ்தானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இந்தக் குழுவுக்கு பாகிஸ்தான் அரசு மறைமுகமாக உதவுகிறது என்று அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன.

ஹைபர் பக்துங்கா மாகாணத்தில் உள்ள ஹங்கு மாவட்டத்தின் ஸ்பீன் தால் பகுதியில் இருக்கும் ஒரு வீட்டை குறிவைத்து அமெரிக்க ஆளில்லா வானூர்திகள் கடந்த வியாழக்கிழமை தாக்குதல் நடத்தின என்று பாகிஸ்தான் குற்றம்சாட்டியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது அமெரிக்கா. பாகிஸ்தானின் கருத்துக்கள் ஆதாரமற்றவை என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.



## மீண்டும் அமைதிப் பேச்சு

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த அதிபர் அசாத்துக்கும் சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் அசாத்துக்கு ரஷ்யாவும் சில மிதவாத எதிர்க்கட்சிகளுக்கு அமெரிக்காவும் ஆதரவு அளிக்கின்றன.


இந்தப் பின்னணியில் ஐ.நா. சபையின் முயற்சியின்பேரில் ஆஸ்திரியா நாட்டின் வியன்னா நகரில் அதிபர் அசாத், எதிர்க்கட்சிகள் இடையிலான 2 நாள் அமைதிப் நேற்றுமுடிவுக்கு வந்துள்ளது. எனினும் எட்டப்பட்ட முடிவுகள் குறித்து உத்தியோகபூர்வத் தகவல் வரவில்லை.

## ஒரே இரவில் ரயில் நிலையம்

சீனாவின் புஜியான் மாகாணத்தில் ஆயிரத்து 500 தொழிலாளர்களைக் கொண்டு ஒரு புதிய ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவான திட்டம், அசாத்திய வேகம் ஆகியவற்றால் சீனா எந்த சவால்களையும் முறியடித்து விடுகிறது. அவர்களின் உழைப்புக்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ திட்டங்களை கூறலாம். அந்த வகையில் மற்றுமொரு எடுத்துக்காட்டாக இந்த ரயில் நிலையத்தைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

ஆயிரத்து 500 தொழிலாளர்கள் 7 குழுக்களாக பிரிந்து இந்த ரயில் நிலையத்தை அமைத்து முடித்துள்ளனர்.

*'ம்ம்ம்... இமாலய சாதனைதான்...'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம் பார்க்கலாம் வாருங்கோ



# சிரிக்க சிந்திக்க



மு.மாசிலாமணி

சுமார் 65வருடங்களுக்கு முன்பாக எமக்கு இருந்த ஒரேயொரு பொழுதுபோக்கு சினிமாப்படம் தான். முன்பெல்லாம் பேசாத படங்களே வெளிவந்தன. காலம் செல்லச் செல்ல பேசும்படம், கறுப்பு - வெள்ளைப் படங்களாக வெளிவந்து இரசிகர்களைக் களிப்பூட்டின. அந்தக் காலத்தில் படம் பார்க்க அனுமதி அம்மாவிடம் தான் பெற்றுக்கொள்ளவேண்டும். இன்றைக்கு அமெரிக்கா செல்வதற்கு விசா கிடைப்பது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் அன்றைக்கு அம்மாவின் அனுமதி கிடைப்பது. அம்மாவைப் 'பிளீஸ் பண்ண' (எனது அம்மாவைத்தான்) வீட்டில் விறகு கொத்தி, பூக்கண்டுகளுக்குத் தண்ணீர் விட்டு, எடுபிடி வேலைகள் செய்துவிட்டு அவருக்கு 'ஐஸ்' வைத்து அவரிடம் அறுபது சதம்(கலரி ரிக்கற்றுக்கு)பெறுவது என்பது இலேசான காரியமல்ல.

⅄⅄⅄

எனது நண்பன் பொன்னையாவையும் படத்துக்குக் கூட்டிச் சென்றால்தான் அந்த அனுமதி செல்லுபடியாகும் என 'கொண்டிஷன்'"போட்டுவிடுவா. பொன்னையா அண்ணைக்குப் படம் பார்ப்பதில் அவ்வளவு ஆர்வம் இல்லை என்றாலும் அவரையும் 'பிளீஸ் பண்ணி'னால் கூட வருவார். தாவடிச் சந்தியில் பல மணி நேரம் காத்திருந்து பஸ் ஏறி வெலிங்டன் தியேட்டர் வாசலில் இறங்க ஆளுக்கு 25சதம் (இது அம்மாவிடம் களவாகத் திருடிய பணம்)

தைப்பொங்கலுக்கு றிலீஸ் ஆன படம் "இரத்தக்கண்ணீர்" எம்.ஆர். ராதா, எம்.என்.ராஜம் ஆகியோர் நடித்தது. என்னைப்போல் தைப்பொங்கலுக்குப் படம் பார்க்க வேணும் எனச் சபதம் எடுத்த இரசிகர்கள் பலர், கலரிக் கியூவில் இடிபட்டு, ஸ்ரான்லி வீதி வரை கூடி நின்று ஆரவாரப்பட நண்பன் பொன்னையா என்னப் பார்த்து, 'அங்கை பார் உளுந்து, பயறு பயறாகச் சத்தி எடுக்கிறான்' என்றார். அவர் சொன்னது, உளுந்து என்ற பட்டப் பெயர் கொண்ட தனபாலுவை. அவன் பயறு கலந்த பொங்கலை வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டுக் கியூவில் நின்று இடிபட்டதன் விளைவாகப் பொங்கலில் கலந்த பயறைச் சத்தியாக எடுத்துக் கொண்டிருந்தான்.

⅄⅄⅄

நாங்கள் இருவரும் கலரி வரிசையில் இடம்பிடித்து நிற்க ஆமைவேகத்தில் நகர்ந்தது வரிசை. ரிக்கற் வழங்கும் இடம்நெருங்க நெருங்க நெஞ்சு படக் படக் என்று அடித்தது. எமக்கு ரிக்கற் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் தாவடிப் பிள்ளையாரை அடிக்கடி உதவிக்கு வேண்டி நின்றேன். ஒரு மாதிரியாக ரிக்கற் கவுண்டரை நெருங்கிக் கைக்குள் பொத்தி வைத்திருந்த ஒரு ரூபா இருபது சதத்தைக் கொடுத்து இரண்டு ரிக்கற்றுக்களை வாங்கியதும் ஓட்டப்போட்டியில் ஓடுவதுபோல் ஓடி கலரியில் கிடைத்த வாங்கில் அமர்ந்துவிட்டதும் ஒரு பெருமூச்சு. படம்தொடங்கியது. எழுத்து ஓட்டமும் ஓடி முடிந்ததும். பொன்னையா அண்ணை நித்திரையாகி இடையிடையே அங்காலும் இங்காலும் சரிந்து, நிமிர்ந்து கொண்டார். அவரை அடிக்கடி தட்டி எழுப்பி, 'படத்தை பாருங்கோ அண்ணை' என்று உசார்ப்படுத்துவதும் எனது வேலையாக இருந்தது.

⅄⅄⅄

படம் ஓடி இடைவேளை நெருங்கியது. இடையிடையே பொன்னையா அண்ணையைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த எனது வேலையை இடைவேளைக்கு வந்து சோடா விற்கும் விற்பனையாளர்கள் எடுத்துக் கொண்டனர். சோடா போத்தல்களில் ஜலதரங்கம் வாசித்துப் பொன்னையா அண்ணையை எழுப்பி விட, ஏற்கனவே நான் அவருக்குக் கொடுத்த வாக்குறுதியாக ஒருபோத்தல் சோடா வாங்கி ஆளுக்கு அரைவாசியாகக் குடித்ததும், பொன்னையா அண்ணை உஷாராகி, 'படம் நல்லாயிருக்கு' என்றார். ஏதோ படத்தை முழுமையாக பார்த்து இரசித்தவர்போல. அவரைச் சோதிக்கவேண்டி 'எந்தக் கட்டம் நல்லாக்கிடந்தது' எனக் கேட்க, 'எம்.என். ராஜம் பாடின ஆளை ஆளைப் பார்கிறார். ஆட்டத்தைப் பாத்திடாமல் ஆளை ஆளை' எனப் பாடத்தொடங்கிய அவர், இடைவேளை முடிந்து மணி ஓசை கேட்க நிறுத்திக்கொண்டார். படம் முடிந்ததும் உனக்குப் பிடித்த கட்டம் எது எனக் கேட்டார். 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி ஏது?' எனக் கூறி அவரை அழைத்து வந்தேன்.



# இலங்கையின் பொப் இசைக் கலைஞன்

# ஏ.ஈ.மனோகரன்

ஈழம் பல கலைஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எழுத்தாளர்கள் உச்சங்கண்டுகொண்டிருக்கிறார்கள். சினிமாத்துறையும் வளர ஆரம்பித்துவிட்டது. இலங்கையில் பொப் இசைக்கு அடிகோலியவராக நாம் ஏ.ஈ.மனோகரனைக் கொள்ள முடியும். ஈழத்தில் எழுந்த இசை அல்பங்கள், இறுவட்டுகள் மற்றும் இசை மேடைகள் போன்றனவே சினிமாத்துறை எழுவதற்கு அடித்தளமிட்டன என்றும் சொல்லலாம். அந்த இசை அல்பங்களின் வளர்ச்சி ஈழத்தின் ஒரு புறத்தில் தமிழ் சிங்களத்துறை சார்ந்து வளர்ந்ததும் தவிர்க்க முடியாதிருந்தது.

மேல் மாகாணம் அவையனைத்துக்குமான களமாக விருந்தது. அத்துடன் மட்டக்களப்பு, திருகோணமலை சார்ந்தும் பல கவிஞர்கள் முகிழ்ந்தெழுந்தனர். இவ்வாறு வெளியாகிக் கொண்டிருந்த இசை அல்பங்களில் 'பொப்' இசையுடன் தனது குரலை இழைத்து ஒலிக்க விட்டவர் ஏ.ஈ.மனோகரன். அதை மேடைப் பாடல்களாக அரங்கேற்றிய சமயங்களில் பெருமளவான இரசிகர்களைத் தன்பால் ஈர்த்தார். அதனால் அவர் ஒரு பொப் கலைஞன் என்றும் புகழ்பெற்றார். தமிழ் சிங்கள மொழிகள் கலந்த இவருடைய பாடல்கள் மேடை இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. பல மொழிப் பாடல்கள் பாடுவதிலே மனோகரன் திறமை வாய்ந்தவரானார்.

இவர்பாடிய 'சுறாங்கனி... சுறாங்கனி... சுறாங்கனிடா மாலுகெனாவா...' என்ற தமிழ் சிங்கள மொழிக்கலப்புடைய பாடல் இலங்கை இந்திய இரசிகர்கள் மத்தியில் பேராதரவைப் பெற்றது. அத்துடன் இந்தப் பாடலை இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட இடங்களிலும் ஹிந்தி, மலையாளம், போர்த்துக்கேயமொழி உள்ளிட்ட பல மொழிகளிலும் பாடிப் பாராட்டைப் பெற்றார். 'சின்ன மாமியே...' என்பது இவருடைய புகழ்பெற்ற மற்றுமொரு பாடலே.

**திரைப்படத்துறையில் மனோகரன்**

இலங்கையைச் சேர்ந்த புகழ்பெற்ற பொப் இசைப் பாடகர் என்பது மட்டுமல்லாமல் திரைப்பட நடிகராகவும் மனோகரன் தடம்பதித்தார். பாசநிலா(1965இல் வெளியான திரைப்படம்) , வாடைக்காற்று, புதிய காற்று (கௌரவத் தோற்றம்) போன்றன இவர் நடித்த இலங்கைத் திரைப்படங்களாகவும் டூபான் மெயில் (தெலுங்கு), தடவரா (மலையாளம்), மாமாங்கம், சக்தி, கழுகன், ஆவேசம் (மலையாளம்), கோளிளக்கம் (மலையாளம்), குரு, காஷ்மீர் காதலி, ராஜா நீ வாழ்க, காட்டுக்குள்ளே திருவிழா, உலகம் சுற்றும் வாலிபன், நீதிபதி, லாரி டிரைவர் ராஜாகண்ணு, தீ, ஜே.ஜே போன்றன இவர் நடித்த இந்தியத் திரைப்படங்களாகவும் அடையாளம் காணமுடியும்.

அதுமட்டுமன்றி அத்திப்பூக்கள், திருமதி செல்வம், அஞ்சலி போன்ற இந்தியத் தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்திருந்த இலங்கையின் பொப்பிசைச் சக்கரவர்த்தி என அழைக்கப்படும் பாடகர் ஏ.ஈ. மனோகரன் தனது 73வது வயதில் இசைப் பயணத்தை முடித்துக் கொண்டுள்ளார்.



# கேள்வியாய் நிற்கும் வாழ்வு

கவிதை

வேலணையூர் மயிலைக்கிளி



தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லி
போதை ஏற்றிப் போக்கிடம் தெரியாமல்
பாதை மாற்றிப் பாதாளம் தள்ளிவிட்டே
காத தூரம் தாம் மறையும் கூட்டம்

பெற்ற பிள்ளையைப் பாதியில் பறிகொடுத்து
உற்ற உறவுகளை உயிரோடு தொலைத்துவிட்டு
வற்றிய கண்ணீரும் வறண்ட நாவுடனும்
இற்றைவரை ஏங்கும் உறவுகள்கோடி

சொந்த மண் சுடுமண்ணாகிச் சோகம்தர
பந்தம் அறுந்ததால் படைத்தவனை நொந்து
சொந்தப் பகைப் புலங்கள் சுற்றி இறுக்கிட
நொந்த மனம் தேறிடத்தான் வழி பிறக்குமா?

வாலிப வயதின் வரம்பின்றிய செயலால்
சோலிகள் பல சுமந்து சேரிடம் அறியாமல்
கேலியாய்ப் போய் கேடுகள் நிரம்பி
கேள்வியாய் நிற்கும் வாழ்வில் வழி பிறக்குமா?

சீதனக் கொடுமையால் சீமைக்குப் பொதி போகும்
மிதமான வேகத்தால் வாழும் உயிர் பறந்தோடும்
இதமான போதையால் இடர்கள் பல இணைந்துகொல்லும்
வதம் நிறைந்த வாழ்வில் வழி எப்போது பிறக்கும்?

எத்தனை தைகள் வந்தன... போயின...
அத்தனையும் அள்ளி நமக்கென்ன தந்தன?
மொத்தத் துயரமும் முதுகு கூன் விழ
சித்தம் கலங்கி சிதைந்து ஏமாந்ததே மிச்சம்

பிறந்திட்ட தையும் பிணி போக்கும் என்று
மறந்தும் நம்பி நீ மனக்கோட்டை கட்டாதே
சிறந்திடும் வாழ்வு எம் கையில் மட்டுமே
சிந்தனை ஒன்றே நம்மைச் சீர்தூக்கும் நம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாணத்தில் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறையின் விஸ்தரிப்பு 2

க. கஜவதனி

கட்டுரை

பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறைக்கு மிகக் குறைந்த செலவினத்துடனான உட்கட்டமைப்பு வசதிகளும் நுகர்வோர் எதிர்பார்ப்புமே தேவைப்படுவதால் இது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்றதாகக் காணப்படுவதோடு உள்நாட்டுத் தொழில்முனைவர்களால் பூர்த்தி செய்யக்கூடியதாகவுமுள்ளது. இது காரணமாக வளர்முகநாடுகளில் பிரபல்யமடைந்தும் வருகின்றது. பறவை ஆர்வலர்களின் முக்கிய தேவைகளான பாதுகாப்பு, தரமான உணவு, தங்குமிடம், இளைப்பாறுவதற்கேற்ற மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கேற்ற உட்கட்டமைப்பு வசதிகள், பட்சி அவதானிப்புக்கேற்ற பாதுகாகக்கப்பட்ட பிரதேசங்கள், நடந்துசென்று பட்சிகளை அவதானிப்பதற்கேற்ற அணுகுமுறைகள் மற்றும் பட்சி அவதானிப்புக்கேற்ற அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகள் என்பவற்றைப் பூர்த்தி செய்தல் அவசியமாகும். இதில் உள்ளூர் மக்களின் பங்களிப்பை ஈடுபடுத்துவதன் மூலம் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறைத் தொடர்பான நேர்மறையான எண்ணத்தைச் சமூகத்தில் வளர்ப்பதோடு உள்ளூர்ச் சமூகத்துக்குப் பொருளாதாரரீதியான வருவாயை ஈட்டிக்கொடுக்கும் உபாயத்தையும் தேடிக் கொள்ள முடியும்.

**தொழிலதிபர்களும் மக்களும் பயனடையலாம்**

தொழில்முனைவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று வகையான பட்சிசார் சுற்றுலாப்பயணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் அவசியமாகும். வட மாகாணத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளூர்த் தொழில்முனைவர்களை இதில் முதலீடு செய்யத் தூண்டுவதன் மூலம் எமது வளங்களை முறையாக முகாமை செய்வதோடு உள்ளூர்வாசிகளின் பொருளாதார வருவாயையும் அதிகரிக்கமுடியும்.

இருப்பினும் அனுபவமற்ற சுற்றுலாத் துறை ஒழுங்கமைப்பாளர்கள், போதிய வருவாயின்மை, பூங்காக்களின் ஒழுங்கற்ற முகாமை, போதிய கண்காணிப்பின்மை காரணமாக இயற்கை வாழிடங்களுக்கும் தேசிய பூங்காக்கள், சரணாலயங்கள் போன்ற பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். தக்கதிட்டமிடலும் முகாமைத்துவமும் அற்ற சுற்றுலாத்துறையால் இயற்கை வாழிடங்களுக்கும் உயிர்ப்பல்வகைமைக்கும் மட்டுமன்றி தேசிய கலாசாரத்தின் சீரிய நிலைக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். எனவே முறையான சட்டத் திட்டங்களைச் செயற்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பனவற்றையும் சமநேரத்தில் கண்காணித்தல் வேண்டும்.

**கட்டண அறவீடுகள் மூலம் விருத்தி**

குறித்த பிரதேசங்களின் பாதுகாப்பு, உயிர்ப்பல்வமைக் காப்பு, இயற்கை வாழிடங்களின் தாங்குதிறன், சூழல் மாசாக்கம் மற்றும் வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை என்பன தொடர்பான தொடர்ச்சியான கற்கையும் கண்காணிப்பும் அவசியமாகும். முறையான முகாமைக்கும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் பராமரிப்புக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்குத் தேவையான போதிய வருவாயை பட்சிசார் சூழல்நேய சுற்றுலாப்பயணிகளிடம் நுழைவுக் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் பெறமுடியும். அத்துடன் உள்நாட்டோரைக் குறைந்தளவு கட்டணத்துடன் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கவும், கற்றல் செயற்பாடுகளுக்கும் அனுமதிக்கலாம்.

**வட மாகாண சுற்றுலாத்துறையை விஸ்தரித்தல்**

வட மாகாணத்தில் கட்டுக்கரைக்குளம், வவுனிக்குளம், வங்காளை மற்றும் கொக்கிளாய் என்பவை சரணாலயங்களாகவும், மடு வீதி, சுண்டிக்குளம், ஆதாம்பாலம் மற்றும் நெடுந்தீவு என்பன தேசிய பூங்காக்களாகவும் நாகர்கோவில் மற்றும் விடத்தல்தீவு என்பன இயற்கை ஒதுக்கிடங்களாகவும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாகவுள்ளன. இவை தவிர பட்சிகளின் காப்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய பகுதிகளை அடையாளம் கண்டு பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாகப் பிரேரித்தல், எதிர்காலத்தில் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறையை வட மாகாணத்தில் விருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வதாக அமையும். முப்பது வருடகால உள்நாட்டுப்போரின் காரணமாகப் பட்சி அவதானிப்பு, பறவையியல்சார் ஆய்வுக்கற்கைகள் மற்றும் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறை என்பன வட மாகாணத்தில் அரிதானதாகவே காணப்பட்டன. தற்போதைய சூழல், பட்சிசார் சூழல்நேய சுற்று லாத்துறை விரிவாக்கத்துக்கான திறவுகோலாக அமைவதால் பறவையியல்சார் ஆய்வுக்கற்கைகள் மூலம் குடிபெயர் பட்சிகளின் முக்கிய வாழ்விடங்கள் அடையாளம் காணப்படுதல் அவசியமானதாகும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுக் கற்கைகள், வடமாகாணத்தின் சில பகுதிகளைப் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறைக்கேற்ற பகுதிகளாக அடையாளம் கண்டுள்ளன.

சில காப்புரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட வழிகாட்டிகளுடன் மட்டும் செல்ல அனுமதித்தல், மற்றும் தினமும் உள்வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் போன்ற சட்டத் திட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். இவற்றின் மூலம் வட மாகாணத்தில் பட்சிசார் சூழல்நேய சுற்றுலாத்துறையை விருத்தி செய்து உள்ளூர்ச் சமூகத்துக்குப் பொருளாதார வருவாய் தரும் புதிய உபாயத்தை ஏற்படுத்தி நாட்டுக்கு அந்நியச்செலாவணி மூலம் தேசிய உற்பத்தியில் பங்களிப்புச் செய்வதோடு வட மாகாணத்தில் இயற்கை வாழிடங்களையும் உயிர்ப்பல்வகைமையையும் எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்தல் எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

கட்டுரையாளர் விலங்கியல் துறை
விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்



# நாரையோடகவல்

வேலணையூர் தாஸ்

கவிதை



"நாராய்...!
உன் ஊரில் பனிபொழியும் காலங்களில்
இங்கு வருகிறாய், பழம்படு பனையின் கிழங்கு
பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
என உனை அழைத்தான் எம் முதுபுலவன்
வட கடல் கரைதனில் இந்த
ஊர்க்காவல் வெளியில் உனைக் கண்டதில்
மகிழ்ச்சி" என்றேன்.

நிலம் பார்த்து நடந்து, இரை கண்டு பின்நகர்ந்து,
குறிபார்த்துக் கொத்திப் பின் கழுத்தசைத்து
சொன்னாய் வணக்கம்.
"ம்...ம்; என்னுடன் பேசு நாராய்
என் மொழி அறிவாயா?" என்றேன்

"அன்பின் மொழியது யாவரும் அறிந்ததே"
என்கிறாய்

"வாழ்வை எப்படி உணர்கிறாய்?" என்கிறேன்

"பறத்தல், தேடுதல், பின் களித்தலும்
வாழ்வு ஓய்விலா முயற்சியே" என்கிறாய்.

"அன்பும் காதலும் உணர்ந்திருப்பாயா?"

"ஏன் இல்லை...?
அன்பினை உணர்தல்
அனைவர்க்கும் உளதாம்
இணை தனைத் தேடிச்சேருதல், களித்தல்,
பிரிந்தால் துயரில் தோய்ந்து கிடத்தல்,
காதலின் லீலைகள் எல்லாம் உணர்வோம்.
ஆனால், அன்பின் செயல்கள் அனைத்தும் இன்பமே
எங்கள் கண்ணீரைக் காற்றறியும்
புன்னகையைப் பூக்கள் அறியும்
என் அன்பை என் இணை உணரும்" என்கிறாய்.

"உம்மில் பல இனம், பல நிறம்
உம்மிடை பேதங்கள் கலகங்கள் இல்லையா?"

"இல்லையே! நிறம் பலவாயினும்
இவ் வானம் எமக்கெலாம் சொந்தம்
எங்களுக்கிடையே எல்லைகள் இல்லை
அதனில் தொல்லைகள் இல்லை
நீங்கள் தான் மண்ணிலே எல்லைகள் இட்டீர்
மனங்களைப் பிரித்தீர்..."

கண்களைச் சுருக்கிப் பார்க்கிறாய்
நான் சுருண்டு கொள்கிறேன்

"காற்றின் வெளிதனில் மிதக்கிறபோது
யாது உணர்கிறாய் ?"
நான் கதையை மாற்றுகிறேன்

"மனது கரையும் மந்திரச் செயல் அது
காற்றினில் மிதத்தல் அதுவும் ஒரு கலை
உடல் பாரம் உதறிப் பறத்தலே ஞானம்" என்கிறாய்

"உம்மில் பலர் பாடுவர் நாரையே
உன்னால் முடியுமோ?" என்கிறேன்

"ம்... ம்... பாடேன் ஆயினும் அகவுவேன்" என்கிறாய்

"ஆ...! அகவல் எம்முடை பாக்களில் ஒருவகை"
என்கிறேன்

"எதைத்தான் விட்டீர்" என்கிறாய்

"உம் கவிதை அறிவாயோ கழுத்துநீள் நாராய்...?"

"ம்ம்"
"நீவிர் முதல் சொன்ன 'செங்கல் நாரை'அறிவேன்,
'குருக்கள் இயம்பின' என்ற மணிவாசகம் அறிவேன்"
என்கிறாய்

"கவிதைகள் எழுத அறிவாயா குருகே...?"

"நான் மகிழ்வாயிருப்பது பிடிக்கவில்லையா!
நன் பொய்யுரைப்பதில்லை"யென்று
சொல்லிப் பறக்கிறாய்...

"பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை வினோதா

சிறுகதை



# மினி பஸ்ஸில் ஒரு பயணம்

ஐந்து மணி பஸ் போய்விடப் போகிறதே என்ற பரபரப்புடன் ஓட்டமும் நடையுமாக அலுவலகத்தில் இருந்து பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தாள் கீர்த்தினி. அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் செல்லும் மினிபஸ் வந்து கொண்டிருந்தது. கையை நீட்டி, மறித்து ஏறிக் கொண்டாள்.

"தூரப் போற ஆக்கள் பின்னுக்காப் போய் நில்லுங்க" என்று கொண்டெக்டர் குரல் கொடுக்கக் கீர்த்தினி அந்த நெரிசலை ஒருவாறு சமாளித்தவாறு கொஞ்சம் கொஞ்சமாகப் பின்நோக்கி நகர்ந்து பின் சீற்றுக்குக் கிட்டவாகப் போய் நின்று கொண்டாள். இருப்பதற்கு ஒரு சீற்றும் கிடைக்கவில்லை. வீடுவரை நின்றுகொண்டே போக வேண்டும் என்று மனம் சலித்துக் கொண்டாள். அப்போது கொண்டெக்டர் பணம் வசூலித்தபடி பின்னோக்கி வந்துகொண்டிருந்தார். கீர்த்தினியும் அவருக்குக் கொடுப்பதற்காக ஐம்பது ரூபாவைக் கைகளில் எடுத்து வைத்திருந்தாள். கொண்டெக்டர் கீர்த்தினி பக்கம் திரும்பாது மற்ற எல்லோரிடமும் காசு வாங்கிக் கொண்டிருந்தார். ஒருவாறு, "இந்தாங்க கொடிகாமம்" எனக் காசை நீட்டினாள் கீர்த்தினி. அவன் அவளிடம் காசு வாங்கவில்லை. அதற்குப் பதில் ஒருவித குறு குறு பார்வையுடன் "வேண்டாம்" என்று தலை அசைவாலும் கண் அசைவாலும் கூறினான். கீர்த்தினிக்கு ஒன்றும் புரியவில்லை. கொண்டெக்டர் அப்படியே முன்னால் சென்று விட்டான். ஆனால், கீர்த்தினியால் நிதானமாக இருக்க முடியவில்லை. அவனது அந்தப் பார்வை ஒரு முறை உடம்பெல்லாம் கூச வைத்தது. அருவருப்பான அந்தப் பார்வை அவளை அவஸ்தைப் படுத்தியது. அருகில் இருந்தவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? ஏன் இவன் என்னிடம் காசு வாங்கவில்லை? முன்னுக்குப் பின் தெரியாதவன். நானோ திருமணமான ஒரு பெண். இப்படி இருக்க அவன் பார்வைக்கு என்ன அர்த்தமாக இருக்கும். அவன் என்னைத் தவறான பெண்ணாக அணுகுகிறானோ? 'அப்படி' நினைத்துப் பார்த்திருப்பானோ? அல்லது எனது உடை தவறானதாக இருக்கின்றதோ? எனத் தான் அணிந்திருந்த உடையைக் கீழும் மேலுமாகப் பார்த்துக் கொண்டாள் கீர்த்தினி.

சீச் சீ.. அப்படி ஒன்றும் அசிங்கமாக இல்லை. அப்படி அவள் போடுவதும் இல்லை. சரி அப்படியாயின் ஏன் அவன் காசு வாங்கவில்லை? அவள் மனது குழப்பத்தால் எரிமலையைப் போல் குமுறிக்கொண்டிருந்தது. ஒருவாறாக இறங்கும்போது கொடுத்து விடுவோம் என்று கடைசியாக எடுத்துக்கொண்ட தீர்மானத்துடன் மனதை வேறு திசையில் திருப்பலானாள்.

✦ ✦ ✦

யன்னலூடாக இயற்கையை இரசிக்க ஆரம்பித்தாள் கீர்த்தினி. வீதி ஓரங்களில் சில காட்டுச் செடிப் பூக்கள் றோஸ், வெள்ளை நிறங்களில் நிலத்தில் படர்ந்தும் வேலிகளில் படர்ந்தும் பூப்பந்தல்கள்போல அழகாகக் காட்சி அளித்தன. அந்த நேரம் மழைபெய்து கொண்டிருந்ததனால் அந்தப் பூக்கள் மழையின் முத்தத் தீண்டலினால் பூரிப்படைந்து செழிப்புடன் காணப்பட்டன. அவற்றின் அழகு கூடிவிட்டிருந்தது. பாலமொன்றில் பிறேக் போட்டு ஏறிய மினிபஸ் தனது இயல்புநிலையில் மாற்றம் அடைந்து பழையநிலைக்கு மீண்டும் திரும்பியது. உள்ளே நின்ற, இருந்த அனைவரும் முன், பின் இடிபட்டுக் கொண்டனர்.

"அப்பப்பா பஸ் பயணம் எவ்வளவு சிரமம். இதுவே மோட்டார் சைக்கிள் என்றால், அரை மணித்தியாலயத்துக்குள் வீடுபோய்ச் சேர்ந்திருக்கலாம். ஒரு நாள், இரண்டு நாள் பஸ்சில் ஏறும் எனக்கு இப்பிடியிருந்தால், தினமும் பஸ்சில் வேலைக்குப் போகும் பயணிகளின் நிலை என்னவாகுமோ?" என்று மனதுக்கள் புழுங்கிக் கொண்டாள். அந்தப் பாலத்தைக் கடந்ததும் கீர்த்தினியின் மன ஓட்டம் வேறு திசையில் ஓடியது.

✦ ✦ ✦

இந்தப் பாலமூடான போக்குவரத்து இறக்குமதி, ஏற்றுமதிக்கு எவ்வளவு முக்கியமாக இருக்கின்றது. இந்தப் பாலத்தைக்கட்ட எப்படியும் பல மில்லியன், பில்லியன்கள் தாண்டும். எத்தனைபேர் வேலை பார்க்கிறார்கள். எவ்வளவு நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன! எவ்வளவு கல், மண், சீமெந்து, கம்பிகள்! ஆனால், ஒரு வருடமும் முடியப்போகிறது. இன்னும் வேலை முடிஞ்ச பாடாய் இல்லை. இவற்றை,எல்லாம் செய்யும் அரசு, இருக்க ஒழுங்கான வீடுகள் இன்றி மழைகாலங்களில் அதிகம் பாதிக்கப்படும் மக்களை மறந்து விடுகின்றதே. அந்தக் காலம்போல் ஓலைக் கொட்டில் வீடுகள் பெரும்பாலும் குறைவுதான். இப்ப மலிவில் வந்திருக்கின்ற லோக்கல் தகரங்களைப் போட்டுச் சுத்தி அடைச்சு, வீடுபோல அதுக்குள்ள வாழுதுகள். தகரத்தில் மழை பட்டால் பெரிய சத்தம்வேறு. படிக்கிற பிள்ளையள் படிக்க முடியாமல் திண்டாடுவார்கள். ஒழுகும் இடங்களில் எல்லாம் ஓடி ஓடிப் பாத்திரங்களை வைத்துவிட்டுச் சமைப்பதற்குப் பாத்திரங்கள் இல்லாமல் அம்மா திண்டாடுவார். நனைந்த விறகை அடுப்பு மேடையில் அடுக்கி வைத்து உலர்ந்ததும் மண்எண்ணை ஊற்றி எரிய வைப்பார். கொஞ்ச நேரம் எரியும் பிறகு நூர்ந்து விடும். பிறகு 'உவ் உவ்...' என்று ஊதி ஊதியே அம்மாக்களின் பாதி வாழ்க்கை கழிந்துவிடும். உடுப்புக் காயவிடுவதும் வீட்டுக்குள் ஒழுக்கில்லாத ஒரு கரையில் படுத்து உறங்குவதும், வளர்ப்பு நாயும் ஒதுங்க இடமின்றி அவர்களுடன் ஒட்டிக்கொள்வதும் இப்படியாக மாரிகாலங்களில் இந்த ஏழை மக்கள் படும்பாடு? வெயில் என்றால் மரநிழலில் ஒதுங்கிச் சமாளித்துக் கொள்ளும் சனங்கள் என்று ஏழைகள் படும் துன்பங்கள் அரசுக்குத் தெரிந்தாலும் தெரியா வண்ணமிருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் வீடு கட்டித் தருவதாகக் கூறுகிறவர்கள் வாக்குகளைப் பெற்றுவிட்டு தேர்தல் முடிந்த பின் நாற்பது வீடுகள் தேவைப்படும் இடத்தில் மூன்று, நான்கு வீடுகளைக் கட்டிவிட்டு "ஏனையவை அடுத்த கட்டத்தில்" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள்.

அறுபத்தையாயிரம் வீட்டுத்திட்டத்திலைகூட அது சரியில்லை, இது சரியில்லை, அது இப்படி, இது இப்படி என்று இழுத்தடித்து நீதிமன்றம், வழக்கு என்று அலைக்கழிக்கிறார்கள். இதற்கு முடிவு கிடைக்க முன்னமே மூன்று மாரி கழிந்துவிடும். சொகுசு வாகனம், வீடுகளில் வசிப்பவர்களுக்கு ஏழைகள் படும் கஸ்ர, துன்பம் எப்படி விளங்கும். இவற்றை எல்லாம் அனுபவித்தால்தானே விளங்கும். இப்படியாக அரசு வழங்கும் ஒன்றிரண்டு வீட்டுத் திட்டங்களால் இவர்களிடத்தில் எவ்வளவு மனமுறிவுகள், எவ்வளவு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. ஏன் அவர்களுக்குக் கொடுத்தாய்? இவர்களுக்குக் கொடுத்தாய்? தெரிந்தவர்களுக்குக் கொடுத்தாய்? எனச் சனம் கிராம, சமுர்த்தி, பொருளாதார உத்தியோகத்தர்களுடன் முரண்பாடு. ஒரு கிராமத்தையே ஒற்றுமை இன்மை ஆக்குகின்றது. கிராமத்தில் மட்டுமல்ல குடும்பத்துக்குள்ளும் சண்டைதான். மனைவி, கணவனிடம் "உழைத்து வீடு கட்டத் துப்பில்லாத ஆண்" எனக் கேட்பதுவும், "நீ சீதனமாகக் கொண்டு வரவேண்டியதுதானே?" எனப் பதிலுக்குக் கணவன் கேட்கும் சம்பவங்கள் கூட நடந்தேறி விடுகின்றன. மாரி மழையைப்போல் வீட்டிலும் ஒரு 'மாரி' பெய்ந்து ஓய்ந்து விடுகிறது. இதிலிருந்தே வீடு என்பது ஒரு மனிதனுக்கு அடிப்படையான ஒன்று என்பது தெரிகிறது. இந்த ஏழை மக்களுக்கு அத்தியவசியமான வீடு ஒன்றை இந்த அரசு எப்போது பெற்றுத்தரப்போகிறதோ தெரியவில்லை' இப்படியாக எல்லை கடந்த கீர்த்தினியின் மனம் வேறு திசையில் ஓடிக்கொண்டிருந்தது. இடையிடையே அவளிடம் காசு வாங்காத அந்நிகழ்வும் அந்தக் குறு குறு பார்வையும் அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியவாறுதான் இருந்தன. இடையிடையே கொண்டெக்டர் மறுபடியும் தன்னைப் பார்க்கிறானா? எனப் பார்த்த வண்ணம்தான் வந்துகொண்டிருந்தாள். ஆனால், அவனோ கீர்த்தி னியை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

"இடையிடையே கொண்டெக்டர் மறுபடியும் தன்னைப் பார்க்கிறானா? எனப் பார்த்த வண்ணம் தான் வந்துகொண்டிருந்தாள். ஆனால், அவனோ கீர்த்தினியை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. அப்படி இருக்கக் காசு வாங்காததன் காரணம் என்னவாக இருக்கும்? தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவால்களை ஏற்கிறதா தமிழ் நாவல் உலகம்?

சு. வேணுகோபால்

கட்டுரை

தமிழில் நாவல் இலக்கியம் தோன்றி 150 ஆண்டுகளை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். உலக நாவல் இலக்கியத்தில் பல்வேறு சாதனைகள் நடந்தேறியிருக்கின்றன. என்றாலும், தஸ்தயேவ்ஸ்கியின் 'கரமஸோவ் சகோதரர்கள்', டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' ஆகியவைதான் நாவல் உலகில் இன்றளவும் உச்சமாக நிற்கின்றன. நவீன நாவல் காவியங்களை உருவாக்கிய மகத்தான கலைஞர்களுக்கு முன்னால் நாம் சிறு கல்போலக் கிடக்கிறோம். தமிழில் முன்னவர்களின் சாதனைகளை, அதிக்நேரம் எடுக்காமல் தனது கலை மனத்தால் 'மோகமுள்' நாவல் மூலம் முறியடித்தவர் தி.ஜானகிராமன். எதிர்பாராத துருவத்திலிருந்து ப.சிங்காரம் தனது 'புயலிலே ஒரு தோணி' நாவல் மூலம் பெருஞ்சாதனை நிகழ்த்தியிருக்கிறார். இந்தச் சாதனையின் மரபை சுந்தர ராமசாமியும், ஜெயமோகனும் அடுத்தடுத்த காலகட்டங்களில் உருவாக்கியுள்ளனர்.

**மூத்தோர் வழி வளர்ந்த புதியவர்கள்**

கடந்த ஐந்தாண்டுகளில் நிறைய இளைஞர்கள் நாவல்களைத் தந்துள்ளனர். ஆனால், இவர்களில் யாராலும் அவர்களின் கண்முன் நிகழ்ந்திருக்கின்ற சாதாரண சாதனைகளைக் கூடத் தாண்ட முடியவில்லை. அனுபவம் வாய்ந்த எழுத்தாளர்கள்தான் இந்தக் காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்திருக்கிறார்கள். தேவிபாரதியின் 'நிழலின் தனிமை' சாதிய மேலாண்மையால் ஒடுக்கப்பட்ட இளைஞனின் உலகை 'பரபரப்பு' உத்தியை நிராகரித்துவிட்டு நிதானமாக முன்வைக்கிறது. அர்ஷியாவின் 'ஏழரைப் பங்காளி வகையறா' கீரனூர் ஜாகிர்ராஜாவின் 'துருக்கித் தொப்பி', நக்கீரனின் 'காடோடி', ஷோபா சக்தியின் 'பாக்ஸ் கதைப் புத்தகம்', மீரான் மைதீனின் 'அஜ்னபி' கண்மணி குணசேகரனின் 'வந்தாரங்குடி', பா.வெங்கடேசனின் 'பாகீரதியின் மதியம்' ஆகிய நாவல்கள் பொருட்படுத்தத்தக்கவை. அதிகம் பேசப்படாத உலகை இவர்கள் ஓரளவு சிறப்பாகவே தங்களது ஆக்கங்களில் கொடுத்தனர். நாவல் மரபில் மூத்தோர் உண்டாக்கிய காலடித்தடங்களை இவர்கள் நுகர்ந்து வந்ததாலே இந்த எளிய விளைச்சல்கள் கிட்டின. தமிழ் நாவலில் நிகழ்த்தியுள்ள எழுத்தாளர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும், கனவும் பற்றிய காரியங்களை அறியாமல் எழுதிவந்த இளம் எழுத்தாளர்களின் படைப்பு கள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன.

**புதியவர்களின் முயற்சிகள்**

புதியவர்கள் என்று பார்க்கும்போது அரவிந்த் கருணாகரனின் 'சீர்மை'யைச் சொல்லலாம். குறுநாவல் என்றாலும் முக்கியமானது. கென்வில்லர், தத்துவத்தின் மீது ஆர்வம் கொண்டவர். அவரது மனைவி புற்றுநோயால் துன்பப்படுகிறவர். கென்வில்லர் பல்வேறு தத்துவங்களின் பொதுத்தன்மையை ஒரு சாரமாக மாற்றிவிட முடியுமா? என்ற தேடலில் இருப்பவர். காகிதத்தில் கொண்டு வர முடியாத ஒருமையை அவரது மனைவி தனது ஓவியத்தில் வரைந்துவிடுகிறார். இந்த இரண்டு நிஜ மனிதர்களின் மனவோட்டங்களைத் தன் கற்பனையின் துணைகொண்டு உண்மையை நாடிச் செல்கிறது.

**ஈழம் பற்றிய நாவல்**

குணா கவியழகனின் 'அப்பால் ஒரு நிலம்' எதிராளியின் ராணுவ முகாமை அழிக்க ஒற்றறியச் சென்று திரும்பும் இரண்டு இளைஞர்களைப் பற்றிய கதை. பல்வேறு தடங்கல்கள், சவால்களைத் துச்சமெனக் கடக்கிற நிகழ்விலே அவர்களது காதல் நினைவுகள், தளபதிகள் பற்றிய செயல்பாடுகள் எல்லாம் உருண்டு வரத் திரும்புகின்றனர். அந்தப் படை முகாம் தகர்க்கப்படுகிறது. ஒற்றறியும் செயலில் அவர்களின் மன உலகம் சிறப்பாகக் கூடிவந்திருக்கிறது. இந்திய இராணுவம் ஈழத்தில் இறங்கிய பின் ஈழத் தமிழர் எதிர்கொண்ட இன்னல்களைச் சொல்கிறது தமிழ்நதியின் 'பார்த்தீனியம்'.

**தனித்துத் தெரியும் ஈழம் பற்றி சயந்தனின் நாவல்**

இன்றைய சமூக நடைமுறைகளில் எதிலும் ஒட்ட முடியாது திரியும் மனிதனின் அந்நியத்தன்மையைச் சொல்லும் குணா கந்தசாமியின் 'உலகில் ஒருவன்' வடசென்னையின் தனித்த வாழ்வைச் சொல்லும் கரன் கார்க்கியின் 'கறுப்பர் நகரம்', செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டும் திட்டத்தில் நரிகளை வேட்டையாடி அழித்த ஆங்கிலேய வேடிக்கை மனிதர்களைச் சொல்லும் விநாயக முருகனின் 'வலம்' போன்றவற்றை நல்ல முயற்சிகளாகச் சொல்லலாம். இவற்றிலிருந்து தனித்துச் சொல்லப்பட வேண்டிய ஒரே நாவல், சயந்தனின் 'ஆதிரை'.

நாவல் கலையின் சவாலை ஏற்றுக்கொண்ட படைப்பு. முப்பதாண்டுகால ஈழப் போர்ச் சூழலில் தமிழ் மக்கள் பட்ட அவமானங்கள், சிதைவுகள், சாதிய முரண்கள் என வாழ்வை விரிந்த தளத்தில் சொல்கிறது 'ஆதிரை'. இப்படி, இலக்கிய உணர்வுதான் நல்ல படைப்பை நம்மிடமிருந்து உருவாக்குமேயொழிய வெற்று ஆசைகளால் இது இயல்வதில்லை!

நன்றி ஹிந்து

# நூல் அறிமுகம்

அயக்கிரீவன்

தொகுப்பு

**நூல்: கனவுகளின் புலர்வு (கவிதைத் தொகுப்பு)**

**ஆசிரியர்: செ.கஜானன்**

**வெளியீடு: செந்தணல் வெளியீட்டகம் ஒட்டுசுட்டான்**

**விலை: 200ரூபா**




ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முனைப்பான சில மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் நாற்பதளவில் தோன்றிய 'மறுமலர்ச்சிக் குழுவினர்' ஆவர். பழைய செய்யுள் மரபில் நவீன கவிதைக்குரிய இயல்புகளைப் புகுத்திச் சாதனை புரிந்த மறுமலர்ச்சிக் குழுவினரே ஈழத்தின் புதுக்கவிதை ஆரம்ப கர்த்தாக்களும் ஆவர்.

அவர்களுள் வரதர்(தி.ச.வரதராசன்), சோதி(சோ.தியாகராசா), விஜயன் தங்கம் குறிப்பிடத்தக்கவர்கள். 13.6.1943இல் வெளிவந்த 'ஈழகேசரி'யில் 'ஓர் இரவினிலே' என்ற நீண்ட வசன கவிதையை வரதர் எழுதியிருந்தார். ஈழத்தில் வெளிவந்த 'முதல் புதுக்கவிதை' இது என்று கூறலாம்.

இந்தப் புதுக்கவிதைச் சமுத்திரத்தில் மூழ்கி முத்தெடுத்திருக்கிறார் செ.கஜானன்.

நாற்பத்தொன்பது கவிதை முத்துக்கள் அவரது சொத்துக்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் புலோப்பளை கிராமத்தில் வாழும் செல்வராசா தம்பதிகளின் புதல்வன் கஜானனின் கன்னி முயற்சி. அவரது படைப்புக்களில் தாய்மை, காதல், தமிழ் மொழி, போர் வடுக்கள், சமூகநோக்கு போன்ற அம்சங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவர் பட்டதை எல்லாம் வேதனையுடன் தொட்டுச் சென்றிருப்பதால் கவிதைகளில் கண்ணீர் வழிகிறது. கோபம் தெறிக்கிறது. அன்பு பொழிகிறது. உணர்வுகள் ஊடலாடுகின்றன.

'அன்னை மரியாளே' என்ற கவிதையில்

'தமிழெனும் நெடுஞ்சாலையில் என் கவியெனும் பேரூந்து விரைகிறது
இரசனை கொண்டோர் ஏறிக் கொள்ளுங்கள்' என்று அழகான கவி வரிகளை மாலையாய்த் தொடுத்துச் செல்கிறார்.

வித்தியாசமான சிந்தனை வெளிப்பாடுகள்.

(தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா)

**நூல்: கலாசுரபி**

**வெளியீடு : மலர்க்குழு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**




இன்று ஏனைய எல்லாத் துறைகளின் அபிவிருத்திக்கும் கல்வியியல் துறையின் பங்கு முதன்மையானதாகவுள்ளது. இம் முதன்மையான கல்வியியல்துறை உலகளாவிய ரீதியில் ஆய்வு அபிவிருத்தியினூடாகப் பெரு வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ் வளர்ச்சி எமது நாட்டிலும் குறிப்பாக எமது வடமாகாணத்திலும் போதுமானதாக இல்லை. மாகாண, வலய, கோட்ட, பாடசாலை மட்ட ஆய்வு அபிவிருத்திப் பிரிவுகள் சரியாக இயங்க முடியாமை, அல்லது ஆய்வு அபிவிருத்திப் பிரிவே இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையை நீக்க தற்போது கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கைக் கல்வியமைச்சின் ஆய்வுப் பிரிவு இந்த ஆண்டு இலங்கைப் பாடசாலைக்குக் கல்வித் துறையில் ஆய்வுத்தினத்தைப் பிரகடனப்படுத்தி 15.3.2017 அன்று கல்வியமைச்சிலும் மாகாணக் கல்வியமைச்சிலும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஆய்வுச் செயன்முறைகளை, விழிப்புணர்வுகளை, ஆய்வுக் கருத்தரங்குகளை நடாத்தியது. இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்கள், தேசிய கல்வி நிறுவக வளவாளர்கள், கல்வி அமைச்சின் வளவாளர் போன்றோர் பங்கு கொண்டனர். இது இலங்கைக் கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். எனவே கல்வியியல் துறையில் இருக்கும் அனைவருமே ஆய்வுச் செயன்முறையில் ஈடுபட்டு இந்தத் துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். தேசிய கல்வி நிறுவகமும், பஸ்துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரியும் இந்தவருடம் பன்னாட்டு கல்வி ஆய்வு மாநாடுகளை ஒழுங்கு செய்துள்ளன. கல்வியமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவு கல்வியின் தோற்றப்பாடு என்ற ஆய்வுப்பேறுகளை வெளியிடும் இதழை வெளியிட்டு வருகின்றது.


(எஸ்.அமிர்தலிங்கம்– பீடாதிபதி)

*நூலாசிரியர்களே!*
*இந்தப் பகுதியில் உங்கள் நூல் பற்றிய குறிப்புகள் இடம்பெறவேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.*

**'சூரியகாந்தி' உதயன் பத்திரிகை**
**இல.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வசீகரமான வரிக்குதிரைகள்



## குட்டிக் கவிதைகள்

பா.பாலாஜினி

முன்னிரவுப் பொழுதுகளின்
என் முழுமையான தேடலுக்கு
சொந்தமான தேசம் நீ



சுதந்திர சமிக்ஞைகள்
இன்னமும் விழித்தபடி இருக்கின்றன
மகாத்மா உன் விழிகளின்
வழிகளில்

அடி கள்ளி நீ நடந்த இடங்களில்
தேடிப் பார்த்தேன் என் இதயத்தை
சிற்றறைகள் எல்லாம்
பூக்களாகிச் சிரிக்கின்றன
உன் காலடி ஓசையில்

உன் வீட்டுச் சாலைகளில்
விடிகின்றன, தினமும்
எனக்கான காலைகள்

நீ புன்னகைத்தபின்னே
என் பூமி இங்கு விடிகிறது
உன் சிரிப்புக்களின் பின்னே
என் சிறகுகளும் விரிகின்றன

உன் கன்னக் கிள்ளல்களில்
மறைந்து கிடக்கின்றன
எனக்கான முத்தங்கள்

## அறிந்த மிருகம் அறியாத கதை

ஏ.ஜே.ஞானேந்திரன்

கட்டுரை

கைரேகைகள் தனித்துவமானவை என்பது உங்களுக்குத் தெரியும். இந்தக் கைரேகைகளை வைத்தே பல பெரிய குற்றவாளிகளைப் பிடித்து விடுகிறார்கள். காட்டில் கம்பீரமாக உலாவுகின்ற வரிக்குதிரைகளின் கறுப்பு-வெள்ளைக் கோடுகளும் தனித்துவமானவை. காடுகளில் பல்லாயிரக்கணக்கான வரிக்குதிரைகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான கறுப்பு-வெள்ளைக் கோடுகள் இருப்பது படைப்பின் விந்தையை நமக்கு வெளிப்படுத்துகின்றது. மலைப்பிராந்தியங்கள், புல்வெளிகள், பற்றைக்காட்டுப்பிராந்தியங்கள் என்று பல்வேறு இடங்களில் காணப்படும் இந்தக் காட்டு விலங்குகள் எஞ்சியுள்ளன என்பது நமக்கு மன ஆறுதலையும், மகிழ்வையும் அளிக்கும் விடயம் என்பதில் சந்தேகமே இல்லை.

*வரிக்குதிரைகளில் மிகப் பெரியது 'கிரெவ்வீஸ்'*

இந்த வரிக்குதிரைகளில் பல இனங்கள் இருக்கின்றன. பரந்த வெளி வரிக்குதிரை என்றொரு இனம் இருக்கின்றது. இவை ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பிராந்தியங்களிலேயே காணப்படுகின்றன. மலைப் பிராந்திய வரிக்குதிரைகள் என்பது இன்னொரு இனம். இதன் அடிவயிறு வெள்ளையாக இருக்கும். புல்வெளிப் பிராந்திய வரிக்குதிரைகளோடு ஒப்பிடும்போது, இதன் கறுப்பு வெள்ளை வரிகள் சற்று நெருக்கமாக இருப்பதைக் காண முடியும். தென் மேற்கு ஆபிரிக்கப் பகுதிகளில் இவை காணப்படுகின்றன.

நீண்ட ஒடுக்கமான கழுத்துப் பகுதியைக் கொண்ட இனங்கள் 'கிரெவ்வீஸ்' வரிக்குதிரைகள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. வரிக்குதிரை இனங்களில் பெரியது இதுதான். ஆபிரிக்க நாடுகளான எதியோப்பியாவிலும், வட கென்யாவிலும் காணப்படும் இந்த வரிக்குதிரைகள் வேகமாக அழிந்து வரும் இனம் என்பதோடு, அருகி வரும் இனமாகவும் இருக்கின்றது என்கிறார்கள்.

*தோற்றமும் உடலமைப்பும்*

நன்கு வளர்ந்த ஒரு வரிக்குதிரையின் தோள்மட்டம் வரையிலான உயரம் 1.3 மீற்றர்களாக இருக்கும். அதன் உடல் நீளம் 2.6 மீற்றர்கள் வரை காணப்படும். பெண்களை விட ஆண்கள் சற்றுப் பெரிதாக உள்ள நிலையில், நன்கு வளர்ந்த ஓர் ஆண் வரிக்குதிரையின் எடை சுமாராக 350 கிலோக்கள் வரை இருக்கலாம்.

இங்கே உங்களிடம் ஒரு கேள்வி...

வரிக்குதிரையின் உடம்பின் நிறம் என்ன? அதில் ஓடும் வரிகளின் நிறம் என்ன? வெள்ளை உடம்பில் கறுத்த வரிகளா? அல்லது கறுத்த உடம்பில் வெள்ளை வரிகளா? உங்கள் பதில் சரியா என்பதை இறுதியில் சரிபார்த்துக் கொள்வோம்.

*வரிகளும் தற்காப்பும்*

சரி இந்த வரிகள் இந்தக் குதிரைகளுக்கு எதற்குக் கிடைத்திருக்கின்றன? கடவுளின் படைப்புகள் எல்லாமே காரணத்தோடு தானே! தம்மைத் தாக்கவரும் மிருகங்களிடமிருந்து தப்பிக் கொள்வதற்குப் புற்களிடையே நின்றுகொண்டு வெளிப்புறத்தை மறைக்கும்போது, தாக்கும் மிருகத்தின் கண் பார்வையிலிருந்து இவற்றால் தப்ப முடிகிறது. வரிகள் எப்பொழுதும் செங்குத்தாகவே இருப்பது இதைச் சாத்தியமானதாக்குகின்றது. அது மாத்திரமல்ல இந்த மிருகங்கள் தூரத்தில் நிற்கும்போது, வரிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து இதன் உடலைச் சாம்பர் நிறம் கொண்டதுபோல தோற்றமளிக்கச் செய்கின்றன. இதுகாரணமாகச் சிங்கம், கழுதைப் புலி போன்ற மிருகங்களால் தொலைதூரத்தில் நிற்கும் போதும் இரவு நேரங்களிலும் இவற்றைத் தெளிவாகப் பார்க்க முடிவதில்லை. ஆனால், உடல்வாடையை வைத்து இரையைப் பிடித்து விடுகின்றன. வரிகளால் உள்ள இன்னொரு நன்மை குறிப்பிடத்தக்க தாகும். கூட்டமாக நிற்கும் இவை ஒரு சிங்கத்தால் துரத்தப்படும்போது, பெருந்தொகையான வரிகள் இணைந்து, தான் குறி பார்த்த இரையைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத குழப்பத்தைச் சிங்கத்துக்கு ஏற்படுத்துகின்றன.

தனித்துவமான வரிகள் ஒவ்வொரு குதிரைக்கும் இருப்பதால், ஒரு குதிரையை மாத்திரம் [illegible] இனங்கண்டுகொள்வது சாத்தியப்படுமா என்பது இன்னமும் அறியப்படவில்லை. வரிகளால் உள்ள இன்னொரு நன்மை என்னவென்றால், குருதி உறிஞ்சுவதற்காக இந்தக் குதிரைகளை நாடும் இலையான்கள் இந்த வரிகளால் ஈர்க்கப்படுவதில்லை. ஒரேயடியாக இலையான்கள் போய்விடுவதில்லை என்றாலும், இலையான்களின் தாக்கத்திலிருந்து பெரிதும் விடுபட இந்த வரிகளே உதவுகின்றன.

சரி இனி மீண்டும் அதே கேள்வி.

வரிக்குதிரையின் உடலின் நிறம் என்ன? வரிகள் நிறம் என்ன? பதில் ஆச்சரியமானதுதான். வரிக்குதிரைகளுக்கு வெள்ளை நிற அடிவயிறு இருப்பதால், வெள்ளை உடம்பில் கறுத்தவரிகள் என்றே நம்பப்பட்டது. இது தவறு. கறுத்த உடலில் வெள்ளை வரிகள் இருப்பதுதான் நிஜம். இதன் உடலைக் குளிர்மையாக வைத்திருக்க இந்த வரிகள் கைகொடுக்கின்றன என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமான விடயம்.

ஒளியைவேகமாக உறிஞ்சும்சக்திகொண்ட கறுப்பு நிற வரிகளை விட, வெள்ளை வரிகள் ஊடாக மெதுவாகவே ஒளி உட்புகுவதால், அதன் உடல் குளிர்மைப்படுத்தப்படுகின்றது. அதிலும் வறண்ட பிராந்தியக் குதிரைகளுக்கு உடம்பில் வரிகள் அதிகம் என்கிறார்கள். வரி கள் இருப்பது எமக்குத் தெரியும். ஆனால் அதில் இவ்வளவு விடயம் இருப்பது இப்போதுதான் தெரிகிறதல்லவா?

*பார்வையும் செவிப்புலமும்*


இதன் கண்கள் பக்கவாட்டில் இருப்பதால், இதன் பார்வை அபாரமாக இருக்கின்றது. இதற்கு இரவுப் பார்வையும் துல்லியமாக இருப்பினும், இதை வேட்டையாடும் மிருகங்களுக்கு இருக்கின்ற அளவுக்கு அது சிறந்த இரவுப் பார்வை கிடையாது. (அப்படியும் கடவுள் கொடுத்திருந்தால், இரவில் வேட்டையாடும் மிருகங்களுக்கு ஒரு வரிக்குதிரை கூட இரையாகக் கிடையாது.) குதிரைகளை விடப் பெரிய, வட்டமான செவிகள் இருப்பதாலும், தன் செவிகளை எந்தக் கோணத்திலும் திருப்ப முடிந்த சக்தி கொண்டதாலும், இதன் கேட்கும், திறன், நன்றாக உள்ளது. மோப்ப சக்தியும் அதிகம்.

*இணைந்த வாழ்க்கை முறை*

இவைகள் சேர்ந்தே வாழும் சுபாவமுடையவை. பொதுவாக ஒரு கூட்டத்தில் ஓர் ஆணும், ஆறு பெண் குதிரைகளும், குட்டிகளும் காணப்படும். பிரமச்சாரிகளான ஆண்கள் தனித்து வாழும். வயது வந்ததும் இவற்றின் வாழ்வு சவால் நிறைந்ததாகி விடும். 'கிரெவி' எனப்படும் வரிக்குதிரைகளின் கூட்டம் ஒரு சில மாதங்களே நிலைக்கும் என்கிறார்கள். குட்டிகள் தாயோடு வளர, ஆண் மிருகங்கள் கூட்டத்தை விட்டு விலகிச் சென்றுவிடும்.

குதிரைகளைப்போல வரிக்குதிரைகளும் நின்றுகொண்டே தூங்குபவை. அயலவர்கள் சுற்றிலும் நின்றால், நிலத்தில் கிடந்து உறங்கும்.

*எப்படி இவை ஏனைய மிருகங்களுடன் தொடர்பு கொள்கின்றன?*



கனைப்பதும், உச்ச ஸ்தா யில் குரைப்பதும், ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ள வழி செய்கின்றன. நாய்களைப்போல இது எச்சரிக்கை உணர்வோடு இருக்கும்போது இரண்டு செவிகளும் உயர்ந்த நிலையில் இருக்கும். அதேபோல தம்மை மிருகங்கள் தாக்க வருகின்றனவா? என்று நோட்டம்விடும்போது, தலையை நேராக உயர்த்தி, ஒரே பார்வையாகப் பார்க்கும். காதுகளும் புடைத்து நிற்கும். தனது மூன்றாவது வயதில் குட்டி ஈன்று, அம்மாவாகி விடக்கூடியது வரிக்குதிரை.

வரிக்குதிரையின் குட்டிகள் பிறந்த சொற்ப நேரத்தில் துள்ளி எழுந்து, பால் குடிக்கத் தொடங்கிவிடும். குதிரைகளில் பயணம் செய்வதுபோல வரிக்குதிரைகளில் பயணிப்பது சுலபமானதல்ல.

எனினும் வரிக்குதிரைகளில் முன்னரெல்லாம் சவாரி செய்திருக்கிறார்கள். வரிக்குதிரை வண்டியையும் இழுத்திருக்கின்றது. குதிரை, வரிக் குதிரை இரண்டுக்கும் வரிகள் மட்டுமா வித்தியாசம்? காட்டு விலங்கினங்களின் கதைகளே சுவாரசியமானவைதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்ரன் மலரவன்

# போர் உலா 9



"இது என்னடாப்பா பிணக்கனம்! கையை முறித்துப் போடும் போல" ஒருவன் அருகே இருந்த பாலைவேரில் குந்தி முழங்காலில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயத்தை அழுத்திட்டான். அவன் பெயர் கண்ணன் எனப் பிறகு தெரிந்து கொண்டேன்.

"பிரசாத்! தலையைச் சுத்துது கொஞ்சத் தண்ணி எடுத்துக் கொண்டா குடிப்பம்" வயிற்றை நீரால் நிரப்பிச் சிரிப்பை முகத்தில் ஏற்றிக் கொண்டான். கோல்சரைச் சற்றுத் தாழ்த்தி விட்டான்.

"இன்றைக்கு எப்படியாவது பொயின்ற் வேலை முடிக்க வேணும். இல்லாட்டிக் கரைச்சல். கெதியா வா, எல்லாத்தையும் இறக்கிவிட்டு ரைக்ரரை அனுப்புவோம். பிறகு ஹெலி வந்தா அடிப்பான்" நீரை அருந்திய பாலன் இப்போது கண்ணனுடன் சிலிப்பர் கட்டையைத் தாங்கிய வண்ணம் என்னைக் கடந்துபோனான்.

சற்று முன் பசித்த எனக்கு இப்போது சத்தியமாய்ப் பசிக்கவில்லை. பசி இருந்த இடமே தெரியவில்லை. சத்தமின்றி மெதுவாய் ஊர்ந்து சாக்குத் தொப்பியுடன் மெதுவாக முகாமைக் கண்களால் ஆராயத் தொடங்கினோம்.

"இது நோட்டட் இல்லாத பொயின்ற். கவனமாய்ப் பாருங்கோ கண்டானெண்டால் பிறகு வேலை செய்யிறது கஸ்ரம்" நீரை எம்மிடம் தந்தபடி பாலன்தான் கூறினான். "பிரச்சினையில்லையடாப்பா" என்றான் ஜீவன்.

"உதிலை தெரியிறதுதான் பொலிஸ்ரேசன். முன்னாலை நாலைந்து வீடுகள். உதுக்கை நிறைய டம்மிப் பொயின்ற் இருக்கு. அதிலை சிலிப்பர் கட்டைப் பொயின்ரைத் தென்னோலையால் மறைத்து அடைத்திருக்கிறான். அந்தத் தண்ணித் தாங்கியிலும் பொயின்ற் இருக்குது. இந்த மூலைக் கட்டடத்துக்குள்தான் கூடப்பேர் இருக்கிறாங்கள்"

"றோட்டுக்க அங்காலை தெரியிறது என்ன?"

"அதுதான் கடைசிப் பொயின்ற். றோட்டுக்குப் பக்கமாக அடிச்சிருக்கிறான். இரவில் அண்ணை, இந்தக் கட்டடத்துக்குள் பாட்டெல்லாம் பைலாப்போட்டுப் பாடுறவன். துப்பரவா அலேட் இல்லை" எனக் காவலரணைச் சேர்ந்த பாலன் கூறினான். ஒரு சிலிப்பர்க் கட்டையை இறக்கி வைத்தபின் தூசைத் தட்டியபடி, "லைற் இங்கால இடமெல்லாம் சரி. மிச்ச வேலையள் பார்த்தாச் சரி. அங்கால போய் றோட் பொயின்ருக்குப் போட்டுப்போவம்" என்றான்.

சிறிய குடிசைகளைக் கடந்துசெல்ல பெரிய வீடு ஒன்று காணப்பட்டது. புகையிரதப் பாதையைக் கடந்து வீதியோரமாக இருந்த வீடு. அப்போதுதான் கவனித்தேன் அதில் பெண் போராளிகள் இருப்பதை, "ஆர் கேள்சோ இருக்கினம்?"

"ஓ, இப்ப ஒரு கிழமைதான் மாற்றியது"

"உதால போய் அடிவாங்கப் போறியள்" பெண் போராளி கூற எட்டிப் பார்த்தோம் வெளியூடாக. மலைப் பொயின்ற் சிறு குன்றின்மேல் பலமாகக் குந்தியி ருந்தது. றோட்டுப் பொயின்ருக்கு இதாலை போகலாம். அவ்வழியால் விரைந்தோம். அவ்வீதிக் காவலரண் மிக முக்கிய காவலரண். இராணுவம் முன்னேறுவதாயின் வாகனங்களுடன் இவ்வழியேதான் வருவான். விமானம்கூட இதற்குத்தான் அதிகம் குறி பார்க்கும். வீதியின் குறுக்கே மிகப் பலமான காவலரண் அது. எந்தத் தாக்குதலையும் சந்திக்கத் தயாராகப் பெண் புலிகள் உறுதியாக நின்றனர். ஆர்.பி.ஜி. 30 கலிபர்களுடன் நம்பிக்கையுடன் நின்றார்கள்.

அவ்வழியாய் காவலரண்களைப் பார்த்துவிட்டு, மதியம் 1.45 மணியளவில், பிரதான முகாம் நோக்கி வந்த பாதையால் திரும்பினோம். "இன்றைக்குப் பின்னேரம் சேரமான், சத்தியராஜ் அவையின்ரை பொயின்ருகளைப் பார்ப்பன். அந்தப் பக்கத்தால கிட்டத்தான்" என ஜீவன் கூறினார். காலை உணவை மதிய உணவாய் உண்ட பின்னர், சுமார் 3.25மணியளவில் கோயில் காவலரண்களை அவதானித்து வரக் கிளம்பினோம். அகலம் குறைந்த ஒழுங்கையினூடாக நடந்தோம். இருமருங்கும் தோட்டங்களும், வயல்களும் விரவிக் கிடந்தன. வயல்கள் வெறும் தரிசாய்ப் புற்கள் மண்டிக் கிடந்தன. தோட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துளிர்க்கும் பூசினிக் கொடிகளும், தானிய வகைகளும், அடி கெட்டுப்போன வாழைகளும், இவற்றை மூடிப் புற்களும் கிடந்தன.

ஏராளமான மாந்தோட்டங்கள் இருந்தன. விதம் விதமாய் மாங்காய்கள் தொங்க, வளவுக்குள் இறங்கி மாங்காய்களைப் பறித்துச் சப்பிய வண்ணம் நடந்தோம். மழைகாலச் சூரியன் சுரீர் என்று மயிரணுக்களைத் தாக்கியது.

"இங்கால இரண்டு செற்றப் பண்ணோணும். வடிவா இடத்தைப் பார்த்துச் செய்வம்" என்றேன். ஒழுங்கையை விட்டு ஒரு வீட்டின் வழியாக இறங்கி, ஒரு வளைவுகளைக் கடந்துபோனோம். எனக்கு ஒரு செருப்பு அகப்பட்டதால் ஓரளவு தாக்குப் பிடிக்கக் கூடியதாக இருந்தது. சிறிய பனங்கூடலைக் கடந்து அப்பால் நிமிர்ந்து நின்றிருந்த எமது அரணைப் பார்த்தோம். காவலரணில் நின்ற போராளியுடன் ஒவ்வொரு அரணூடாகவும் பார்க்க ஆரம்பித்தோம்.

"இந்தப் பொயின்ற்தான் ஆமியிலிருந்து கன தூரத்தில் இருக்குது. முன்னால ஒரு வெளி. குண்டடியால் முன்னுக்கு அடிச்சால் பொம்பர் அடிப்பான் என்று பின்னுக்கு இழுத்திருக்கிறம்" ஜீவன் கூறினார்.

"இந்தப் பொயின்ரிலை நின்று பார்த்தாத்தான் மடத்தின்ரை றோட்டுச் சைற் பக்கமும், முல்லைத்தீவு றோட்டில இருக்கிற வீடுகள், கட்டடங்கள் எல்லாம் வடிவாத் தெரியுது" எங்களைப் பார்த்தார் ஜீவன்.

"ஓமோம், பிள்ளையார் கோயிலோ? அதுவும் வடிவாய்த் தெரியுது. இந்தப் பக்கப் பொயின்ருகள் நல்ல ரைற் போல, நீட்டுக்குப் பொயின்ற் அடிச்சிருக்கிறான். சப்ளை மூவிங் பங்கரும் இருக்கும் என்று நினைக்கிறன்" என்றேன்.

"ஓமோம், இந்த மடமும் கோயில் பொயின்ரும்தான் அவன்ரை உயிர். அதனால் எல்லா செற்றப்பும் இருக்கும். அதைவிட பொயின்ரிலை இருந்து இதுவரைக்கும் ஒரே வெளிதானே. மைன்சும் எக்கச் சக்கமாய் வைச்சிருப்பான். இந்தப் புறமாய் இறங்கும் தாக்குதல் அணிகள் மிகவும் இழப்பைச் சந்திக்க நேரிடும். வெளியாக இருப்பதாலும், ஏராளமான துப்பாக்கிச் சூடுகளை வெளியில் பெறவேண்டியிருக்கும். அத்துடன் இனங்காண முடியாத மிதிவெடிகள் பெரும் பிரச்சினைக்குரியவை. இதற்கு மேலாக விமானத் தாக்குதல் முற்று முழுதாக இந்த வெளியில்தான் இடம்பெறும் சந்தர்ப்பமும் அதிகம்"



ஆயினும், இராணுவ முகாமைக் கைப்பற்றுவதாயின் அது பிரதானமாகத் தங்கியிருக்கும் கோயில், மடக் காவலரண்களை வீழ்த்திய பின்னர்தான் வான்வெளி விநியோகத்தைத் தடுத்து, இராணுவத்தை முற்றுகைக்குள் அமிழ்த்த முடியும். என்ன உயிர் விலைகளைக் கொடுத்தும் இந்தப் பகுதியை நிச்சயமாகக் கைப்பற்ற வேண்டும். இதுவே சண்டையைத் தீர்மானிக்கும் என எண்ணிக் கொண்டேன். விநியோகப் பகுதியைத் துண்டிப்பதில் பீரங்கிகள் முக்கிய பங்காற்ற வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டேன். லக்சபானா மின்சாரத்தூண்கள் எம்மைக் கடந்து எதிரியினூடாகச் சென்று சின்னச் சின்னதாய் தூரத்தே புள்ளியாய் மறைந்துபோயின.

"இங்கிருந்து ஏழெட்டுத் தூண்கள் வரையும் இருக்கின்றன" ஜீவன் சொன்னார். காவலரணில் இருந்து வீதிக்குக் குறுக்கான காவலரணை நோக்கிப் பதுங்கியபடி ஓடிச் சென்றோம். அங்கிருந்து சினைப் பண்ணுவான். உந்தச் சாக்கைப் பாருங்கே. எத்தனை ஓட்டைகள்! சாக்கு அரிதட்டுப்போல தொங்கியது. இங் கிருந்து பார்க்கக் கோயில் பொயின்ற் வடிவாய்த் தெரியும். ஒவ்வொருத்தராய் எட்டிப் பார்த்தபின் நான் ஏறிப் பார்த்தேன்.

'றொய்ங்... படாச்.' தலைக்குச் சாண் மேலாக வந்த டம்டம் ரவை மண்மூடையில் பட்டுத் தெறித்தது. ஆமை ஓட்டுக்குள் தலையை இழுத்ததுபோல் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு இறங்கினேன். என்னை அறியாமலேயே கை தலைப் பகுதியைத் தொட்டுப் பார்த்தது.

"பொட்டு வைச்சிருப்பான், தப்பிட்டியள்" இப்படி ஜீவன்கூறச் சிரித்துக் கொண்டேன்.

"ஏதாவது பிரச்சினையா?" என்ற வோக்கி குரலுக்கு, இல்லை எனப் பதில் கூறிவிட்டு, அப்பால் நேர் வீதி வழியாகப் பின்னே பதுங்கி ஓடினோம். ஏறத்தாழ 50ஆண்கள் நின்று மண்மூடை கட்டிக்கொண்டும், பதுங்குகுழிகளை அமைத்துக்கொண்டும் இருந்தார்கள்.

"ஆர் இவர்கள்?"

(தொடரும்)

வானவன்

10

கவிதை



## மனிதனைச் சபித்த பறவைக் கதை

"கொடும்பாவி சாகாளோ - ஒரு
கோடை மழை பெய்யாதோ...."
சேலைக்குள்ளிருந்து
அலறும் ஆண்குரல்
ஒப்பாரி
வைக்கோற் பொம்மையை
ஊரெல்லாம்
இழுத்துத் திரிகிறது.
இரவின் பொழுதில்
இருளின் பிடியில்
ஊர் நாய்கள் முழுதும்
கூடிக் குரைக்கப் போகிறது
கொடும்பாவி ஊர்வலம்.
மின் கம்பியிருந்து
தன் துணையணைத்தபடியே
பார்க்கிறது
பறவை உற்று.
ஆயிரத்தெட்டு மோதகம்
அவித்துப் படைத்ததும்
ஆயிரத்தெட்டு இளநீர்
கொண்டு நீராட்டியதையும்
நினைவில் மீட்டி
துணைப் பறவை காதில்
முணுமுணுக்கிறது.
ஒன்பது வகையில்
பச்சைமரம் கொண்டு
தீ மூட்டிப் பெருயாகம் ஒன்று
செய்ததையும்

நினைவில் மீட்டிற்று மேலும்.
பாவம்
வைக்கோற் பொம்மை.
எரியப்போகிறது.
ஆண்குரலின் ஓலம்
சேலைக்குள்ளிருந்து
எழுகிறது......
மண்ணள்ளித் திட்டித்
தீர்த்தபின் எரியப்போகிறது.
அள்ளிக் கொட்டித்
திட்டித் தீர்த்த மண்
மாபாவிகள்
வாயிலும் விழுகிறது.
நோயின் பிடியில்
நெரிகிறது மானுடம்
அங்கங்களில்
எழுகிறது சந்தடியில்லா
பெரு நோய்கள்
உச்சி மயிரிலிருந்து
உள்ளங் கால் வரையாக.
"கொடும்பாவி சாகாளோ - ஒரு
கோடை மழை பெய்யாதோ...."
மீளவும் கேட்கிறது ஓலம்.
கொடும்பாவிகள்
அப்பாவிகள் கூடவே
சாக இரவிலும் தன்
சோகம் இழைந்த
பாடலைப் பாடுகிறது.
சோகம் பின்னிற்க
கோபம் முன்னிற்கிறது.
"கொடுமனிதன் சாகானோ...."
இணைப்பறவை
இசைக்கிறது பாடலின்
திருத்திய வரிகளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி

சின்னஞ் சிறிய பிள்ளைகளே
சேர்ந்து என்னிடம் வாருங்கள்
பென்னம் பெரிய தென்னை நான்
பேசும் வார்த்தை கேளுங்கள்

சின்னப் பிள்ளை யாயிருந்த
என்னைக் கண்டு சந்தையிலே
எண்ணிக் காசு கொடுத்து உங்கள்
தாத்தா இங்கே நட்டாரே

காலை வேளை தவறாமல்
கிணற்றில் அள்ளி நீர்தந்தார்
பாலைப் பருகும் பிள்ளையைப் போல்
நீரைப் பருகி நான் வளர்ந்தேன்

ஆடு மாடு என்னைத் தின்ன
ஆசை கொண்டு வரும் வேளை
ஓடி வந்து துரத்திடுவார்
கடித்தால் நோகும் எனக்கென்று

கன்னிப் பருவம் நான்கண்டு
காய்கள் ஈன்றேன் குலையாக
'தென்னம் பிள்ளை' பெயர்மாறி
'தென்னை' என்னும் பெயர் பெற்றேன்

அன்பாய் எனக்கு நீர் ஊற்றி
அந்நாள் வளர்த்த ஐயாவின்
நன்றிக்காக இன்றும் நான்
நன்றாகக் காய்த்துக் கொடுக்கின்றேன்

என்னை வளர்த்த பெரியார்க்கு
எண்பது வயது இப்போதும்
என்னைக் கட்டித் தழுவிடுவார்
எனது கண்கள் நீர்சொரியும்

நாங்கள் மரங்கள் ஆனாலும்
நன்றி மறவோம். பிள்ளைகளே
நீங்கள் மனிதர் உயர் பிறவி
ந ்றி மறத்தல் பெருந்தீமை

செல்லையா குமாரசாமி

# மிச்சாக் குட்டி....!

மாதவி உமாசுத சர்மா

சானு என்னுடன் எப்போதும் விளையாடியபடி இருப்பான். இப்ப கொஞ்சநாளவே அப்பிடி இல்லை!

அம்மா திட்டியபடியே இருக்கிறா. "அவனுக்குக் கொலஸிப் எக்ஸாம், படிக்கோணும்" எண்டு. இந்த அம்மாக்களுக்கு எப்பவுமே இதுதான் வேலை. நல்லா இருந்தாலே பிடிக்காது.

நான் யாரோடு விளையாடுறது? எனக்குத் தான் எக்ஸாம் இல்லையே. நான் விளையாடத் தடை இல்லையே. பக்கத்து வீட்டுச் சசிக்குட்டி இருக்கிறானே. அவன் என்னோடு விளையாடுவான் தான். ஆனால், இப்ப இல்ல! ஏனெண்டோ சானுவும், நானும் விளையாடும்போது ஒரு நாள் சானு அடிச்ச பந்து சசிக்குட்டின்ர வீட்டுக்குள்ள போயிட்டுது. நானும் சானுவும் போய்க் கேட்டுப் பாத்தம். "வரேல்ல" என்டு பொய் சொல்லிவிட்டான். அதாலை நாங்க அவனோட 'ஏ' விட்டுட்டம். அதால இப்ப அங்கயும் போக முடியாது.

எனக்குச் சானுவிண்ட மற்ற நண்பர்களைப் பிடிக்காது. எப்பவும் கிரிக்கெட் மட்டையை வைச்சுக்கொண்டு அவனைக் கிரிக்கெட் விளையாடத் தெருவுக்கோ இல்லை எண்டால் பாடசாலை மைதானத்துக்கோ கூட்டிக்கொண்டு போயிருவாங்கள். என்னோடு விளையாட விட மாட்டாங்கள். அதால எனக்கு அவங்கள் மேல சரியான கோவம்.

எனக்கு ஒரு யோசனை பிறந்தது! நான் ஏன் என்னை மாதிரியே, என்ர வயசில இருக்கிற ஒருத்தர நண்பர் ஆக்கக் கூடாது? ஆனா, என்ர வயசில எனக்கு யாரையும் தெரியாதே! ச்சே! என்ன வாழ்க்கை இது!

எனக்கு "என்னோட மட்டுமே விளையாடுற ஒரு நண்பன் கிடைச்சா நல்லா இருக்கும் கடவுளே! எனக்கு ஒரு நல்ல நண்பனைக் காட்ட மாட்டியா?"

எனக்குச் சலித்துப்போய்விட்டது. தெருவில் பலூன், பந்துகள் சகிதம் அப்பா, அம்மாவோடு போகும் குழந்தைகள் மாலையில் என் கண்களுக்குத் தென்பட்டார்கள். நானும் தினமும் இந்தக் கேற்றடியில வந்து பார்க்கிறன். யாரும் நண்பர் ஆகிற மாதிரி இல்லை.



சில நாள்கள் கழித்து காரில் ஒரு குடும்பம் எதிர் வீட்டுக்குப் புதிதாய் குடிவந்தது. நானும் ஆவலாய்ப் போய்ப் பார்த்தேன். முதலில் ஒரு அப்பா, அம்மா, இரண்டு பெரிய அண்ணாக்கள்! எனக்கு அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று கவலையுடன் திரும்பும்போது அதில் ஓர் அண்ணா, "மிச்சாக்குட்டி! வா வெளியில்" என்று கூப்பிட்டார்.

ஐயோ! நாலு கால்களில் துள்ளியபடி பாய்ந்து ஓடியபடி வந்தாள் மிச்சாக்குட்டி! எனக்கு ஒரு தோழி கிடைத்து விட்டாள். கடவுளே நன்றி! இன்று பின்னேரம் எப்படியும் போய் மிச்சாக்குட்டியோட கதைச்சிடவேணும்.

என்ன யோசிக்கிறீர்கள்? எனக்குத் தோழன் மட்டும் தான் வேணும் எண்டு நான் சொல்லவேயில்லை. தோழியா இருந்தாலும் பரவாயில்லை. என்னோடு விளையாட ஆள் கிடைச்சாப் போதும். ஓ! நீங்கள் நான் யாரென யோசிக்கிறீங்களா? எனக்கு நான்கு கால்கள்! நான் யாரெனக் கண்டு பிடியுங்கள் பார்ப்போம்!



# இலங்கையர்கோன்



இலங்கையர்கோன் என்ற பெயரில் எழுதிப் புகழ்பெற்றவர் த. சிவ ஞான சுந்தரம். ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவர். தமிழில் சிறுகதை தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். யாழ்ப்பாணம் - ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சமஸ்கிருதம், இலத்தீன், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். பதினெட்டாவது வயதிலே இவரது முதற் கதையான 'மரிய மதலேனா' 1938ஆம் ஆண்டில் கலைமகள் இதழில் வெளியாகிற்று. இதற்கு முன்னர் இவர் புராண, இதிகாச, இலங்கை வரலாற்று நிகழ்வுகள் போன்றவற்றைக் கதைகளாக எழுதினார். 'கடற்கோட்டை', 'சிகிரியா', 'அனுலா', 'மணப்பரிசு', 'யாழ்பாடி' ஆகிய கதைகள் குறிப்பி டத்தக்கவை. மேனகை என்ற பெயரில் புராண வரலாற்றுக் கதை ஒன்றை மறுமலர்ச்சி இதழில் எழுதினார்.

1944ஆம் ஆண்டில் ஈழகேசரியில் வெளியான 'வெள்ளிப்பாதரசம்' என்ற சிறுகதை இலங்கையர்கோனை அடையாளப்படுத்தியது. 'துறவியின் துறவு', 'ஒரு நாள்', 'தாய்', 'ஓரிரவு', 'சக்கரவாகம்', 'கடற் கரைக் கிளிஞ்சல்', 'முதற் சம்பளம்' 'வஞ்சம்' போன்ற கதைகளும் குறிப்பிடத்தக்கவை. முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியியுள்ளார். அத்துடன் நிறைய ஓற்றையங்க, தொடர் நாடங்களையும் எழுதியுள்ளார். இத்தகைய பல எழுத்துக்களைத் தந்து ஈழத்துச் சிறுகதை உலகில் தனியிடம் பிடித்துக்கொண்ட இலங்கையர்கோன் 1961ஆம் ஆண்டு ஒக்டோபர் 14இல் இறை எய்தினார்.



அ. அன்புமாறன்,
தரம் - 6;
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.

## வழிகாட்டுவோம்





உ.எறின் டீனுயா,
தரம் 8,
யா/திருக்குடும்ப கன்னிய மடம் தேசிய பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பார்வை

நா.நவராஜ்

கவிதை

நிலவுக்குப் பக்கத்தில் மின்னினேன்
தாரகை என்றனர்
வெளிச்சக்குறைவால்.
நிலவின் முன் நான் ஒரு சிறுபுள்ளி
பார்ப்[illegible] அருகருகே இருப்பதாய்
எண்ணிக்கொண்டனர்

எனது தொலைவுகள் புரிவதில்லை
முன்நிற்கும் நிலவோடு
நான் பின்னப்பட்டேன்
நாயகி அந்தஸ்து எனக்கு

எனதிருப்பிடம்
நின்றவர் பார்த்திடில்
நிலைமைகள் புரியும்
நிலவின் போதமை தெரியும்

பாவம் மானிடர்
இந்தப் புரிதலைச்
செயல் முறையாக்கிட
யுகங்கள் கடக்கலாம்
முழுமைகள் எப்போதும்
முன்நிற்பவை மட்டுமே என்ற
மானிடர் தம் புரிதலும் மாறலாம்



# யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்ணகி வழிபாடு

*சங்கமித்தையின் இலங்கை வருகைக் கதையுடன் கண்ணகியின் வருகையையும் இணைத்து திருவடி நிலை என்ற துறையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. இந்தத் துறைக்கு அண்மையிலே அமைந்துள்ள சிலம்பன் புளியடி, பத்தினி சீமா ஆகிய கிராமங்களின் பெயர்கள் இன்று வரைக்கும் திருவடி நிலைக்கும் கண்ணகி வழிபாட்டுக்குமுள்ள தொடர்பின் எச்சங்களாகவுள்ளன.*

இராஜினிதேவி சிவலிங்கம்

கட்டுரை



நதிக்கரையோர நாகரிக வாழ்வு ஆரம்பமான காலப்பகுதிக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண் தெய்வ வழிபாட்டு முறையானது மனிதனுடைய வாழ்வியலில் முக்கியமான ஓரம் சமாகப் பங்கெடுக்கத் தொடங்கியிருந்தது. தென் ஆசியாவின் பல பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுடைய வாழ்வியலிலே சக்தி வழிபாடானது முக்கிய பங்கெடுப்பதைக் காண முடிகிறது.

சக்தி வழிபாட்டின் ஒரு வடிவமான, கற்பொழுக்கத்தின் சின்னமான பத்தினி வழிபாடானது தென்னாசியாவின் தென் கோடியிலே தமிழகத்தில் தோற்றம் பெற்று இலங்கையிலே வேரூன்றி நிலைத்து நின்று, இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களது வாழ்வியலோடு கலந்திருப்பதென்பது பண்பாட்டு வரலாற்றிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓரம்சமாகவுள்ளது. கண்ணகி வழிபாடும், பத்தினி வழிபாடும் ஒரே மரபையே குறித்து நிற்கின்ற போதிலும் பத்தினி என்ற பயன்பாட்டிலும் பார்க்கக் கண்ணகி என்ற வழக்கே காலத்தால் முற்பட்டது என்பதையும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ள னர்.

*'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்*
*திண்மை உண்டாகப் பெறின்'*

எனும் வள்ளுவன் வாக்குக்கு அமைய வட பகுதியில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அதிகம் பின்பற்றி வாழ்பவர்கள். ஆதலால் கற்புக்கரசியாகிய கண்ணகியைத் தெய்வமாக வழிபாடு செய்வதில் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் இதை மெய்ப்பித்து நிற்கின்றன.

**ஐதீகங்களில் கண்ணகி வழிபாடு குறிக்கப்பட்டிருக்குமாறு**

கண்ணகி வழிபாட்டின் யாழ்ப்பாண மரபுகள் பற்றிய ஐதீகங்கள் தமிழ் மரபில் பத்தினி வழிபாடு எனும் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. நான்கு வகையான ஐதீகங்கள் வட இலங்கையில் பத்தினி வழிபாடு தொடர்பாக நிலவி வந்திருப்பதைக் காண முடிகிறது. இவற்றுள் முதலாவது கஜபாகு மன்னன் பத்தினிக் கல்லுடன் அல்லது சிலம்புடன் இலங்கை திரும்பிச் சம்புத் துறைமுகம் வழியாகக் கரையேறி வழுக்கியாற்றின் கரையோரமாக நடந்து வந்து கந்தரோடையிலோ உள்ள அங்கணாக் கடவை என்ற இடத்தில் பத்தினிக்குக் கோவிலமைத்துப் படிமமுமமைத்து அப்பாலே சென்றான் என்பதைச் சி. இராச நாயக முதலியார் தனது 'புராதன யாழ்ப்பாணம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு சென்று மீண்ட கஜபாகு தமிழர் போற்றிய கண்ணகித் தெய்வத்துக்குத் தமிழ் மக்கள் அதிகம் வாழ்ந்த யாழ்ப்பாணப் பகுதியிலேயே முதற் கோயிலை நிர்மாணித்தான் எனக் கலாநிதி இ.பாலசுந்தரம் தமிழோசையில் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது ஐதீகமானது கண்ணகியை நாக உருவில் எடுத்துக் காட்டுகிறது. கண்ணகி மதுரையை எரித்தபின்னர் ஐந்து தலை நாக உருவிலே அந்த நகரத்தைவிட்டு நீங்கி தெற்கு நோக்கிச் சென்று, முதலில் நயினாதீவை அடைந்து அதன்பின்னர் வட்டுக்கோட்டையிலுள்ள சுருட்டுப்பனை வழியாகச் சீரணி – அங்கணாமைக் கடவை, அளவெட்டி, சுருவில் முதலான இடங்களில் தங்கி, இறுதியாக வற்றாப்பளையை அடைந்தாள் என அறியமுடிகின்றது.

மூன்றாவது ஐதீகமானது சங்கமித்தையின் இலங்கை வருகைக் கதையுடன் கண்ணகியின் வருகையையும் இணைத்து திருவடி நிலை என்ற துறையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. இந்தத் துறைக்கு அண்மையிலே அமைந்துள்ள சிலம்பன் புளியடி, பத்தினி சீமா ஆகிய கிராமங்களின் பெயர்கள் இன்றுவரைக்கும் திருவடி நிலைக்கும் கண்ணகி வழிபாட்டுக்குமுள்ள தொடர்பின் எச்சங்களாகவுள்ளன.

நான்காவது ஐதீகமானது வடமராட்சிப் பகுதியைப் பின்னணியாகக் கொண்டதாகும் வடமராட்சியின் பத்தினி வழிபாட்டு மரபானது குடாநாட்டின் ஏனை மரபுகளிலிருந்து மாறுபட்டுத் தனித்துவமான பண்பைக் கொண்டிருப்பதைக் காணலாம். கண்ணகி மதுரையை எரியூட்டிய பின்னர் நேராகக் கடல் மார்க்கமாக வந்து கந்தவனக் கடவை யிலே தரையிறங்கினாள் என்றும் பின்பு தன்னுடன் பாதுகாப்பின் பொருட்டு அழைத்து வந்திருந்த 'அண்ணாமார்' என்போரை கந்தவனக் கடவைக்குமப்பால் ஓரிடத்தில் வடக்கு நோக்கிய நிலையில் அமர்த்திய பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்தாள். அவ்வாறான பயணத்தின் முதலாவது தரிப்பிடமாக இலுப்பை மரங்கள் நிறைந்த சோலையாக விளங்கிய 'தேவரையாளி' அமைந்தது எனவும் பின்பு அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியிலே இரண்டாவது தரிப்பிடமாக மாநாயன் உவ்விய நெல்லில விளங்கியது எனவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் கரவெட்டியிலுள்ள அத்துளு என்ற இடத்திலும் பின்பு சுட்டிபுரத்திலும் தரித்து இறுதியில் வற்றாப்பளைக்குச் சென்று தரித்ததாகக் கூறப்படுகின்றது. (இந்து நதி – தமிழ் மரபில் பத்தினி வழிபாடு)

**வற்றாப்பளை ஆலயம் சிறப்புடையது**

கண்ணகி வழிபாட்டின் சிறப்பை ஆய்வுசெய்யும்போது முல்லைத் தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் வரலாற்றுப் பெருமை கொண்டது. ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தை அடுத்து வரும் திங்கள் கிழமையில் பொங்கல் இடம்பெறும். பொங்கல் காலத்தில் அருகிலுள்ள நந்திக் கடலில் நீர் எடுத்து விளக்கேற்றுவது இன்றும் வழமையாக உள்ளது.

**யாழ்ப்பாணத்தின் கண்ணகி ஆலயங்கள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்டைதீவில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயம், காரைநகர், வலந்தலை கண்ணகி அம்மன் ஆலயம் என்பவை பழம் பெருமை வாய்ந்த ஆலயங்களாகும். புங்குடு தீவில் கண்ணகி அம்மன் ஆலயம் 130வருடங்கள் பழமை வாய்ந்தது. வட்டுக்கோட்டையிலுள்ள ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணகிலிங்கேஸ்வரர் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆலயமாகும்.

சண்டிலிப்பாயிலுள்ள அங்கணாக் கடவை கண்ணகி ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அல்வாய் தேவரயாளி கண்ணகி அம்மன் கோவிலும் அற்புதம் நிறைந்த ஆலயமாகும். மட்டுவில் பிரதேசத்திலுள்ள கண்ணகி அம்மன் ஆலயம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். ஆண்டுதோறும் பங்குனி மாதத் திங்கள் கிழமைகளில் பொங்கல் இடம்பெறுகின்றது. கோப்பாய் பலானை கண்ணகி அம்மன் கோவிலும் மிகப் பழமை வாய்ந்த ஒன்றாகும். இங்குள்ள தல விருட்சமான கூழ மரத்தடியில் இன்றும் நாக வழிபாடு இடம்பெறுகின்றது. கற்புடைத் தெய்வமாம் கண்ணகித் தெய்வத்தை வழிபட்டால் பிணி, நோய், துயரங்கள் அணுகாது என்பது அடியார்களது தளராத நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கப் பறவை

12



செல்லையா குமாரசாமி

சிறுவர் நவீனம்

துயில் நீங்கிய பறவைகள், பார்த்தீபன் இருந்த இடத்தில் இல்லாமை கண்டு கரைக்கு வந்தன. பார்த்தீபன் வலையை இழுத்துச் சிக்கல்களை எடுத்துக்கொண்டிருந்தமை தெரிந்தது.

"நல்லதொரு எண்ணம் தோன்றுகின்றது. நீங்கள் நினைத்தால் இன்றே எனது சபதத்தை நிறைவேற்றிவிடலாம் என நினைக்கிறேன்" என்று கூறிச் சிரித்தான் பார்த்தீபன்.

"யோதி நிலாவை அந்தப் பறவை மனிதனிடமிருந்து மீட்டு வருவதற்கு எம்மாலான அனைத்தையும் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். சொல்லுங்கள் செய்து முடிக்கிறோம்" என்றன பறவைகள்.

"இந்த வலைதான் எமக்கு உதவப் போகிறது" கூறிக்கொண்டே சிரித்தான் பார்த்தீபன்.

"எப்படி?"

"இந்த வலையில் நான் அமர்ந்திருக்க..."

"அமர்ந்திருக்க...? வலை மலைக்குப் போகுமா...?"

"வலை தானாகப் போகாது"

"அப்படியானால்...?"

"நீங்கள் என்னையும் வலையையும் தூக்கிப் பறக்கப் போகிறீர்கள்!"

பறவைகள் ஒன்றையொன்று பார்த்துச் சிறகுகள் விரித்தன தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து.

"மிக மிக நல்ல ஆலோசனை! அற்புதமான ஆலோசனை! நாங்கள் இத்தனைபேர் இருக்கிறோம். வலையின் நான்கு பக்கங்களையும் ஐந்தைந்து பேர் கால்களில் கொழுவிப்பிடித்துக்கொண்டு தூக்கிப் பறப்பது பெரிய விடயமல்ல. ஏனையவர்கள் வெறுமனே அருகருகாகப் பறந்து வந்து, வலையைத் தூக்கிவருவோர் களைப் படைந்தால், அருகில் பறந்து வருபவர்கள் களைப்படைந்தவர்கள் பக்கம் சென்று வலையைக் கொழுவிக் கொண்டு அவர்களை விடுவிக்கலாம். நல்ல ஆலோசனை கூறிவிட்டீர்கள். வெற்றிபெறப் போகின்றோம்"

"இப்போதே புறப்படுவோமா...?"

"இல்லை"

"எப்போது...?"

"இரவுதான் போக வேண்டும். நேற்று நாம் போன நேரம்தான் உகந்த நேரம். பறக்கும் மனிதன் உறங்குவதற்குப்போன பின்னர்தான் எங்களை வருமாறு கூறியது அந்தக் குரல். அவன் கண்டுகொள்ளாதபோதுதான் யோதிநிலா வெளியே வர முடியுமாம். அவன் விழித்தெழுந்தால், யோதிநிலா உறங்கிக் கொண்டிருக்கின்றாளா என்பதைக் கண்காணிப்பானாம்! அவள் இல்லையென்று தெரிந்தால், சீற்றத்தோடு தேட ஆயத்தமாகி விடுவானாம். நாங்கள் பறவைகள் எங்களைக் கொன்று குவித்து விடுவானல்லவா?'

"நானும் என் கையில் வாளும் இருக்கும்போது நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. இராவணன் கடாயுதப் பறவையின் சிறகுகளை வெட்டி, வீழ்த்தியதுபோல அந்தப் பறவை மனிதனின் சிறகுகளை நான் வெட்டி வீழ்த்தி விடுவேன்"

"உங்கள் வீரத்தையும் துணிவையும் நாங்கள் அறியாமல் இல்லை. எதற்கும் வானில் நிலாத் தோன்றிய பின்னரே நாம் கடலைக் கடப்பது நல்லது. அந்தவேளைதான் தங்கப்பறவை எம்மை அங்கே வருமாறு கூறியது. இன்று பகல் அமைதியாக இருந்து ஆறுதல் எடுப்போம்" என்று கூறிய பெரிய பறவை, பறவைக் கூட்டத்தைப் பார்த்து, "கடலில் இறங்குபவர்கள் இறங்கி உங்கள் இரையைத் தேடுங்கள். சிலர் காடு சென்று இவருக்கு நல்ல பழங்கள் கொண்டு வாருங்கள். நான் இவர்கூடவே இருக்கிறேன், எனக்கும் ஒரு மீன் பிடித்து வாருங்கள்" என்றது.

✦ ✦ ✦

எப்போது சூரியன் மறைந்து, நிலாத் தோன்றி, ஒளிதரப் போகின்றது? என்றெண்ணியவனாக மரநிழலில் அமர்ந்திருந்தான் பார்த்தீபன்.

பறவைகள் தேடிக் கொணர்ந்த பழங்களை உண்டு, கம்பளம் விரித்துச் சிறிதாக ஓய்வெடுத்துக் கொண்டான் பார்த்தீபன். சோளகக் காற்று மெல்லெனெ வீசியது. ஆர்ப்பரிப்பின்றி அலைகள் கரை வந்து மீண்டன. ஆகாயம் நிர்மூலமாகியது. ஆதவன் அந்தி வானத்தை அழகாக்கி ஆழ்கடலுக்குள் மறைந்தான்.

பூரணையை அண்மித்த நாள் ஆகையால் சந்திரன் முழு நிலவாகிக் கொண்டிருந்தான். பாலொளி வீசத் தொடங்கியது.

பார்த்தீபனை வலையில் அமரச் செய்து அவனைத்தாம் தூக்கிப் பறப்பதை நினைத்துப் பறவைகள் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லிவிட முடியாது.

பெரிய பறவையும் அதனுடன் நான்கு பறவையும் முன் வலையைக் கால்களால் பிடித்துக்கொள்ள பதினைந்து பறவைகள் மறு முனைகளையும் பிடித்துக் கொண்டு பறக்கத் தொடங்கின.

குளக்கட்டில் பறவை மனிதன் விட்டுப் போன கம்பளத்தை மடித்து விரித்து தனது ஆயுதங்களுடன் வலையில் அமர்ந்திருந்தான் பார்த்தீபன்.

வலைக்குள் அமர்ந்திருக்கும் அவனுக்கு கடல் அலைகள் ஆடுமாப்போல் சந்திரனும் ஆடுவதாகப் பட்டது. சந்திரனைச் சூழசிலநட்சத்திரங்கள்மின்னியதையும், நீல வானில் வைரக் கற்கள்போன்று நின்று சிரித்த அவற்றையும், பறவைகள் ஆனந்தத்துடன் பறந்துகொண்டிருந்ததையும் இரசித்த வண்ணம் இருந்த பார்த்தீபனுக்கு, பறவைகள் மலையை வந்தடைந்த சங்கதி தெரியவில்லை.

✦ ✦ ✦

தன்னைத் தூக்கி வந்த பறவைகளும் அருகாகப் பறந்து வந்த பறவைகளும் ஆரவாரித்தபோது இத்தனை வேகமாக வந்து சேர்ந்ததில் வியப்படைந்த அவன், கம்பளத்தையும் ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு மலையில் துள்ளிக் குதித்துக் கால் பதித்தான்.

"பார்த்தீபா வந்து விட்டாயா? எப்பாடு பட்டாயினும் நீ யோதிநிலாவை மீட்டுப்போக வருவாயென்ற நம்பிக்கை எனக்கிருந்தது" குரல் கேட்டு அதிர்ந்து போனான் பார்த்தீபன். அசரீரியான அதே குரல்.

"யாரை உயிரோடு பிடித்துக்கொண்டு, அது எடுத்து வந்த வைரத்தையும் கைப்பற்றிப் போவதாகச் சூளுரைத்து வந்தாயோ அந்தத் தங்கப் பறவை நான் தான்."

இப்போதுதான் பார்த்தீபனுக்கு அந்தக் குரல் தங்கப் பறவையினுடையது என்று தெரிந்தது.

"நான் உன்னைக் கண்டு கொள்ளாதபடி என்னைப் பின்பற்றி வந்த நீ, உன்னை யாரென்று காட்டாமைக்கு என்ன காரணம்?"

"என்னைப் பிடித்துப் போகவும் வைரத்தைக் கவர்ந்து போவதற்காகவும் மாத்திரமே வந்த நீ என்னைப் பிடித்துப் போயிருந்தால், யோதிநிலாவை மீட்டெடுப்பது யார்? அதனாலேதான் நான் என்னைக் காட்டவில்லை." என்று கூறிய தங்கப் பறவை, "பறவை மனிதன் விழித்தெழுந்து விட்டால் காரியம் கெட்டுவிடும். விரைந்து புறப்பட்டு மறுகரை சேர்ந்த பிற்பாடு விவரமாக எல்லாவற்றையும் கூறுகிறேன். எல்லோரும் இப்போதே புறப்படுவோம்" என அவசரப்பட்டது.

"யோதிநிலா வந்துவிட்டாளா?"

பெரிய பறவை வினவியதும் பற்றையில் மறைந்திருந்த யோதிநிலா வெளியாக இருந்த இடத்துக்கு வந்தாள்.

✦ ✦ ✦

அவளைக் கண்டு அதிர்ந்து, தனது கண்களைக் கசக்கி, மீண்டும் மீண்டும் அவளைப் பார்த்துக் கேட்டான், "அரச குமாரி இங்கே எப்போது வந்தீர்கள்...?"

"இவரும் உங்கள் நாட்டு அரச குமாரி தான். மதனாபுரி அரசகுமாரிதான்" என்றது தங்கப் பறவை. "நான் தங்கப் பறவையையும் வைரத்தையும் கண்டுபிடித்து அரசகுமாரியான எழில்நிலாவிடம் சேர்த்துவிட வந்தவன் ஒருதுளி நேரத்தில் உப்பரிகையில் கண்ட அந்த அரசிளங்குமாரி என்றேஇவரைநினைத்தேன். அவருக்கும் இவருக்கும் கடுகளவு வித்தியாசம் கூடத் தெரியவில்லை அரண்மனை உப்பரிகையில் அரசகுமாரியை நான் பார்த்தபோது அணிந்திருந்த அதே ஆடையையும்ஆபரணங்களையுமேஇவர்இப்போது அணிந்து நிற்பதுபோல எனது கண்களுக்குத் தெரிகிறது. தங்கப்பறவையே"

"அதெல்லாம் பெரிய கதை. கரை சேர்ந்து சொல்லுவேன். இப்போது இங்கிருந்து புறப்படுவோம்" என்று தங்கப் பறவை சொல்லி முடிக்கவும், "யோதிநிலாவைக் கடத்திக்கொண்டுபோக வந்த உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றபடி பெரும் சத்தமிட்டுக்கொண்டு பறவை மனிதன் வரவும் சரியாக இருந்தது நேரம். பெரும் சத்தமிட்டுக்கொண்டு வந்த பறவை மனிதன் பறவைகளின் நடுவே குதித்தான்.

(தொடரும்)



# என் தோழி....

வெண்நிலவு முத்தமிடும்
வெள்ளை மணல் பரப்பு
நிலவுக் காதலியுடன்
கதை பேசியபடி
அலை கள் கரையை முத்தமிட்டு
கடல் சேர்ந்து கொண்டிருந்தன
மீண்டும்... மீண்டும் மீண்டும்
என் தோழி மட்டும்
தொலைவில்

மொட்டவிழாத சிரிப்புடன்
ஒரு சின்னப்பார்வை - அதை
கண்களால் கௌவிக்கொண்டாள்
என் காதலி - நானும் தான்

நெருக்கமாக என்னுடன்
ஒட்டிக் கொண்டாள்
காதலி மனைவியானபின்...

அதே தோழி
அதே கடற்கரை
தொலைவிலிருந்து
என்னைப் பார்த்துவிட்டாள்போலும்
இங்கு என் பார்வை இல்லை
எறும்பு கடித்ததுபோல்
ஓர் உணர்வு கையில்
என் மனைவியின்
கோபமான தீண்டலது
அந்த வார்த்தை
உதடுகள் விரியாமல்
பல் இடுக்குகளிடையே சீறியது

என் பார்வை அங்கே
அப்போதுதான் கவனித்தேன்
மண் பார்த்தபடி
நாகரிகமாக
ஒரு பெண் தூரத்திலே
அவள்தான் என் தோழி
இப்போது மட்டுமல்ல
எப்போதும் அவள் என்
தோழிதான்



ஆர்.எஸ்.ஆனந்தன்

கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென் கிழக்கு திசையில் இருந்து

அனார்கலி

தொகுப்பு



## தோற்கடிக்கப்போம்!

"எமது உரிமைகளைப்பெற்றுத்தராத, ஏமாற்று வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, நம்பவைத்து மோசம் செய்து வரும்போது அரசியல் கட்சிகளை உள்ளூராட்சித் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்."

இவ்வாறு, அம்பாறை மாவட்ட காணி உரிமைக்கான செயலணிவெளியிட்டுள்ள துண்டுப்பத்திரிகை ஒன்று அறைகூவல்விடுத்துள்ளது.

பொறுத்தது போதும், பொங்கி எழு!

## வெற்றி நிச்சயம்!

கல்முனை மாநகரசபைக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று மீண்டும் மாநகர் சபை ஆட்சியைக்கைப்பற்றுமென பிரதிவிளையாட்டுத்துறை அமைச்சர் எச்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கல் முனைமாநகரசபைக்குட்பட்ட சகல முஸ்லிம் வட்டாரங்களிலும் போட்டியிடும் ஒரே கட்சி முஸ்லிம் காங்கிரஸே என்பதாலும், முஸ்லிம் காங்கிரஸ் பக்கம் மக்கள் வழமை போல் அணிதிரண்டுள்ளதாலும் கூடிய ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைக்கும் வாய்ப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு நிச்சயம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபைமண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது எழுப்பட்ட கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் ஹரீஸ் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

*"வெற்றி நிச்சயம் என்பதை எந்தக்கட்சிக்காரர்கள்தான் மேடையில் முழங்கவில்லை?*



## விடியல் கிடைக்கும்

பெருந்தேசிய வாதிகளின் நிலலிலும், சிங்களப்பேரினவாதத்தின் கீழும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ முடியாது. இதற்கு வடக்கு, கிழக்கு இணைப்பே சாத்தியமாவதுடன் இந்த இணைப்பே விடியலைத்தரும்.

இவ்வாறு பாண்டிருப்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னியின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் கூறினார்.

வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம் தலைமைகள் ஏற்காவிட்டால், தமிழ்மக்கள் தம்மைத்தாமே பாதுகாக்கவேண்டிய நிலை வரும்" எனவும் அவர் கூறத்தவறவில்லை!



## போர்க்கொடி

கல்முனை தனியார் பேருந்து உரிமையாளர்கள், பேருந்துகளை நிறுத்திவைப்பதற்கென நிரந்தரமான இடமொன்றை ஒதுக்கித்தருமாறு போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கல்முனை நகரிலுள்ள இ.போ.ச. பேருந்து நிலையத்துக்கு அருகில், பேருந்து நிறுத்தப்படுவதற்குத்தடை செய்யப்பட்ட பொலிஸ் நிலைய வீதியில் கூட தற்சமயம் தனியார் பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன. "கல்முனை மாநகர சபையும், உரிய அதிகாரிகளும் இந்த அவல நிலையைக் கண்டு கொள்ளாதிருப்பது ஏனோ? எனப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

*நிரந்தரத் தரிப்பிடம் கிடைப்பது எப்போது தானோ!*

## தோலுரித்தாராம்!

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலி நீண்ட இடைவெளிக்குப் பிறகு அட்டாளைச்சேனைப்பிரதேசத்துக்குச் சென்று கடந்த வாரம் தேர்தல் பரப்புரைக் கூட்ட மொன்றில் கலந்து கொண்டுள்ளார்.

"முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் நான் கோரியதாக அட்டாளைச்சேனை மக்களிடம் நயவஞ்சகத்தனமாகக் கூறி அந்த மக்களுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பகைமையை உண்டாக்கிவிட்டதால் சில வருடங்கள் அங்கு நாம் செல்லவில்லை" என அங்கு கூறிய ஹஸனலி குறித்த பரப்புரைக் கூட்டத்தில் சத்தியம் செய்து தாம் தேசியப்பட்டியல் நியமனத்தைக் கோரவில்லை என்ற உண்மையை அட்டாளைச்சேனை மக்களுக்கு விளக்கியதாகவும் மற்றொரு பரப்புரைக் கூட்ட மேடையில் உரையாற்றும்போது கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் இந்த நயவஞ்சகம் காட்டியதாகவும் அவர் கூறினார்.

*சத்தியம் வெல்லும் நயவஞ்சகம் தோற்கும்!*




## இது என்ன நீதியோ?



அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து யானைச்சின்னத்தில் போட்டியிடுவது குறித்து தேர்தல்களத்தில் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

முக்கிய தளத்தில் கட்சியின் மரச்சின்னத்தையே யானையிடம் அடகு வைத்து தள்ளுகின்றனர்.

ஆனால், வன்னியில் யானைச் சின்னத்தில் போட்டியிடும் அமைச்சர் ரிஷாத், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனது சின்னத்தை அடகு வைத்து விட்டதாகப் புலம்பித்திரிகிறார். இது நியாயமா? அவருக்கு ஒரு நீதி, எமக்கு ஒரு நீதியா" எனத் தமது கட்சிப்பரப்புரை மேடைகளில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பித் தனது குமுறலை வெளிப்படுத்தி வருகின்றார்.

"தன்னைத்திருத்திய பின்மற்றவரைத்திருத்தலாமே! ஹக்கீமின் குமுறலில் என்ன தவறிருக்கிறது?"பொதுமக்கள் கேட்கிறார்.

## யானைகள் மான்கள் ஆகின!

அம்பாறைமாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து யானைச்சின்னத்தில் போட்டியிடும் விவகாரம், இந்த மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பிரமுகர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இருந்து வருவோரைக் கொதிப்படையவும், விரக்தி அடையவும் செய்துள்ளது.

வேட்பாளர்களைத் தெரிவு செய்தபோது கூட ஐக்கிய தேசியக்கட்சிக்காரர்களை முஸ்லிம் காங்கிரஸ் தட்டிக்கழித்துச் சர்வாதிகாரப்போக்கில் செயற்பட்டுள்ளதாகப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புறக்கணிப்பால் கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட மருதமுனை ஐக்கிய தேசியக்கட்சி மத்திய சம்மேளனமானது சுயேச்சைக்குழு- 02 சார்பாக மருதமுனையின் நான்கு வட்டாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. நீண்ட கால ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களான இவர்களது சுயேச்சைக்குழுவுக்கிடைத்துள்ள சின்னம் மான் ஆகும். யானைகள் மான்களாகமாறியுள்ளமை வாக்காளர் மத்தியில் சிலாகித்துப்பேசப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரசுக்குப் பாடம் புகட்டுவோமென மான்கள் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் துள்ளிப்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

முருகேசு சச்சிதானந்தம்

கட்டுரை

# சுதந்திரத்தை தொலைத்துவிட்டு தேடும் தமிழர்கள்

'1947 இல் இந்தியா சுதந்திரமடைந்தது. 1948 இல் இலங ;கைக்கு சுதந்திரம் கிடைத்தது' என்று பொதுவாகக் கூறுவதுண்டு. இங்கு சுதந்திரம் என்று விளங்கப்படுவது பிரித்தானியர் அதுவரை தம்வசம் வைத்திருந்த அதிகாரத்தை சுதேச தலைவர்களிடம் கொடுத்துச் சென்றதாகும். இது ஒரு சம்பவம் மட்டுமே. ஆனால் சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் உள்ளுணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. ஒரு நெருக்கடியான சூழலுக்கு முகம் கொடுத்து அதற்கு எதிராகப் போராடி தாம் நினைத்த ஒன்றை வெற்றி கொள்வது விடுதலை எனப்படுகிறது. இந்த விடுதலையின் அடுத்த கட்டமாக அல்லது அந்த விடுதலையின் பயனாக மக்கள் சந்தோசமாக வாழ்வதே சுதந்திரம் எனப்படும். இந்தியா இலங்கை போன்ற நாடுகள் ஏற்கனவே மன்னராட்சிக்கு உட்பட்ட நாடுகள் ஆகும். மன்னராட்சியில் 'ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அந்த வகையில் பார்த்தால் சுதந்திரம் என்ற சொல்லின் அர்த்தத்தை அல்லது அதன் பெறுமானத்தை ஐரோப்பிய சிந்தனைகளிலிருந்தே பலரும் பெறமுடிந்தது.

இலங்கையின் சுதந்திரத்தை எடுத்துக்கொண்டால் 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டதுடன் முழு இலங்கையும் பிரித்தானியர் வசமானது. பிரித்தானியரின் அடக்குமுறைகளுக்கு எதிராக சிங்கள தேசியவாதிகளே அதிகம் கிளர்ச்சி செய்தார்கள்.

1817 ஆம் ஆண்டில் பிரித்தானியருக்கு எதிராக முதலாவது கிளர்ச்சி ஊவாப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. 1848 இல் மாத்தளைக் கிளர்ச்சி புரான் அப்பு தலைமையிலும் கொங்கலேகொட பண்டா தலைமையிலும் முன்னெடுக்கப்பட்டது. 1924 இல் யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர் இந்திய அகிம்சைப் போராட்டத்தை அடியொற்றி முன்னெடுத்தனர். யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற அமைப்பு பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என மாற்றப்பட்டது.

### பிரித்தானியரின் ஆட்சியில் அதிகம் பாதிக்கப்பட்ட சிங்களவர்

ஆனால் பிரித்தானியருக்கு எதிராக இப்போராட்டங்களில் தமிழரும் சிங்களவரும் இணைந்த ஓர் இறுக்கமான போராட்ட வடிவம் முன்னெடுக்கப்படவில்லை. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெருந்தொகையான மக்களாகவிருந்த சிங்களவரே அதிகம் பாதிப்பிற்குள்ளாகினர். சிங்களவர் அதிகளவில் கொல்லப்பட்டனர். குளங்கள் உடைக்கப்பட்டன. விளைந்த நெல் வயல்கள் எரிக்கப்பட்டன. எதிர்த்த பலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். எனவே பிரித்தானியரின் நிர்வாகத்திலிருந்து விடுதலை பெற்ற சிங்களவர் சுதேச ஆட்சி சுதேச வைத்தியம் சுதேச கல்வி என எல்லாவற்றையும் உருவாக்கிவிட நினைத் தார்கள். 1796 இல் பிரித்தானியர் இலங்கையில் கால்பதித்த பின் 1803 இல் பண்டாரவன்னியன் கற்சிலைமடுவில் வைத்து பிரித்தானியப் படையினரால் வெற்றி கொள்ளப்படும்வரை தமிழரின் எதிர்ப்பு வன்னிப் பகுதியில் இருந்ததாகத் தெரிகிறது. அதன் பின்னர் சிங்களவரைப் போல வடகிழக்கில் பிரித்தானியருக்கு எதிரான போராட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. ஆங்கிலம் கற்பதிலும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதிலும் தமிழர் ஆர்வம் காட்டினார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பிரித்தானியர் காலத்தில் நல்ல வாய்ப்பான வாழ்க்கையை வாழ்ந்ததாகக் கூறலாம். இலங்கையில் சகல நிர்வாக திணைக்களங்களிலும் ஆங்கிலம் கற்ற தமிழர் பெருமளவிற்குப் பணியாற்றினார்கள். இவர்கள் தீர்மானம் எடுக்கும் தலைமைப் பதவியில் இல்லாவிட்டாலும் தொகையில் அதிகமாக இருந்தார்கள்.

உத்தியோகம் சம்பளம் என பல வரப்பிரசாதங்களை அனுபவித்த தமிழர் பிரித்தானியர் ஆட்சி கூடாது என கூற முற்படவில்லை. பிரித்தானிய இராணியை உமா தேவியாராகவோ அம்மனாகவோ மதிக்கும் அளவிற்கே இருந்தார்கள். எந்த விடயமாக இருந்தாலும் 'வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் தான்' என்று புகழும் நிலையிலேயே தமிழர் இருந்தனர். இதே போன்றதொரு மதிப்பை சிங்கள மக்கள் வெள்ளைக்காரருக்கு கொடுப்பதில்லை.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் ஆட்சி சிங்களவர்களின் கைக்கு மாறியதன் பின்புதான் தமிழர்கள் தாம் அடக்கப்படுகிறோம் அல்லது நசுக்கப்படுகிறோம் என உணர்ந்தார்கள். சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார்கள். இந்த அகிம்சைத் தலைவர்கள் யாரும் மகாத்மா காந்திபோல விடாப்பிடியான தலைவர்கள் போலவோ சாகத் தயாராகவோ இருக்காததன் விளைவே பின்நாட்களில் தலைவர்கள் இளைஞர்கள் பொதுமக்கள் குழந்தைகள் கர்ப்பிணிகள் எனப் பலர் சாவதற்கு காரணமாய் அமைந்தது.

தமிழரால் தொடக்கப்பட்ட ஆயுதப்போராட்டம்கூட 2009 இல் முழுமையாக முறியடிக்கப்பட்டது. இதனால் சுதந்திரம் என்ற ஒன்றை தமிழ் மக்களால் உணரமுடியவில்லை. ஆனாலும் மிக அதிகமான விலை கொடுத்த மக்களாக தமிழரே உள்ளனர். சிங்களப் பெரும்பான்மை மக்களின் விடிவிற்காகவும் சந்தோசத்திற்காகவும் நிலைபேற்றிற்காகவும் சிங்களத் தலைவர்கள் பாடுபட்டார்கள். இதில் தமிழ் முஸ்லிம் இனங்கள் பாதிக்கப்பட்டபோதிலும் அதற்கெதிராக கிளர்ந்து வெற்றிபெற முடியாத கட்டமைப்பே சிங்களவரிடம் காணப்படுகிறது. அரசியல்வாதிகள் நிர்வாக பொறிமுறையை இயக்குகின்ற சிங்கள நிர்வாகிகள் ஆகியோர் மிகவும் வினைத்திறன் மிக்க வகையில் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் தமிழர் பிரித்தானியருக்கு எதிராகப் போராடியிருக்கிறார்கள். அதனால் பல தலைவர்களும் உருவாகியிருந்தார்கள். இலங்கைத்தமிழர் தமது சுதந்திரத்திற்காக 1948 இன் பின்பான காலத்திலேயே போராடத்தொடங்கினார்கள். அது சிங்கள ஆட்சியாளருக்கு எதிரான போராட்டமே. 1983 இன் பின்பான காலப்பகுதியில் தமிழீழமே தீர்வு என்ற எண்ணத்தில் சாகத் தயாராக இருந்த இளைஞர்களே படகேறி இந்தியாவிற்குச் சென்றார்கள். தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் வெள்ளைவேட்டிக் கலாசாரமும் சின்னவீடு, சொத்துச் சேர்ப்பது போன்ற விடயங்களை அரசியல் என்று நம்பும் நிலை அதன் பின்னர் ஏற்பட்டது. இது ஈழத்தமிழர் என்ற தனித்துவத்தை இல்லாது செய்துவிட்டது.

### தமிழர்களுக்கு சுதந்திரம் சாத்தியப்படாதது ஏன்?

ஆயுதப் போராட்டம் விடுதலைப் போராட்டம் என்று வரையறை செய்வதற்கான ஆதாரங்களை விட பயங்கரவாத செயற்பாடுகளுக்கான ஆதாரங்களையும் உள்ளடக்கங்களையும் அதிகம் (ஜனநாயக மீறல்கள் படுகொலைகள் என்பன மனித உரிமை நியமங்களுக்கு மாறானதாக அடையாளம் காணப்பட்டது) கொண்டிருந்தமையால் சுதந்திரப் போராட்டம் அதன் பின்பான சுதந்திரம் என்ற அம்சங்கள் தமிழருக்கு கிடைக்காது போய்விட்டது. 2009 இல் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் வடக்கிற்கான பிரதான சாலைகளும் புகையிரதப் பாதைகளும் நிர்மாணிக்கப்பட்டன. தாம் பெற்ற வெற்றியை அனுபவிக்கும் வழிவகைகளையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள். போர் வெற்றிவிழாக்களை வருடா வருடம் நடத்தியும் வருகிறார்கள். சிங்கள மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படும் வகையில் எந்தச் சிங்களத் தலைவரும் செயற்படப்போவதில்லை. வீடமைப்பு நகர அபிவிருத்தி போக்குவரத்து விவசாயம் மீன்பிடி கைத்தொழில் என சகல துறைகளிலும் சிங்கள மக்கள் திருப்திகொள் கின்றனர். தமிழர் ஒவ்வொரு சுதந்திர தினத்தையும் துக்கமாக நினைவுகூராவிடினும் மகிழ்ச்சியடைந்ததாக இல்லை. தமிழர் எப்போதும் கிடைக்கின்ற சுதந்திரத்தைக் கூட அனுபவிப்பதில்லை. சுதந்திரம் பற்றிய அவா இருப்பவர்களுக்கு மட்டும் தான் அதனை அனுபவிக்கமுடியும். அமைதியை விரும்பும் ஒருவன் ஒலிபெருக்கி நிறுத்தப்பட்ட கணத்திலிருந்து அதனை அனுபவிக்க முடியும். தமிழரைப் பொறுத்தவரையில் அதிகம் அபிலாசைகளுடன் தனித்து வாழ நினைப்பதும் சுதந்திரத்தை அனுபவிக்கவோ மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவே முடியாத வர்களாகவும் உள்ளனர். சுதந்திரம் என்பது கஷ்டப்பட்டு பெறுவதன் மூலம் தான் அதனை உணர்வு பூர்வமாக அனுபவிக்க முடியும்.

### தமிழர்களுக்குச் சுதந்திரம் எட்டாக்கனியாக உள்ளது

ஒருவன் சுதந்திரமாக வாழுகிறானா? இல்லையா என்பதை ஒப்பீடு ஒன்றின் மூலமே அளவிட முடியும். உதாரணமாக வடகிழக்கு மக்கள் கொழும்பு செல்வதாக இருந்தால் முன்பு இருந்த கெடுபிடிகள் தற்போது இல்லை. ஆனால் தமிழ் மக்களின் இயல்பு காரணமாக அதிலிருந்து மீண்ட சுதந்திரத்தை அனுபவிப்பதில்லை. நீண்டகாலம் கொழும்பில் வாழும் ஒருவர் இப்படிக் கூறினார். 'வேளைக்கே வெளிநாட்டுக்குப் போயிருக்கலாம். அவ்வாறு சென்றிருந்தால் குறைந்தபட்சம் ஒரு ஜனநாயக சூழலில் வாழ்ந்து செத்திருக்கலாம்' என்றார். இதில் அவர் சுதந்திரம் என்று எதைக் கருதுகிறார் என்று புரிகிறது.

தற்போதுள்ள வாழ்க்கையில் சுதந்திரமின்மையை உணரும் ஒருவன் இதைவிடவும் ஒரு நெருக்கடியான நிலைமையை எதிர்காலத்தில் சந்திக்கும்போதுதான் உணரமுடியும் தற்போது இருப்பது சுதந்திரமானது என்று. தற்போது உள்ள சுதந்திரம் எத்தனைவீதம் என்பதல்ல முக்கியமானது. அந்தக் குறைந்த வீதத்தையாவது முழுமையாக அனுபவிக்கக் கிடைத்ததா என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

நிலங்களைப் பறிகொடுத்த உயிர்களைப் பறிகொடுத்த வாழ்வாதாரத்தை இழந்த படிப்பைக் கைவிட்ட இனப்பெருக்கத்தைக் குறைத்துக்கொண்ட மதுப்பாவனையைக் கூட்டிக்கொண்ட ஊனமுற்றவர்களை அதிகம் தாங்கிய முதிர்கன்னிகளை அதிகம் கொண்ட விதவைகளை அதிகம் கொண்ட தேசிய பொருளாதாரத்தில் பங்கெடுக்காத தேசிய அரசியலில் பங்கெடுக்காத கோயில் கட்டுவதிலும் திருமண மண்டபங்களைக் கட்டுவதிலும் அதிகம் முதலீடுகளைச் செய்கின்ற சொந்த நிலத்தை விட்டு தினமும் வெளிநாடுகளை நோக்கி ஓடுகின்ற ஒற்றுமையைத் தொலைத்துவிட்ட பழமை பேனாத ஒரு நோயுற்ற சமூகமாக ஆகிவிட்டதால் தமிழர் 'சுதந்திரம்' என்பதை எட்டாக் கனியாக்கிவிட்ட ஒரு மக்கள் கூட்டமாகவே தமது இறுதிக்காலத்தை இலங்கைத் தீவில் கழிக்கமுடியும். அதுவரை இலங்கையின் சுதந்திர தினத்தில் கலந்துகொள்ளுகின்ற தமிழ்த் தலைவர்களைப் பார்த்து புழுங்கிக்கொள்ள முடியுமே தவிர வேறு எதையும் சாதிக்க வாய்ப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.அருணாசலம்

கட்டுரை



# தேர்தலின் பேரால் காட்டு தர்பார்

ஒரு நாட்டின் குடிமகனொருவர் வாக்களிக்கும் வயதை எட்டியதும் அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார். வாக்களிக்கும் தகுதியைப் பெற்றதும் அவர் தான் விரும்பும் கட்சி, தலைவர், விரும்பும் கொள்கை எனத் தீர்மானம் எடுக்கும் தகுதியையும் பெற்றுவிடுகிறார். ஒரு குடிமகன் தேர்தலில் போட்டியிடுதல், தமது துண்டுப் பிரசுரங்களை ஒட்டுதல், விளம்பரத் துண்டுகளை வெளியிடுதல் என அவருக்கு இருக்கின்ற உரிமைகளை ஜனநாயக உரிமை என்கிறோம். அதாவது ஒரு குடிமகனுக்கு இருக்கக் கூடிய உரித்தே அது.

தமிழரின் வாழ்வியலில் தேர்தல் ஜனநாயகம் என்பது பிழையான அர்த்தத்தில் விளங்கிக் கொள்ளப் பட்டு வருகிறது. உதாரணமாக ஐந்து நபர்கள் ஒரு தேநீர்க் கடைக்குள் செல்லும்போது தலைமை தாங்கிச் செல்பவர் தனக்கு எதைச் சாப்பிடவேண்டி இருக்கும் அல்லது அருந்தவேண்டி இருக்கும் என்பதை மனதில் கொண்டு, ஏனைய நால்வரது நிலையையும் தீர்மானித்துக் கொள்கிறார். 'ஐந்து ரீ போடுங்கள்... வடை கொண்டுவாருங்கள்... ஐந்து பேருக்கு இடியப்பம் தாருங்கள்' எனக் கடைக்காரரிடம் கேட்கும் கலாசாரமும் 'அந்த மனுசன் ஓடர் குடுத்திட்டார். இனி வேண்டாம் என்றால் பேசுவார். சரி இதையே சாப்பிடுவம்' என்று மனதுக்குள் புழுங்கிக்கொண்டே அதைக் கூட வந்தவர்களும் ஏற்றுக்கொள்வர்.

**சுவரொட்டிக் கலாசாரம் மாற்றமுறுமா?**

இதே நாலு நபர்களும் ஒரு வெள்ளைக்காரருடன் தேநீர் கடைக்குப் போனால், அவர் ஒவ்வொருவராக 'என்ன சாப்பிட விரும்புகிறீர்கள்? என்ன குடிக்க விரும்புகிறீர்கள்?' என்று முதலில் தான் கேட்டபின்புதான் கடைக்காரரிடம் ஓடர் கொடுப்பார்.

ஐந்து பேர் ஒரே நேரத்தில் ஒரே இடத்துக்குச் சென்றால்கூட அவர்கள் அனைவரும் ஒரே மனநிலையில் இருப்பார்கள் என்று கூறிவிட முடியாது. சிலர் சூடாக எதையாவது குடிக்க விரும்புவர். அதிலும் கோப்பி, தேநீர், பால் எனப் பல வேறுபாடுகள் இருக்கும். குளிராக எதையாவது குடிப்பது, வெறும் தண்ணீர் மட்டும் குடிக்க விரும்புவது அல்லது எதையும் குடிக்க விரும்பாமல் இருப்பது என வேறுபாடுகள் இருக்கவே செய்யும். அது ஒவ்வொரு மனிதனுடைய மனப்பாங்கின் பாற்பட்டதாகும். தமிழர் மத்தியில் காணப்படுகின்ற வாக்களிப்பு என்பது 'ஐந்து ரீ போடு' என்று எவருடைய அனுமதியும் பெறப்படாமல் அவர்கள் மீது திணிப்பதைப்போலவே இருந்து வருகிறது.

ஒரு வீட்டில் பெற்றோர், பிள்ளைகள் என ஐந்து வாக்குகள் இருப்பின் அவர்கள் தமது நோக்கு நிலையில் வேறு வேறு கட்சிக்காக அல்லது நபர்களுக்காக வாக்களிக்க விரும்புவர். அதுவே ஜனநாயகப் பண்பாகும். தகப்பன் தனது மனைவியை அல்லது பிள்ளைகளை இன்னாருக்குத் தான் வாக்களிக்க வேண்டுமென நிர்ப்பந்திக்க முடியாது. அவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்படக்கூடியவர்கள் என்பதாலேயே 18 வயதான பின்னரே ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுகிறது. தேர்தலில் நிற்கும் ஒரு வேட்பாளர் தனது விளம்பர சுவரொட்டிகளை பதிப்பித்து ஒட்ட முடியும். ஆனால் அவற்றை எங்கு ஒட்டுவது என்பதில் தெரிவு இருக்கவேண்டும். தனிப்பட்ட நபர்கள் தமது செலவில் மதில்கட்டி, தமக்கு விருப்பமான வர்ணம்பூசி, அழகாகவைத்திருக்கிறார்கள். அவர்களுடைய மதில்களில் இரவு நேரத்தில் இரகசியமாகவும் பகலில் அடாத்தாகவும் தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரத்தை ஒட்டிவிட்டுத் தப்பிச் சென்று விடுகின்றனர்.

சில கட்சிகள் பிரதான வீதிகளிலிருந்து குறுக்காகப் பிரிந்து செல்லும் வீதிகளுக்கான வழிகாட்டல் கற்களை மூடியும், வீதித் திருப்பங்களிலும் வீதி ஓரங்களிலும் நாட்டப்பட்டிருக்கின்ற வீதிச் சமிக்ஞைகளை மூடியும் தமது விளம்பர சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். இவை குறிப்பிட்ட விளம்பரத்தை ஒட்டிய கட்சியையும் எவருடைய விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளதோ அந்த வேட்பாளரையும் இழிவுபடுத்துவதாகவே அமையும். கட்சியினதும் கட்சித் தலைவர்களின் பொறுப்பின்மை காரணமாகவே விளம்பர சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு முன் இந்த இடத்தில் தான் ஒட்டவேண்டும் என ஒட்டுபவர்களுக்கு அறிவுறுத்தல்களையோ ஆலோசனைகளையோ வழங்கியிருக்கவில்லை. சில கட்சிகள் வேறு சின்னத்தில் தேர்தலில் நிற்கும் ஒருவரின் விளம்பர சுவரொட்டிகளை கிழிப்பது அல்லது சாணம், கழிவு ஓயில் அடிப்பது போன்ற விடயங்களில் தமது கையாள்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் பல உள்ளூர் தொண்டர்களை ஒழுக்கமற்றவர்களாக உருவாகிவிடுகின்றனர். பின்னர் இந்தத் தொண்டர்களே முதலில்சாணம்அடிக்கக்கூறியவரின்விளம்பரங்களுக்கு அடுத்த தேர்தலில் வேறொரு கட்சியிலிருந்து சாணம் அடிக்கின்றனர். தமிழ்த் தலைவர்களில் பலர் சட்டத்தரணிகள். சட்டத்தரணிகள் தலைமை தாங்கும் கட்சிகளே அதிகம் உள்ளன. ஆனால் அவர்கள் சட்டத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. இது தமிழ் சமூகத்திற்குக் கிடைத்த மிகவும் துர்ப்பாக்கிய மான ஒரு நடைமுறையாகும்.

ஒரு கட்சி தனது தொண்டர்களை மக்கள் மதிக்கத்தக்க வகையில் ஒழுக்கமுள்ளவர்களாக நெறிப்படுத்திவிட்டால் ஏனைய கட்சிகள் அதனைப் பார்த்து பயப்படவேண்டிய நிலையும் கட்டாயமும் ஏற்படும். ஒரு தனிநபரின் மதிலில் அத்துமீறி சுவரொட்டி ஒட்டுவது ஒரு ஜனநாயக மீறல். அதேவேளை குறிப்பிட்ட மதிலுக்குச் சொந்தக்காரன் தனது அனுமதியில்லாது ஒட்டிய விளம்பரத்தை கிழித்தெறிய முடியும். அல்லது அதே விளம்பரத்தின் மேல் 'இவனுக்கு ஒருவரும் வாக்களிக்க வேண்டாம்' என எழுத உரிமையுண்டு அல்லது எழுதினால் ஒட்டியவர்கள் உடனடியாக ஓடிவந்து தாமே கிழித்தெறியவும் வாய்ப்புண்டு. எந்த வேட்பாளரும் இன்னொரு வேட்பாளரின் சுவரொட்டி விளம்பரங்களுக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு வாக்களிக்கப் போவது மக்கள் தான். சுவரொட்டிகளை தேர்தல் திணைக்களம் பொலிஸாரின் உதவியுடன் அகற்றுவது சட்டபூர்வமானது. அதுவரை ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை தனிப்பட்ட நபர்கள் கிழிக்காது வைத்திருப்பது கௌரவமானது. நகரங்களில் எங்கு சுவரொட்டி கள் ஒட்டவென அதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அல்லது ஒரு கட்சி தேர்தல் திணைக்களத்தின் அனுமதியுடன் சுவரொட்டி ஒட்டும் கம்பங்களை நாட்டமுடியும். இது கட்டணம் செலுத்தி தொலைக் காட்சி பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது போன்ற நடைமுறையாகும்.

**அநாகரீக செயற்பாடுகளை தவிர்த்தாலென்ன?**

ஒருவரின் சுவரொட்டியை மறைத்து இன்னொருவர் சுவரொட்டிகளை ஒட்டுவதுகூட நாகரீகமற்றது. இவ்வாறு செய்யுமாறு ஒரு கட்சித் தலைவர் தொண்டர்களை நிர்ப்பந்தித்தால் ஒரு சமூகவிரோத குழுவை புதிதாக உருவாக்குவதாகவே அமையும்.

பல கட்சிகள் பிரதான வீதிகளில் தமது சின்னத்தைக் கீறி அதற்கு நேரே புள்ளடி இடுமாறு அறிவுறுத்தியுள்ளனர். ஒரு கட்சியின் சின்னத்தை நிலத்தில் கீறி அதை மக்களும் மிருகங்களும் வாகனங்களும் மிதித்துச் செல்வதற்கு அனுமதிப்பது என்பது அக்கட்சியையும் சின்னத்தையும் குறிப்பிட்ட வேட்பாளரையும் இழிவுபடுத்துவதாகவே அமையும்.

ஒரு கட்சி என்பது மக்களுக்குரியது. மக்களுக்குச் சேவையாற்றுவதற்கான ஒரு நிறுவனம். எனவே அதனைத் தமது தொண்டர்கள் மதிக்கவேண்டும் என்பதில் அந்தக் கட்சியின் தலைமை உறுதியாக இருக்கவேண்டும்.

தற்போதுள்ள நிலையில் பல வேட்பாளர்கள் முகநூலில் 'லைக்' போடுவதையும் 'ஷெயார்' பண்ணுவதையும் தேர்தல் பிரசாரம் என்று நம்புகின்றனர். மாறாக வேட்பாளர்கள் மக்களை விரும்பவேண்டும் மக்களுடன் தமது விடயங்களை நேரடியாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும். பழைய தமிழ்க் கட்சியின் ஆதரவாளர்கள் தமது கட்சியையும் சின்னத்தையும் கௌரவப்படுத்தி மதித்து நடப்பதை காணமுடியும். ஒரு கட்சியை வளர்ப்பது என்பது வெறும் ஆட்தொகையைக் கூட்டுவது அல்ல. அந்தக்கட்சியின் மக்கள் மத்தியிலான செயற்பாடுகள் காரணமாக அக்கட்சியையும் தலைவர்களையும் நோக்கி மக்கள் செல்ல வேண்டும்.

**சகல அரசியல் கட்சிகளும் அரசியல் நாகரீகம் பேணுதல் அவசியம்**

பல கட்சிகளுக்கு அங்கத்தவர் இலக்கம் கூட இல்லை. யார் பழைய அங்கத்தவர் யார் புதிய அங்கத்தவர் என்ற வேறுபாட்டைக்கூட அறியமுடியாத அளவுக்கு எழுத்துக் கணக்கு இல்லாத கட்சிகளும் தமிழர் மத்தி யில் உள்ளன. இதில் கொடுமை என்னவெனில் தமிழர்கள் இன்னமும் தங்களை படித்தவர்கள் என்று நினைத்துக்கொள்வது தான்.

பொதுவாக தமிழ்க் கட்சிகள் தமக்குள் போட்டியாக ஒரு கட்சியை இன்னோர் கட்சி பழித்து அல்லது நக்கல் செய்து தமக்குப் பலம் சேர்க்கப் பார்க்கின்றனர். இது உண்மையான ஜனநாயக வழிமுறை அல்ல. அது கட்சிகளுக்கான ஒழுக்கமோ தேர்தல் ஒன்றுக்கான விழுமியமோ அல்ல. எல்லா தமிழ்க் கட்சிகளும் முதலில் 'அறம்' பேணவேண்டும். தலைவர்கள் அதற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டுக்காட்டவேண்டும். ஒவ்வொரு கட்சியும், வேட்பாளரும் தாம் மக்களுக்கு எதைச் செய்வோம் என்று விளக்கலாமே தவிர மற்றவர்கள் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டத் தேவையில்லை. எல்லோரது கருத்துக்களையும் கருத்திலெடுத்து எவருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் தீர்மானிப்பர். அது மக்களின் பொறுப்பே தவிர வேட்பாளரின் பொறுப்பல்ல.

அறன்இழுக்காறு அல்லவை நீக்கி
மறன்இழுக்கா
மானம் உடையது அரசு

(ஆட்சிமுறைக்கு உரிய அறத்தில் தவறாமல் அறம் அல்லாதவற்றை நீக்கி வீரத்தில் குறைவுபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசனாவான்) எந்த ஒரு கட்சி 'மற்றக்கட்சிக்காரரின் சுவரொட்டிகளை அசிங்கப்படுத்தக் கூடாது' என தனது தொண்டர்களுக்கு இறுக்கமாக அறிவுறுத்துகிறதோ அக்கட்சி தேர்தல் ஜனநாயகத்தைக் கொண்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரமுடியும். அந்த ஒழுங்கு பேணப்படாவிட்டால் தமிழர் மத்தியில் அரசியல் என்பது வெறும் காட்டுத் தர்பாராக மட்டுமே இருக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.சந்திரகலா

கட்டுரை

# சமாதான நீதிவான்கள் எப்படி உருவாக்கப்படுகிறார்கள்?



ஓர் அரசியற் கட்சியின் ஆதரவாளர் இன்னொருவரிடம், 'உனக்கு ஒரு ஜே.பி. பட்டம் எடுத்துத் தருகிறேன். 25ஆயிரம் தருகிறாயா?' என்று கேட்க, மற்றவர் 'ஜே.பி. பதவி எடுத்து என்ன செய்ய முடியும்?' என்று கேட்டிருக்கிறார். பதிலுக்கு அவர், 'உள்நாட்டுக் கடிதங்களுக்கு 500 ரூபா தொடக்கம் 2ஆயிரம் ரூபா வரையிலும், வெளிநாட்டுக் கடிதங்களுக்கு 5ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் வரை வாங்கலாம். உழைக்கலாமெல்லோ' என்றாராம். இதுதான் இன்றைய சமாதான நீதிவான்களின் தொழிலாகவும் இருக்கிறது. இவர்கள் எப்படி உருவாக்கப்படுகிறார்கள்?

தான் செய்யும் சேவைகளுக்குப் பணம் அறவிடாத ஒரு சமாதான நீதிவான் 'சில ஆலய நிர்வாகங்களில் ஊழல்செய் சிலர், பொதுச் சங்கங்களில் இருந் [illegible] ாசடிகளில் ஈடுபட்டவர்கள், மற்ற [illegible] ரின் காணிகளை மடக்கியவர்கள் [illegible] ள உறுதி முடித்தவர்கள், மீற்றர் வட்டிக்குக் கொடுப்பவர்கள், தாச்சிச் சீட்டுக்காரர், வியாபாரிகள், செல்வந்தர்கள் எனச் சமூகத்திலிருக்கும் பலரும்கூட இப்படியாகச் சமாதான நீதவான்கள் ஆகியிருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார்.

அவ்வாறெனில், இந்தச் சமாதான நீதிவான்கள் புத்திஜீவிகளாகவும் சமூகத்துக்குத் தொண்டு செய்யக்கூடியவர்களாகவும் சரியான மதிப்பீடுகள் செய்து கண்டுபிடிக்கப்பட்டு நியமிக்கப்படுவதில்லையா?

இப்படிப்பட்டவர்களுக்கு எவ்வாறு இந்தப் பதவிகள் கிட்டுகின்றன?

இது இலங்கை அரசால் வழங்கப்படுகின்ற ஒரு கௌரவப் பதவி. பணத்துக்காக இந்தச் சேவையைச் செய்ய முடியாது. மிகவும் நேர்மையான, சமூக அக்கறையுள்ள, குற்றப்படாதவர்களையே இந்தச் சேவைக்குத் தெரிவு செய்கிறோம் என்றே அரசு நினைக்கிறது. ஒரு சமாதான நீதவானைத் தெரிவு செய்யவேண்டிய தேவை ஏன் ஏற்படுகிறது? ஒரு நாட்டின் நம்பிக்கையைக் கிராம மட்டத்தில் ஏற்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும். ஓர் ஊரவரை அல்லது ஒரு குடிமகனை ஒரு முக்கிய தேவைக்காகச் சிபார்சு செய்யவேண்டிய நிலை சட்டபூர்வமாக ஏற்படுவதால் அதை ஊரிலுள்ள கண்ணியமான ஒருவர், அல்லது பக்கச் சார்பற்றவர் உறுதிப்படுத்த வேண்டுமெனக் கேட்கப்படுகிறது.

உதாரணமாக அடையாள அட்டையில் உள்ள பெயரும் ஏனைய ஆவணங்களில் உள்ள பெயரும் சற்று வேறுபட்டதாக இருப்பின் 'இவ்விரு ஆவணங்களில் உள்ள பெயர்களையும் கொண்ட நபர் ஒரேஆள் தான்' எனப் பரிந்துரை செய்து உறுதிப்படுத்துவதற்கான ஒரு நீதிபதியே சமாதான நீதிவான். அந்தப் பொறுப்பில் இருப்பவரே ஒரு சுற்றுமாற் றுக்காரன் என்றால் அந்தப் பதவியால் ஒருபோதும் சமூகத்துக்கு நன்மை ஏற்படாது.

**சமாதான நீதிவான் பதவியை பலதரப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்துவோர் பலர் உளர்**

எவராவது ஓர் அரசியல் பிரதிநிதி 'திறமானவர்', 'தங்கக் கம்பி' என்று சிபார்சு செய்வதை வைத்தே இந்தப் பதவியை வழங்கிவிடும் நிலை இப்போது நீடிக்கின்றது. சமூகம் சார்ந்த அறிவும், எதையும் சேவை மனப்பாங்குடன் அணுகாதவர்களுமே இதற்குள் உள்வாங்கப்பட்டுவிடுகிறார்கள். சமூகத்தில் வேறு பதவிகளில் இருப்பவர்கள், இன்னொருவரால் தேர்தல் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ அந்தப் பதவி பறிக்கப்பட வாய்ப்பு இருந்தால் தம்முடன் நிரந்தரமாக ஒட்டியிருக்கக்கூடிய சமாதான நீதிவான் பதவியைப் பெற முயற்சிக்கின்றனர். உள்ளூர்ப் பிரமுகர்கள் அரசியற் கட்சிகளுக்கு அதிகம் தேவைப்படுபவர்களாக இருப்பதால், பல கட்சிகள் தமது ஆதரவாளரைச் சமாதானப்படுத்துவதற்காக இந்த அதியுயர் விருதான ஜே.பி பட்டத்தை இவ்வாறானவர்களுக்கு வழங்குவதற்குப் பரிந்துரை செய்கின்றன.

அரசியல்வாதிகள் மூலம் கடந்த ஆட்சியில் சமூகத்தில் தவறான பலரும் அரசவேலைவாய்ப்புக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். அது ஓரளவுக்கு நன்மை பயப்பதே. அந்தக் குடும்பத்துக்கு ஓர் உந்து சக்தியாகவும் அந்தத் தனிநபர் மூலம் சமூகம் எதிர்கொள்ளவிருந்த துர்நடத்தைகளும் தவிர்க்கப்படலாம். ஆனால் பிழையான ஒருவருக்கு ஜே.பி. பதவியைப் பெற்றுக்கொடுத்தால் அது அந்தச் சமூகத்தையே பாதிப்பதாக அமையும்.

பல கட்சித் தலைவர்களின் போட்டியையும், தேவையையும் உள்ளூர் பிரமுகர்கள் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். 'அவனுக்கு ஜே.பி கொடுத்தாச்சு, எனக்கும் ஜே.பி. கிடைத் தால் தான் இறங்கி வேலை செய்யலாம்' என நிபந்தனை விதிக்கின்றனர். சிலரது தெரிவு மிகவும் பிழையானது என்று தெரிந்துகொண்டும் தமது செல்வாக்கை அந்த ஊரில் தக்க வைப்பதற்காக ஜே.பி. பதவியைப் பெற்றுக்கொடுக்கின்றன சில கட்சிகள்.

ஒரு கிராம சேவகர் பதவி என்பது போட்டிப்பரீட்சை ஊடாக வழங்கப்படுகின்றது. எனவே அவர்களை வைத்து ஊருக்குள் அரசியல் நடத்த முடியாத நிலை கட்சித் தலைவர்களுக்கு. ஆனால் ஒரு ஜே.பி. பதவியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் தமது கட்சி அமைப்பாளர் ஒருவர் அந்தக் கிராமத்தில் இருப்பதாகவே அந்தக் கட்சி உணருகின்றது. முன்பு மத்திய அரசில் ஆட்சியமைக்கும் கட்சிகளே இது விடயத்தில் கவனம் செலுத்தின. ஆனால் தற்போது தேசியம் பேசும் கட்சிகளும் ஜே.பி. பதவியைப் பெற்றுக்கொடுத்து தமக்கு ஆதரவாளர் ஒருவரைத் தேடிக்கொள்ளத் தயாராகவே உள்ளன. இத்தகைய நிலை காரணமாகப் பிழையான பலர் சமாதான நீதிவான்களாக மாறி வருகின்றனர். சில சமாதான நீதிவான்கள் தாம் கையொப்பமிடும் ஒவ்வொரு ஆவணத்துக்கும் இவ்வளவு பணம் என்று அறவிடுகின்றனர். அதில் சிலர் சற்று வித்தியாசமாக முதியோர் இல்லங்கள், அநாதை இல்லங்கள், விளையாட்டு மைதானங்கள், அறநெறிப் பாடசாலைகள் அமைத்தல் என்று எதையெதையோ எல்லாம் தமது பொதுத் தொண்டுகளாக வெளிக்காட்டி, சிட்டைபோட்டு பணம் பறிக்கும் நிலையும் உண்டு. அவர்கள் சிட்டை தருகிறார்கள் தானே என்று எவராவது வாதிடலாம். அந்தச் சிட்டைப் புத்தகமே சட்டபூர்வமற்ற களவான விடயம் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

ஒரு சமூகப்பெறுமானமும் இல்லாத பலர் தம்மைத் தேடி ஊரவர்கள் வரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக சமாதான நீதிவான் பதவியைப் பெற்று அந்தப் பதவியை பெரிய விடயமாக ஊதிப் பெருப்பித்துக்காட்ட முனைகின்றனர். சில ஜே.பி.களிடம் எவரும் கையொப்பம் பெறச் செல்வதேயில்லை. ஆனால் அவருக்கு அந்தப் பட்டத்தைப் பரிந்துரை செய்தவரும் அவரது கட்சியும் 'இந்த நபருக்கு ஜே.பி. கொடுத்திருக்கிறோம்' என ஏதோ அரச வேலை கொடுத்ததற்குச் சமதையாகக் கூறிக்கொள்கின்றனர்.

**தகுதியற்ற நபர்களுக்கும் சமாதான நீதிவான் பதவிகள் வழங்கப்படுகின்றன**

சிபார்சு செய்பவர்கள் இன்னாருக்கு ஜே.பி. பட்டம் கொடுக்க விருக்கிறோம். அவரது கிராமத்தவர்களின் கருத்தை அறிய விரும்புகிறோம் என்று அறிவித்தால் அந்த நபருக்கு எதிராகவே பலர் எழுதுவர் அல்லது 'தற்போதுள்ள ஜே.பி.மாரின் சேவை திருப்திகரமாக உள்ளதா?' என்ற எழுத்துமூல அபிப்பிராயம் ஒன்றைப் பெற்று அவர்களைத் தொடர்ந்து ஜே.பி.யாக வைத்திருப்பதா? இல்லையா என்பதை நீதியமைச்சு கோரினால் கூட மக்களின் அபிப்பிராயத்தைப் பெறமுடியும். ஒருவரை ஊர் மக்களே நிராகரிக்கும் நிலை இருக்கும்போது அவருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் என பல இடங்களில் திருநிலைப்படுத்தியிருப்பது கொஞ்சம் அதிகம் தான்.

இந்தப் பதவி முத்திரையை வைத்துப் பெறப்படுகின்ற நற்சான்று என்பதற்கு அப்பால் தவறான சான்றுகளை வழங்கும் ஒரு நபராக பல ஜே.பி.கள் காணப்படுகின்றனர். அதுவும் தமிழ் சமூகத்திற்கு ஒரு கேடாகவே அமைந்துவிட்டது. முன்பெல்லாம் ஜே.பி. ஐயா என்று கௌரவப்படுத்தி அழைத்த மக்கள் தற்போது அதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை.

பலருக்குப் பதவி வாழும்போது பயன்படாவிட்டாலும், நீத்தார் பெருமையாக மரண அறிவித்தல்களுக்கு பயன்படவே செய்கிறது. ஒரு சில காரணங்களுக்காக படித்த ஊருக்குள் கௌரவமான ஜே.பி. மார் சில ஆவணங்களில் கையொப்பமிட மாட்டார்கள். மேலும் சில ஆதாரப்படுத்தல்களைக் கொண்டுவருமாறு கோரினால் தேவையுள்ளவரால் அவற்றை நிறைவேற்ற முடியாத பட்சத்தில் 'நீ கையெழுத்து வைக்காவிட்டால் எங்களுக்குப் பிரச்சினை இல்லை இன்னொருவரிடம் வாங்குவேன்' என்று சவால் விடும் அளவிற்கு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டமுள்ள இன்னொருவரிடம் காசு கொடுத்து கையெழுத்துப் பெற்றுவிடுகின்றனர். இதற்குக் காரணம் பிழையானவர்கள் களமிறக்கப்பட்டிருப்பதுதான். உதாரணமாக 02 கிலோ மீற்றருக்குள் அடுத்த ஜே.பி. யைக் கண்டுபிடித்துவிட முடியும்.

ஒரு ஜே.பி.யைத் தெரிவு செய்வதற்கு அரசியல்வாதிகளின் பரிந்துரையை எதிர்பார்க்காது பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விண்ணப்பம் செய்யுமாறு கோரி அந்த நபர் பற்றிய சகல தரவுகளையும் பரிசீலித்து அவர் பணத்துக்காக ஜே.பி. பதவியை பிழையான வழியில் பயன்படுத்த மாட்டார் என உறுதிப்படுத்தி அரசால் வழங்கப்பட வேண்டும்.

**தகுதியானவர்கள் சமாதான நீதவான் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும்**

நீதி அமைச்சு முறைகேடாக நடந்துகொள்ளும் சமாதான நீதிவான்களின் பதவியை மீளப் பெற்றுக்கொள்வதுடன் அந்நபரைப் பரிந்துரை செய்த அரசியற் தலைவருக்கு தண்டனை வழங்கவும் வேண்டும். அவ்வாறு பதவி பறிப்புப் படலம் ஆரம்பித்தால் பலரது ஊழல்கள் வெளிப்படவும் தற்போதுள்ள சமாதான நீதிவான்கள் பலர் அப்பதவியில் இல்லாது போவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. தற்போதுள்ள ஜே.பி. களில் பலர் எதிர்காலத்தில் உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் பொதுத் தேர்தல்களில் அல்லது வேறு தலைமைப் பதவிகளைப் பெறுவதற்கு இலக்கு வைத்துக் காத்திருப்பதால் அவர்கள் மக்களைப் பகைத்துக்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார்கள். இந்த நோக்கமே பல ஊழல்களுக்கு காரணமாய் அமைந்து விடுகிறது. ஆயுதப்போராட்டம் இடம்பெற்ற காலத்தில் உள்ளூர் தலைவர்கள் பலர் தமக்கு விரோதமானவர்களை இயக்கங்களைக் கொண்டே சுடுவித்த சம்பவங்களும் இருந்தன. இந்த மறைமுக செயற்பாடு காரணமாக பல இயக்கங்கள் தமக்குள் முரண்படவேண்டி இருந்தது. பல சமூக விரோதிகளை 'நீதிவான்களாக மாற்றிய பெருமைக்குரியவர்கள் அவர்களைத் தேடி பரிந்துரை செய்த அரசியல்வாதிகளே'. இந்த ஊர்ப் பிரமுகர்களில் பலர் போராட்டத்திற்கு இளைஞர்களைத் தள்ளி இயக்கங்களின் அபிமானத்தைப் பெற்று தமது பிள்ளைகளை பத்திரமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தவர்கள் அல்லது இயக்கங்களுக்குச் சென்ற தமது பிள்ளைகளை தந்திரமாக யார் யாரையோ எல்லாம் பிணை வைத்து பின்னர் ஏமாற்றியவர்களாகவும் உள்ளனர். தற்போதுள்ள சூழலில் தமது சமூக அந்தஸ்தை பேணிக்கொள்வதற்காக அரசியல்வாதிகளை நாடி ஜே.பி. களாக ஆகிய பின் நிச்சயம் தமக்குதவிய அரசியல்வாதிகளையும் உதறிவிடுபவர்களாக தமது வழமையான பாணியில் பயணம் செய்கின்றனர்.

எதிர்காலத்தில் பொறுப்பான சேவைகளை ஆற்றக்கூடிய பெண்களை சமாதான நீதிவான்களாக நியமிக்க வேண்டும். இதன்மூலம் பல ஊழல் விவகாரங்களைத் தவிர்க்கவும் பெண்களுக்கான ஒரு சமூக அந்தஸ்தை மேம்படுத்தவும் ஏற்கனவே சமாதான நீதிவான்களாக உள்ள ஊழல் பேர்வழிகளை கட்டுப்படுத்தவும் முடியும். நீதியமைச்சும்ரூபவ் பாராளுமன்றமும் ,தற்கான ஒரு புதிய பொறிமுறையினை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும். இதன் மூலமே சமூக நீதியை ஓரளவுக்காவது காப்பாற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கர்வம் எம்மை தாழ்த்தி விடும்



கந்தர்மடம் அ.அஜந்தன்

கட்டுரை

நாம் வாழும் சூழலில் எப்பொழுதும் மனிதர்களுக்கிடையில் ஒரு சமநிலை அவசியம். பெரியவர்சிறியவர். அறிவாளி - முட்டாள் ஏழை - பணக்காரன் உயர்ந்த ஜாதி - தாழ்ந்த ஜாதி அழகானவர் அழகில்லாதவர் என்ற ஏற்றத்தாழ்வும் கர்வமும் எமது முன்னேற்றத்தின் தடைக்கற்கள். இதில் படித்த அறிவாளிகள் பலர் விடுகின்ற மிகப்பெரிய தவறு தமக்குள் கர்வத்தை வளர்த்துக்கொள்வது. "அறிவோடு பண்பும் இணைந்திருப்பதே உண்மையான கல்வியின் இலக்கு" என்றார் மார்டின் லூதர் கிங். அறிவுடையோர் பண்பின்றி வாழ்ந்தால் அவரைக் கற்றறிந்தவராகக் கருதுவது தவறு என்பதே இதன் மறைபொருள். இன்னும் சிலர் தமது திறமைகளை மெச்சிப்பேசுவதிலும் மிகைப்படுத்திக் காண்பிப்பதிலும் தம்மை சமூகத்தில் தக்கவைத்துக்கொள்ள முயல்கின்றனர்.

சிறுவயதில் முயலும் ஆமையும் என்ற கதையில்கூட இந்தப் பாடத்தை எமக்குக் கற்றுத்தந்திருக்கின்றார்கள். முயலுக்கு ஏற்பட்ட கர்வமும் ஆமையை குறைத்து எடைபோட்டதும் அதன் தோல்விக்கு வழிகோலியதாக அமைந்தது அந்தக் கதை. பின்பு அதே கதையைச் சற்று விரிவாக்கம் செய்தும் சமகால அறிவியல் வளர்ச்சிக்கேற்பவும் கதை இப்படி நீள்கின்றது. 'தோற்றுப்போன முயல் மீண்டும் ஆமையை வெல்வதற்காக புற்கள் நிறைந்த தரைவெளியில் ஓர் ஓட்டப்பந்தயத்தை ஏற்பாடு செய்தது. இம்முறை ஆமையை குறைத்து எடைபோட்டு உறங்கிவிடக்கூடாது அதே சமயம் புற்கள் நிறைந்த தரையில் ஆமையால் வேகமாக நடக்கக்கூடமுடியாதென்ற கணிப்பில் மன மகிழ்வோடு போட்டியிட்டு வென்றது முயல். மீண்டும் ஆமை முயலாரை வெல்லவேண்டும் என்ற நோக்கில் முயலைப் போலவே சிந்தித்தது. முடிவில் ஓர் ஆறு குறுக்கே பாய்கின்ற வெளியில் ஓட்டப்பந்தயத்தை ஒழுங்கு செய்தது.

**நட்பைக் கொண்டாடும் புதிய கதை**

ஓட்டப்பந்தயம் ஆரம்பிக்கும் இடம் தட்டையான தரையாகவும் முடிவடையும் இடம் ஆற்றின் மறுபுறமும் அமைக்கப்பட்டது. கர்வத்தில் மிதந்த முயலும் ஓட்டங்பந்தயத்தில் இம்முறையும் நானே வெல்வேன் என்று பாய்ந்து ஓடியது ஆமையோ மெதுவாக வந்துகொண்டிருந்தது. முயல் ஆற்றை அடைந்ததும் ஆற்றைக் கடக்கமுடியாமல் திகைத்துப்போய் நின்றது. ஆமையோ மெதுவாக வந்து ஆற்றில் இறங்கி நீந்திக் கரை சேர்ந்து வெற்றிக் கோட்டை எட்டியது. ஆமை எதற்காக ஆற்றங்கரையை இந்தப் பந்தயத்துக்காகத் தெரிவு செய்ததென்பதை முயல் புரிந்துகொண்டது. கர்வத்தில் உறங்கியும் பின்பு தான் புத்திசாலி என்பதை நிரூபிக்க புற்கள் நிறைந்த இடத்தை தேர்ந்தெடுத்ததும் தவறு என்று முயல் உணர்ந்துகொண்டது. பின்பு அவர்கள் ஒற்றுமையாக மீண்டும் பந்தயத்தை நடாத்தி புற்தரையில் முயலின் முதுகில் ஆமையும் ஆற்றைக் கடக்கையில் ஆமையின் முதுகில் முயலும் அமர்ந்து இருவரும் வெற்றிபெற்று நட்பைக் கொண்டாடினர்.

முயலுக்கு உள்ள சிறப்புத் திறமை தரையிலும் புற்களின் மீதும் பாய்ந்து ஓடுவது. ஆமையின் திறமை நீரில் நீந்துவது. எனவே ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு திறமை உள்ளது. அதனைக் காண்பிப்பதற்குப் பலருக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை அல்லத சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. எனவே எமது திறமைமீது நம்பிக்கை வைப்பது நன்று ஆனால் அது கர்வமாக மாறிவிடக்கூடாது. கர்வம் எப்பொழுது தலை தூக்கு கின்றதோ அன்றே உங்களின் வீழச்சி ஆரம்பமாகின்றது. கர்வம் எமது தேடலைத் தடுத்துவிடும்ரூபவ் மற்றவர்களை குறைத்து எடைபோட்டுவிடும்ரூபவ் பிறரை மதிக்காத பண்பில்லாதவராக மாற்றிவிடும். கர்வம் இருக்கும்; பொழுது உங்கள் நேர்மையை நீங்கள் இழக்கின்றீர்கள். உங்களையும் உங்களைச் சூழவுள்ளவர்களையும் நீங்கள் இருக்கும் சூழலையும் அறிந்துகொள்ள மறந்துவிடுகின்றீர் கள்.

> 'அறிவு மக்களிடத்தில் பணிவை ஏற்படுத்தும் கர்வம் மக்களிடத்தில் அறியாமையை ஏற்படுத்தும்' என்று ஒரு சிந்தனை உண்டு. அறிவை வளர்ப்பது பணிவாக வாழ்வதற்கே அண்றி கர்வத்தை ஏற்படுத்த அல்ல. பணிவு உங்களிடம் இருக்குமானால். உலகம் உங்களை மதிக்கும் உங்களால் உலகம் கர்வம்கொள்ளும்.

உலகப் பகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் 'லியோடால்ஸ்டாய்' ஒரு நாள் பூங்காவில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே ஒரு சிறுமி பந்துடன் வந்தாள் டால்ஸ்டாயின் அருகில் வந்து அவரைத் தன்னுடன் விளாட வருமாறு கேட்டாள். அவரும் அதற்கு சம்மதித்து அந்தச் சிறுமியுடன் விளையாடினார். மாலைப்பொழுது நெருங்க ஆரம்பித்ததும் அந்தச் சிறுமி டால்ஸ்டாயிடம் "அம்மா தேடுவார்கள் நான் போய்வருகின்றென்" என்று கூறிவிட்டு புறப்பட்டாள். அதைக் கேட்ட டால்ஸ்டாய் "உன் அம்மாவிடம் நான் டால்ஸ்டாயுடன் விளையாடினேன் என்று கூறு அவர் மகிழ்வார் என்றார்". அதற்கு அந்தச் சிறுமி "நீங்களும் உங்கள் அம்மாவிடம் சொல்லுங்கள் நான் மேரியுடன் விளையாடினேன் என்று உங்கள் அம்மாவும் சந்தோசப்படுவார்" என்றாள். உலகப் புகழ்பெற்ற தன்னை அவள் தனக்கு இணையாக நினைத்ததை எண்ணித் தன் கர்வத்துக்காக அவர் வெட்கப்பட்டார். தற்பெருமையை ஒரு குழந்தையிடம் காண்பிக்கும் அளவிற்கு கர்வம் அவரது கண்களைக் கட்டிப்போட்டுவிட்டது. உலகப் பகழ்பெற்ற எழத்தாளனாய் இருந்தும்கூட ஒரு சிறுமியின் கள்ளம் கபடமற்ற கர்வமற்ற பேச்சால் வாயடைத்துப்போனார் டால்ஸ்டாய்.

**கர்வம் கட்டும் குறுக்குச் சுவர்**

ஒரு குருகுலத்தில் தன்னைத் தலைசிறந்த புலவராக, வித்தகராக எண்ணக்கூடிய ஒரு மடப் பீடாதிபதி இருந்தார். அவர் ஒரு நாள் தனது சீடர்களுக்குப் போதனையை ஆரம்பித்துவிட்டார். ஒரு சீடன் 'கடைமடையூர்' என்ற இடத்தில் வசிப்பவன் சற்றுத் தாமதமாக குருகுலத்துக்கு வந்துவிட்டான். தனது புலமைச் செருக்கில் அந்தச் சீடனைப் பார்த்து அந்த மடப் பிடாதிபதி "வாரும் கடைமடையரே' என்றார் கடைமடையர்" என்றால் கடைசியில் வந்த மடையர் என்றும் பொருளுண்டு கடைமடையூரில் வசிப்பவன் என்பதால் கடைமடையர் என்றும் பொருள் படும் என்று எண்ணி தனது சீடனை தனது புலமையால் கேலிசெய்துவிட்டதூக நினைத்தார். ஆனால் அந்தச் சீடனோ சற்றும் யோசிக்காமல் "வணக்கம் 'மடை(ட)த் தலைவரே" என்று கூறிவிட்டு அமர்ந்து விட்டான். இப்பொழுது பீடதிபதி மௌனமாக யோசித்தார் நான் 'கடைமடையர் என்றேன் இவன் என்னை மடத்; தலைவர் என்றானா அல்லது மடைத் தலைவர் என்றானா? என்று குழப்பமாக இருந்தது. ஏனெனில் மடப் பீடாதிபதி தனது புலமைச் செருக்கில் இரட்டை அர்த்தம் பெறும் சொல்லைப் பயன் படுத்தினார் ஆனால் அவரது சீடனோ உச்சரிப்பில் இரட்டை அர்த்தத்தை பொதித்தவிட்டான். எனவே எமக்கு இருக்கும் புலமை கர்வமாக வரும்பொழுது அது மற்றவர்களை காயப்படுத்தும். மற்றவர்களிடம் உள்ள திறமையை நாம் கண்டுகொள்ளமுடியாதவாறு எமது கர்வம் ஒரு பெரிய குறுக்குச் சுவரை மற்றவர்களிடையே கட்டிவிடுகிறது.

**புல் தடக்கி விழுபவர்களும் உண்டு**

மேலே சொல்லப்பட்ட கதைகளில் எத்தனை பெரிய மனிதர்கள் தமது கர்வத்தால் சிறுமியிடமும் சீடனிடமும் தமது பெருமையைக் காண்பிக்க முயன்று அவர்களால் பாடம்புகட்டப்பட்டள்ளனர் என்பதை உணரமுடியும் . "புல் தடக்கி விழுபவரும் உண்டு' தம்மைப் பெரும் மனிதர்களா எண்ணி கர்வத்தோடு நடப்பவர்கள் காலடியில் கிடக்கும் சிறு மனிதர்களிடத்திலும் திறமையும் புலமையும் உண்டு என்பதை மறந்துவிடுகின்றனர். பண்பில்லாத படிப்பும் அடக்கமில்லாத ஆட்சியும்ரூபவ் தாழ்மையில்லாப் புகழும் என்றும் நிலைப்பதில்லை. 'தேவைக்கு மேலே பொருளும் திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால் பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத் தான் தெரியும்" என்றார்.


கவிஞர் கண்ணதாசன். திறமைக்கு மீறி புகழ்தேட நினைக்கும்பொழுது அது பிறரை ஏளனமாகப் பார்க்கச் செய்யும்.

அதனால் சமூகத்திலிருந்து எம்மை வேறுபடுத்திக் காண்பிக்க முயல்வோம். அது ஒரு வகையில் எம்மை நாமே தனிமைப்படுத்தும் செயல். கர்வதின் கூண்டில் அடைபட்ட நிலை. அதன் பின்பு எமக்கு அங்கீகாரம் கிடைப்பது கடினம்.

"அறிவு மக்களிடத்தில் பணிவை ஏற்படுத்தும் கர்வம் மக்களிடத்தில் அறியாமையை ஏற்படுத்தும்" என்று ஒரு சிந்தனை உண்டு. அறிவை வளர்ப்பது பணிவாக வாழ்வதற்கே அண்றி கர்வத்தை ஏற்படுத்த அல்ல. பணிவு உங்களிடம் இருக்குமானால். உலகம் உங்களை மதிக்கும் உங்களால் உலகம் கர்வம்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜேஸ்மணாளன்

கட்டுரை

# உறவு கொண்டாட முயலும், உலக மகா எதிரிகள்

எதிரிக்கு எதிரி நண்பன். தவறேயில்லை. வடகொரியாவுக்கு அமெரிக்காவும் எதிரிதான். அதன் நண்பன் தென் கொரியாவும் எதிரிதான்.

அப்படியானால் எதிரியின் நண்பன், எப்படி வட கொரியாவுக்கு நண்பனாகினார்?குழப்பமாக இருக்கிறது அல்லவா?உலக அரசியல் இப்படித்தான். எப்பொழுது என்ன நடக்கும் , யார் முகத்தில் யார் சேற்றைப்பூசக் காத்திருக்கிறார்கள் என்பது எவருக்குமே தெரியாது.2 வருட கால இடைவெளியின் பின்னர், தன் பரம எதிரியான, தென் கொரியாவுடன் பேச்சு நடத்தத் தயாரென வட கொரியா அறிவித்த போது உலகமே அதிர்ந்தது.

"என் மேசையில் அணுகுண்டை வெடிக்க வைக்க அழுத்தும் பட்டன் இருக்கிறது என்று ட்ரம்பிற்கு பதிலடியாக வட கொரியா கொடுத்த சில நாள்களில், இந்தப் பேச்சு வார்த்தைக்கான முதல் விருப்பு வெளிவந்துள்ளது. ஏட்டிக்குப் போட்டியாக அதற்குப் பதிலாக ட்ரம்ப் "இதை விட அளவில் பெரிய , சக்தி அதிகம் கொண்ட அணுகுண்டை வெடிக்க வைக்கும் பட்டன் என்னிடமிருக்கினறது'' என்று அறிக்கை விடுத்தார்.

இந்தப் பேச்சு பற்றிய அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னர், இந்தத் திடீர் திருப்பம் தன்னால் தான் ஏற்பட்டது என்று டிரம்ப் உலகுக்கு சொல்லிக் காட்ட ஆசைப்பட்டிருக்கிறார். ஆசை யாரைத்தான் விட்டு வைக்கிறது? அதற்கு அமெரிக்க நாயகன் மட்டுமென்ன விதி விலக்கா?"நான் உறுதியாக நின்று, எமது முழு சக்தியை வடகொரியாவுக்கு எதிராகப் பிரயோகிப்பேன் என்று அச்சுறுத்தியிராவிடின், இப்பயொரு பேச்சுவார்த்தை சாத்தியமானதா" என்று அறிக்கை விடுத்துள்ளார் ட்ரம்ப். இபபடியெல்லாம் கச்சை கட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்க களத்தில் குதித்தவர்கள், இன்று சமாதானப் பேச்சு உட்கார்ந்திருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே.

யார் பூனைக்கு மணி கட்டினார்கள்? என்பதல்ல இங்கே முக்கியம். பூனையின் கழுத்தில் மணி தொங்குகின்றது என்பதுதான் முக்கியம்.வட கொரியாவும், தென் கொரியாவும் , நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தி விட்டார்கள். இரண்டாம் கட்டப் பேச்சு தொடரப்போகின்றது என்கிறார்கள். அடுத்த மாதம் தென் கொரியாவின் பயொங்சாங் நகரில் இடம்பெறும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு, தம்மால் முடிந்த அளவு, விளையாட்டு வீரர்களை அனுப்ப உடன்பட்டிருக்கின்றது வட கொ[illegible]யா.

## ஏன் இந்த மனமாற்றம்?

அட இதென்னமூன்றாம் உலகப் போர் வெடிக்கப் போகின்றது என்று நினைத்தோம். எல்லாம் புஸ்வாணமாக முடிந்து விடட்டது. ஆடியவர் அடங்கி விட்டார் என்று ஆதங்கப்படுகிறீர்களா? சற்றுப் பொறுங்கள். இது ஓர் ஆரம்பமேதேங்காய் உடைத்துத் திறப்பு விழா தொடங்கியிருக்கிறார்கள்.

இனித்தானே எல்லாம் ஆரம்பம். சமாதானப் புறாக்கள் கொரிய மண்ணில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விட்டனவேயென்று அவசரப்பட்டு வெடிகள் கொழுத்தி ஆரவாரப்பட ஆரம்பித்து விடா தீர்கள்..

களத்தில் அணு குண்டுவீசப்போவதாகஇதுகால வரை பயமுறுத்திக் கொண்டிருந்த வட கொரியா, இப்படியொரு 'குண்டை வீசும், என்று யார்தான் எதிர்பார்த்திருப்பார்கள்?இறுதியாக 2015 டிசம்பரில்தான் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.எப்படி இந்த 'மனமாற்றம்' ஏற்பட்டது? ட்ரம்ப் பீத்திக் கொள்வதுபோல, அவர் 'மிரட்டலால்' இது சாத்தியமானதா? அல்லது வட கொரியா எதையாவது திட்டமிட்டு, இந்த 'நாடகத்தை' அரங்கேற்றுகிறதா?

இதை நாடகம் என்றும் ஒதுக்கி விட முடியாது. அண்மையில் நடந்த பேச்சுக்களில், எல்லாமே அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்பட்டுள்ளன. அடுத்த மாதம் அதாவது பெப்ரவரி 9ஆம் திகதி இடம்பெறும், குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்களின் ஆரம்ப விழாவில், வடக்கும் தெற்கும் ஒன்றாக அணிவகுத்துச் செல்லும் என்பதில் இரு நாடுகளுகளும் ஏகமனதாக ஒரு முடிவை எடுத்துள்ளன. தென் கொரியாவின் உதவி ஒன்றிணைப்பு அமைச்சரே இதைப் பத்திரிகையாளர்களுக்கு தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இவ்வளவு நடந்தும்,வட கொரியா தென் கொரியாவுக்கு எந்த வகையில் அச்சுறுத்தலாகத் தென்படுகின்றது என்றொரு வினா எழுந்துள்ளது. அரச மட்டத்தில் இப்படியொரு பேச்சும், எதிர்பாராத திருப்பமும் ஏற்பட்டிருப்பது வட கொரியாவின் அணு ஆயுதத் தாக்குதல் பீதியை ஓரளவு தணித்துள்ளதை மறுப்பதற்கில்லை. .கடந்த பெப்ரவரி 2016 தொடக்கம் 'உறக்கத்திலிருந்த' இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவத் தொலைபேசித் தொடர்பு விழித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு இந்தச் சந்திப்பில் இருநாடுகளும் இணங்கியிருக்கின்றன.

> களத்தில் அணு குண்டு வீசப்போவதாகஇதுகால வரை பயமுறுத்திக் கொண்டிருந்த வட கொரியா, இப்படியொரு 'குண்டை வீசும்' என்று யார் தான் எதிர்பார்த்திருப்பார் கள்?இறுதியாக 2015 டிசம்பரில்தான் இரு நாடுகளுக் கும் இடையில் பேச்சுவார்த்தை கள் இடம்பெற்றன.எப்படி இந்த 'மனமாற்றம்' ஏற்பட்டது? ட்ரம்ப் பீற்றிக் கொள்வதுபோல, அவர் 'மிரட்டலால்' இது சாத்தியமானதா? அல்லது வட கொரியா எதையாவது திட்டமிட்டு, இந்த 'நாடகத்தை' அரங்கேற்றுகிறதா?




## வடகொரியா மீதான தடை நீங்குமா?

இராணுவம் இல்லாத, இரு நாடுகளினதும் எல்லைகளிலுள்ள தென் கொரியாவை அண்டிய சூன்யப் பிரதேசத்துப் பேச்சுக்கள் பயனளித்து இருக்கின்றன. தென் கொரியாவுடன் இணைந்து செய்யும் இராணுவப் பயிற்சிகளை , தற்காலிக இடைநிறுத்தம் செய்ய அமெரிக்கா உடன்பட்டிருப்பது, குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். இந்த குளிர்கால ஒலிம்பிக் விளை யாட்டுக்கள் முடியும்வரை, இராணுவப் பயிற்சிகள் ஓய்ந்திருக்குமென அமெரிக்கா அறிவித்துள்ளது. 'மக்களுக்கு நல்லதொரு பெறுமதியான புதுவருடப் பரிசைக் கொடுப்போம்.' என்று கூறியிருக்கும் வட கொரிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் றி சொன் குவோன்."இருவர் இணைந்து மேற்கொள்ளும் பயணம் தனித்த ஒருவரது பயணத்தை விட அதிக காலம் நீடிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளமை இங்கே கவனிக்கத்தக்கது. சீனர்களுக்கும் கொரியர்களுக்கும் புதுவருடம் அடுத்த மாதந்தான் பிறக்கின்றது. 1950 –1953 காலகட்டத்தில் இடம்பெற்ற கொரிய போர் காலம் தொடக்கம் இன்றுவரையில் பிரிந்துள்ள பல குடும்பங்கள் மீண்டும் இணைய இந்தப் புதுவருடம் வாய்ப்பளிக்கப் போவதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

ஒலிம்பிக் விழாவுக்காக, வட கொரியா மீதான தடைகளையும் நீக்குவதை ஆலோசிக்கப் போவதாகக் கூறியுள்ள தென் கொரிய [illegible]வளி நாட்டு அமைச்சு, பதற்ற நிலையைக் குறைக்க இராணுவ மட்டத்தில் பேச்சுவாவார்த்தைகளையும் நடாத்தப் போவதாக கூறியிருக்கின்றது. சரி கதை இப்படிப் போனால் இனி அணுஆயுதப் பரிசோதனைகளை , வட கொரியா மேற்கொள்ளாதா? அப்படி எடுத்துக் கொள்ள முடியாது என்கிறார்கள் அவதானிகள். தென் கொரியாவுடன் சுமுகமான உறவை வைத்துக் கொள்ள வட கொரியா எத்தனிக்கின்றது. ஆனால் அதற்காக அணுஆயுதப் பரிசோதனைகளை மேற்கொள்வதை வட கொரியா இந்த ஆண்டு நிறுத்தப் போவதில்லை என்கிறார்கள் அவதானிகள்.

11மணி நேரப் பேச்சில் என்னதான் முடிவெடுத்தார்கள் என்று கேட்கிறீகளா? இருவருமாக விட்ட கூட்டறிக்கையில் , அடுத்த மாதம் இடம் பெறப்போகும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்துகொள்ள, தமது நாட்டுக் குழுவை பெரிய அளவில் அனுப்பப்போவதாக வடகொரியா பிரஸ்தாபித்துள்ளது. அதே சமயம் கொரியக் கரையை அணுமயமாக்குதலிலிருந்து விடுவிக்கும்படி தென்கொரியா கோரியதை வடகொரியா விரும்பவில்லை என்பதை தனது முறைப்பாடு மூலம் வெளிப்படுத்தி இருக்கிறது வடகொரியா. தோளில் கை போடுகிறேன் என்பதால் அடி மடியில் கை வைக்காதே என்று வட கொரியா , தென் கொரியாவுக்குச் சொல்ல விரும்புகின்றது போலும். ஆனால் அதே சமயம் கொரிய பிராந்தியத்தில் சமாதானம் நிலவும் என்பதை உறுதிப்படுத்த வட கொரியா இணங்கியிருந்தது என்று இன்னொரு அறிக்கையில் தென் கொரிய ஒன்றிணைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தன் நாட்டுப் பிரதிநிதிகளை ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்து கொள்ள வட கொரியா தென் கொரிய மண்ணுக்கு அனுப்பி வைப்பது நல்ல சகுனம். 2007ஆம் ஆண்டு சீனாவில் இடம்பெற்ற ஆசிய குளிர்கால விளையாட்டு களில், தென் கொரிய விளையாட்டுவீரர்களுடன் இணைந்து வட கொரிய விளையாட்டு வீரர்கள் பவனிவந்த பிறகு, இப்பொழுதுதான் முதற்தடவையாக மீண்டும் அந்த விந்தை இடம்பெறப் போகின்றது. 11 வருட இடைவெளியில் இப்படியொரு பதற்ற நிலையைத் தணிக்க நிகழும் அதிசயம் இது!

## அமெரிக்கா என்ன சொல்கின்றது?

1950–1953 கொரிய போர் ஒப்பந்தத்துத்து இணங்க தனது 28 ஆயிரம் துருப்புகளை அமெரிக்கா, தென் கொரிய மண்ணில் நிலைநிறுத்தி வைத்துள்ளது. இது நல்ல விடயம் என்று சுருக்கமாகச் சொல்லியுள்ள ட்ரம்ப், இது ஒலிம்பிக் விளை யாட்டு களைத் தாண்டி நகர வேண்டும் என்றும் குறிப்பிட் டுள்ளார் . இந்தப் பேச்சுக்குப் பின்னர், தென் கொரிய அதிபருடனான ஒரு தொலைபேசித் தொடர்பில், வட கொரிய அதிபருடன் தானும் பேச்சுக்குத் தயார் என்று கூறியிருக்கிறார்.நடிகர் ரஜனி சொன்னது போல சரியான சமயத்தில் நாம் வருவோம் என்று திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார் அமெரிக்க அதிபர்.

சமீபத்தில் தடலாடியாக இவர் வட கொரிய அதிபருக்கும் தனக்கும் இடையில் 'மிக நல்லதொரு உறவு' இருக்கின்றது என்று கூறியிருக்கிறார். நாட்டை அடியோடு அழிப்பேன் என்று இதுகாலவரை துள்ளிக் குதித்த ட்ரம்ப் இப்படியாகக் கூறியிருக்கிறார் என்று நாம் அதிர்ச்சிவயப்பட வேண்டியிருக்கின்றது.இதில் என்ன அதிர்ச்சி? அரசியல்வாதிகளே 'பல்டி' அடிப்பவர்கள்தானே. உலகின் பலம் வாய்ந்த ஒரு நாட்டின் அதிபர் என்றாகி விட்டால், இதற்கு விதி விலக்காகி விடுமா? அமெரிக்காவை இருளில் மூழ்கடித்து, சாம்பரில் மூழ்கடிப்பேன் என்று மீண்டும் மீண்டும் சொல்லி வந்தது வட கொரியா. அனல் கக்கும் வார்த்ததைகளை முன்பு பிரயோகித்து வந்த, இப்பொழுது வட கொரியாவுடன் நட்புக் கரம் நீட்ட ஆசைப்படுவது தெரிகின்றது. வட கொரிய அதிபர் கிம்முடன் உரையாடினீர்களா என்று கேட்டதற்கு நான் ஆம்என்றோ இல்லையென்றோ பதில் சொல்ல விரும்ப வில்லை. இதற்கு நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. அவ்வளவுதான் என்று சூடகாமாகப் பதில் கொடுத்துள்ளார். சீனாவும் சிவப்புக் கம்பளம் விரிக்காத குறையாக , "பேச்சுவார்த்தைகளை வரவேற்கிறோம்" என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. கிரெம்ளின் சும்மா இருக்குமா? இப்படியொரு பேச்சுவார்த்தையைத்தான் நாம் தேவை தேவை என்று சொல்லிக் கொண்டிருந்தோம் என்று கூறி இருக்கின்றது.கல்யாண அமர்க்களமும் விருந்தினர் அமர்க்களமும் நன்றாகத் தான் இருக்கிறது. மாப்பிள்ளை பெண் கழுத்தில் தாலி கட்டவும் போகிறார். விவாகரத்தில் முடியாமல், இந்தக் 'குடும்ப உறவு' தழைக்கும் என்றால் நம் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்! அவர்களுக்குப் பிறக்கும் புத்தாண்டு ஒரு விடியலைக் கொண்டு வரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ-சிகரெட்: புதிய புற்றுநோய் பூதம்!



“பூங்கா, கடற்கரை, திரையரங்கு, சந்தை, சாலைகள் போன்ற பொதுஇடங்களில் எங்கு வேண்டுமானாலும் எங்கள் நிறுவனத்தின் சிகரெட்டைப் புகைக்கலாம். நெருப்பு இல்லை. சாம்பல் இல்லை. அதிக அளவில் புகையும் இல்லை. ஆரோக்கியத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத நவீன சிகரெட்” என்று இ-சிகரெட் நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன. இப்படியான ஈர்ப்பு அழைப்பில் மயங்கி, பலரும் இ-சிகரெட்டுக்கு அடிமையாகிவிடுகின்றனர். ஆனால், இப்போது நுழைந்துள்ள புதிய புற்றுநோய்ப் பூதம்தான் இசிகரெட் என்பதை நம்மில் பலர் இன்னமும் உணரவில்லை.

2014இல் “புகையிலை சிகரெட்டுக்கு மாற்று” என்ற போர்வையில் புகுந்துள்ள இ-சிகரெட் புகைப்பழக்கம், இந்தியா உள்ளிட்ட 182 நாடுகளில் பரவியுள்ளது. உலக அளவில் 100 கோடிக்கும் மேற்பட்டவர்கள் இ-சிகரெட் புகைப்பதாகப் புள்ளிவிவரம் கிடைத்துள்ளது. இந்தப் புதிய பாணி புகைப்பழக்கம் சீனா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேலை நாடுகளில் மிக அதிக அளவில் பரவியுள்ளது. இது சந்தைக்கு வந்த முதல் ஆண்டிலேயே 80 கோடி அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை ஆனதாக அமெரிக்க சிகரெட் நிறுவனம் ஒன்று விளம்பரம் செய்தது. தற்போது 500க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சுமார் 7,000 வகை மணங்களில் இ-சிகரெட்டை விற்பனை செய்கின்றன.

### எச்சரிக்கை

இ-சிகரெட்டைப் புகைக்கும் பழக்கம் இன்றைய இளைஞர்களையும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களையும் கவர்ந்துள்ள விடயம் கவலை அளிக்கிறது என்றும், இதைப் பயன்படுத்துவதில் உள்ள சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து, இதன் பயன்பாட்டை சட்டரீதியில் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அமெரிக்காவில் இயங்கும் பல சமூகநல அமைப்புகள் அரசிடம் முறையிடு கின்றன.

ஆரம்பத்திலிருந்தே, உலக சுகாதார நிறுவனம், 'நிகோடின் எந்த வகையில் உடலுக்குள் நுழைந்தாலும் ஆபத்துதான். இது புற்றுநோய், இதயநோய், குருதிநாள நோய்கள் உள்ளிட்ட அபாயங்களை ஏற்படுத்தக்கூடியது. எனவே, இ-சிகரெட் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று உலக நாடுகளை எச்சரித்துவருகின்றன. சிங்கப்பூர், பிரேசில் போன்ற சில நாடுகளில் இது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது.

### இ-சிகரெட் என்பது என்ன?

2008ல் ஹான் லிக் என்ற சீன மருந்தியலாளர் இசிகரெட்டைக் கண்டுபிடித்தார். இவருடைய தந்தை புகைப்பிடித்தலுக்கு அடிமையாகி, புற்றுநோய் வந்து இறந்துவிட்ட காரணத்தால், புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு மாற்றாகவும், புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து மற்றவர்கள் மீண்டுவருவதற்காகவும் 'எலெக்ட்ரானிக் சிகரெட்' (Electronic cigarette) என அழைக்கப்படும் இ-சிகரெட்டைக் கண்டுபிடித்தார். இ-சிகரெட் பார்ப்பதற்கு சிகரெட்டைப் போலவே இருக்கிற ஒரு மின்னணுக் கருவி. இதனுள்ளே நிகோடின் மற்றும் புரோபைலின் கிளைக்கால் திரவம் நிரப்பப்பட்ட குப்பி இருக்கும். அதைச் சூடு படுத்தும் சிறு கருவியும் மின்கலமும் இருக்கும்.

சிகரெட்டைப் புகைக்க நினைக்கும்போது, இதை வாயில் வைத்து உறிஞ்சி இழுத்தால், அப்போது ஏற்படும் விசையால், மின்கலம் இயங்கும். சிலவற்றில் இதை இயக்க ஒரு பொத்தான் இருக்கும். இதை அழுத்தியதும், நிகோடின் சூடேறி புகை கிளம்பும். புகைப்பவர் இதை உள்ளிழுக்க, புகையிலை சிகரெட்டைப் புகைப்பது போன்ற திருப்தியை ஏற்படுத்தும்.

### என்ன வேறுபாடு?

இ-சிகரெட் எந்தவகையிலும் பாரம்பரிய சிகரெட்டுக்கு மாற்று இல்லை என்று மறுக்கிறது மருத்துவ உலகம். புகையிலையால் தயாரிக்கப்பட்ட சிகரெட்டைப் புகைக்கும்போது நிகோடின், தார், கார்பன் மோனாக்ஸைடு உள்ளிட்ட 7 ஆயிரத்துக்கும் அதிகமான நச்சுப்பொருட்கள் உடலுக்குள் செல்கின்றன. இ-சிகரெட்டில் நிகோடின் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதால், இது தீங்கற்றது என்று பலரும் எண்ணுகின்றனர். மேலும், இ-சிகரெட் எந்த வகையிலும் புற்றுநோயை ஏற்படுத்தாது என்று விளம்பரம் செய்கின்றனர். அது உண்மையல்ல. உடலில் புற்றுநோயை உண்டாக்க நிகோடின் ஒன்றே போதும். இது சிகரெட் எனும் நேர் வழியில் வந்தாலும் சரி, இ-சிகரெட் எனும் புற வழியில் வந்தாலும் சரி, இரண்டும் ஒன்றுதான். ஒரே நேரத்தில் 30மி.கி. முதல் 60 மி.கி. வரையிலான நிகோடினை ஒருவர் எடுத்துக்கொண்டால், உடனடியாக இறப்பு நிகழ வாய்ப்புள்ளது. இசிகரெட்டில் 16 மி.கி.வரை நிகோட்டின் உள்ளது. இது புற்றுநோயை ஏற்படுத்தும் அளவுக்கு ஆபத்துள்ளது என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம் என்கின்றனர் கலிபோர்னியா பல்கலைக்கழகப் புற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள்.

### தேவை சமூக விழிப்புணர்வு

மேலை நாடுகளில் பரவியுள்ளதுபோல் ஆசியாவிலும் இ-சிகரெட் புகைக்கும் பழக்கம் அதிகரித்துவருகிறது. இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் இ-சிகரெட் வர்த்தகம் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது எனும் புள்ளிவிவரமே இதற்குச் சாட்சி. நாட்டில் ஏற்கெனவே புகையிலை சிகரெட் புகைப்பவர்களால் புற்றுநோய் ஏற்பட்டு இறப்பவர்கள் ஆண்டுக்கு 10,000 பேர். இசிகரெட் பழக்கத்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. இதைப் புகைப்பவர்க ளுக்கு உடனடியாக தொண்டை வறண்டு, சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதை உறுதிசெய்துள்ளனர். இதிலிருந்து வெளிவரும் புரோபைலின் கிளைக்கால் புகையால் ஆஸ்துமா, ஒவ்வாமை போன்ற பாதிப்புகள் வருவதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதிலுள்ள பார்மால்டிஹைட் எனும் வேதிப்பொருள் புற்றுநோயை ஊக்குவிக்கிறது. இதைப் புகைப்ப வர்களுக்கு மட்டுமல்லமால், அருகில் உள்ளவர்களுக்கும் இந்தப் பாதிப்புகள் உண்டாவது உறுதியாகியுள்ளது.

மேலும், இ-சிகரெட் புகைத்து ஒருவர் சிகரெட் புகைக்கும் பழக்கத்தை விட்டுவிட்டார் என்பதற்கான அறிவியல் ஆதாரமோ, மருத்துவப் புள்ளிவிவரங்களோ எதுவுமில்லை. ஏற்கெனவே இருக்கும் ஒரு போதைப் பொருளுக்கு மாற்றாக வந்துள்ள மற்றொரு போதைப்பொருள் இசிகரெட். இது சிகரெட் புகைப்பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு எந்தத் தீர்வும் தரப்போவதில்லை. பதிலுக்கு, ஒரு புதிய சந்தை உருவாவதற்குத்தான் உதவும். இதில் உள்ள நிகோடின் மற்றும் உள்ள நச்சுப்பொருட்களின் தரம் குறித்துப் பரிசோதிக்கவோ, கட்டுப்படுத்தவோ இதுவரை எந்த அரசிடம் எந்த அமைப்பும் இல்லை.

புகையிலையில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டு களைப் பொதுஇடங்களில் புகைப்ப தற்குத் தடை உள்ளதுபோல் இ-சிகரெட் புகைப்பதற்குத் தடை விதிக்க இதுவரை எந்தவித சட்டவிதிகளும் இல்லை. இது புகையிலையில் தயாரிக்கப்படுவதில்லை என்பதால், சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்கள் தடைச் சட்டத்தின் வரம்புக்குள் இது வருவதில்லை. ஏற்கெனவே நாட்டில் உலவிக்கொண்டிருக்கும் சிகரெட் எனும் பூதத்தை அடக்க முடியாமல் திணறிக்கொண்டி ருக்கும் போது, இசிகரெட் எனும் மற்றொரு பூதம் கிளம்பி, மக்களைச் சின்னாபின்னம் ஆக்குவதற்கு முன்னால், அரசு விழித்துக்கொள்ள வேண்டும்!

நன்றி ஹிந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நட்புக் கொண்டோம்

காலமெல்லாம் கண் விழித்து
கற்றுக் கொண்ட பாடங்கள் எத்தனை - நாம்
களிப்புடன் பாடிய பாடல்கள்தான் எத்தனை
கல்வியில் சிறந்து பட்டங்கள் கண்டோம்

பள்ளியில் பண்பைக் கற்றோம்
படிப்பிலே அன்பு கொண்டோம்
பறவைகளெனப் பறந்து மகிழ்ந்தோம்- நாம்
பகையை மறந்து வாழ்வு கண்டோம்

சிறகடித்துப் பறக்குது என் நெஞ்சம்
சிந்தனைகள் விரியுது என் உள்ளத்தில்
சித்திகள் பெற்று உயர்ந்தோம்
சிரிப்புடனே இனி வாழ்வோம்

சிவரம்யா

கவிதை



## (சு)தந்திரநாள்



இன்று சுதந்திர நாளாம்
சொல்லவும் கேட்கவும்
எவ்வளவு இனிக்கிறது

ஒரே நாடு
ஒரே தேசம்
கேட்கக் கேட்க
காதினிக்கிறது.

இந்தச் சுதந்திர
ஒரே தேசத்தின்
ஒரு தாய் மக்கள்தானாம்
நாமெல்லாம்
எவ்வளவு இதமாயிருக்கிறது

என் தாத்தன் முதுகில்
சிங்களச் சிறி
சீராய்ப் பதிந்ததும் என்
தந்தையின் கல்வி
தரப்படுத்தலுக்குள்
தாழ்ந்து போனதும், நான்
புலம் பெயர்ந்து
புலன் இழந்ததும்,
என் பிள்ளை
இன்னோர் நாட்டின்
சுதந்திர அடிமையாய் பிறந்ததும்
அவன் பிள்ளை
தான் யாரென்றே தெரியாத
இனமொன்றின் வாரிசு ஆவதும்

இந்தச்
(சு)தந்திர நாட்டின்
மக்களாய்ப் பிறந்ததால்தானாம்

“சுதந்திரம்”
கேட்கவே காதினிக்கிறது.

“சுதந்திரம்”
சொல்லச் சொல்ல
நா இனிக்கிறது


ஈழத்துப்பித்தன்

கவிதை

## தனிமை

பி.எஸ். பெர்னான்டோ

கவிதை



தனிமையே வாழ்வின் வெறுமை
உலகத்தையே வாங்கச் சொத்திருந்தாலும்
உள்ளத்தில் உள்ளதை பேச
உறவது இல்லையெனில் அது கொடுமை

தங்கி வாழ்தல் தகுதியன்றென்பர்
ஊரில் தனித்து வாழ்ந்தால் தனிமரமென்பர்
உலகம் எதைச் சொன்னாலும்ரூபவ்
தனிமை தாகம்வாட்டுமானால் வாழ்வு வறள்நிலமே

இளமையில் தனிமை இலையுதிர் மரம்போன்றது
முதுமையில் தனிமை முனிவனுக்கும் கொடுமை
அருகெவருமில்லையெனில் நிறமிழக்கும் வானம்
உறவின்றி வாழ்வது உயிரற்ற ஜடவாழ்வு

வாழ்நாளில் தனிமையிலேயே வாழ்ந்தவர்
சாதித்துத்தான் இருந்தாலும்
அவர்தம் உள்ளத்தில் நிறைந்திருப்பது
வெறுமையும் விரக்தியுமே

## கண்ணாளனே....!



உன்னிடம் பேச நினைத்தசொற்கள்
முழுதும்அம்பாரமாய் என்னிடம்
குவிந்து கிடக்கின்றன

உன் முத்தம் பெறாதஎன் முன் நெற்றி
வெறுமை சூடிக்கிடக்கிறது.....

உள்ளங்கையைப் பற்றி
நீ அனுப்புகிற உயிர்ச் சூடு
பெறாமல்என் ஆயுள்ரேகை
உறைந்து போய் கிடக்கிறது....

உன் தோள் சாய்ந்துஎன் துயர்
சொல்லாதுமனமோ துவண்டுபோய்க்கிடக்கிறது....

கரங்கோர்த்து, கழுத்தணைத்து
கன்னத்தில் நீ தருகிறமுத்தமின்றி
காணாமல் போகிறதுஎன் பொழுதுகள் அத்தனையும்.....

பெய்கிற மழையுள்நனைந்தும்
அணைய மறுக்கிறதுஎன் அன்பின் சுவாலைகள்....

அடுத்தடுத்தமழை கிளர்த்துகிற வெக்கை
நீக்கஉன் உள்ளங்கை வேண்டும்
கன்னம் வைத்துப் படுத்துறங்க
காத்திருக்கிறேன் வா என்னவனே....!

எஸ்.தர்சி

## உயர்தல் என்பது...



துரத்தி வந்து கொண்டிருக்கிறார்கள்
ஒரு புள்ளியில் குவிகிறார்கள்
நெருங்கி வருவதாகத் தெரியவில்லை
ஓடிக்கொண்டேயிருக்கிறேன்

கால்களைப் பார்த்தேன்
அவைகளும் ஓடிக்
கொண்டுதானிருக்கிறார்கள்
என்ன புதுவித்தை இது?
நின்ற இடத்தில் ஓடுவதால் என்ன பயன்?

கூட்டமாகவும் பெரும் சத்தமாகவும்
ஒருமைப்பட்டுக் குரலெடுக்கிறார்கள்
இரைச்சல்கள் அதிகமாகின
புள்ளி அரைப்புள்ளியாகிக்
காற்புள்ளியாகிக் கொண்டிருந்தது.

தூரமாகிக் கொண்டேயிருக்கிறேன்
இரைச்சல்கள் அதிகமாகியதில்
காதுகள் எரிச்சலடைந்தன
ஒலி தானே வேகம் கூடியது!
இவர்கள் விடயத்தில் ஒளியே
சாத்தியமாகிற்று!

நாலா பக்கங்களிலுமிருந்து இரைச்சல்கள்
வரத்தொடங்கின
முன்னால் ஓடியவர்கள் பெரும் பிளம்பாய்
வியாபித்துக்கொண்டிருந்தார்கள்

பாவம் காதுகள்
இரைச்சல் அவைக்குத்தானே...?
மூளை வழமைபோல் எதையும்
கண்டுகொள்ளாது
வாசிக்கத் தொடங்கியது...

பொன்.என்.நிஷா

கவிதை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடோடிகள் 2 படப்பிடிப்பு ஆரம்பம்

சமுத்திரக்கனி இயக்கத்தில் சசிகுமார் நடிப்பில் நட்பைமையப்படுத்தி உருவாகி மாபெரும்வரவேற்பை பெற்ற 'நாடோடிகள் 2' படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு சமுத்திரக்கனி இயக்கியிருந்த இந்தப்படத்தில் சசிக்குமார், விஜய்வசந்த், பரணி, அனன்யா, அபிநயா, கஞ்சாகருப்பு உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர். நட்பைமையப்படுத்தி, நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகிய இந்தப் படத்திற்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.

இந்த நிலையில், 'நாடோடிகள்' படத்தின் இரண்டாவது பாகம் தற்போது உருவாக வுள்ளது. இந்தப் படத்தின் படப்பிடிப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன.



twitter.com/Kozhiyaar

ஓலமிட்டு கதற வேண்டிய ஒரு
சூழலை, ஒன்றுமே நடக்காதது
போல் கடக்கப் பழக்கி
விடுவது முதிர்ச்சி!!!

கடிக்கும் நுளம்பை விட
காதுக்குள் கத்தும் நுளம்பே
அதிக எரிச்சலைத் தருகிறது!!

அலைபேசி வந்தவுடன்
வாய் பேச்சு குறைந்தது!
ஆண்களும் தலைகுனிந்து
நடக்கத் தொடங்கினர்

## மூளை இருக்கான்னு கேட்டா....



கோவிச்சிக்காம பதில் சொல்றவங்க ''மட்டன்'' கடைக்காரர்கள் மட்டுமே

## உழைக்கத் தெரிஞ்சவன் வாழ்றான்



உழைக்கிற மாதிரி நடிக்கத் தெரிஞ்சவன் இன்னும் நல்லா வாழ்றான்

ஒரு முதியவர் ஒரு விடுதிக்குச் சாப்பிடச் சென்றார். வெயிலில் வந்த களைப்பு அவர் முகத்தில் தெரிந்தது. அவர் அங்கு ஓர் இடத்தில் அமர்ந்து பணியாளரை அழைத்து கேட்டார் "தம்பி இங்கு சாப்பாடு என்ன விலை"

அதற்கு பணியாளர் "50 ரூபாய்" என்றான்.

பெரியவர் தனது சட்டை பைக்குள் கை விட்டு பார்த்து பணியாளரிடம் கேட்டார் "தம்பி அதற்கும் சற்று குறைவாக சாப்பாடு கிடைக்காதா..?

சர்வர் கோபமாக "யோவ் ஏன்யா இங்க வந்து எங்க உயிர எடுக்கிறிங்க. இதை விட மலிவான உணவு விடுதி எவ்வளவோ இருக்கு அங்க போய் தொலைங்கயா" என்றான்.

பெரியவர் சொன்னார் "தம்பி தெரியாமல் இங்கு வந்து விட்டேன். வெளியே வெயில் வேறு அதிகமா இருக்கு. நான் இனி வேறு உணவு விடுதிக்குச் செல்வது சற்று சிரமம்."

பணியாளர் "சரி.. சரி எவ்வோ பணம் குறைவா வச்சுயிருக்க?" என்று கேட்டான். பெரியவர் "என்னிடம் 45 ரூபாய் தான் இருக்கிறது." என்றார்.

சர்வர் "சரி. தருகிறேன். ஆனால் உனக்கு தயிர் இல்லை சரியா?" என்றான்.

பெரியவர் "சரி" எனச் சம்மதித்தார்.

சாப்பாடு கொடுக்கப்பட்டது. பெரியவர் சாப்பிட்டு விட்டு அந்த பணியாளரிடம் 50 ரூபாய் கொடுத்தார்.

சர்வர் மேலும் கோபம் ஆனான். "யோவ் 50 ரூபாய் வச்சிருக்க. 45 ரூபாய் தான் இருக்கு'னு சொன்ன..? ஓ.. வெற்றிலை.. பாக்கு வாங்குறதுக்கு 5 ரூபாய் தேவைப் படுதா..? இந்தா.. மீதி 5 ரூபாய்." என்று மீதியைக் கொடுத்தான்.

பெரியவர் சொன்னார் "வேண்டாம் தம்பி அது உனக்குத் தான். உனக்குக்கொடுக்க என்னிடம் வேறு பணம் இல்லை." சொல்லிவிட்டு வெயிலில் நடந்து சென்றார்.

பணியாளருக்கு கண்களில் நீர் ததும்பியது.

அன்பு நண்பர்களே... யார் எந்த சூழ்நிலையில் எப்படி இருப்பார்கள் என்று எமக்கு தெரியாது. யாரையும் ஏளனமாக பார்ப்பதும் பேசுவதும் தவறு..!!

## எவரையும் ஏளனம் செய்யாதே....





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நற்பெயரை காப்பதில் கூடுதல் கவனம் கொள்வீர்கள். குடும்பத்தினர் கருத்துக்கு முக்கியத்துவம் வழங்குவது நல்லது. தாயின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்:** வெகுநாள் குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** பணிகளை கூடுதல் ஆர்வமுடன் செய்வீர்கள். நண்பர் வழியில் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**சிங்கம்:** புதிய வாய்ப்பால் தகுதியை வளர்த்துக் கொள்வீர்கள். எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும். பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி:** திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். வருமானம் மிதமாக கிடைக்கும்.

**துலாம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சீரான முன்னேற்றம் பெறும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். உறவினர், நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**தனுசு:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திருப்திகரமாக இருக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** சொந்த உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாக சீராகும்.

**கும்பம்:** பெரியவர்களின் சொற்களை மதிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** முக்கிய தேவை நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும்.

## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | 4 | | 6 | |
| 8 | | | | 9 | | 2 | | |
| 3 | | | | 7 | | 5 | 9 | 1 |
| | | 1 | | | | | | 9 |
| | | | 7 | 8 | 5 | | | |
| 7 | | | | | | 6 | | |
| 6 | 7 | 8 | | 4 | | | | 2 |
| | | 9 | | 1 | | | | 8 |
| | 2 | | 8 | | | | | 6 |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 4 | 9 | 2 | 1 | 3 | 5 |
| 3 | 1 | 9 | 6 | 8 | 5 | 7 | 4 | 2 |
| 5 | 4 | 2 | 1 | 3 | 7 | 9 | 6 | 8 |
| 4 | 7 | 6 | 3 | 5 | 8 | 2 | 9 | 1 |
| 1 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 | 5 | 6 |
| 8 | 9 | 5 | 2 | 6 | 1 | 4 | 7 | 3 |
| 2 | 5 | 7 | 9 | 1 | 3 | 6 | 8 | 4 |
| 9 | 8 | 4 | 5 | 2 | 6 | 3 | 1 | 7 |
| 6 | 3 | [illegible] | 8 | 7 | [illegible] | 5 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சி சாப்பிட்டால் ஆண்மைக்குறைபாடு ஏற்படுமா?



இன்றையச்சூழலில் கணினி உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் மனிதன் உறங்கும் நேரத்தையே மாற்றிவிட்டன. ஒவ்வொரு நேரத்துக்கும் ஒரு செயல்திறன் உண்டு. பொதுவாக இரவு, நள்ளிரவு, விடியற்காலை நேரங்களில் குருதி ஓட்டம் அதிகமாக இருக்கும். அந்த நேரங்களில்தான் உறுப்புகள் சிறப்பாகச் செயல்படும். ஆனால், இன்றைக்கோ இரவு, நள்ளிரவு வேளைகளில்கூட கணினி பணியில் ஈடுபடுகிறார்கள் ஆண்கள். இதனால் உணவு உண்ணும் நேரம், உறங்கும் நேரம் என எல்லாமே மாறிவிடுகிறது. இதனால் உடல் இயக்கமும் மாறுகிறது.

உணவைப் பொறுத்தவரை அசைவ உணவு ஆண்மைக்கு வலுச் சேர்க்கக்கூடியது. இன்றைக்கோ, கோழி இறைச்சி சாப்பிடும் ஆண்களுக்கு ஆண்மைத் தன்மையே பறிபோகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கறிக்கோழிகளின் கலங்களை வேகமாக வளர வைக்க, அதன் எடையை அதிகரிக்க ஈஸ்ட்ரோஜென் ஊசி போடுகிறார்கள். ஈஸ்ட்ரோஜென் என்பது பெண்மைக்கான ஓமோன்; அந்த ஓமோனை ஊசி மூலம் செலுத்தி வளர்ந்த கோழியைச் சாப்பிட்டால் என்னவாகும். மேலும், அந்தக் கோழிக்கு முழுமையான பெண்மைத் தன்மையும் கிடையாது. அந்தக் கோழியால் முட்டை போட முடியாது. கறிக்காக மட்டுமே வளர்க்கப்படும் அந்தக் கோழியைச் சாப்பிடும் ஆண், பெண் இருவருக்கும் இதனால் பிரச்சினையே ஏற்படும்.

பொதுவாக, எந்த உணவு ஊட்டம் அளிக்கும் என்ற புரிதல் இல்லாமலேயே நாம் கண்டதையும் சாப்பிடுகிறோம். காய்கறிகளில் விதையுள்ள வெண்டை, முருங்கை போன்றவற்றைச் சாப்பிட்டால் வீரியம் கூடும். நாமோ பெரும்பாலும் விதையில்லாத உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ் போன்றவற்றையே அதிகமாகச் சாப்பிடுகிறோம். இதனால் விந்தணு உற்பத்தியாவதில் சிக்கல் ஏற்படுகிறது.

எமது தட்பவெப்பநிலைக்கு ஏற்ற உடை வேட்டி. அதை அணிந்தால் காற்றோட்டமான சூழலில் இருக்கலாம். விதைப்பை தளர்ச்சியாக இருக்கும்படியான உள்ளாடைகளை அணிவதே நம் தமிழர் மரபு. ஆனால் இன்றைக்கு, இறுக்கமான நீளக்காற்சட்டை அணிகிறோம். வேலைச் சூழல் காரணமாக நீண்ட நேரம் நாற்காலியில் அமர்ந்திருப்பது, ஏ.சியில் அமர்வதால் உள் உறுப்புகள் சூடாகிவிடும். இதையெல்லாம் பல மருத்துவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் `டெஸ்டோஸ்டீரான் (Testosterone) குறைந்துவிட்டது' என்று மிக எளிதாகச் சொல்லிவிட்டு சிகிச்சை எடுக்கச் சொல்லிவிடுவார்கள்.

சூரிய ஒளி உடம்பில்பட்டாலே டெஸ்டோஸ்டீரான் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. ஆனால், முழுக்கை சட்டை அணிந்து, கூலிங் கிளாஸ் போட்டுக்கொண்டு செல்வது, சூரியஒளி புகாத இருட்டறையில் நாள் முழுக்க இருப்பதே பெரும்பாலான ஆண்களின் பழக்கமாகிவிட்டது. எண்ணெய்க் குளியல் எடுக்காததும் குழந்தையின்மைக்கு ஒரு காரணம்தான். அதிகச் சூடுள்ள உடலில் உயிரணுக்கள் நிலைத்து நிற்காது. எண்ணெய்க் குளியல் உடல் சூட்டை சமநிலைப்படுத்தி உயிரணுக்கள் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆண்மைக் கோளாறுகளைச் சரிசெய்ய ஜாதிக்காய், அமுக்கரா சூரணம் போன்ற ஏராளமான மருந்துகள் உள்ளன. ஆனால், சமூக மாற்றம் வராமல் மருந்துகளை மட்டும் சாப்பிட்டுப் பயனில்லை. ஒட்டுமொத்தமாக எமது பாரம்பரியத்தை மீட்டெடுத்தால்தான் எல்லோரும் நலமாக வாழ முடியும்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 500 | 400 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 450 | 500 | 600 |
| முரல் | 300 | 400 | 450 | 400 |
| கும்பிளா | 300 | 450 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | 700 |
| ஓரா | 350 | 300 | 450 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 150 | 200 | 250 | 200 |
| திருக்கை | 300 | 300 | 400 | 400 |
| மதனம் | 200 | 250 | 300 | 500 |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 300 | 300 | 400 |
| வாளை | 100 | 250 | 400 | 400 |

## மரவள்ளிக் கிழங்கு தோசை

**தேவையான பொருள்கள்**

மரவள்ளிக் கிழங்கு - 250 கிராம்
பச்சை அரிசி - 250 கிராம்
வெந்தயம் -1தேக்கரண்டி
சீரகம் - 1 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 3



**செய்முறை**

பச்சை அசியை நன்கு கழுவி வெந்தயம் சேர்த்து 2 மணி நேரம் ஊறவைக்கவும்.

மரவள்ளிக் கிழங்கைத் தோல் சீவி பொடியாக நறுக்கிகொள்ளவும.

அரிசி நன்றாக ஊறியதும் அதனுடன் சீரகம், வெந்தயம், பச்சைமிளகாய் சேர்த்து அரைக்கவும்.

மரவள்ளிக் கிழங்கை யும் அரைத்து மாவுடன் சேர்த்து நன்றாக கலக்கவும். அதிக நேரம் புளிக்க வைக்கத் தேவையில்லை. 2-3 மணி நேரம் வைத்து தோசை வார்க்கலாம். தோசை மாவை நீர்க்க வைத்துக்கொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் ஒரு கரண்டி மாவு எடுத்து மெல்லிய தோசையாக வார்த்தெடுக்கவும். விருப்பத்திற்கேற்ப எண்ணெய் சேர்த்துக்கொள்ளலாம்.

சுவையான மரவள்ளிக் கிழங்கு தோசை தயார்.

## குழந்தைகள் அழுவதற்கான காரணங்களும் தீர்வும்

குழந்தைகளின் அழுகைக்கு என்ன காரணம் என்பதையும், அமைதிப்படுத்தும் வழிகளைப் பற்றியும் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக, குழந்தைகளின் அழுகைக்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம்.

1. பசியினால் அழலாம்
2. வயிற்றில் உள்ள வாயு வெளியேறுவதற்காக
3. சிறுநீர் கழிப்பதற்காக

குழந்தைகள், இவை போன்ற அசாதாரண நிலையைத் தெரிவிப்பதற்காகவே அழுவார்கள்.

சில குழந்தைகள், அம்மாவின் அரவணைப்பைத் தேடி அழும். சில, அம்மா எம்மை அதிக நேரமாக கவனிக்கவில்லையே என்பதற்காக அழும். ஈ, எறும்பு தொந்தரவு இருந்தாலும் படுக்கை வசதி சரியில்லாமல் இருந்தாலும் அழுவார்கள்.



பிறந்த குழந்தை, பால் குடித்து வயிறு நிறைந்துவிட்டால், இரண்டரை அல்லது மூன்று மணி நேரம் வரை தூங்கும். அரை மணி நேரத்துக்குள் அழுதால், என்ன பிரச்சினை என்பதை அறிய வேண்டும். வைத்தியாரிடம் காட்டி, அதைச் சரிசெய்ய வேண்டும். நான்கு, ஐந்து மாதங்கள் வரைதான் இந்தப் பிரச்சினைகள் இருக்கும்.

**சற்று வளர்ந்த குழந்தைகளுக்கு**

கூட்டமான இடங்களில் இரைச்சலாக இருப்பது, சுவாசிக்க போதுமான காற்று இல்லையென்றால், பூச்சிக் கடித்திருந்தால், வயிறு வலித்தால், குளிர் காலத்தில் மற்றும் சளி இருந்தாலும் குழந்தைகள் அழக்கூடும்.

பெற்றோர் கீழ்காணும் சில விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.

1. தாய்ப்பால் முழுமையாகக் கொடுக்க வேண்டும்.
2. கதகதப்பாக வைத்துக்கொள்ளவும்.
3. குழந்தையைத் தூக்கும் முன், எமது கைகளைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.
4. காய்ச்சல் உள்ளவர்கள் தூக்கக்கூடாது.

மிதமான காற்றும் லேசான சூரிய ஒளியும் குழந்தைகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். இப்படியெல்லாம் உங்கள் குழந்தையைப் பார்த்துக்கொண்டால், எப்போதும் புன்னகைதான்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 90 | 40 | 80 | 50 |
| கத்தரி | 80 | 130 | 100 | 100 | 80 |
| மரவள்ளி | 60 | 50 | 35 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 150 | 160 | 180 | 160 |
| பாகல் | 140 | 200 | 140 | 160 | 280 |
| க.கிழங்கு | 50 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 140 | 150 | 140 |
| சி.வெங்காயம் | 120 | 300 | 150 | 160 | 140 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 40 |
| தக்காளி | 80 | 80 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 70 | 70 | 80 | 60 | 80 |
| கீரை | 30 | 40 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | 40 | 30 |
| ப.மிளகாய் | 100 | 140 | 120 | .100 | 100 |
| புடோல் | 80 | 70 | 80 | 80 | 80 |
| கோவா | 60 | 80 | 50 | 50 | 40 |
| வெண்டி | 120 | 100 | 120 | 120 | 140 |
| போஞ்சி | 140 | 170 | 160 | 140 | 120 |
| லீக்ஸ் | 240 | 200 | 200 | 180 | 200 |
| தேங்காய் | 90 | 80 | 90 | 100 | 70 |
| உ..கிழங்கு | 80 | 60 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 40 | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 60 | 20 | 20 |
| கறிமிளகாய் | 180 | 240 | 160 | 160 | 160 |
| கரட் | 100 | 150 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | - | 600 | 800 | - |

## இது புதுசு



பெண்களுக்கான செருப்பு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 550 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மினி பஸ்சில் ஒரு பயணம்

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி இருக்கக் காசு வாங்காததன் காரணம் என்னவாக இருக்கும்? தலையைப் பிய்த்துக் கொள்ளலாம்போல் இருந்தது.

✦ ✦ ✦

கீர்த்தினியின் போன் அடித்தது.
யார் என்று பார்த்தாள். அவளுடைய கணவன்.
'ஹலோ...! என்னப்பா? நான் சாவச்சேரிக்குக் கிட்ட வந்திட்டன். நீங்கள் என்னை ஏத்த வாங்க' என்றாள்.
மறு முனையில் கணவர். 'இல்லை, இல்லை அக்காவின் பிள்ளையின் பிறந்தநாள். உடுப்பு எடுக்கவேணும். சாவச்சேரியில் இறங்கு நான் அவ்விடத்தடிக்கு வாறன்.' என்றார்.
'சரியப்பா' என்று போனைக் 'கட்' பண்ணிக் கொண்டாள் கீர்த்தினி.
சாவகச்சேரியில் இறங்கும்போது காசைக் கொடுத்துவிட்டுத்தான் இறங்க வேணும். நான் என்ன பிச்சைக்காறியா? ஏன் இவன் என்னிடம் காசு வாங்கவில்லை? முன்பின் தெரியாதவன்...? கடைசி முடிவாகக் காசு கொடுத்தேயாக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டு, பஸ்சின் பின்னாலிருந்தவள் முன்னோக்கி வந்தாள். இப்போது பஸ்சில் சனம் குறைந்திருந்தது. இலகுவாக முன்னுக்கு வரக்கூடியதாக இருந்தது.
சாவகச்சேரியில் மினிபஸ் நின்றது. இறங்கிய கீர்த்தினி காசைக் கொண்டெக்டரை நோக்கி நீட்டினாள். அவன், 'வேண்டாம்' என்பதாகவே இப்போதும் தலையை அசைத்தான்.



அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனைப் பேசித் தீர்க்க நினைத்தாள். கோபம் வேகமாக வந்தது. ஒருவாறு கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்களோ? என மனதுக்குள் எண்ணியவாறு சரி போகட்டும் நான் என்ன களவாகவா பஸ்ஸில் வந்தேன்? எனக்கு ஐம்பது ரூபா மிச்சம்! என மனதைத் தேற்றிக் கொண்டு காரணம் தெரியாமல் போய்விட்டதே என நினைத்தவாறு பேருந்து நிலையத்துக்கு எதிரில் இருந்த கடைப்பக்கமாகப் போய்த் தனது கணவனுக்காகக் காத்துக் கொண்டிருக்க முற்பட்ட கீர்த்தினிக்கு அந்த மினிபஸ் தன்னைக் கடந்துசெல்ல முற்பட்ட கணத்தில் மூளையில் பொறிதட்டியது. கொண்டக்டர் தன்னிடம் காசு வாங்காமல் விட்டதற்கான காரணமும் வெளித்தது. அவன் தன்னிடம் காசு வாங்கவில்லை என்பதால் தனக்கு வந்த கோபமும் குழப்பமும் வீண் என்று நினைக்க நினைக்கச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. அட இப்படிக் குழம்பிவிட்டேனே என மனதுக்குள் வெட்கித் தவித்தாள்.

✦ ✦ ✦

அந்த மினிபஸ்சின் பின்பக்கத்தில் விதுசன் என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயர்தான் அவளுக்குள் பொறியைத் தட்டிவிட்டது. உடனேயே கடந்துகொண்டிருக்கும் மினிபஸ்சில் சாரதியின் இருக்கையைப் பார்த்தாள். அதிலே அவளது ஒன்றுவிட்ட அக்காவின் கணவர் இருந்தார். அவர்தான் என்னிடம் காசு வாங்க வேண்டாம் என்று கொண்டக்டருக்குக் கூறியிருக்கிறார். அவ்வளவு சன நெரிசலில் அதை எப்படிக் கொண்டக்ரருக்குச் சொல்லியிருப்பார் என்பது தான் புரியவில்லை. மோட்டார் சைக்கிளில் கீர்த்தனாவின் கணவன் வந்தார். அவரிடம் தனக்கு நடந்த சம்பவத்தைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தாள். தான் குழம்பிப்போன விதத்தை நினைத்து நினைத்துச் சிரித்துக் கொண்டு வீடு சென்றனர். இப்படித்தான் நாம் சில சமயம் சில சின்னச் சின்ன விடயங்களுக்குக் குழம்பிப்போய்விடுகிறோம் வாழ்க்கையில்... ■

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 507

(■ = கறுப்புக் கட்டம்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | | ■ |
| | ■ | 15 | 16 | | | ■ | 17 |
| ■ | 18 | | | | ■ | 19 | |
| 20 | | | ■ | 21 | 22 | | |
| 23 | | ■ | 24 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..........................................................
கையொப்பம்:................................................

### இடமிருந்து வலம்

1. மகாத்மா காந்தி அமைத்த ஆச்சிரமம்
5. இரண்டு / இரட்டை
7. விறகு எரித்த பின் மிஞ்சுவது
8. பார்வையிட்டு அறியும் நிகழ்வு
10. பத்திரிகை சஞ்சிகைகளின் ரசிகன்
12. வாழை மரத்தின் நார்
13. சிறு அளவாக உடைக்கப்பட்ட கற்கள்
14. குழந்தை
15. இரப்பவன்
18. சூதாட்டத்தில் முன்வைக்கப்படும் போட்டிப் பொருள் / பணம்
19. தாகம் தணிக்கும் ஒரு பானவகை
20. கை
21. முதல் திதி
23. ஆகாயம்
24. வெகுமதி

### மேலிருந்து கீழ்

1. நெருக்கமான சிநேகிதம்
2. சிறு ஓடம்
3. புத்திரன்
4. பலம்
5. கெட்டவன்
6. ஊதல் (ஆங்கிலப் பெயரைச் சொல்வார்கள்)
9. காதலி மனம் கவர்ந்தவன்
11. திருமணம்
14. சொத்தைப் பங்கிடு
16. கணிதக் குறியீடு
17. கத்தி என்றால் இது வேண்டும்
18. கூரையை ஒட்டி அமைக்கப்படும் களஞ்சியம்
19. ஒன்றோடு ஒன்று இடிபடுதல்
20. குரங்கு
22. பார்த்தும் கேட்டும் மகிழ்ச்சி கொள்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 505 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)சமத்துவம் (6)கரு (7)கிளி (8) தாலி (9)வாங்கல் (11)சக (12)சகுனி (13)உடம்பு (15)தகரம் (17)செல்வம் (18)மணி (19)பால் (20)விடிய (21) சிவிகை (22)மதியம்

**மேலிருந்து கீழ்**
(1)சகவாசம் (2)மருங்கு (3)துகில் (4)வளி (5)வலி (8)தாகம் (10)கனிதல் (11)சடம் (13)உரம் (14)புண்ணியம் (16)கவலை (17) செல்வி (18) மடிய (19)பாசி (20)விதி
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.507**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (07.02.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.507 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 11.02.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 505 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பி யவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
த.விஜயரத்தினம்,
கம்மாளவளவு, இணுவில் கிழக்கு
இணுவில்.

**2 ஆம் பரிசு**
தக்சஜா பிரபாகரன்,
இல.186 பூதவராயர் கோவிலடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**3 ஆம் பரிசு**
ம.க.ஸ்ரீதரன்,
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம், வதிரி,
கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
பு.கோசலன்,
இல.114, புதிய அமைப்பு வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
வெ.நாராயண சர்மா,
நாகேஸ்வரன் கோவில்,
புளியந்தீவு, அனலைதீவு.

**பாராட்டுப் பெறுவோர்**

கு.வரதகுலசெல்வம்,
இல.2/58, 5ஆம் ஒழுங்கை,
செல்வநகர்-எழுத்தூர்,
மன்னார்.

கே.ஹினுஷகன்,
2ஆம் வட்டாரம், மேற்கு,
நெடுந்தீவு.

மு.ஜெயானந்த சிங்கம்,
ஓடக்கரை வீதி,
சங்கானை.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 505 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அசைவு மாதிரி

| ஆண்டு | மாதம் | விலைச் சுட்டெண் | அனைத்துப் பொருள்கள் | | | உணவுப்பொருள் | | | உணவல்லாப் பொருள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மாத மாற்ற வீதம் (%) | பணவீக்கம்% ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம்% அசையும் பண வீக்கம் (12 மாதம்) | மாத மாற்ற வீதம் (%) | பணவீக்கம்% ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம்% அசையும் பண வீக்கம் (12 மாதம்) | மாத மாற்ற வீதம் (%) | பணவீக்கம்% ஆண்டு ரீதியான மாற்றம் | பணவீக்கம்% அசையும் பண வீக்கம் (12 மாதம்) |
| 2016 | டிசெம்பர் | 118.0 | 1.2 | 4.2 | 4.0 | 2.8 | 2.3 | 3.1 | -0.2 | 5.8 | 4.6 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 | 4.6 | 1.8 | 6.6 | 4.0 | 0.6 | 6.5 | 5.0 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 | 5.1 | 0.7 | 10.2 | 4.9 | 0.4 | 6.8 | 5.3 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 | 5.6 | -0.8 | 11.2 | 5.8 | 0.1 | 6.7 | 5.5 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 | 6.0 | 2.7 | 11.8 | 6.4 | 0.1 | 5.9 | 5.7 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 | 6.1 | 1.0 | 10.6 | 6.9 | 0.3 | 4.5 | 5.6 |
| | ஜூன் | 123.4 | 1.3 | 6.3 | 6.1 | 2.9 | 8.6 | 7.0 | 0.1 | 4.4 | 5.5 |
| | ஜூலை | 122.4 | -0.8 | 6.3 | 6.2 | -1.9 | 8.2 | 7.1 | 0.1 | 4.7 | 5.5 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 | 6.5 | -0.6 | 12.1 | 7.7 | 0.3 | 4.8 | 5.5 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 | 6.8 | 1.7 | 13.9 | 8.5 | 0.1 | 4.5 | 5.5 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 | 7.1 | 2.5 | 14.7 | 9.3 | 0.0 | 4.1 | 5.4 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 | 7.5 | 2.1 | 15.7 | 10.5 | 0.6 | 2.7 | 5.1 |
| | டிசெம்பர் | 126.6 | 0.2 | 7.3 | 7.7 | 0.2 | 12.8 | 11.3 | 0.0 | 2.9 | 4.9 |

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி,கடந்த நவம்பர் மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கம் 8.4 வீதத்தில் இருந்து குறைவடைந்து கடந்த டிசெம்பர் மாதத்தில் 7.3 வீதமாக பதிவிடப்பட்டுள்ளது.உணவுப்பொருள்கள் ஆண்டு ரீதியான பணவீக்கத்துக்கான பங்களிப்பினை கடந்த நவம்பர் மாதத்தில் 15.7 வீதமாக பதிவிட்டுள்ளதுடன் டிசெம்பர் மாதத்தில் தனது பங்களிப்பினை 12.8 வீதமாக குறைவடைந்த நிலையில் வெளிப்படுத்தியுள்ளது. அதேபோன்று உணவல்லாப் பொருள்கள் தமது பங்களிப்பினை கடந்த நவம்பர் மாதத்தில் 2.7 வீதமாக வெளிக்காட்டியுள்ளதுடன் டிசெம்பர் மாதத்தில் அதிகரித்து 2.9 வீதமான பங்களிப்பை தந்துள்ளது. (ஓ)

# 'டி.எவ்.சி.சி வெகுமதிகளின் பருவகாலம்' செயற்றிட்டம் ஆரம்பம்

## வாடிக்கையாளர் ஊக்குவிப்பு செயற்பாடாக அறிமுகம்

'டி.எவ்.சி.சி வெகுமதிகளின் பருவகாலம்' செயற்றிட்டத்தை டி.எவ்.சி.சி வங்கி ஆரம்பித்துள்ளது. நாட்டிலுள்ள குடிமக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை உட்புகுத்த வேண்டும் என்ற இலக்குடன் செயலாற்றும் 'டி.எவ்.சி.சி' வங்கியானது. புத்தாண்டில் மற்றுமொரு வியத்தகு செயற்பாடாக, இந்த ஊக்குவிப்பு செயன்முறையை அறிமுகம் செய்துள்ளது.

இதனூடே பாதுகாப்பான நிதி எதிர்காலம் ஒன்றினை கட்டமைத்துக்கொள்ளும் வகையில், வங்கியுடன் கணக்கொன்றினை ஆரம்பிக்குமாறு வாடிக்கையாளர்களுக்கு உந்துதலை வழங்குகிறது.

குறிப்பாக, பிள்ளைகளின் கல்விசார்ந்த எதிர்காலத்தினை இலக்காக கொண்டு வங்கியானது ஜனவரி மாதத்தின் முதல் இரண்டு நாள்களில் 'வர்தன ஜூனியர்' கணக்கினை ஆரம்பித்தவர்களுக்கு 2500 ரூபா பெறுமதியான பணச்சீட்டை (voucher ) மற்றும் பாடசாலைப் பொருள்களின் தொகுதி ஒன்றினையும், பெரியவர்களுக்கான பணசேமிப்பு செயற்பாடுகளின் மீது அதியுயர் வட்டி வீதம்.இலவச ஆயுள் மற்றும் மருத்துவமனைக் காப்பீடு ஆகியவற்றினையும் வழங்கியுள்ளது.

கணக்கு உரிமையாளர்களின் நிதிப் பொறுப்புகள் குறைக்கப் படுவதுடன், மேலதிகமாக காப்புறுதிக் காப்பீடு ஒன்றினை மேற்கொள்ளவேண்டிய தேவையினையும் இந்த செயற்பாடுகள் நிவர்த்தி செய்கின்றன.

> “வாழ்வினை முழுமையாக அனுபவிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், மூத்த பிரஜைகளுக்கான கணக்கினை இம்மாதம் (ஜனவரி,2018) ஆரம்பிப்பவர்களுக்கு சிறப்புப் பரிசு உறுதிச் சீட்டுகள் வழங்கிவைக்கப்படுகின்றன.

மேலும் இந்த செயற்றிட்டம் குறித்து கருத்துரைத்துள்ள 'டி.எவ்.சி.சி' வங்கியின் முதன்மை நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் சில்வா,

“சேமிப்பின் மகிழ்ச்சியை மேலும் அதிகரிக்கும் வகையில், வெகுமதிகளின் பருவகாலம் ஊக்குவிப்பு செயற்பாடு நடைபெறும் காலப்பகுதியில் 2500 ரூபா மற்றும் அதற்கு மேலான தொகை மதிப்பீட்டினை வைப்பு செய்யும் வாடிக்கையாளர்கள், வங்கிக் கிளைகளில் அமைந்துள்ள அதிர்ஷ்ட சக்கரத்தினை சுழற்றுவதன் ஊடாக பெறுமதிமிக்க வெகுமதிகளை பெற்றுக்கொள்ள முடியும். இந்த புதுவருடத்தில் வங்கியானது சேமிப்பு பழக்கத்தினை முழுக்குடும்பத்திலும் ஏற்படுத்துவதை வருடம் முழுவதும் இலக்காக கொண்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் வங்கியுடன் பங்குடமை வைத்திருப்பதன் ஊடாக, முழுக்குடும்பமுமே தமது சேமிப்பினை தனித்துவம் மிக்க செயலாக்கத்துடன் அதிகரிப்பதற்கான வழியினை அளிக்கின்றது. அனைத்து வாடிக்கையாளர் பிரிவுகளிலும் மேலதிக அனுகூலங்கள் அளித்தலை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். 'வெகுமதிகளின் பருவகாலம்' ஊக்குவிப்பானது 'டி.எவ்.சி.சி' கிளையொன்றில் அங்கத்துவம் பெறும் முழுக்குடும்பமும் விசேட சலுகைகளை பெற்றுக்கொள்வதனை ஊக்குவிக்கின்றது.

அறுபது வருடங்களுக்கும் மேலான நிதிநிபுணத்துவத்தினை கொண்டுள்ள நிதி நிறுவனம் என்ற வகையில் வங்கியானது, சேமிப்பு பழக்க வழக்கத்தினை ஊக்குவிப்பதன் ஊடாக புத்தாண்டினை சிறந்ததொரு பழக்கத்துடன் ஆரம்பிப்பதற்கு இடமளித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் மத்தியில் உறுதியான சேமிப்பு பழக்கவழக்கத்தினை ஊக்குவிக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்புடைய எண்ணமேலீட்டோடு சேவையாற்றும் வங்கி மேற்கொண்டுள்ள இந்த புதிய ஊக்குவிப்பு வெகுமதிகள் குடும்பத்திலுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் செயற்பாடாக அமையும்.” என்றார். (ஓ)

## அரச பிணையங்கள் விநியோகம் தொடர்பில் நடவடிக்கை

### மத்தியவங்கி முன்னெடுக்கவுள்ளதாக சுட்டிக்காட்டு

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரச பிணையங்கள் விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து அது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அரச பிணையங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய தொழிற்பாடுகள் தொடர்பில் வெளித்தரப்பு மூலம் தடையம் சார் கணக்காய்வு நடத்தப்படும் எனவும் வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இது குறித்து மத்திய வங்கியின் நாணய சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், இந்த கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவு பெறுவதற்கு முன்பாக ஏதேனும் அறிவித்தல் ஒன்றை வெளியிடுவது பொருத்தமல்ல என்றும் வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஓ)

## துறைமுக நடவடிக்கைக்குரிய நிதி மத்திய வங்கி கணக்கில்

### இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு


அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளை சீன நிறுவனமொன்றுக்கு கையளிப்பது தொடர்பில், இலங்கை அரசுக்கு கிடைக்க வேண்டிய 292.1 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடுடைய நிதி மூலம் தமது கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட சீனா மேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிதி இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

மேலும், இலங்கை அரசு சார்பில் மத்திய வங்கி நடைமுறைப்படுத்தும் ஐக்கிய இராச்சிய டொலர் கணக்குக்கு இந்தப் பணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரின் வதை முகாமில் மலர்ந்த காதல்



ரிது பிரசாத்
கட்டுரை

குருதி வெள்ளத்துக்கு நடுவில் இதயத்தில் காதல் மலருமா? வதை முகாமில் யாருடைய இதயமாவது காதல் இன்பத்தை அனுபவிக்க முடியுமா? உயிர் பிழைத்தால் போதுமென்று இறுதி நிமிடங்களை அச்சத்துடன் கழிக்கும் நிலையில், கண்முன் கொத்துக்கொத்தாக மக்கள் இறப்பதை காணும்போது காதல் உணர்வு இதயத்தில் ஏற்படுமா?

இதுபோன்ற கேள்விகளுக்கான பதில் 'இல்லை' என்பதாகவே இருக்கும். ஆனால் காதல் என்பது வரையறைகளுக்குள் அடங்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஹிட்லரின் வதைமுகாமில் பூத்த காதலை 'அமரக் காதல்' என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான ஹாலோகாஸ்ட் படுகொலை நடவடிக்கைகளின்போது, யூதர்களை அடைத்து கொடுமைப்படுத்திக் கொல்ல பல வதை முகாம்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் மிகப்பெரிய வதை முகாம் அவுஷ்விட்ஸ் வதைமுகாம், ஜெர்மனி வசம் இருந்த தெற்கு போலந்தில் அமைந்திருந்தது. நாஜிக்களின் உளவு அமைப்பான எஸ்.எஸ், ஐரோப்பா முழுவதிலும் இருந்து யூதர்களை பிடித்துவந்து இங்கு அடைத்து சித்திரவதை செய்வார்கள்.

முகாம்களுக்கு கொண்டு வரப்பட்ட உடனேயே பலர் நச்சுவாயு அறைகளில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். வேறு சிலரோ சில மாதங்கள் வரை வதைமுகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களின் தலைமுடி மழிக்கப்பட்டு, ஆடைகள் களையப்பட்டு அரையாடையுடன் இரவும் பகலும் கடுமையான வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். உயிர் வாழ்வதற்கு போதுமான உணவு மட்டுமே வழங்கப்பட்டது.

வதைமுகாம்களில் இருந்த குழந்தைகள் பெற்றோர் உற்றார் உறவினரிடமிருந்து, பிரிக்கப்பட்டதோடு, அரை வயிறு உணவு கொடுக்கப்பட்டு பசியுடனே வைக்கப்பட்டனர். இதனால் பலவீனமான குழந்தைகளால் வேலை செய்யமுடியாது. அவர்கள் நச்சுவாயு நிரப்பப்பட்ட அறைக்கு அனுப்பப்பட்டு கொல்லப்படுவார்கள்.

ஹிட்லரின் அவுஷ்விட்ஸ் வதைமுகாம் பல ஆண்டுகள் தொடர்ந்து செயல்பட்டது. 1945ஆம் ஆண்டு, இரண்டாம் உலகப்போரின் போது சோவியத் ஒன்றியத்தின் படைகள் அவுஷ்விட்ஸை கைப்பற்றியபிறகு வதைமுகாம்கள் நிரந்தரமாக மூடப்பட்டன.

பெயரைக் கேட்டாலே அச்சம் விளைவிக்கும் அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் கைதிகள் தங்களது பெயர்களால் அல்ல, எண்களால் அடையாளம் காணப்படுவார்கள். கைதிகளின் கைகளில் அவர்களின் அடையாள எண்கள் பச்சைக் குத்தப்படும்.

வதைமுகாமில் இருந்த 32407 என்ற ஒரு கைதியின் வாழ்க்கையை அண்மையில் உலகிற்கு வெளிகொண்டு வந்திருக்கிறது . The Tattooist of Auschwitz' என்ற புத்தகம். வதை முகாமில் கைதி எண் 32407 ஆக பச்சைக் குத்தப்பட்டவரின் இயற்பெயர் லுட்விக் லேல் எய்சன்பர்க் (Ludwig Lale Eisenberg). யூதரான இவர், 1916ஆம் ஆண்டு ஸ்லோ வாக்கியாவில் பிறந்தார். 1942 ஏப்ரல் மாதம் லேலின் வீட்டிற்கு நாஜிப்படைகள் வந்தன. விவரம் எதுவும் தெரியாத நிலையில், நாஜிப் படையில் பணிபுரிய முன்வந்தார் வேலையில்லாமல் இருந்த லேல். தான் ராணுவத்தில் சேர்ந்துவிட்டால், குடும்பத்தினருக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று அவர் தப்புக்கணக்கு போட்டார்.









### ஹிட்லரின் கைதியான லேலின் பணி என்ன?

கைது செய்யப்பட்ட லேல் போலந்தில் இருந்த அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் அடைக்கப்பட்டு, கைகளில் 32407 என்ற எண் பச்சை குத்தப்பட்டது.

பிற கைதிகளுடன் வேலை செய்த லேல், வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் யூத கைதிகளுக்கு கட்டடங்களைக் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்.

வதைமுகாமுக்கு வந்த சில நாட்களுக்குள் டைஃபாய்டால் பாதிக்கப்பட்ட லேலை, பிரான்சிலிருந்து அழைத்துவரப்பட்ட பேபன் என்ற யூத கைதி கவனித்துக்கொண்டார். கட்டுக்காவலில் இருக்கும்போது கட்டுப்பாடாக இருக்கவேண்டும் என்பதை பேபன் கற்றுக்கொடுத்தார். பணிக்கப்பட்ட வேலையை அமைதியாக செய்யும்படியும், யாரைப் பற்றியும் அதிகமாக பேச வேண்டாம் என்றும் அறிவுறுத்திய பேபன், பச்சை குத்தும் வேலையையும் கற்றுக்கொடுத்தார். ஒரு நாள் பேபன் திடீரென காணமல் போய்விட்டார். ஜெர்மன், ரஷியன், பிரஞ்சு, ஸ்லோவாக்கியன், ஹங்கேரிய மற்றும் போலந்து மொழி என பல மொழிகள் பேசத்தெரிந்த லேலுக்கு பச்சை குத்தும் பணி வழங்கப்பட்டது. பச்சை குத்தும் பொருட்கள் கொண்ட ஒரு பை அவருக்கு வழங்கப்பட்டு, பிற கைதிகளிடம் இருந்து பிரித்து வேறு அறையில் தங்க வைக்கப்பட்டார். தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்ட அவருக்கு மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதைவிட அதிக உணவு கொடுக்கப்பட்டது.

### கைதிகளை வரிசைப்படுத்துவது யார்?

வதைமுகாமில் அடைக்கப்பட்ட பிற யூத கைதிகளைவிட லேலின் வாழ்க்கை சற்று மேம்பட்டிருந்தாலும் சாவுப் பயம் எப்போதுமே அவரை சூழ்ந்திருந்தது. இரவு உறங்கச் செல்லும் கைதிகள் நச்சு வாயு செலுத்தப்பட்டு மீளாத் துயிலிலும் ஆழ்த்தப்படலாம்.

அருகிலுள்ள நச்சுவாயு அறையில் மக்கள் கொல்லப்படுவது தினசரி வாடிக்கை என்பதால் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்ததை அவர் அறிந்திருந்தார்.

நாள்தோறும் கூட்டம் கூட்டமாக கொண்டுவரப்படும் கைதிகளை அடையாளப்படுத்த, ஊசியால் அவர்களின் கையில் பச்சைக் குத்தி அவர்களின் அடிப்படை அடையாளத்தை அழிக்கும் வேலையை செய்தார் லேல்.

வதைமுகாமுக்கு வந்த உடனேயே பச்சை குத்தாமல் விடப்படுபவர்களின் இறுதி நாள் அது, அவர்கள் நச்சுவாயு அறைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

> வதைமுகாமில் அடைக்கப்பட்ட பிற யூத கைதிகளைவிட லேலின் வாழ்க்கை சற்று மேம்பட்டிருந்தாலும் மரண பயம் எப்போதுமே அவரைச் சூழ்ந்திருந்தது. இரவு உறங்கச் செல்லும் கைதிகள் நச்சு வாயு செலுத்தப்பட்டு மீளாத்துயிலிலும் ஆழ்த்தப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காதல் மனைவியின் கட்டளைக்கு கட்டுப்பட்டிருந்த லேல், அவர் காலமான பிறகு காலத்தை கடந்து நிற்கும் தங்கள் காதல் கதை உலகிற்கு தெரியவேண்டும் என்பதால் ஹீதரிடம் தங்களது அதிசய காதல் கதையை தெரிவித்தார்

# ஹிட்லரின்

## வதை முகாமில்....

நாஜி தளபதி ஜோசப் மெங்கேலே அந்த வதைமுகாமிற்கு வரும் கைதிகளை வரிசைப்படுத்துவார். கொலைகளத்திற்கு அனுப்படுவார்கள், வேலைக்கு அனுப்பப்படுபவர்கள், வேலை வாங்குவதோடு அணு அணுவாக சித்ரவதை செய்பவர்கள் என்று கைதிகளை தரவாரியாக வகைப்படுத்துவது அவர்தான்.

1943 ஆம் ஆண்டின் முடிவில், அந்த வதைமுகாமில் இருந்த அனைத்து கைதிகளிலுக்கும் பச்சை குத்தும் பணி முடிக்கப்பட்டது.

அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் பச்சைக் குத்தும் பணியில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த லேல், பச்சைக் குத்தும்போது குழந்தைகள் மற்றும் பெண்களின் கைகள் நடுங்குவதையும் பயம் நிறைந்த கண்களையும் தொடர்ந்து பார்த்துவந்த லேலின் மனம் துக்கத்தால் உறைந்துபோனது.

உறைபனியும் உருகுவதுபோல் லேலும் காதலினால் உருகும் காலமும் கனிந்தது.

**கைதியின் மனதில் ஏற்பட்ட காதல்**

இயந்திரத்தனமான வேலையில் ஈடுபட்டிருந்த லேல், 1942ஆம் ஆண்டு புதிய கைதிகளின் கைகளில் பச்சை குத்திக் கொண்டிருந்தபோது 34902 என்ற பெண்ணுக்கு பச்சை குத்தினார்.

கைகளில் பச்சைக் குத்துவதில் கைதேர்ந்த லேலுக்கு அந்த அனுபவம் வித்தியாசமானதாக இருந்தது. ஊசியால் குத்திய அந்த பெண் கைதிக்கு பச்சை குத்திக் கொள்வதால் ஏற்பட்ட வலியால் கைகள் நடுங்கியது. ஆனால் ஊசியால் பச்சை குத்திய லேலின் கைகள் ஏன் விதிர்விதித்தன?

லேலின் கண்கள் கைதியின் கண்களை சந்தித்ததும், இரு ஜோடி கண்களும் சிறைப்பட்டன. சிறைக்குள் இருந்த இரு கைதிகளின் இதயங்களும் சிறைப்பட்டன. லேலின் மனம் கவர்ந்த கைதி 34902 என்று அடையாளப்படுத்தப்பட்ட கீதா.

**இந்த காதல் கதை இத்தனை நாள் ஏன் மறைக்கப்பட்டது?**

லேல் மற்றும் கீதாவின் காதல் கதையை அடிப்படையாக கொண்டு ஆஸ்திரேலிய திரைப்படத் தயாரிப்பாளர் ஹீதர் மோரிஸ் 'The Tattooist of Auschwitz' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த காதலர்களை சந்தித்த மோரிஸ், வதைமுகாமில் சிறைப்பட்டிருந்த அவர்களின் கதையை திரைப்படமாக தயாரிக்க முடிவு செய்தார். இந்த அற்புத காதல் கதையை தனக்குள்ளேயே ரகசியமாக வைத்திருந்த லேல், தான் நாஜிக்களின் ஆதரவாளராக கருதப்படலாம் என்று அஞ்சினார்.

கைதியாக கட்டாயத்தின் பேரில் பச்சைக் குத்தும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார் என்பதை உலகம் புரிந்து கொள்ளுமா என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது.

இந்த உண்மையை வெளியே கூறவேண்டாம் என்று கீதா தடுத்தார். கீதா 2003இல் தனது சாவுக்கு முன்னர் சாவுக் குகையில் மலர்ந்த காதலைப் பற்றி உலகத்திற்கு தெரியவேண்டும் என்று விரும்பினார் லேல்.

காதல் மனைவியின் கட்டளைக்கு கட்டுப்பட்டிருந்த லேல், அவர் காலமான பிறகு காலத்தைக் கடந்து நிற்கும் தங்கள் காதல் கதை உலகிற்கு தெரியவேண்டும் என்பதால் ஹீதரிடம் தங்களது அதிசய காதல் கதையை தெரிவித்தார்.

34902 என்ற கைதி எண்ணை கீதாவிற்கு பச்சைக் குத்தவேண்டும் என்ற தகவல், கீதாவின் பெயரை லேலுக்கு தெரிவித்தது. அவுஷ்விட்ஸ் முகாமிற்கு அருகில் பிர்கெங்கோ வதைமுகாமில் இருந்த கீதாவுக்கு லெலே, தனக்கு பாதுகாவலாக இருந்தவர்களின் உதவியுடன் கடிதங்களை அனுப்பினார்.

கீதாவை அக்கறையுடன் கவனித்துக் கொண்டார் லேல். பிற கைதிகளுக்கு உணவு குறைவாக வழங்கப்பட்டாலும் முக்கிய பணியில் ஈடுபடுத்தப்பட்ட லேலுக்கு போதுமான அளவு உணவு வழங்கப்பட்டது. தனது உணவை மிச்சப்படுத்தி அதை கீதாவிற்கு அனுப்புவார். லேலின் காதல் பசி கீதாவின் பசியை மட்டுமல்ல, அவருடன் இருந்த சக கைதிகளின் பசியையும் ஆற்றியது.





**பிரிந்த காதலர்கள்**

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் நீடித்த காதல், 1945 இல் நாஜிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு பிரிந்தது. வதைமுகாம்களிலிருந்து வேறொரு இடத்திற்கு கைதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தனது காதலியின் பெயர் கீதா ஃபுர்மானோவா என்பதைத் தவிர வேறு எந்த தகவலும் லேலுக்கு தெரியாது.

சோவியத் ராணுவம் அவுஷ்விட்ஸ் வதைமுகாமிலிருந்து கைதிகளை விடுவித்தபோது, செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்த தனது ஊருக்கு சென்றார். வதைமுகாமின் கசப்பான நினைவுகளுக்கு மத்தியில் அவரது மனதில் கீதாவின் நினைவு மட்டுமே சுகானுபவமாக பதிந்திருந்தது. எப்படியாவது கீதாவைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று உறுதிபூண்டு அலைந்து திரிந்தார் லேல்.

யூத கைதிகள் அன்பளிப்பாக கொடுத்த சில ஆபரணங்கள் லேலிடம் இருந்தன. அதில்

50

**வதைமுகாமில் ஏற்பட்ட காதலை நாஜி படையினருக்கு தெரியாமல் மறைத்த காதலர்கள், பிரிவு, சந்திப்பு, சிறைவாசம், என பல தடைகளை கடந்து அன்பான தம்பதிகளாக வாழ்ந்த கதை காதலர்களின் மரணத்திற்கு பிறகே உலகிற்கு தெரியவந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சென்னையில் அஸ்வின் இல்லை

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளார் அஸ்வின். அவரை பஞ்சாப் அணி 7.6 கோடி ரூபா கொடுத்து ஏலத்தில் எடுத்தது.

ஏற்கனவே சென்னை அணி 3 வீரர்களை தக்க வைத்துள்ளதால், அஸ்வினை ஏலத்தில்தான் எடுக்க வேண்டும் என்ற நிலை உருவானது. சில நாட்களுக்கு முன், சென்னை அணியின் தலைவர் டோனியும் அஸ்வினை ஏலத்தில் எடுக்க முன்னுரிமை தருவோம் என்று கூறியிருந்தார்.

நேற்றைய முதல் நாள் ஏலத்தின்போது ஆரம்பத்தில் சென்னை மற்றும் பஞ்சாப் அணிகளுக்கு இடையே அஸ்வினை எடுக்க கடும் போட்டி இருந்தது. ஆனால் ஏலத்தொகை 4 கோடியை தாண்டியவுடன் சென்னை அணி பின்வாங்கியது.

தொடர்ந்து ராஜஸ்தான் அணி 4.2 கோடியுடன் போட்டியில் குதித்தது. ஆனால் ஏலத் தொகை ரூ. 5, 6, 7 என கோடிகளைத் தாண்ட போட்டி மும்முரமானது. கடைசியில் ரூ. 7.6 கோடிக்கு அஸ்வினை ஏலத்தில் எடுத்தது பஞ்சாப் அணி.





லயனல்

விளையாட்டு

# ஆடுகள அநீதி!

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஆட்டத்துக்காகத் தயாரிக்கப்பட்ட ஜோகன்ஸ்பார்க் ஆடுகளம் முழுவதும் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாகத் தயாரிக்கப்பட்டமையை அடுத்து கிரிக்கெட் விமர்சகர்கள் பலரும் தமது அதிருப்தியைப் பதிவுசெய்துள்ளனர்.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் கடந்த 24ஆம் திகதி ஜோகன்ஸ்பார்க் மைதானத்தில் ஆரம்பமானது. ஜோகன்ஸ்பார்க் ஆடுகளம் வழமையானதாகவே வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானது.

ஆனால் ஆடுகளத்தின் தற்போதைய நிலை துடுப்பாட்ட வீரர்களுக்கு நரகமாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி, 'ஜோகன்ஸ்பார்க் ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு செய்யப்பட்ட அநீதி' என்று குறிப்பிட்டுள்ளார்.

# மற்றொரு இறுதி

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துபெற்ற தொடரான ஆஸ்திரேலியத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் பெடரர்.

கடந்த வருடம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின்போது கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தார் பெடரர். நடப்பு வருடத் தொடரிலும் பெடரர் மீது மிகப் பெரும் நம்பிக்கை இருந்தது. இந்த நிலையில் அவர் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய அதாவது நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தைக் தக்கவைப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளார்.

இந்த வருடம் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடம் பிடிக்கும் நம்பிக்கையையும் பெடரர் வெளிப்படுத்தியிருந்தார். ஆஸ்திரேலியத் தொடரில் கிண்ணம் வென்றால் பெடரரால் முதலிடத்தைப் பிடிக்க முடியாது. ஆனாலும் தனக்கான வாய்ப்புக்களை அவர் அதிகரித்துக்கொள்ள முடியும்.







# கோக்லியின் தலைமையில் சந்தேகங்கள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை இந்திய அணி இழந்ததை அடுத்து, இந்திய அணியின் தலைவர் கோக்லியின் தலைமைத்துவத்தில் சந்தேகப் பார்வை விழுந்துள்ளது.

இந்திய அணி கடந்த மூன்று வருடங்களாக டெஸ்ட் தொடர் எதையும் இழக்காமல் வெற்றிநடை போட்டு வந்தது. எனினும் அந்த அணி சொந்த மண்ணிலேயே அதிகளவான தொடர்களை எதிர்கொண்டது. இதனால் கோக்லியின் தலைமைத்துவம்தான் வெற்றிக்கு முக்கிய காரணம் என்பதைவிட, இந்திய அணி சொந்த மண் பலத்தை வைத்தே அதிகம் சாதிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமர்சனங்கள் எல்லாம் உண்மைத்தன்மையுடையவை என்று சொல்லாமல் சொல்லும் விதமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்துள்ளது இந்திய அணி. ஆனால் இந்தத் தோல்வியை நியாயப்படுத்த இந்திய அணியிடம் ஒரு பிடிமானம் உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை எந்தவொரு பயிற்சி ஆட்டமும் இல்லாமலேயே இந்திய அணி எதிர்கொண்டது. அதுவே அந்தப் பிடிமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்மாவத்

அதிகார வெறி கொண்ட அலாவுதீன் கில்ஜி மாற்றான் மனைவி மீது தணியாத ஆசை கொண்டு படையெடுத்தால் அதுவே 'பத்மாவத்'.

சிங்கள தேசத்தில் முத்துகளைப் பெறுவதற்காகச் செல்கிறார் சித்தோடு அரசர் ராவல் ரத்தன் சிங் (ஷாகித் கபூர்). அப்போது காட்டில் இளவரசி பத்மாவதி (தீபிகா படுகோன்) மானைக் குறி வைத்து செலுத்தும் அம்பு, ரத்தன் சிங் மார்பைத் துளைக்கிறது. இதனால் காயப்பட்ட ரத்தன் சிங்குக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்து, அவரை குணமடையச் செய்கிறார். இதனிடையே இருவருக்கும் காதல் மலர, திருமணம் புரிந்து பத்மாவதியை சித்தோடுக்கு அழைத்து வருகிறார் ரத்தன் சிங். பத்மாவதியின் அழகில் மயங்கும் ராஜகுரு, ரத்தன் சிங் பத்மாவதி தனித்து இருக்கும் போது ஒளிந்திருந்து பார்க்கிறார். இதனால் பத்மாவதியின் கூற்றுப்படி, ரத்தன் சிங் உத்தரவால் ராஜகுரு நாடு கடத்தப்படுகிறார்.

டெல்லியை வந்தடையும் ராஜகுரு, அரசன் அலாவுதீன் கில்ஜியை (ரன்வீர் சிங்) சந்தித்து பத்மாவதியின் பேரழைக் கூறி மதி மயங்கச் செய்கிறார். கண்ணால் பார்த்திராத பத்மாவதிக்காக அலாவுதின் கில்ஜி டெல்லியில் இருந்து சித்தோடு நோக்கி படையெடுக்கிறார். சமாதானப் பேச்சுவார்த்தை என்று சொல்லி வஞ்சகமாக ரத்தன் சிங்கை சிறைபிடிக்கிறார். ரத்தன் சிங் விடுவிக்கப்பட வேண்டுமானால் பத்மாவதி டெல்லி வந்தாக வேண்டும் என்று கில்ஜி சொல்ல, பத்மாவதி என்ன செய்கிறார், ரத்தன் சிங் விடுவிக்கப்பட்டாரா என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது பத்மாவத்.

கவிஞர் மாலிக் முகம்மது ஜயாஸி என்பவர் எழுதிய காவியக் கவிதையான பத்மாவதியை மையமாகக் கொண்டு 'பத்மாவத்' படம் கற்பனை கலந்து எடுக்கப்பட்டுள்ளது. இதில் அலாவுதீன் கில்ஜிக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலி. ராவல் ரத்தன் சிங் கதாபாத்திரத்தில் ஷாகித் கபூர் தன்னை பொருத்திக் கொள்கிறார்.

ராஜ புத்திரனுக்கான கொள்கைகளை எந்த நேரத்திலும் தவறாமல் கடைபிடிக்கிறார். அலாவுதீனின் சதித் திட்டத்திற்குப் பிறகும்ஆவேசம்பொங்காமல்பொறுமை காக்கிறார். 'நியாயப்படி போர் செய்திருக்கலாமே அலாவுதீன்' என்று இறுதிவரை கொள்கைக் குன்றாகவே இருக்கிறார். ஆனால், முக்கியமான தருணங்களில் ஒரு பொம்மையைப் போலவே ஷாகித் கதாபாத்திரம் அமைந்து விடுவதுதான் சோகம்.


ஒளிரும் ஓவியமாக தீபிகா படுகோன் மிளிர்கிறார். கவுரி பூஜையின் போது ஆடும் 'கூமர்' பாடலின் போது நடனத்தில் வசீகரிக்கிறார். விழி ஈர்ப்பு விசையில் காதலை வெளிப்படுத்துவது, கண் கலங்கி கையறு நிலையை வெளிப்படுத்துவது என இரண்டையும் மாற்றி மாற்றிச் செய்வதே அவருக்கான கதாபாத்திரக் கட்டமைப்பாக உள்ளது. இறுதிக் காட்சியில் அவர் பேசும் வசனங்கள் கம்பீரம். படம் முழுக்க அபாரமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார் ரன்வீர் சிங். இயக்குநர் இவர் கதாபாத்திரத்துக்கு மட்டும் அதிக மெனக்கெடல் செய்திருப்பது நுட்பமாகத் தெரிகிறது. 'அலாவுதீன் என்றால் அல்லாவுக்கு கூட நம்பிக்கை இருக்காது', 'போரின் ஒரே இலக்கு வெற்றிதான்' என்று வசனம் பேசும் ரன்வீர் தீபிகா மீதான மோகத்தையும், வெறுப்பு, தவிப்பு போன்ற உணர்வுகளையும் அநாயசாமாக வெளிப்படுத்துகிறார்.

மாலிக் கபூர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ஜிம் சர்ப் தேர்ந்த நடிப்பை வழங்கி இருக்கிறார். மெஹருன்னிசாவாக நடித்த அதிதி சில காட்சிகளே வந்து போனாலும் கவனம் ஈர்க்கிறார்.



சித்தோடு அரண்மனை, மணற்புயல் காட்சிகள், ஹோலி கொண்டாட்டம், மதில் சுவர்கள், பாலைவனம், டெல்லி கில்ஜி அரண்மனை என எல்லா காட்சிகளிலும் சுதீப் சட்டர்ஜியின் கேமரா சுற்றிச் சுழன்றிருக்கிறது. சஞ்சய் லீலா பன்சாலி இசையும், சஞ்சித் பல்ஹாரா பின்னணியும் படத்துக்குப் பெரும் பலம். "பிரச்சினையை வாள் முனையில் நிறுத்துபவனே ராஜ புத்திரன்", "சிரம் துண்டித்தாலும் துடிக்கும் இதயத்தோடு போராடுபவனே ராஜ புத்திரன்", "ராஜ புத்திரனின் வாள் வீரத்துக்கு இணையாக ராஜ புத்திரியின் வீரம் அவள் காப்பில் உள்ளது" போன்ற வசனங்கள் படத்துக்கு வலு சேர்க்கின்றன. கலை இயக்கம், உடைகள், ஒலிப்பதிவு ஆகிய தொழில்நுட்ப நேர்த்தியில் கவனம் செலுத்தி பிரம்மாண்டம், கவித்துவத்தில் ஈர்க்கும் இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலி தொய்வான திரைக்கதை மூலம் படத்தை பலவீனப்படுத்தி இருக்கிறார். அரண்மனைக்குள் இருக்கும் ஆட்களை மட்டுமே காட்சிப்படுத்தி இருப்பவர் மருந் துக்குக் கூட மக்களைக் காட்சிப்படுத்தவில்லை. சதி எனும் உடன்கட்டை ஏறுதலை ஆதரிக்கவில்லை என்று சொல்லும் இயக்குநர் அதை மறைமுகக் காட்சிகளால் பதிவு செய்திருப்பது ஆறுதல். போர்க்களக் காட்சிகளைப் படமாக்கியதில் போதாமையே மிஞ்சி நிற்கிறது. வரலாற்றை மையமாகக் கொண்ட அழகியல் படம் என்ற அளவில் மட்டுமே 'பத்மாவத்'தை ரசிக்க முடிகிறது

## சினிமா




மலையாளத்தில் திலீஷ் போத்தன் இயக்கத்தில் ஃபகத் ஃபாசில் நடித்து வெளிவந்த 'மகேஷிண்ட பிரதிகாரம்' படத்தின் ரீ மேக் தான் நிமிர்.

தென்காசியில் ஒரு சிறிய ஃபோட்டோ ஸ்டுடியோ வைத்து நடத்திக்கொண்டிருக்கும் நேஷனல் செல்வத்தை (உதயநிதி) ஒரு சிறிய சண்டையில், பலர் முன்பு அடித்துத் துவைத்துவிடுகிறான் வெள்ளையப்பன் (சமுத்திரக்கனி).

அவனைத் திரும்பவும் அடித்து வீழ்த்தும்வரை தான் செருப்பு அணியப்போவதில்லை என சபதமேற்கிறான் செல்வம். இதற்கிடையில் தனது வாடிக்கையாளராக அறிமுகமாகும் மலர்விழியைக் (நமீதா) காதலிக்க ஆரம்பிக்கிறான் செல்வம். அந்த மலர்விழியின் அண்ணன்தான் வெள்ளையப்பன் என்று பிறகு தெரியவருகிறது.

சில காட்சிகளை விட்டுவிட்டால், 'மகேஷிண்ட பிரதிகாரம்' படம் அப்படியே காட்சிக்குக் காட்சி, வசனத்திற்கு வசனம் தமிழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. கேரளாவில் நடக்கும் கதையை, அப்படியே மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு ஊருக்குக் கொண்டுவந்துவிட்டார் பிரியதர்ஷன்.

'மகேஷிண்ட பிரதிகாரம்' படத்தில் இடுக்கி மாவட்டத்தின் அழகு, சில காட்சிகளில் சி.பி.எம். ஊர்வலங்கள் என கேரளாவுக்கே உரிய சில அம்சங்கள் துலக்கமாகக் காட்டப்பட்டிருக்கும்.

ஆனால், மலையாள இயக்குனர்கள், தமிழ்த் திரைப்படங்களை இயக்கும்போது இதுபோன்ற நுணுக்கமான தமிழ் அம்சங்களைப் பார்க்க முடியாது. எல்லாம் பொதுவானதாக இருக்கும். இந்தப் படத்திலும் அப்படித்தான். மற்றபடி, பெரிதாக உறுத்தாத வகையில் படத்தை நகர்த்திச்செல்கிறார் பிரியதர்ஷன்.



படத்தில் வரும் ஒவ்வொரு சிறிய கதாபாத்திரத்திற்கும் தமிழில் நன்றாக அறிமுகமான நடிகர்களைப் பயன்படுத்தியிருப்பது, எதிர்பாராத இடங்களில் எதிர்பாராத வசனங்களின் மூலம் சிரிக்க வைப்பது ஆகியவை படத்தின் பலங்களில் சில.

பெரிதாக ஹீரோயிசம் செய்யவாய்ப்பில்லாத, அடக்கிவாசிக்கவேண்டிய கதாநாயகன் பாத்திரம் இது. மகேஷிண்ட பிரதிகாரம் படத்தில் ஃபஹத் பாசில் செய்த பாத்திரத்தில் பெரிய உறுத்தல் இன்றி நடித்திருக்கிறார் உதயநிதி.

கதாநாயகனின் தந்தையாக நடித்திருக்கும் இயக்குனர் மகேந்திரன், பாத்திரத்திற்கு ரொம்பவுமே பொருந்துகிறார். நாயகிகளான பார்வதி நாயர், நமீதா [illegible] நடித்திருக்கும் எம்.எஸ். பாஸ்கர், சண்முகராஜா என எல்லோருமே பாத்திரங்களோடு பொருந்திப்போகிறார்கள். படத்தில் இடம்பெற்றிருக்கும் பாடல்கள் எல்லாமே ரசிக்கத்தக்கரகம். குறிப்பாக, அஜானீஷின் இசையில் தாமரையின் வரிகளில் வரும் 'நெஞ்சில் மாமழை பாடல்' முதல்முறை கேட்கும்போது மனதைக் கவரும். மலையாள ஓரிஜினலைப் பார்த்திருந்தாலும் பார்த்திருக்காவிட்டாலும் ஒரு முறை பார்த்து ரசிக்கதக்க படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# திஸ்ஸ அத்தநாயக்கவை ஞாபகமூட்டும் சிவசக்தி!

ஸுடோ ஸ்வாமி

கட்டுரை

எதிர்வரும் 10ஆம்; திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்காகச் சகல கட்சிகளுமே வியூகம் வகுத்துத் தமது பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. ஏற்கெனவே தபால்மூல வாக்களிப்பு நடந்துவிட்ட நிலையில், தமது வேட்பாளப் பெருந்தகைகளை நோக்கி மக்களை ஈர்ப்பதற்குக் கட்சித் தலைமைகள் படாத பாடுபட்டு வருகின்றன. இதில் மத்தி, மாநில வேறுபாடு இல்லாமல் சகட்டுமேனிக்கு மக்களை நம்பவைக்கும் கைங்கரியங்கள் நடந்தேறி வருகின்றன. மத்தியில் சங்கமித்திருந்த இருபெரும் கட்சிகளும் அண்மையில் வெளியாகிய இரு வேறு அறிக்கைகளின் சாதக, பாதகங்களைத் தமது வெற்றி, தோல்விகளுக்கு வினைத்திறனாகப் பயன்படுத்துவது தொடர்பில் வேகம் காட்டி வருகின்றன. இந்த, ஊர் இரண்டு பட்ட நிலைவரத்தைத் தமக்குரிய கொண்டாட்டமாகப் பயன்படுத்த செஞ்சட்டை கட்சி மும்முரம் காட்டி நிற்கிறது. புதிதாக களம் புகுந்த தாமரை மொட்டினரும் தமது நிராகரித்த வேட்புமனுக்கள் தொடர்பான வழக்குகளை திரும்பப் பெற்றுக் கொண்டு எதிர்காலத் தேர்தல்களுக்கான தமது அடியிடலை ஆரம்பித்திருக்கின்றனர்.

**வடக்குக் கிழக்கின் நிலை?**

வடக்கு கிழக்கைப் பொறுத்த மட்டில் போட்டியிடும் தரப்புக்களை வழமைபோலவே, இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று உரிமையை வலியுறுத்துபவர்கள். மற்றையது அபிவிருத்தியைத் தமது கோஷமாகக் கொண்டவர்கள். அபிவிருத்தியை வலியுறுத்துபவர்கள் வட்டத்தில் தேசியக் கட்சிகளை உள்ளடக்கி விடலாம். உரிமையை வலியுறுத்துபவர்கள் பிரிவை எளிதாக இரண்டாகப் பிரிக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு எதிரானவர்களும் என்பதே அந்த இரண்டு பிரிவுகள். இவ்வகையான வகைப்படுத்தல், உரிமையை வலியுறுத்துபவர்கள், அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திப்பதில்லை என்று அர்த்தமாகிவிடாது. இதில், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் என்று கொள்ளப்படுவர்களின் கொள்கைகளைப் பிரித்தறிந்து பார்த்தால் எல்லாம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் தான் இருக்கும். அது கூட்டமைப்பின் நடவடிக்கைகளை விமர்சிப்பதாக மட்டுமே இருக்கும்.

**சலனப்படுத்தியிருக்கும் குண்டு**

தமிழர் தாயகப் பிரதேச உள்ளூராட்சி களநிலையைச் சலனப்படுத்தியிருப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அண்மையில் வெளியேறி உதயசூரியன் சின்னத்தில் களமிறங்கி கூட்டமைப்பை விமர்சித்து வரும் சுரேஷ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் கொழுத்திப் போடப்பட்டுள்ள 30 (15 x2) கோடி ரூபா தொடர்பான குண்டாகும். அதிலும் அந்தக் குண்டைத் தூக்கிப் போட்ட பெருமை, அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாமலை நடேசு சிவசக்திக்கு உரியது. ஆமாம், நாடாளுமன்ற இணையத்தளம் அவரை இவ்வாறு தான் குறிப்பிடுகிறது. கிட்டத்தட்ட இப்போதைக்கு வடகிழக்கு தேர்தல்களத்தில் பரம்பலுக்கு வித்திட்டிருக்கும் இந்தக் குற்றச் சாட்டின் பின்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுக்கு விலைபோய் விட்டது என்பதைக் காண்பிப்பதற்காகச் சுமத்தப்பட்டதாகும். கொழும்பு அரசின் நடவடிக்கைகளை ஆதரித்தால், அது தமிழர் நலனுக்கு எதிரானது என்கிற கருத்து மக்களிடம் எடுபடும் என்று கருதி அண்மைக்காலத்தில் கூட்டமைப்பு தொடர்பில் எழுந்துள்ள சலிப்பை பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் இந்தக் குற்றச்சாட்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதே போன்றதொரு போலிக்குற்றச்சாட்டு விவகாரம், கடந்த அரசதலைவர் தேர்தல் காலத்திலும் மேடையேற்றப்பட்டிருந்தது.

**திஸ்ஸ ஆடிய ஆவண நாடகம்**

திஸ்ஸ அத்தநாயக்க என்ற முன்னாள் குறுநாள் சுகாதார அமைச்சரை வாசகர்கள் மறந்திருக்க வாய்ப்பில்லை. மைத்திரிபாலவுக்குப் பின்பா கவும் ராஜித சேனாரத்ன்வுக்கு முன்பாகவும் சுகாதார அமைச்சர் பதவி வகிக்க மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்டவர் தான் இந்த திஸ்ஸ அத்தநாயக்க. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செய லாளராக வலம் வந்த இந்த மனிதர், மைத்திரிபாலவின் பொது எதிரணி வேட்பாளர் அறிமுகத்துடன் மகிந்தவின் பக்கம் தாவினார். தாவியது மாத்திரமல்லாமல், தகாத காரியம் ஒன்றையும் பண்ணி வைத்தார். அந்தக் காரியம் என்னவெனில், அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொது எதிரணி அரசதலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானதாகவும் அது தொடர்பானதகவல்களைதான்பகிரங்கப்படுத்துவதாகவும் குறிப்பிட்டு பத்திரிகை யாளர் சந்திப்பொன்றை நடத்திக் குறித்த ஒப்பந்தப் பிரதிகளை வழங்கி வைத்தார். அந்த போலி ஆவண நாடகத்தின் பிரதான பாத்திரமாக விளங்கியிருந்த அவர், மக்களை மகிந்தவுக்கு ஆதரவாகவும் மைத்திரிக்கு எதிராகவும் திருப்பும் உள்ளடக்கங்கள் அடங்கிய அந்த புழுகு மூட்டையை அவிழ்த்து விட்டிருந்தார். உடனடியாகச் செயற்பட்ட மைத்திரிபால, குறித்த நடவடிக்கையை முன்னெடுத்த திஸ்ஸ அத்தநாயக்காவுக்கு எதிராக மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்திருந்தார். திஸ்ஸவின் அந்த விவகாரம் அவர் வால் பிடித்த தரப்பினருக்கு நன்மையைக் கொண்டு வந்ததோ இல்லையோ, அவரை இன்னமும் விரட்டி விரட்டி நாறடித்துக் கொண்டிருக்கிறது. மோசடி ஆவணம் பற்றிய அந்த வழக்கில் கைதாகி பிணையில் உலாவி வருகிறார். இப்போது அவர், கட்சியும் இல்லாமல் அரசியலும் இல்லாமல் இடைக்கிடை ஊடகங்களில் தலைகாட்டியும், ஐக்கிய தேசியக் கட்சியின் பின்கதவு களை தட்டியும் திரிவதாகக் கேள்வி.

**மாற்றத்துக்குப் பிறகான பூதாகாரம்**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஆசனத்தை தக்க வைக்கும் வாய்ப்பை இழந்திருந்த கூட்டமைப்பின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன், தேர்தலுக்குப் பின்னர் கூட்டமைப்பு தொடர்பில் 'இந்தப் பழம் புளிக்கும்' நிலைப்பாட்டினையே காண்பித்து வந்தார். ஆனால், கூட்டமைப்பு பங்குபற்றும் சந்திப்புக்களில் இடம்பிடித்து வந்தார். அத்தோடு, அவரது கட்சியிலிருந்து நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட சிவசக்தி, தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினராக இயங்கி வந்தார். கடந்த வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் போது உரையாற்ற அனுமதிக்கவில்லை என்று கூறி சிவசக்தி, ஏற்கனவே குழம்பிய குட்டையாக இருந்து வந்த நிலைவரத்தினை தீவிரப்படுத்தினார். தற்போது, அவருக்கு கிடைக்காத அந்த 2 கோடி ரூபாவை, இலஞ்சமாக பூதாக ரப்படுத்தியிருக்கிறார். திஸ்ஸ அத்தநாயக்காவின் நடவடிக்கையை ஞாபகப்படுத்தும் சிவசக்தியின் நடவடிக்கை, பாதீட்டு விவாதம் நடந்து முடிந்து பல வாரங்கள் கடந்து, தேர்தலுக்கு சமீபமாக வந்திருக்கிறது. குறித்த விவகாரத்தை கையிலெடுத்திருக்கும், மகிந்த தரப்பு அதனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கிறது. மத்தியில் அரச தலைவர் நியமித்த விசாரணைக்குழு வின் அறிக்கைகள் இரண்டு சூட்டைக் கிளப்பி யிருக்க, மாநில மட்டத்தில் சர்ச்சையை உருவாகியிருக்கும் இந்தக் குற்றச்சாட்டினை சிவசக்தி, இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை நோக்கி நகர்த்துவாரா என்று பார்ப்போம். அப்படி நகர்த்தினாலும் அதன் முடிவு வர முன்னதாக எதிர்வரும் பதினொராம் திகதி மக்கள் தீர்ப்பு அறிவிக்கப்பட்டு விடும். அது திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நேர்ந்த கதியை சிவசக்திக்கு நினைவூட்டும்.

திஸ்ஸ அத்தநாயக்காவின் நடவடிக்கையை ஞாபகப்படுத்தும் சிவசக்தியின் நடவடிக்கை, பாதீட்டு விவாதம் நடந்து முடிந்து பல வாரங்கள் கடந்து, தேர்தலுக்கு சமீபமாக வந்திருக்கிறது. குறித்த விவகாரத்தை கையிலெடுத்திருக்கும், மஹிந்த தரப்பு அதனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹிட்லரின் வதை முகாமில்....

சிலவற்றை விற்ற லேல், தனது ஊருக்கு குதிரை வண்டியில் செல்வதற்கான கட்டணத்தை செலுத்தினார். தனது சகோதரி கோல்டியையும் கண்டுபிடித்தார்.

**பிரிந்த காதலர்கள் இணைந்தது எவ்வாறு?**

தனது ஊரிலிருந்து கிளம்பி ஸ்லோவாக்கியாவின் ப்ரதிஸ்லாவா நகரத்திற்கு சென்ற லேல், அந்த ஊர் ரயில் நிலையத்தில் காலைமுதல் மாலைவரை வந்துசெல்லும் ரயில்களை கண்காணிப்பார். கீதாவை கண்டுபிடித்துவிடமுடியும் என்று அவர் நம்பினார்.

லேலின் தவிப்பைப் பார்த்த ரயில் நிலைய அதிகாரி, செஞ்சிலுவை சங்கத்தின் அலுவலகத்திற்கு சென்றால் முயற்சி வெற்றிபெறலாம் என்று கூறிய ஆலோசனையையும் செவிமடுத்தார்.

குதிரை வண்டியில் வழக்கம்போல் ரயில் நிலையத்திற்கு செல்லும் வழியில் கீதாவை பார்த்துவிட்டார் லேல். முயற்சி திருவினையாகி, திருமணத்தில் முடிந்தது. கீதாவும் தன்னைத் தேடிக் கொண்டிருந்ததை பிறகு அறிந்துக் கொண்டார் லேல். வதைமுகாமில் பிரிந்த இரண்டு இதயங்களும் ரயில் நிலையத்திற்கு செல்லும் பாதையில் சந்தித்துக் கொண்டன.

மனமொத்த காதலர்கள் 1945 அக்டோபர் மாதம் திருமண பந்தத்தில் இணைந்தனர். சோவியத் யூனியன் ஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தது, கைதி எண் 32407, கைதி எண் 34902 என்ற அடையாளம் மாறி இருவரும் தங்களது இயற்பெயர்களை பெற்றார்கள்.

லேல்கீதா தம்பதிகள் துணிக்கடை ஒன்றை நடத்தி நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். உண்மையான ஆனந்தம் என்ன என்பது சாவுகளுக்கு மத்தியில் உயிர்த்தெழுந்த காதலை அனுபவித்த இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால், ஆனந்தமான வாழ்வும் அஸ்தமித்தது, மீண்டும் ஒருமுறை சிறை வாசத்தை எதிர்கொண்டார்கள் தம்பதிகள். இஸ்ரேலுக்கு உதவ பணம் அனுப்பியது தேசத்துரோகமாக கருதப்பட்டதால், அவர்களுடைய தொழிலை முடக்கிய அரசு இருவரையும் சிறையில் அடைத்த்து.

ஹிட்லரின் வதைமுகாமில் இருந்து உயிரோடு வெளியே வந்த இவர்களுக்கு சிறைவாசம் எம்மாத்திரம்? சில நாட்களுக்குப் பிறகு சிறையிலிருந்து தப்பிய இருவரும் வியன்னாவிற்கு சென்று, அங்கிருந்து பாரிஸுக்கு சென்றார்கள். இறுதியாக, ஐரோப்பாவில் இருந்து வெகுதொலைவிற்கு சென்றுவிட்டனர்.

ஆஸ்திரேலியா சென்ற அவர்கள் அங்கு புது வாழ்க்கையை, புது ஜவுளிக்கடையை தொடங்கினார்கள். கீதா ஆடை வடிவமைப்பில் ஈடுபட்டார். தங்கள் ஒரே மகனுக்கு கேரி என்று பெயரிட்டார்கள்.

மெல்பர்னில் வாழ்ந்தபோது பல முறை கீதா ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்டாலும், லேல் மீண்டும் அங்கு செல்லவில்லை. நாஜி முகாமில் பச்சைக் குத்தி படையினருக்கு உதவியவர் என்ற ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்று அவர் அஞ்சினார். இந்த ரகசியத்தை வெளியில் தெரிவிப்பது ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் தங்கள் காதல் கதையை தெரிவிக்க வேண்டாம் என்று கீதாவும் அன்புக் கட்டளை இட்டிருந்தார்.

வதைமுகாமில் ஏற்பட்ட காதலை நாஜி படையினருக்கு தெரியாமல் மறைத்த காதலர்கள், பிரிவு, சந்திப்பு, சிறைவாசம், என பல தடைகளை கடந்து அன்பான தம்பதிகளாக வாழ்ந்த கதை காதலர்களின் சாவுக்குப் பிறகே உலகிற்கு தெரியவந்துள்ளது.

2003ஆம் ஆண்டு கீதா காலமாக, 2006 ஆம் ஆண்டு லேல் அவரை பின் தொடர்ந்தார். இருப்பது சிறையே ஆனாலும் அன்பிற்கும் உண்டோ அடைக் கும் தாழ்?



2003இல் கீதாவின் இறப்பிற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படம்

# பிள்ளைகளுக்கு பொறுப்பு பெற்றோர்



கே.எஸ்.சிவஞானராஜா

கட்டுரை

வீட்டிலே பிள்ளைகள் இருக்கும் பொழுதும் வெளியிலே பிள்ளைகள் விடப்படும் போதும் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு எச்சரிக்கையோடும் அவதானமாகவும் இருக்க வேண்டியவர்கள் முழுக்க முழுக்க பெற்றோரே. பிள்ளைகளைத் தனியாக இருக்க வைத்து விட்டு அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப் போவதும், அடுத்த வீட்டுக்குப் போவதும், திருமண வீட்டக்குப் போவதும், விருந்தினர்களாகச் செல்வதும், இளமையோடு குதூகலிக்க வெளியில் நடமாடி விருந்தாவதும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

**அம்மாவும் வேலை அப்பாவும் வேலை**

பெரும்பாலான வீடுகளில் அம்மாவும் வேலை, அப்பாவும் வேலை. இருவருமே வேலை முடிந்து வீடு வந்துசேர மிகவும் தாமதமாகி விடும். சுமார் ஒரு மணித்தியால நேரம் பிள்ளைகள் பயத்தோடு தனித்திருப்பர். இவ்வாறான பாதுகாப்பற்ற நேரங்களில் ஏதாவது அசம்பாவிதம் நடக்க வாய்ப்புண்டு. திருடர்கள் ஒரு புறம், பாலியல் வேட்கையினர் ஒரு புறம், வயது வந்தவர்கள் ஒரு புறம், பலாத்காரம் செய்வோர் ஒரு புறம், கடத்துவோர் ஒரு புறம், காயப்படுத்துவோர் ஒரு புறம், களங்கப்படுத்துவோர் ஒரு புறம், காதல் செய்வோர் ஒரு புறம், கொலை செய்வோர் ஒரு புறம், குறும்புசெய்வோர் ஒரு புறம், எனப் பல கோணங்களில் பிள்ளைகள் அகப்பட்டுக் கொள்ளும் நிலையில் கால போகத்திலும், மோகத்திலும், சோகத்திலும் ஆழ்ந்துள்ளது. வயது வந்தவர்களில் எல்லோருமல்ல ஒரு தொகுதியினர் போகத்திலும் மோகத்திலும் ஆழ்ந்திருக்கின்ற தலைவிதியை இந்த நாடு கொண்டிருக்கின்றது. காம நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் வெட்கப்படுவதில்லை. எது எப்படியாயினும் மனச்சாட்சியும், தெய்வங்களும் இருக்கும் வரை இந்த மண் சாட்சியாக சம்பந்தப்பட்டவர்களை அணு அணுவாகச் சித்திரவதை செய்தே தீரும். ஆன்மிகத்தில் ஒளித்தாலும் சரி, கண்கண்ட சாட்சியாக யாரும் இல்லாவிட்டாலும் சரி, உண்மை ஒரு போதும் நித்திரை கொள்வதில்லை.

**புதுவிதி**

பெற்றோர்கள் எது எதை எப்படிச் செய்தார்களோ பிள்ளைகளும் அது அப்படியே வடிவாகச் செய்து கொள்ளும். இது முழுதும் உண்மையே. முன்பு செய்ததன் விளைவுதான் இப்போத தெரிகிறது. இப்போது நாம் ஆற்றுகின்ற திருவிளையாடல்கள் யாவும் எமது பிள்ளைகளும் இரட்டிப்பாகச் செய்தே தீரும். இல்லற வாழ்விலும் துறவறவாழ்விலும் இந்த நாடு இதைத்தானே அனுபவிக்கிறது. எனவே பெற்றோர்கள்தான் பிள்ளைகளின் பாதைகளையும், பயணங்களையும், படிப்புக்களையும் கண்காணித்தல் அவசியமுமாக்கப்படுகிறது. அவசரமுமாக்கப்படுகிறது.

**மனப்பாங்கு**

சிறுவர்களின் பொழுது போக்குகளில் பெற்றோர்கள் அதிக அக்கறையும் அதிக சிரத்தையும் காட்டுவதில்லை என்பது வெளிப்படையே. புதியன படைக்கும் திறமையுள்ளவர்களுக்குக் கடலைக் கொட்டையும் கராம் சுண்டலும் கண்கண்ட குளிர்பானமும் கைத்துப்பாக்கியும், புறக்கட்டுமான உடலை முழிப்பாக்கும் உடைகளையும், உணவுகளையும் கடையிலே வாங்கிக் கொடுத்து விட்டால் பெற்றவர்களின் கடமை முடிந்தது என்ற மனப்பாங்கு தான் பிள்ளைகளைத் திசை மாற வைக்கிறது.

**உதாசீனம்**

ஆன்மிகமும், அரசியலும் பிள்ளைகள் பற்றிக்கவலைப்படுவதில்லை. அவர்களுக்காக ஒரு நாளை ஒதுக்குவதுமில்லை. பிராத்திப்பதுமில்லை. அவர்களுடைய கோரிக்கைகளை அங்கீகரிப்பதும் இல்லை. பல பிள்ளைகளின் இலட்சியம் பெற்றோர்களால் நிராகரிக்கப்படுவதன் விளைவே முரண்பாடுகளுக்கு அத்திபாரமாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்து உண்ணேல் கிடந்து உறங்கேல் பரந்துகொள்ளேல்

கே.எஸ்.சிவஞானராஜா



எம்மிடையே நிலவும் பழக்கவழக்கம் பற்றி எமது மூதாதையர் அடிக்கடி சொல்லிக் கொள்ளும் பழமொழி 'இருந்து உண்ணேல் கிடந்து உறங்கேல் பரந்து கொள்ளேல்' என்பதாகும். அதன் தாற்பரியம் என்னவென்றால் வயிற்றில் உணவு இருக்கும்பொழுது உண்ணுதல் ஆகவே ஆகாது. அதைப்போலநித்திரையேவராமல்பாயிலோ மெத்தையிலோ கிடந்து உறங்குதல் ஆகாது. வயிற்றில் உணவு இருந்து ஜீரணமாகாமல் உண்பதும் நித்திரை வராமல் கிடந்து கிடந்து உருண்டு புரண்டு கிடப்பதும் ஆகவே ஆகாது. ஆக, சும்மா இருப்பதும் சும்மா கிடப்பதும் உடலுக்கும் வாழ்வுக்கும் ஆகாதனவே.

### இலவசம்

உழைப்பில்லாமல் சொகுசாக இருந்து வளர்ந்து நோகாமல் கொள்ளமல் எப்படி வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கினோமோ அப்போதே இந்த உணவுக்கும் உறக்கத்துக்கும் அதன் பெறுமதி தொலைந்தது எனலாம். வறுமை நிலையில் வாடும் குடும்பங்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கு மட்டும் இலவச விநியோகங்கள் இடம்பெறுமாயின் புண்ணியம் எப்போதோ பூத்திருக்கும். பணத்தையும் சொத்துக்களையும் எக்கெச்செக்கமாக வைத்திருப்பவர்களும் இலவசமான கைங்கரியம் எதுவுமே பயனளிக்காது. இலவசக் கல்வி மூலம் உன்னதப் பேறடைந்தவர்கள் தமது பணவலிமையால் வெளிநாட்டில் சென்று வேலை வாய்ப்பைப் பெற்றுவிடுகிறார்கள். இலவசமான கல்வி இன்னுமொரு நாட்டிலே பேறாகிறது. இலவசம் என்பதற்கு வேண்டிய பதில் நடவடிக்கை இங்குசித்திபெறவில்லை. நாம் பெற்ற கல்வி மூலம், வெளிநாடுகளில் எம் நாட்டினது உழைப்பு பெரும்பாலும் விளைவதும் வெளிநாட்டில் எம்மவரது உழைப்பு எம் நாட்டில் அளவுக்கு அதிகமாக விரயமாவதும் உணவிலும் உடையிலும் உறக்கத்திலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

விதம் விதமான சாப்பாடுகள், விதம் விதமான உடை, நடை, பாவனை, விதம் விதமான குளிரூட்டி, உறக்கம், விதம் விதமான குளியல்கள், விதம் விதமான பூச்சுகளும் மருந்துகளும் என்றவாறான எமது அன்றாடம் சென்றுகொண்டிருக்கிறது. எனின், எப்படிச் சமிபாடடையும்? எப்படி நித்திரை வரும்? மூன்று நேரமே அளவுக்கதிகமான சாப்பாடு. வீட்டிலும் சாப்பாடு. வெளிக்கடையிலும் சாப்பாடு. இடையிடை நொறுக்குத்தீனி. ஐம்பது வீதமானவர்கள் அளவுக்கதிகமான உணவுடன் வாழ்க்கை நடத்துகிறார்கள். முப்பது வீதமானவர்கள் அன்றாடம் சமயோசிதமாக உழைத்தே பசியாறுகிறார்கள். பத்துவீதமானவர்கள் பெண் தலைமைத்துவம் கொண்ட வறுமையின் கரங்களினால் அகப்பட்ட பரிதாபத்துக்குரியவர்கள். மிகுதி பத்து வீதமானவர்கள் இறைவனையே நம்பிவாழும் நோயாளிகள். எனவே ஐம்பது வீதமான வர்களின் நிலைமையோ கவலைக்கிடமானதே.



வசதியானவர்களுக்கு இலவசத்தின் பெறுமதி விளங்குவதில்லை. வசதியற்ற ஐம்பது வீதமானவர்களுக்கு இலவசத்தின் பெறுமதி வரமாகிறது. வசதியானவர்களோ மருந்தும் கையுமாக உணவு ஜீரணமாவதற்கு வைத்தியம் செய்ய வேண்டியுள்ளது. வசதியற்றவர்களுக்கு ஜீரணமாவதற்கு உணவு தேவையாக உள்ளது. ஒரு பகுதியினருக்கு வயிற்றில் உணவு தேங்கியிருக்கிறது. பசிக்கவில்லை. புசிக்க ஆசையாக உள்ளது, முடியவில்லை.

இன்னொரு பகுதியினருக்கோ வயிற்றில் ஒன்றுமில்லை. உணவுமில்லை. ஆனால் பசிக்கிறது. உணவுக்காய் அலைய வேண்டியுள்ளது. மிதமிஞ்சிய பணமும் வசதியும் இருப்பவர்கள் இலவச உணவு, இலவச உடை, இலவசக் கல்வி ஆகிய எவற்றையும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. மிதமிஞ்சிய வறுமையில் சிக்குண்டவர்கள் இலவச உணவு, இலவச உடை, இலவசக் கல்வியை இறைவன் தந்த வரமாகக் கருதுகிறார்கள். பசித்தவனுக்கு மீனைக் கொடுக்காதீர்கள். மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடுங்கள். எமது நாடு சோம்பேறியாய்ப் போனதற்கும் தொடர்ந்து போவதற்கும் இலவச உணவாகாரங்களே முதற்காரணம் என்ற கூற்றானது சிந்தனைக்குரியது.

### விரயம் வேண்டாமே

அன்னதானம்கூட வறுமையானவர்களுக்கு மட்டும் வழங்கப்படுமாயின் பெரும் புண்ணியமாகக் கருத முடியும். ஒவ்வொரு அன்னதான இடங்களிலும் கொட்டிச் சிந்தப்படும் சோறுகறிகளையும் திருமண மண்டபங்களில் வீசப்படும் சோறுகறிகளையும் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்வுகளில் கொட்டிச் சிந்தப்படும் சோறுகறிகளையும் ஒன்று சேர்த்து கணக்குப் பண்ணுவோமாக இருந்தால் அவற்றைக் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் ஒரு லட்சம் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ஒரு மாதம் மூன்று வேளை உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இல்லாவிடின் ஆன ஒரு தொழிற்சாலையை நிறுவ முடியும்.

### தற்கொலைகளும் தற்பெருமைகளும்

கடன் தொல்லையால் தற்கொலை, உணவின்மையால் தற்கொலை, வறட்சியால் தற்கொலை, வாழமுடியாததால் தற்கொலை, வறுமையால் தற்கொலை, விடுதலையின்மையால் தற்கொலை இவ்வாறு எமது நாட்டிலும் அயல்நாட்டிலும் நிலைமை பரிதாபமாக இருக்கும்போது ஒரு சாரார் இருக்கிற கோயில்கள் போதாதென்று புதிதுபுதிதாகக் கோயில்கள் கட்டிக் கொண்டேயிருக்கிறனர். இன்னொருசாரார் போட்டா போட்டியாக வானுயரக் கோபுரங்க் கட்டிய படியேயிருக்கின்றனர். இன்னொரு சாரார் உல்லாச வாழ்வில் திளைத்தபடியிருக்கின்றனர். இன்னுமொரு சாரார், தம்மை ஒறுத்து எளிதாக வாழ்ந்து மற்றவர்களுக்குத் தெரியாமல் தானதர்மம் செய்கின்றனர். இன்னுமொரு சாரார், படலையிலிருந்து சுடலை வரைக்கும் இருக்க, நடக்க, பிடிக்க, கொடுக்க, எடுக்க, பேச, விரிக்க, கட்ட, இடிக்க, காட்ட எல்லாமே அடேயப்பா. என்னத்தைச் சொல்ல அப்படி, இப்படி நாட்டு நடப்பு. விடிய எழும்பினால் என்ன் செய்யலாம் என்று?. இன்னுமொரு சாரார் அரசியல் பித்தலாட்டம். சேர்வது, பிரிவது, விளக்குவது, விலகுவது மீண்டும் இணைவது. இன்னுமொரு சாரார் இறைவா! உறவுக்காக, உயிருக்காக, உரிமைக்காக, உண்மைக்காக, உணவுக்காக, உறைவிடத்துக்கான உழைப்புக்காக வாழ்நாள் முழு வதுமாகப் போராடிக் கொண்டு இருக்கிறார்களே. இப்போது சொல்லுங்கள். நாம் செய்ய வேண்டிய பொறுப்பு யாது?

> அன்னதானம்கூட வறுமையானவர்களுக்கு மட்டும் வழங்கப்படுமாயின் பெரும் புண்ணியமாகக் கருத முடியும். ஒவ்வொரு அன்னதான இடங்களிலும் கொட்டிச் சிந்தப்படும் சோறுகறிகளையும் திருமண மண்டபங்களில் வீசப்படும் சோறுகறிகளையும் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்வுகளில் கொட்டிச் சிந்தப்படும் சோறுகறிகளையும் ஒன்று சேர்த்து கணக்குப் பண்ணுவோமாக இருந்தால் அவற்றைக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் ஒரு லட்சம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஒரு மாதம் மூன்று வேளை உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 10 . 04 . 1938

உதிர்வு 23 . 01 . 2018

அமரர் உயர்திரு **தியாகராசா தங்கராசா**

**(சின்னத்தம்பி)**

(உரிமையாளர் - முருகன் மோட்டோர்ஸ்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், சகோதரர்கள் அனைவருடனும் நாமும் துயர் பகிர்ந்து நிற்கின்றோம். அத்துடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

செல்வா காட்வெயார்ஸ்

சாரா இன்டஸ்ரீஸ்

(உரிமையாளர் குடும்பத்தினரும், அனைத்து பணியாளர்களும்)

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காமாட்சி (கிளி) சுந்தரம்



பிறப்பு 21.11.1937 இறப்பு 26.01.2018

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் முட்கொம்பன் பூநகரியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி (கிளி) சுந்தரம் நேற்றுமுன்தினம் (26.01.2018) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும், நாதன், தேவி, மல்லிகா, காலஞ்சென்ற இந்திரா மற்றும் றஞ்சி, சித்திரா, சீலன், கௌரி, கெங்கா, மஞ்சி, சத்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை முட்கொம்பன் பூநகரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக முட்கொம்பன் ஐந்தடிவான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முட்கொம்பன், பூநகரி. (ACH/308)(11.17) தகவல் குடும்பத்தினர்.

**0771527596 (சு.சீலன் - S.K.பந்தல்)**

### திருமதி சிவக்கொழுந்து செல்லத்தம்பி



மலர்வு 1940.08.16 உதிர்வு 2018.01.23

சங்கத்தார் வயல் இயக்கச்சியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து செல்லத்தம்பி கடந்த 23.01.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான தவராசா, சிவமலர், ஜெயராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜிதா(கனடா), பிரபாகரன், சுபோதினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தசா(கனடா), லாவண்யா(கனடா), ஜெஸ்ரின்(கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் நவமணி, தாமலிங்கம், அன்னபூரணம், மனோன்மணி, தனலட்சுமி(கனடா), அமிர்தலிங்கம்(நோர்வே), தனபாலசிங்கம்(இத்தாலி), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சங்கத்தார்வயல் இயக்கச்சியில் உள்ள அன்னாரது சகோதரி திருமதி செல்வசுந்தரம் நவமணி என்பவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கத்தார்வயல், இயக்கச்சி. தகவல்: செ.அகிலநாதன் (பெறாமகன்) ).ஜெஸ்ரின் (பேரன் - கனடா)

**0773580724**

வான், கார் விற்பனைக்கு Toyota Town Ace CR 42 PB

தொடர் இலக்கமுடைய வான் Maruthi - Alto CAL தொடரிலக்க முடைய கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு :076 695 2449, thaksha trading @ gmail.com

## அழகாக தோன்ற வேண்டுமா ?

**கேர்வல் கிறீம்:** கருமைநிறம், பருக்கள், கண்கருவளையம், உதட்டுக்கருமை, கை, கால், முதுகு, கருமை அனைத்திற்குமானது (கிறீம், சோப், குளிசை)

**ஆயுள் வேத தலைமுடி வளரச்செய்யும் எண்ணெய் :** தலைமுடியுதிர்வு நீங்க, நீளமாக முடிவளர, முடி புதிதாக முளைக்க, இளநரை நீங்க, பேன், பொடுகு, தலையிடி நீங்க அற்புதமான பாரம்பரிய முறையில் காய்ச்சிய எண்ணெய்

**உடல் எடை குறைக்க:** உடல் எடை குறைய, வயிறு மார்பு குறைக்க, ஊளச்சதை, மலச்சிக்கல் நீங்க (குளிசை, பால்மா, கிறீம் டொனிக்)

**உடல் எடை கூட:** உடல் எடை கூட, ஒட்டிய கன்னம் குண்டுக்கன்னங்களாக மாற, கணச்சூடு, பலவீனம் நீக்க (குளிசை, லேகியம்)


**பேசியல்:** முகக்கருமை நீங்க, முக மினுமினுப்பு பெற ஒரே தடவையில் அற்புதமாற்றம் பெற (ஆயுள் வேத மூலப்பொருள்கள் கொண்டுசெய்யப்படும்)

பதிவு இல. 16168 077 314 9386 221, நாவலர் றோட் யாழ்.

## மரண அறிவித்தல்கள்

### ஜோண் சின்னட்டி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை மேற்பார்வையாளர்)



மலர்வு 23.03.1927 உதிர்வு 25.01.2018

உடுவிலை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் சின்னட்டி செல்லத்துரைகடந்த(25.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோண் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சாமுவேல் மரியம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற றெஜினாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சாமுவேல், அல்பேட், ஹென்றி, டானியேல், கனரட்ணம், செல்வராணி, இராயேஸ்வரி மற்றும் யேசுதாசன், இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோண்சன், ஆனந்தராஜா(லண்டன்), அமலநாயகி, தயாவதி(பிரான்ஸ்), மனோதிராஜா, மோகனராஜா(லண்டன்), சென்ஜோண்ராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றாகினி (லண்டன்), ஆசைராஜ், ஜெயரட்ணம் (பிரான்ஸ்), யோகராணி, தேவகமலம்(லண்டன்), ஜெனிற்றாசுகந்தினி ஆகியோரின் மாமனாரும் ஜோனி, ஜெரின், றோயல், டியூக், றொஸ்னி, ஜென்சன், ஜெறோன், ஜென்சி, தனுஜன், சாந்தன், மரியஸ்ரெலா, யஸ்மினா, யோவேல், எசாயா, சலோமியா, கிஷானி, கிஷான், டினுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில்நாளை(29.01.2018)திங்கட்கிழமை காலை10.00மணியளவில் ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கோப்பாய் மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 13359,16,17) தகவல்: குடும்பத்தினர்.

தொலை பேசி இல : 077 509 0903, 077 883 0525

### இராசையா செல்வராசா (செல்வம்)



யா/ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப்பிடமாக வும்கொண்ட இராசையாசெல்வராசா 26.01.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானவைரவிஇராசையா - இராசையா சின்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், முத்தையா நடராசா - நடராசா மகாலட்சுமியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும், குணசிங்கம் (நாதன்) , கமலாதேவி (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்த ராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கமலாதேவி (ஜேர்மனி), சிவராசா (லண்டன்), வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், விஜயராணி, ரவீந்திரன் (சுவிஸ்), அனுசியா ஆகியோரின் மைத்துனரும், அகிலா (லண்டன்), ஞானேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற ஹேரம்பமூர்த்தி ( ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், தட்சாயினி, தட்சுதன், தட்வரன், தட்லோஜன் தனுசியன், விதுசன் ஆகியோரின் சிறிய தந்தையும், லதாங்கி, றெறோதன், அபிநயா, கிருஷ்ணா, அபிசாலி ஆகியோரின் பெரியதந்தையும், மிக்ஷி, மிதுலா, சிவானுஜன், மேனுஷன், சிவரூபன் ஆகியோரின் மாமனாரும், ருஷானாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியப்புலம், தாவடி தெற்கு கொக்குவில். தகவல் மனைவி - சுசிலாதேவி, சகோதரர்கள்

(cs/13335) **0777110219, 0777111732**

## திருத்தம்

26.01.2018 வெள்ளிக்கிழமை வெளிவந்த உதயன் பத்திரிகையின் 25 ஆம் பக்கத்தில் "யாழ்ப்பாணம் மாநகரசபை, 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்" எனும் விளம்பரத்தில் முதலாம், இரண்டாம் பந்திகளில் யாழ்ப்பாணம் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 286m மற்றும் விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286 m என்பதற்குப் பதிலாக "286அ" என திருத்தி வாசிக்கவும்.

## உடன் விற்பனைக்கு

தையல் மிசின் HARA.ZOJE (புதியது) ஓலக்மிசின் தையல் நூல் மற்றும் தையல் உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :077 440 6625, 077 466 0277

## உங்கள் பழமை வாய்ந்த பொருள்கள்

புதிய அல்லது பாவித்த மாணிக்க கற்கள், இரத்தினக்கற்கள், கைக்கடிகாரம், பழமை வாய்ந்த சிலைகள் தகுந்த விலைக்கு வாங்கும் ஒரே ஸ்தாபனம்

தொடர்பு : 071 059 9971

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் 3 அறைகளையும், இணைந்த குளியலறையையும் கொண்ட பாடசாலை மற்றும் தேவாலயத்திற்கு அருகில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிடம் இல்லை

077 756 8282 (CS 13271)(11)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 இல் பிறந்த 12 இல் செவ்வாய்யுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை . (உள்நாடு or கனடா PR)

தொடர்புக்கு:077 375 5429

## விற்பனைக்கு

உணவகத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-077 375 5429

## வாடகைக்குண்டு

திருநெல்வேலிக்கு அருகில் கடை வாடகைக்குண்டு. தனியாக அல்லது தொகுதியாக வழங்கப்படும்

தொடர்பு : 076 379 1672

## கடை விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 2759 220 (13389)(17.8)

## பணியாளர்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் பிரபல புத்தகசாலைக்கு பணியாளர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்

(cs13368)(17.8) தொடர்பு - 076 989 4676

## காணி விற்பனைக்குண்டு

அம்பலவாணர் வீதி, அத்தியடிபிள்ளையார் கோயிலடியில் ஒரு பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 076 704 2763 (cs13367)(17.8)

## விற்பனைக்கு

6 வாரம் நிரம்பிய டோமன் (Doberman) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 652 0905, 071 01 99627 (13364)(17.8)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை.

தொடர்புக்கு:076 396 9720

## வேலையாள்கள் தேவை

ஹாட்வெயரில் அனுபவம் உடைய வேலையாள்கள் தேவை. அனுபவம் உடையவர்கள் மட்டும் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்புக்கு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ் இல : 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மோட்டார்சைக்கிள் விற்பனை

நல்ல நிலையில் உள்ள (XG XXXX) , CB 400 ஜப்பான் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :077 846 8298

## காணி விற்பனை

ஹலோ றஸ்ற் ( Halo Trust) நிறுவனத்துக்கு அண்மையில் நல்லூர் குறுக்கு வீதியில் 14 அடிப்பாதையுடன் கூடிய 6பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு.

071 815 1719 (CS 13352)(11.17)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கன்றுத்தாச்சி மாடு இறைச்சியாகியது

## ஒருவர் வாகனத்துடன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 28

கன்றுத் தாச்சி உள்ளிட்ட பசுக்களைக் கடத்திச் சென்று வெட்டிக்கொன்று இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் நேற்றுமுற்பற்பகல் இடம்பெற்றது.

மாடுகளை இறைச்சியாக்கிய கும்பல், அவற்றின் கழிவுகளை கன்ரர் ரக வாகனத்தில் ஏற்றிச் சென்றது. மாடுகள் தனியாரிடம் திருடப்பட்டவை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

யாழ். ஓட்டுமடம் சிவலிங்கப்புளியடி ஊடாகச் சென்ற வாகனத்தை அவதானித்த பசுவின் உரிமையாளரான பெண்ணொருவர், சந்தேகத்தின் அடிப்படையில் அதனைத் பின்தொடர்ந்து சென்றுள்ளார். வாகனத்தை கே. கே.எஸ். வீதி சிவலிங்கப்புளியடியில் வழிமறித்த அந்தப் பெண், வாகனத்தின் பின் பகுதியைத் திறந்து காண்பிக்குமாறு கேட்டுள்ளார். எனினும் வாகனத்தில் சென்றோர் அந்தப் பெண்ணிடம் முரண்பட்டனர். இதனை அவதானித்த அந்தப் பகுதியில் நின்றோர், ஒன்று கூடி வாகனத்தின் பின்பகுதியை திறக்குமாறு கேட்டனர். பொதுமக்கள் ஒன்றுகூடியதால் வாகனத்தை திறந்தனர். அதற்குள் பசு மாட்டின் உடற்பாகங்கள் காணப்பட்டன. 6 தலைகளும் காணப்பட்டன. பசுவின் செவியில் குத்தப்பட்டிருந்த இலக்கத்தை அடிப்படையாக வைத்து குறித்த பசுவை பசுவின் உரிமையாளரான பெண் அடையாளம் காட்டினார்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார், வாகனத்தை மீட்டதுடன், அதில் பயணித்தவரையும் கைது செய்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் கடந்த வாரமும் கன்றுத்தாச்சி மாடு வெட்டி இறைச்சி ஆக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4,37)

## மகிந்த...

ஆதிக்கத்துக்கும் எதிராகவேயாகும்." என்றும் அவர் கூறியுள்ளார்.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் ஒன்றிணைப்பதற்கான பேச்சுக்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டிருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையவேண்டும் என்றால், ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசு உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்று மகிந்த அணி நிபந்தனை விதித்திருந்தது. சுதந்திரக் கட்சி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. [இ]தனால் இரு தரப்பின் இணைப்பும் சாத்தியமில்லாது போயிருந்தது.

அண்மையில் பிணைமுறி விசாரணை அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான மோதல் வலுத்துள்ளது. அது நாளுக்கு நாள் வலுவடைகின்றது. இந்தப் பின்னணியில் அரச தலைவர் இவ்வாறு கூறியுள்ளமை கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற-5)

## பிணைமுறி...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிணைமுறி மோசடி தொடர்பில் நாளை திங்கட்கிழமை அரச தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் தமக்கு ஏதும் தெரியாது என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் ஆளும் கட்சியின் பிரதம கொரடாவுமான அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 8ஆம் திகதியன்று நாடாளுமன்றைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டுள்ளமையால், அதற்கு முன்னர் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறலாம் என்றும் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (ற-4)

## 5 மாணவர்கள்...

விசாரணைகளை முன்னெடுத்திருந்தன. ஆனால் சம்பவம் தொடர்பில் எவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

"இந்தப் படுகொலை தொடர்பில் இலங்கை அரசு ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும். இதனூடாகப் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் குடும்பங்கள் நீதியைப் பெறலாம்". என்று மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (ற-4)

## தீர்வு...

கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தீர்வு மக்களின் இறையாண்மையை மதிப்பதாக, எமது மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை மதிப்பதாக அமைய வேண்டும். அதுதான் தந்தை செல்வாவின் கொள்கை.

எமது சமூக கலாசார விடயங்களில் நாங்கள் அதிகாரத்தைச் செலுத்தக் கூடிய வகையில் தீர்வு அமைய வேண்டும். ராஜபக்ஷ காலத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ இடம்பெறாத பலவிடயங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீது முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களில் ஒன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசை ஆதரிக்கின்றது என்பதாகும். இதற்கு நான் பதில் அளிக்க வேண்டும். 1965 க்கும் 1970 க்கும் இடையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் திருச்செல்வம் அரசில் அமைச்சராக இருந்தார். அவர் சில கருமங்களை நிறைவேற்றுவதற்காக, ஒரு நோக்கத்துக்காக அவ்வாறு இருந்தார். அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி அல்ல, செனட் சபை உறுப்பினராக இருந்தவர். அதனைத் தவிர வேறு எந்தக் காலத்திலும் தமிழ் அரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் அமைச்சர்களாக இருக்கவில்லை.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் சம அந்தஸ்த்துடன் வாழ்வதற்கான முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் 2009 இல் முடிவுக்கு வந்ததிலிருந்து எமது இராஜதந்திரப் போராட்டம் தொடர்கிறது. பல கருமங்கள் நிறைவேற்றப்பட்டு, பன்னாட்டு ரீதியான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு எமது பணிகள் தொடர்கின்றன.

### மறுக்கவில்லை

நாங்கள் அரசை ஆதரிப்பதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். இந்த அரசை நாம் ஆதரிக்கின்றோம், மறுக்கவில்லை, இந்த அரசு விலகக்கூடாது. சில கருமங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளன. இன்றைய அரச தலைவரும் தலைமைச் செயலரும் எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் தொடர்ந்தும் அரசை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

### முக்கிய தேர்தல்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பல்வேறு காரணிகளால் முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டில் உருவாக்கப்படுகின்ற அரசியல் சாசனம், பல பன்னாட்டுத் தீர்மானங்கள், அழுத்தங்கள், தற்போதைய அரசின் கொள்கைகள் பன்னாட்டுச் சமூகத்தின் கூடுதலான அக்கறை போன்ற காரணங்களால் இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெறுகிறது. எனவே இது சாதாரணமான தேர்தல் அல்ல என்பதனைப் பொதுமக்கள் உணர வேண்டும். தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து அமோக வெற்றியைக் கொடுத்தால் தமிழ் மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள் என்பதை, ஜனநாயக ரீதியாக உறுதியாக இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தும்.

### அரசு மந்தகதி

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசுக்கு விருப்பம் இருந்தாலும், மந்த கதியில் செய்து வருகின்றார்கள். காரணம், போர் வெற்றியைப் பெற்றுத் தந்த இராணுவ வீரர்களுக்கு இந்த அரசு துரோகம் செய்யபோகின்றது என்று மகிந்த பரப்புரைகளில் கூறி வருகின்றமையே - என்றார்.

இந்தப் பரப்புரையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, குருகுலராஜா, அரியரத்தினம், கட்சியின் வட்டார வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (4,35)

## மகிந்தவைக்...

"தேர்தல் கடமைகளுக்கு இடையூறு செய்கிறீர்களா?" என்று முன்னாள் அரச தலைவர் கேட்டபோது பதிலளித்த தேர்தல் ஆணைக்குழுத் தலைவர், "இல்லை... இல்லை... நாங்கள் தபால்மூல வாக்களிப்பால்தான் அப்படிச் செய்தோம்" என்றார்.

தபால் மூல வாக்களிப்பெல்லாம் தாமரை மொட்டுக்கே கிடைக்கும். அரசு கம்பியூட்டர் ஜில்மாட் செய்யாவிட்டால் கூட்டு எதிர்க் கட்சியே வெல்லும் என மகிந்த ராஜபக்ச கூறியுள்ளாராம்.

"வாக்குகளைக் கணக்கெடுத்துப் பார்ப்போமே" என்று ஆணைக் குழுவின் தலைவர் சிரித்தபடி பதிலளித்தாராம். (ற-4)

## மைத்திரி...

டத்தை உடனடியாகக் கூட்டுங்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சிகளின் தலைமைக் கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த அறிக்கைகள் தொடர்பில் தேர்தலுக்குப் பின்னர், அதாவது பெப்ரவரி 20 மற்றும் 21ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படும் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த விவாதத்தை முடிந்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் நடத்திக்காட்டுங்கள் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பாணந்துறையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பகிரங்கமாகச் சவால் விடுத்திருந்தார்.

அந்தச் சவாலை தாம் ஏற்றுக்கொள்வதாக சபாநாயகர் கருஜயசூரியவுக்கு அநுரகுமார திஸாநாயக்க கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (ற-4)

## புலிப்....

யும் அரச தலைவருடன் பேசி சீர்செய்ய வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீட்டின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல் எழுப்பப்பட்டன. அந்தப் பாடல்கள் புரட்சியின் விடுதலைக்கான பாடல்கள் என்றும் போராட்டத்துடன் சம்பந்தப்படாதவர்கள் எல்லாம் அந்தப் பாடல்களைப் பயன்படுத்த முடியாது என்றும் சிவஞானம் முன்னர் கூறியிருந்தார்.

அந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில், புலிகள் உரிமைக்காக போராடியவர்கள் என்றும் அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அதனைப் போடுவதற்கு உரிமை இருக்கிறது என்றும் தூங்கியிருக்கின்றவர்களை எழுப்புவதற்காகவே அந்தப் பாடல்களை ஒலிபரப்பியதாகவும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவித்திருந்தார்.

அங்கஜனின் கருத்துக் குறித்து சிவஞானத்திடம் ஊடகவியலாளர்கள் நேற்றுக் கேள்வி எழுப்பியிருந்தனர். அதற்கு பதிலளித்த சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:

அவரது கட்சியால் ஒலிபரப்பப்பட்ட எழுச்சிப்பாடல் புலிகளின் பாடல். அது புலிகளால் உருவாக்கப்பட்டது என்பதால் அவர்களுக்கே அதன் பதிப்புரிமையும் இருக்கின்றது. அது புலிகளுடைய உரிமை என்றுதான் கூறினோம். அதில் எங்களுக்கும் உரிமை உள்ளது என்றேன்.

இப்போது எல்லோரும் அரசியலுக்கு வருகின்றார்கள். போராட்ட காலத்தில் போராட்டத்தை எட்டிப்பார்க்காத பலர் தாங்கள்தான் புலிகளின் வாரிசுகள் என்றும் கூறி வருகின்றனர். இதை ஏற்றுக் கொண்டும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சியாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அங்கஜன் கூறுகின்றார். ஆனால் அவர் கூறுவது போன்று செயற்பட அரச தலைவர் அனுமதித்துள்ளாரா என்பதை அரச தலைவர் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். அதுவே வரவேற்கத்தக்கதாக அமையும். இல்லாவிட்டால் அது அங்கஜனின் தனிப்பட்ட கருத்தாகத்தான் இருக்கும்.

அவர் சார்ந்த கட்சியில் புலிகளின் பாடலை ஒலிபரப்பலாம், பரப்புரை செய்யலாம் என்றால் அதனை நாங்களும் வரவேற்றுக் கொள்கிறோம். அவ்வாறாயின் புலிகள் இன்னும் ஏன் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும்?

அந்த தடையை அரசு நீக்க வேண்டும். புலிகள் என்ற போர்வையில் 2 தசாப்தங்களுக்கு மேலாகச் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற அத்தனை அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பு அல்லது ஏதோவோர் அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

தென்பகுதிக் கட்சி தமிழ்க் கட்சியாக செயற்படுவதென்பதில் எந்த நியாயம் என்று எனக்கு தெரியவில்லை. இங்கு தேர்தலில் வந்து போட்டியிடுவது அவர்களின் உரிமை. ஆனால் அவர்கள் தமிழ்க் கட்சியாக செயற்படுவதென்பது எவ்வளவு சரி என்று எனக்குப் படவில்லை - என்றார். (4,32)

**வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் சைவ உணவகம் ஒன்றிற்கும் கொழும்பில் இயங்கிவரும் இரும்புக்கடை ஒன்றிற்கும் கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

**உணவக வேலையாள்கள்**

1. உணவு பரிமாறுபவர்
2. தேநீர் தயாரிப்பாளர்
3. சமையல் உதவியாளர்
4. ஏனைய சமையல் வேலையாள்கள்

**இரும்புக்கடை வேலையாள்கள்**

(தங்குமிட வசதி உண்டு)

1. காசாளர்
2. விற்பனைப்பிரதிநிதி

மும்மொழித்தேர்ச்சி உடையோர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு - 36, 38 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 075 5304 521 021 222 2373

(cs13366)(17.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போபண்ணா, பாபோஸ் இணை இறுதியாட்டத்துக்குச் சென்றது




ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் போபண்ணா, ஹங்கேரியின் பாபோஸ் இணை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் போபண்ணா - பாபோஸ் இணையை எதிர்த்து சன்சேஸ் டிமாலின்சர் இணை மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது போபண்ணா - பாபோஸ் இணை. இரண்டாவது செற்றை அந்த இணை 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தாலும் இறுதி செற்றை 10:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

## இறுதியாட்டத்தில் றோயர் பெடரர்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து தென்கொரிய வீரர் சங் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது செற்றைக் கைப்பற்றினார் பெடரர். இரண்டாவது செற்றின்போது காயம் காரணமாக பாதியில் விலகினார் சங். இதனால் பெடரர் இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



## இறுதியில் சிலிச்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் மரின் சிலிச்.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சிலிச்சை எதிர்த்து இங்கிலாந்தின் கைல் மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:2, 6:2, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் சிலிச். (ம)



# பிளாசிஸ், பிராவோ சென்னை அணியில்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான வீரர்களின் ஏலம் நேற்று நடைபெற்றது. ஒவ்வொரு அணியும் இரண்டு வீரர்களைத் தக்கவைக்கலாம் என்ற கூடுதல் வாய்ப்பின் அடிப்படையில் சென்னை அணி பிளாசிஸ் மற்றும் பிராவோ ஆகிய இருவரையும் தக்கவைத்தது.

அஸ்வின் மற்றும் பிராவோ ஆகிய இருவரையும் தக்கவைப்பதற்கே அதிக வாய்ப்பு உள்ளது என்று கருதப்பட்ட நிலையில் அஸ்வின் புறக்கணிக்கப்பட்டு பிளாசிஸ் அணியில் இடம்பிடித்தார்.

முதல் நாள் ஏலத்தின்போது, அதிக தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட பட்டியலில் இங்கிலாந்து அணியில் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் முதலிடம் பிடித்தார். அவர் 12 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு (இந்திய மதிப்பில்) ஏலத்தில் எடுக்கப்பட்டார். இந்திய அணியின் இளம் வீரர்களான மனீஸ் பாண்டே மற்றும் லோகேஸ் ராகுல் இருவரும் தலா 11 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டனர். மனீஸ்பாண்டேயைஹைதரபாத் அணியும், ராகுலை பஞ்சாப் அணியும் ஏலத்தில் எடுத்தன.

ஆஸ்திரேலிய அணியின் அதிரடி வீரர் லின் 9 கோடியே 60 லட்சம் ரூபாவுக்கு கொல்கத்தா அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக் 9 கோடியே 40 லட்சம் ரூபாவுக்கு கொல்கத்தாவால் வாங்கப்பட்டார். ஆஸ்திரேலிய அணியின் சகல துறைவீரர் மக்ஸ்வெல் 9 கோடி ரூபாவுக்கு டெல்லி அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார்.



இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரும் இலக்குக் காப்பாளருமான கேதர் யாதவ் 7 கோடியே 80 லட்சம் ரூபாவுக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். அஸ்வின் 7 கோடியே 60 லட்சம் ரூபாவுக்கு கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். கிறிஸ் வோக்ஸ் 7 கோடியே 40 லட்சம் ரூபாவுக்கு பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். டுவைன் பிராவோ 6 கோடியே 40 லட்சம் ரூபாவுக்கு சென்னை சுப்பர் கிங்ஸால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். ஹைதராபாத் அணி 5 கோடியே 20 லட்சம் ரூபாவைக் கொடுத்து தவானைத் தக்கவைத்துள்ளது. யுவராஜ் சிங்கை 2 கோடி ரூபா கொடுத்து ஏலத்தில் எடுத்துள்ளது பஞ்சாப்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சென்னை அணி, கிட்டத்தட்ட தனது அணியைக் கட்டமைத்துள்ளது. இதன்படி தற்போதைய நில வரத்தின்படி டோனி, ரெய்னா, ஜடேயா, பிளாசிஸ், ஹர்பஜன் சிங், பிராவோ, வற்சன், கேதர் யாதவ், ராயிடு, தாகிர் என்றவாறாக அந்த அணி கட்டமைக்கப்பட்டுள்ளது. (ம)

## கிளிநொச்சி கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 27

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான அணிக்கு 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

பரந்தன் இளைஞர்வட்ட விளையாட்டு மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கல்மடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், அக்கராயன் விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கல்மடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இராமநாதபுரம் குறிஞ்சி விளையாட்டுக் கழக அணிக்கும், முறிப்பு கண்ணன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இராமநாதபுரம் குறிஞ்சி விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழக அணிக்கும், சுடரொளி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## கெய்ல் 'பெய்ல்'

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெய்ல் எந்த அணியாலும் ஏலத்தில் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட் டார். பெங்களூர் அணியின் சார்பாக கடந்த தொடர்களில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார் கெய்ல். இதனால் நடப்பு வருடத் தொடரில் அவர் ஏலத்தில் விடப்பட்டாலும் அவரை பெங்களூர் அணி மீண்டும் ஏலத்தில் எடுக்கும் என்ற எதிர்பார்ப்பே நிலவியது. இந்த நிலையில் எந்த அணியாலும் முதல் சுற்றில் ஏலத்தில் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார் கெய்ல். இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட், இந்திய அணியின் வீரர் முரளி விஜய் ஆகியோரும் புறக்கணிக்கப்பட்டனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராஜ கணபதி துணை

அருவமும் உருவம் ஆகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

ஜெயபுரம், பல்லவராஜன்கட்டு

# ஸ்ரீ சிங்கார வடிவேலன் ஆலய புனராவர்த்தன ஏக குண்ட பட்ஷ (அருள்மிகு முருகன் ஆலயம்) மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 2018

**கர்மாரம்பம் :**
02.02.2018 வெள்ளிக்கிழமை தை மாதம் 20 ஆம் நாள்
மாலை : 04.23 மணிமுதல் 6.36 மணிவரை

**மஹா கும்பாபிஷேகம் :**
04.02.2018 ஞாயிற்றுக்கிழமை தை மாதம் 22 ஆம் நாள்
காலை ; 9.27 மணிமுதல் 10.27 மணிவரை

**எண்ணெய்க்காப்பு :**
03.02.2018 சனிக்கிழமை தை மாதம் 21 ஆம் நாள்
காலை : 6.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை

***முருகப் பெருமான் அடியார்களே!*** இலங்காபுரியில், வடபால் வன்னிப் பெருநிலப்பரப்பில் பசுமை நிறைந்த ஜெயபுரம், பல்லவராஜன் கட்டு அருள்மிகு ஸ்ரீ சிங்காரவடிவேலன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நூதன ஆலய ஏக குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நிகழும் ஏவிளம்பி வருடம் தை மாதம் 22 ஆம் நாள் (04.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலை சதுர்த்தி திதியும் உத்தர நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும்கூடிய காலை 9.27 முதல் 10.27 வரையுள்ள மீன லக்ன சுப முகூர்த்தத்தில் ஜெயபுரம் ஸ்ரீசிங்கார வடிவேலரிற்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. கிரியா காலங்களில் அடியார்கள் ஆசார சீலராய் வந்து தொண்டுகள் புரிந்து முருகப் பெருமான் அருளைப் பெறுக.

ஆறுமுக சுவாமியின் பிரதிஷ்டா நிகழ்வு இடம்பெறுவதுடன் எங்குமில்லாதவாறு ஆறுமுகத்தையும் சிறப்பாக தரிசிக்கும் பாக்கியத்தை ஸ்ரீ சிங்கார வடிவேலன் ஆலயத்தில் காணலாம்.

## கிரியா கால நிகழ்வுகள்

***தை மாதம் 20 ஆம் நாள் 02.02.2018 வெள்ளிக்கிழமை*** மாலை 4.23 மணிமுதல் 4.36 மணிக்குள் கும்பாபிஷேக கிரியாரம்பம், விநாயக வழிபாடு, தேவ, பிராமண, அனுக்ஞை, த்ரவ்யசுத்தி, த்ரவ்யவிபாகம், பத்ரிகாபடனம், மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, பிரவேச பலி, திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், சங்கீதா ஹோமம், ரக்ஷோக்கன ஹோமம், மிருதசங்கிரணம், அங்குரார்ப்பணம், தர்மதுவஜ ஆரோகணம், சிவாச்சார்ய ரட்ஷாபந்தனம், நூதன மூர்த்திகள் தான்யாதி வாசம், ஜலாதி வாசம், நயனோன் மீலனம், சயனாரோகணம், கடஸ்தாபனம், கலாகர்ஷனம், அதிவாசம், ஷண ஹோமம், கும்ப யாக சால பிரவேசம். இரவு 8.36 மணிமுதல் 10.38 மணிவரை தாபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்ஸ்தாபனம், அஷ்ட பந்தனம், தொடர்ந்து யாக பூஜை,அக்கினி பூஜை தீபாராதனை, வேத, ஸ்தோத்திர, தேவாரபாராயணம், பிரசாதம் வழங்கல்.

***தை மாதம் 21 ஆம் நாள் 03.02.2018 சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் 3.00 மணிவரை எண்ணெய் காப்பு*** காலை 8.00 மணிமுதல் - புண்யாவாஜனம், நித்யத் துவஜ பூஜை, யாக பூஜை, த்ரவ்ய ஹோமம், வேதா ஸ்தோத்ர, தேவார் பாராயணம், பிரசாதம் வழங்கல். மாலை 4.00 மணிமுதல் புண்யாவாஜனம், பிம்ப சுத்தி, பிம்ப ரட்ஷாபந்தனம், ஷடத்வன் நியாசம், யாக பூஜை, யாக ஹோமம், சத்ரு சங்காரத்ருசதி ஹோமம், ஸ்பர்சாகுதி, வேத, ஸ்தோத்திர, தேவாரபாராயணம், பிரசாதம் வழங்கல்.

***தை மாதம் 22 ஆம் நாள் 04.02.2018 ஞாயிற்றுக்கிழமை*** காலை 7.30 மணிமுதல் - புண்யாவாஜனம், நித்யத் துவஜ பூஜை, மஹா பூர்ணாகுதி, மஹா தீபாராதனை, வேதம், ஸ்தோத்ரம், ஆசீர்வாதம், தேவாரம், திருப்புகழ் அஞ்சலி, அந்தர் பலி, பஹிர்பலி, தானங்கள், காலை 9.27 முதல் 10.27 மணிவரையுள்ள மீன லக்கின சுப முகூர்த்தத்தில், கும்ப பிரதட்சணம், ஸ்தாபி அபிஷேகம், பரிபார மூர்த்திகள் சகித ஸ்ரீ சிங்கார வடிவேலனுக்கு சர்வ மங்கள வாத்ய சகித மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து தசதரிசனம், குருமார்கள் சம்பாவனை, ஆசீர்வாதம், ஆசியுரை, அருளுரை நடைபெறும். தொடர்ந்து 11.00 மணியளவில் மஹா அபிஷேகம், விஷேட பூஜை நடைபெறும். நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.

**சர்வபோதகம்**
சிவாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தாணு மகாதேவக்குருக்கள்
(அதிபர் காயத்ரிபீடம், இணுவில்)

**ஆசிவழங்குபவர்**
ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்
(சாரதா பீடம், ஜோதிட நிலையம் அதிபர்)

**அருளாசி வழங்குபவர்கள்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
ஜாக்கிரத சைதன்ய சுவாமி (யாழ். சின்மயாமிஷன்)

**ஆலய நிர்மாணம்**
திருநாவுக்கரசு விஜயரஞ்சன் (ராசன்)
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

**வர்ண வேலைகள்**
துரைராசா துஷ்யந்தன்
அல்வின் ஆட்ஸ், நெல்லியடி

**மஹா கும்பாபிஷேக பிரதம குருமார்**

**பிரதிஷ்டா பிரதம குருமார்கள்**
ம.சோமசுந்தரக் குருக்கள் (குருகுலம், இணுவில்)
பா.சர்வேஸ்வரக்குருக்கள் (லண்டன்)
க.கஜேந்திரக்குருக்கள் (வற்றாப்பளை)
நா.திவாகரக்குருக்கள் (தாவடி)
சு.சங்கரக்குருக்கள் (கலட்டி)
ச.சதானந்தக்குருக்கள் (யாழ்ப்பாணம்)
அ.செல்வராஜாக்குருக்கள் (அல்வாய்)

**யாக சம்ரட்ஷகர்கள்**
மா.பார்த்தீப சர்மா (கொக்குவில்)
சி.ஸ்ரீகர சர்மா (மீசாலை)
ர.கோபி சர்மா (கொழும்புத்துறை)
க.சுராசீச சர்மா (காரைநகர்)

**சர்வசாதகர்கள்**
சே.சிவபாலசர்மா (குருகுலம் இணுவில்)
ம.தாணுநாத சர்மா (குருகுலம் இணுவில்)
ம.ஸ்ரீவத்சாங்கசர்மா (குருகுலம் இணுவில்)
சோ. பிரசன்னாக்குருக்கள் (வியாகர சிரோன்மணி, இணுவில்)
சி.கௌரிசங்கர்சர்மா (குருகுலம் இணுவில்)

**பாகசாஸ்திர நிபுணர்**
சீ.சீதாஸ்ரீசாரங்க குருக்கள்

**விக்கிரக அமைப்பு (நூதன மூர்த்திகள்)**
விஸ்வ பிரம்மஸ்ரீ தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி

**மங்கள வாத்தியம்**
S.M.இராசதுரை மேளக்குழுவினர்
கணேசபுரம், கிளிநொச்சி

**பூமாலை அலங்காரம்**
பொ.புண்ணியமூர்த்தி
அளவெட்டி

**ஒலி, ஒளி அமைப்பு**
செல்லத்துரை சந்திரரூபன்
ஜெயபுரம்

**சுதை விக்கிரகம்**
கனகலிங்கம் சுகந்தன்

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 12 தினங்கள் காலையும் மாலையும் நடைபெறும். அடியவர்கள் மஹா கும்பாபிஷேகத்திற்குத் தேவையான திரவியங்கள், தானியங்கள், சமித்து வகைகள், வில்வங்கள், பூக்கள், பூமாலைகள் மற்றும் பால், தயிர், இளநீர், பழவகைகள் போன்றவற்றை வழங்கி வடிவேலனின் அருள் ஒளியில் சங்கமிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுசரணை : ஸ்ரீ ராஜ கணபதி (தனியார் வ- து)
இயக்கச்சி

சுபமங்களம்

*வடிவேலனின் அருட்பணியில்*
ஸ்ரீ சிங்கார வடிவேலன் தேவஸ்தான நிர்வாக சபையினர்.

## மரண அறிவித்தல்



# திருமதி பராசக்தி துரைராசா

புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரம், கண்ணகி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைதற்காலிகவசிப்பிடமாகவும்கொண்டதிருமதிபராசக்தி துரைராசா கடந்த(26.01.2018)வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் (யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம்) காலஞ்சென்றவர்களான மாரிமுத்து . இராசம்மா, செல்லம்மா, சின்னம்மா, இலட்சுமி, நடேசு, தம்பிராசா மற்றும் பொன்னம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லக்கண்ணு, இரத்தினம்,யோகம்மா, செல்லத்துரை , அரியரட்ணம், கனகசபை, நடராசா, மனோன்மணி, சுப்ரமணியம், வில்வ ரட்ணம் மற்றும் நிர்மலானந்தராணி, பொன்னம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை, கந்தையா, நடராசா, கனகசபை ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஜெகநாதன், (ஸ்ரீ விநாயகர் பான்சி ஹவுஸ்,யாழ்ப்பாணம்) கலைவாணி, லோகநாதன், பவானி, முரளிதரன் காலஞ்சென்ற அருந்ததி, கதிர்காம நாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கமலராணி,மகேந்திரன் (வாகீசன் விற்பனை நிலையம், யாழ்ப்பாணம்),நித்தியகலா,ராஜ்குமார்,வாசுகி ஆகியோரின் மாமியாரும் கிரிஷாந்,டினோஜன், கீர்த்திகா, பவித்திரா, லவகீசன், வாகீசன், துர்க்காயினி, திவ்யாழினி, ராம்கீசன்,நிரோஷன், நிரோஷிகா, தர்ஷிகா, நிதர்ஷன், நிஷானி, துஷானி, துவாரகா, நிவேதா, விதுஷா, நிதுர்ஷன், தர்ஷிபா, விஜிதன்,தமிழினி,ஆகியோரின் பேர்த்தியும் பர்ஷியா, ரக் ஷயா, யாகர்ஷா, பவிஷ்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல:70 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
077 486 8104 (சிறி) ,021 222 9393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# STUDY IN CANADA

- Civil Engineering
- Fashion Designing
- IT
- Bio Medical Science
- Fashion Communication

- அடிப்படைத்தகைமை A/L இரு பாடசித்தி
- சிறந்த பல்கலைக்கழக அனுமதிகள்
- பகுதி நேர வேலைவாய்ப்புக்களுடன் 2 - 3 வருட கால பாடநெறி
- பட்டப்படிப்பின் பின்னர் உயர் வருமான வேலை வாய்ப்புக்கள்
- 100 % விசா பெறுவதற்கான சிறந்த ஆலோசனைகள்

5 ஆவது வருடத்தில் தமிழ் மாணவர்களின் நம்பிக்கையை வென்று இயங்கி வரும் ஓர் நிறுவனம்.......

**Winstar Visa Consultants**

106, தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 300 4641

www.winstarjaffna.com

(m5679)(8.17)

---

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111

---

## அலுவலக வேலைவாய்ப்பு

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் பதவிவெற்றிடம் உண்டு.

- Data Entry Staffs
- Customer Service Executive
- Billing Staffs
- கனரக வாகன சாரதி
- Graphic Designer

குறிப்பு:- தங்குமிட, உணவு வசதி வழங்கப்படும்.

முதல் நேர்முக பரீட்சை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்.

**076 376 0022** (IN15676)(11,17)

---

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி, மன்னார்.

077 755 4528

DHL | aramex | SKYNET

---

## கடைக்கட்டடத்துடன் சேர்ந்த காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தனங்கிளப்பில் கேரதீவு வீதியில் (A32) அமைந்துள்ள கடைக் கட்டடமும் அதனுடன் சேர்ந்த 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

உரிமையாளர் யோ. அகிலஜெயதீஸ்வரன்

**077 157 6609** (CS 5686/15/17)

---

## விரைவான வேலைமூலம் அதிக இலாபம் பெற்றிட !




தமிழில் தொடர்பு கொள்ள **077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No. 18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03.

---

### பிரத்தியேக வகுப்புக்கள்

கிளிநொச்சியில் தரம் 6 - O/L வரையான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் தனியாகவோ குழுக்களாகவோ கற்பித்துக் கொடுக்கப்படும்.

**077 026 1966**

---

### யாழ் பாடியில்

தினமும் முற்பகல் 11 மணி முதல்

ஒடியல் கூழ்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**021 222 6868, 077 736 0353, 075 987 5800** (C/58237)(11,17)

---

### விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் ( நீராவியடி பிள்ளையார் கோயில் அருகில்) நான்கு பரப்பில் அமைந்த வீடும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணியுடன் வீடும் 3 பரப்பு வெற்றுக்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. (CS/13371,16,17)

தொடர்புக்கு : 077 723 2535

---

## ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்பு

021 492 7471
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

# SAMSUNG

## Joy begins with J

Enjoy every moment with Sri Lanka's most loved Smartphone Series.



| Galaxy J7 Pro | Galaxy J7 Max | Galaxy J7 Prime | Galaxy J5 Prime | Galaxy J7 Nxt | Galaxy J2 Pro | Galaxy J2 2017 Edition |
|---|---|---|---|---|---|---|
| 5.5" FHD sAMOLED Display | 5.7" FHD TFT Display | 5.5" FHD Display | 5.5" HD Display | 5.5" HD sAMOLED | 5" HD sAMOLED | 4.7" qHD sAMOLED |
| Memory 64GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 4GB | Memory 32GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 3GB | Memory 16GB \| RAM 2GB | Memory 16GB \| RAM 2GB | Memory 8GB \| RAM 1.5GB |
| 13MP + 13MP Enhanced Camera | 13MP + 13MP Enhanced Camera | Fingerprint scanner | Fingerprint scanner | Latest Android Nougat | S Bike Mode | Smart Manager |
| ரு. 48,200 | ரு. 42,250 | ரு. 35,650 | ரு. 31,650 | ரு. 27,250 | ரு. 21,250 | ரு. 17,900 |

பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : JKOA | SINGER | SINGHAGIRI | softlogic

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

www.facebook.com/SamsungLanka

My Galaxy — The all you need app

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28 .01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.